SURESH' 360°

September 2022 போட்டித்தேர்விற்கான மாத இதழ் Issue : 3



# It's Time to Roar!

# COUNTDOWN BEGINS

## To Welcome Cheetahs in India

- Cheetah Reintroduction
- Live Streaming of SC Proceedings
- Clustering of College
- Road Accident
- Social Stock Exchange

SPECIAL ARTICLE

# TNPSC தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கான முக்கிய ஆலோசனைகள்...

1. தேர்வுகளில் வெற்றி பெறுவதற்காக சாத்தியமாகக் கூடிய கால அட்டவணையை முதலில் தயாரித்து, அதை உறுதியாகப் பின்பற்ற வேண்டும்.
2. TNPSC தேர்வுக்கான பாடத்திட்டம் என்ன என்பதை முழுமையாக அறிந்துகொண்டு, அதில் எந்தப் பகுதியையும் விடாமல் படிக்க வேண்டும்.
3. முதன்மை ஆதாரங்கள் அல்லது நூல்களில் இருந்து தரமான குறிப்புகளைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும்.
4. TNPSC தேர்வு எழுதுவதற்கான அறிவுத் திறனை அடுத்த நிலைக்கு மேம்படுத்த எஸ்.சி.இ.ஆர்.டி (SCERT) எனப்படும் மாநிலக் கல்வியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனக்குழு தயாரிக்கும் பாட நூல்களில் இருந்து அவற்றின் அடிப்படைத் தத்துவத்தை புரிந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும்.
5. பாடங்களில் இருந்து எவ்வாறு வினாக்கள் எழுப்பப்படும் என்பதை அறிந்து கொள்வதற்காக அவற்றின் தத்துவங்கள், உண்மைகள் போன்றவற்றை தேர்வுக்கானக் கோணத்தில் இருந்து புரிந்துகொள்ள வேண்டும்.
6. முந்தைய ஆண்டின் வினாக்களை நன்றாகப் படித்து, அவற்றை ஆய்வு செய்ய வேண்டும்.
7. அத்தியாயங்கள் வாரியாகவும், பாடங்கள் வாரியாகவும் பயிற்சித் தேர்வுகளை எழுதிப் பார்க்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் உண்மையான தேர்வு எவ்வாறு இருக்கும் என்பது குறித்த அனுபவம் நமக்குக் கிடைப்பதுடன், தவறுகளைத் திருத்திக் கொண்டு மேம்படுத்திக் கொள்ளவும் முடியும்.
8. கடந்த ஆண்டுக்கான பொது அறிவு வினாத்தாள்களுக்கு விடை அளிக்க முயற்சி செய்ய வேண்டும். உங்களின் பலவீனம் என்ன என்பதை தெரிந்து கொள்ள அது உதவும். நீங்கள் எந்த அளவிற்குத் தேர்வுக்கு தயாராகி இருக்கிறீர்கள்? உங்களின் அறிவுத் திறன், விடை அளிக்கும் வேகம், துல்லியம் ஆகியவற்றை அளவிடுவதற்கும் இது உதவும்.
9. பாடங்களை ஒருமுறையாவது திருப்புதல் செய்து பார்ப்பது கட்டாயம் ஆகும்.
10. அனைத்துப் பாடங்களையும் ஒருமுறை திருப்புதல் செய்து பார்ப்பதும், தயார் செய்து வைக்கப்பட்டுள்ள குறிப்புகளை மூன்றாவது முறையில் படித்துப் பார்ப்பதும் சிறப்பாகும்.
11. தேர்வுக்கு முந்தைய ஒரு மாதத்தில் புதிய பாடங்களைப் படித்து ஆராய ஒருபோதும் முயற்சி செய்ய வேண்டாம். அந்த ஒரு மாதமும் ஏற்கனவே படித்த பாடங்களைத் திருப்புதல் செய்து பார்ப்பதற்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும். அந்த ஒரு மாதம் முழுவதும் திருப்புதல், திருப்புதல், திருப்புதல் என்பதே மந்திரமாக இருக்க வேண்டும்.
12. செய்திகளையும், நாட்டு நடப்புகளையும் தொடர்ச்சியாகப் படித்து வரவேண்டும். பாடங்களையும், தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்.
13. அடுத்த நாள் தேர்வு நடக்க இருப்பதாகக் கருதிக் கொண்டு அதற்கேற்ற வகையில் தேர்வுக்குத் தயாராகுவதற்கான உத்தி வகுக்கப்பட வேண்டும். அந்த அளவுக்கான தயாரிப்பு அவசியமாகும்.
14. ஒவ்வொரு நாளும் உறங்கச் செல்வதற்கு முன் அந்த நாள் முழுவதும் படித்த பாடங்களை ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அது உங்களின் நினைவுத் திறனை வலுப்படுத்தும்.
15. முதல்நிலைத் தேர்வுக்கான பொது அறிவு முதல் தாளுக்கான தயாரிப்பு முதன்மைத் தேர்வையும் மனதில் கொண்டு தொடரப்பட வேண்டும்.

# பொருளடக்கம்

**I. மாநிலங்கள் குறித்த விவரங்கள்**

மத்திய பிரதேசம் ........ 06

**II. தேசிய சின்னம்**

தேசிய நாட்காட்டி ........ 09

**III. முக்கிய நபர்கள் மற்றும் இடங்கள், விளையாட்டு, புத்தக ஆசிரியர்கள்**

1. முக்கிய நபர்கள் ........ 11
2. விளையாட்டு ........ 16
3. நிகழ்வுகள் / விருதுகள் ........ 21
4. வரலாற்று நபர்கள் ........ 31
5. புத்தக ஆசிரியர்கள் ........ 34

**IV. வரலாறு மற்றும் வரலாற்று நிகழ்வுகள்**

- மகாராஷ்டிரா மாநில அரசு தௌலதபாத் கோட்டையை தேவகிரி கோட்டை என மறுபெயரிட்டது ........ 35
- ஷீமங் லீலா ........ 35
- உலக பாரம்பரிய பரிந்துரை 2022-2023 ........ 35

**V. ஆட்சியியல் - இந்தியாவில் அரசியல்கட்சிகளும் ஆட்சியியல் முறைமைகளும்**

- அரசியல் கட்சிகளுக்கான ரொக்க நன்கொடைகளுக்கான வரம்பு ........ 37
- உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு ........ 38
- உத்திரபிரதேசத்தின் உத்தரவை அலகாபாத் உயர்நீதிமன்றம் ரத்து செய்தது ........ 40
- 2021ம் ஆண்டில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருப்பது 23.7% அதிகரித்துள்ளது ........ 41
- உச்சநீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு ........ 41
- விரைவு நீதிமன்றங்கள் ........ 42
- செயலற்ற அரசியல் கட்சிகளை பட்டியலிருந்து நீக்குதல் ........ 44

**VI. பொது விழிப்புணர்வும் பொது நிர்வாகமும்**

- சுயஉதவி குழுக்களின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான பிரச்சாரம் ........ 46
- பல்கலைகழக மானிய குழு கல்லூ திரள்களை உருவாக்குவதற்கு முன்மொழிகிறது. ........ 46
- புதிய கடற்படை கொடி ........ 48

SURESH'

- சிறை சீர்திருத்தங்கள் ........ 48
- இந்தியாவின் சாலை விபத்துக்கள் ........ 50
- அடிப்படை கற்றல் ஆய்வு ........ 51
- மாணவர்களின் மனநிலையை பிரச்சனைகளை முன்கூட்டியே அடையாளம் காண பள்ளிகளுக்கு, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT) வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. ........ 53
- காவல் வன்முறை ........ 54

**VII. பொது நல அமைப்பின் நலன்சார்ந்த திட்டங்கள் மற்றும் பொது விநியோக அமைப்புகளில் நிலவும் சிக்கல்கள்**

**1. மத்திய அரசாங்கம்**

- பிரதான் மந்திரி ஸ்ரீயோஜனா (PM-SHRI) ........ 55
- ஆன்லைன் விளையாட்டிற்கான புதிய சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புக்கு அரசுக் குழு அமைப்பு விடுத்துள்ளது ........ 57
- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் சமூக தணிக்கை தாமதங்கள் ........ 58
- அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் ........ 60
- பிரதான் மந்திரி டி.பி.முக்த்பாரத் அபியான் ........ 61
- தேசிய சுகாதார கணக்கு மதிப்பீடுகள் (2018-2019) ........ 63

**2. மாநில அரசின் திட்டங்கள்**

- கிராமப்புறத்தில் கொல்லைப்புற பகுதியில் பன்றி வளர்ப்பு திட்டம் ........ 64
- ஒவ்வொரு வீட்டிலும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் தயாரிக்கப்பட்ட தூய நீர் ........ 64
- புதுமை பெண் திட்டம் ........ 64
- தக்சைல் பள்ளிகள் ........ 65
- பள்ளிகளில் காலை உணவு திட்டம் ........ 65
- முதல் சினிமா சுற்றுலாக் கொள்கை (2022-2027) ........ 66
- உணவுப் பாதுகாப்பின் வரைபடக் புத்தகம் ........ 67
- பட்டியலிடப்பட்ட ஜாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட ஜாதியினருக்கான இட ஒதுக்கீடு ........ 68

**VIII. புவியியல் - புவியியல் குறியீடுகள்**

- லாநினோ ........ 69
- சர்வதேச தினை ஆண்டு 2023 ........ 70

**IX. சுற்றுச்சூழல்**

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம், மரபு கழிவு மேலாண்மைக்கான வரைபடத்தை வெளியிட்டுள்ளது ........ 72
- சிறுத்தை மீண்டும் அறிமுகம் ........ 72

- நெல் வைக்கோல்கள் எரிப்பு ........ 74
- காடுகளுக்கு வெளியே மரங்கள் ........ 75
- ஓசோன் தினம் ........ 76
- தொழிற்சாலைகளில் கார்பன் அல்லாத கூட்டணி ........ 78
- மேகப் போர்கள் ........ 78

**X. பொருளாதாரம் - பொருளாதாரம் மற்றும் சமூக பிரச்சனைகள்**

**1. பொருளாதாரம்**

- மொத்த மருந்து பூங்கா ........ 79
- மின்னணு மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம் 2026க்குள் 300 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணு உற்பத்தி ........ 79
- பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு போட்டித் தன்மை @100 என்ற வரைபடத்தை வெளியிட்டுள்ளது. ........ 81
- நிதியமைப்புகளில் பெரிய தொழில் நுட்ப செறிவு அபாயத்தை ஏற்படுத்துகிறது. ........ 82
- சமூக பங்குச் சந்தை ........ 83

**2. சமூகப் பொருளாதார பிரச்சனை**

- 5வது இராஷ்ட்ரிய போஷன் மாதம் 2022 ........ 85
- உலக சுகாதார ஆணையத்தின் உடல் நலம் மற்றும் இடம்பெயர்தலின் உலகளாவிய சான்றுகளின் ஆய்வு ........ 86
- ஆரம்பக்கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (EECE) ........ 88
- தற்கொலையை குற்றமற்றதாக்குதல் ........ 89

**XI அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்**

- நாசாவின் ஆர்டிமிஸ் I திட்டம். ........ 92
- தொற்றாத நோய்கள் ........ 94
- தேஜஸ் 2.O.. ........ 95
- இரவு வான் சரணாலயம்.. ........ 96
- இந்தியாவின் குறைக்கடத்தி மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான திட்டத்திற்கு மாறுதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.. ........ 96
- இந்தியாவில் சேவா வைரஸ் ........ 97
- ஜன்ஸ்டீன் வளையம்.. ........ 98

**XII இதர நிகழ்வுகள்**

1. குறியீடு ........ 99
2. அறிக்கை ........ 100
3. குழு ........ 102
4. நிமிடச்செய்திகள் ........ 102



SURESH'




# I. மாநில சுய விவரம்

## மத்திய பிரதேசம்

- மத்திய பிரதேசம் என்றால், 'மத்திய மாகாணம்' என்று பொருள்படக் கூடிய மத்திய இந்தியாவில் உள்ள ஒரு மாநிலமாகும்.
- அதன் புவியியல் இருப்பிடத்தின் காரணமாக இந்தியாவின் இதயம் என்று செல்லப்பெயர் பெற்றது.
- மத்தியப் பிரதேசம் பரப்பளவில் இரண்டாவது பெரிய இந்திய மாநிலமாகும்.
- இது வட மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்தியாவின் தீபகற்ப பீடபூமியின் ஒரு பகுதியாகும்.
- இம்மாநிலத்தின் எல்லைகள் வடக்கில் கங்கை-யமுனை சமவெளிகள், மேற்கில் ஆரவல்லி, கிழக்கில் சத்தீஸ்கர் சமவெளி மற்றும் தெற்கில் தப்தி பள்ளத்தாக்கு மற்றும் மகாராஷ்டிராவின் பீடபூமி ஆகும்.
- விந்தியா மற்றும் சாத்புரா மலைத்தொடருக்கு இடையே கிழக்கு மற்றும் மேற்காக ஓடும் நர்மதா நதி இம்மாநிலத்தில் கடந்து செல்கிறது.
- விந்திய மற்றும் சாத்புரா மலைத்தொடரும், நர்மதை ஆறும் வட மற்றும் தென் இந்திய‌ாவிற்கு பாரம்பரிய எல்லைகளாக உள்ளது.





## மத்தியப் பிரதேசத்தின் வரலாறு:

- சந்திர குப்த மௌரியர் ஒருங்கிணைந்த இந்தியாவில் காலம் 320 வாக்கில் மௌரிய வம்சத்தை நிறுவினார்.
- இதுதற்போதுஉள்ளமத்தியப்பிரதேச பகுதியை உள்ளடக்கியதாகும்.
- மௌரியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, குஷாணர்கள், சாத-வாகனர்கள், சாகாக்களுக்கு இடையே போட்டி நிலவியது.
- முதல் நூற்றாண்டிலிருந்து உஜ்ஜயினி மேற்கு இந்தியாவின் முதன்மையான வணிக தளமாக விளங்கியது.
- சந்தேலர்கள் கஜீராஹோவில் உள்ள கம்பீரமான இந்து சமணக் கோவிலைக் கட்டியுள்ளனர், இது மத்திய இந்தியாவில் இந்து கோயில் கட்டிடக் கலையின் உச்சகட்டத்தை பிரதிபலிக்கிறது.
- 1857 ம் ஆண்டில், மாநிலத்தின் வடக்கு பகுதியில் கிளர்ச்சிகள் நடந்தன. இது தாந்தியா தோப் தலைமையில் நடை-பெற்றது. இருப்பினும் இவை ஆங்கிலேயர்களாலும், அவர்-களுக்கு விசுவாசமாக இருந்த இளவசர்களாலும் அழிக்கப்பட்டன.
- 1950 ல், மத்தியப் பிரதேச-மானது, இந்தியா சுதந்திர மடைந்தப் பிறகு, இந்தியாவின் மாநிலமாக உருவாக்கப்பட்டது.
- இந்த மாநிலம் முன்னாள் பிரிட்டிஷ் மத்திய மாகாணங்கள் மற்றும் பெரார் மற்றும் சத்தீஸ்கரில் உள்ள மக்கராய் சமஸ்தானங்களிலிருந்து உருவாக்கப்பட்டது.

| **தலைநகரம்** | போபால் |
|---|---|
| **மாநிலம் உருவான நாள்** | நவம்பர் 1, 1956 (பிரிக்கப்படாத மத்தியப் பிரதேசம்) நவம்பர் 1, 2000 (தற்போது) |
| மாவட்டங்களின் எண்ணிக்கை | 51 |
| மாநில எல்லைகள் | ராஜஸ்தான், உத்திர பிரதேசம், சட்டீஸ்கர் |
| வரலாற்று தளங்கள் | பீம்பெட்கா, ஆதாம்கர், பச்மார்ஹி, ரைசென், ஜரோரா |
| முக்கிய வம்சங்கள் | அசோகர், குஷாணர்கள், சத்யவாஹணர்கள் |
| மாநிலப் பறவை | பாரடைஸ் ஃப்ளை கேட்சர் |
| மாநில விலங்கு | சதுப்பு நில மான் |
| மாநில மரம் | ஆலமரம் |
| மாநிலப் பூ | மடோனா லில்லி |
| மாநில மீன் | மஹ்சீர் |
| ஆறுகள் | நர்மதா, தப்தி, பெட்வா, சோன், சம்பல், ஷிப்ர கென், பென்ச், வான்கங்கா, வார்தா |
| தேசிய பூங்காக்கள் | பந்தாகர்க் தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>கன்ஹா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>சாத்புரா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>சன்ஜய் தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>மாதவ் தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>வன்ஹிஹல் தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>குஹா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>பன்னா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.<br>பென்ச் தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம். |
| விழாக்கள் | கஜுராஹோ நடன விழா, கனா-கவுர், டென்சன் இசை விழா, செட்டியாஹிரி விஹாரா விழா |
| இசை | ரெலோ பாட்டு |
| நடனம் | கவுர் நடனம், இசை நடனம், பகோரியா |
| கலை மற்றும் கைவினை பொருட்கள் | சுவர் ஓவியம் / பிட்டி சித்ராஸ், சிப்பா பாஹ் / துணிகளில் கை தொகுதி அச்சிடுதல். |
| கனிமங்கள் | வைரங்கள், மாங்கனீஸ், சுண்ணாம்புக் கல், காப்பர் |


| | |
|---|---|
| உலக பாரம்பரிய தளம் | சாஞ்சி ஸ்தூபி, பீம்பெட்கா பாறை, கஜீராஹோ கோவில்கள் |
| பழங்குடியினர் | பய்ரியா, பமிகா – அகரியா, பைகா, பில், கோண்டு, ஹல்பா, கோர்கு, மாவியா, சஹாரியா |
| நிறுவனங்கள் வேளாண்மை | பொறியியல் மத்திய நிறுவனம் – போபால் |
| | பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஸ்தாபனம் – குவாலியர் |
| | காடுகள் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் – போபால் |
| | மண் அறிவியலுக்கான தேசிய நிறுவனம் – போபால் |
| | சோயா பீன்ஸ் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் – இந்தூர் |
| | களைப்பொருள் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் – ஜபல்பூர் |
| | மேம்பட்ட தொழில்நுட்பத்திற்கான ராஜா ராமன்னா நிறுவனம் – இந்தூர் |
| மண் | கருப்பு, சிவப்பு, வண்டல், செந்நிறக் களிமண், கலவை மண் |
| ராம்சார் தளங்கள் | போஜ் சதுப்புநிலம் |
| பயிர்கள் | கோதுமை, சோயாபீன்ஸ், சோளம், நெல், தானியங்கள், பருப்பு வகைகள், நிலக்கடலை. |
| பணப்பயிர்கள் | பருத்தி, கரும்பு, எண்ணெய் விதைகள் |
| | முக்கிய தொகுப்புகள் |
| | இந்தூர் – பாரா மெடிக்கல், உணவு பதப்படுத்துதல் தகவல் தொழில்நுட்பம, தானியங்கி கூறுகள் |
| | போபால் – பொறியியல், ஜவுளித்துறை, பயோ–தொழில் நுட்பம் ஹெர்பல், தகவல் தொழில்நுட்பம், உணவு பதப்படுத்துதல். |
| | ஜபல்பூர் – ஆடைகள், தாதுக்கள், கற்கள், காடு, ஹெர்பல், உணவு பதப்படுத்துதல். |
| | குவாலியர் – எலக்ட்ரானிக்ஸ், தகவல் தொழில்நுட்பம், பொறியியல், கற்கள், உணவு பதப்படுத்துதல், வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள். |
| | ரெவா – தாதுக்கள், சிமெண்ட், வனப் பொருட்கள் |
| | சாகர் – தாதுக்கள், கற்கள் |

## மக்கள்தொகை அமைப்பு

- மத்தியப் பிரதேசத்தில் உள்ள மக்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் அதிகாரப்பூர்வமாக பட்டியலிடப்பட்ட பழங்குடியினராக வகைப்படுத்தப்–பட்டுள்ளனர்.
- இந்த பழங்குடியினரில் மிகவும் முக்கியமானவர்கள் பில், பைகா, கோண்டு, கோர்கு, கோல், கமர், மற்றும் மரியா.
- இந்திய சமூக அமைப்பில் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றுள்ள பட்டியலிடப்படாத மக்கள், மாநிலத்தின் மக்கள் தொகையில் மீதமுள்ள ஐந்தில் நான்கு பகுதி யினர் உள்ளனர்.
- மிக முக்கியமான மொழி இந்தி, பேசுபவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இரண்டாவது முக்கிய மொழி மராத்தி. உருது, ஒரியா. குஜராத்தி மற்றும் பஞ்சாபி ஆகியவை கணிசமான எண்ணிக்கையில் பேசக்கூடியவர்கள் உள்ளனர்.
- பெரும்பாலான மக்கள், இந்துக்கள் இருப்பினும் குறிப்பிடத்தக்க சிறுபான்மையினரான முஸ்லீம்கள், சமணர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பௌத்தர்கள், சீக்கியர்கள் உள்ளனர்.

## அரசாங்கம்

- மத்தியப் பிரதேச மாநிலமானது, ஒரு அவையைக் கொண்ட சட்ட–மன்றத்தை கொண்டுள்ளது.
- மத்தியப்பிரதேசத்தில் உயர்நீதிமன்ற இருக்கையானது இந்தூர், குவாலியர் மற்றும் ஜபல்பூரில் உள்ளது.



# II. தேசிய சின்னம்

## தேசிய நாட்காட்டி

- இந்தியாவின் தேசிய நாட்காட்டி, சாகா நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டது. இது நாட்டின் அதி காரப்பூர்வ சிவில் நாட்காட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது.
- 1957 ல் இந்திய தேசிய நாட்காட்டி என வரலாற்று இந்து நாட்காட்டியான சாகா சம்வத் சகா சகாப்தத்தில் தொடங்கியது.
- சாகா சகாப்தம் சாதவாகன வம்சத்தின் அரசம் ஷாலிவன்ஹனால் நிறுவப்பட்டதாக கருதப்படுகிறது.
- கிரிகோரியன் நாட்காட்டியின் அமைப்பைப் போலவே சாகா நாட்காட்டி 365 நாட்கள் மற்றும் 12 மாதங்கள் கொண்டது.
- சாகா சம்பவத்தின், முதல் மாதமான சைத்ரா, மார்ச் 22ல் தொடங்குகிறது. லீப் வருடத்தில் மார்ச் 21 அன்று தொடங்குகிறது.

## இந்தியாவின் தேசிய நாட்காட்டி

- இந்தியாவின் தேசிய நாட்காட்டி சாகா நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டது, இது நாட்டின் அதி காரப்பூர்வ சிவில் நாட்காட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது.
- இது அகில இந்திய வானொலியின் செய்தி ஒலி பரப்புகளிலும், இந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்ட காலண்டர்கள் மற்றும் தகவல் தொடர்புத் தாள்கள் மற்றும் அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடுவதன் மூலம் பயன்படுத்தப்படுகிறது.
- சாகா சம்வத் என்பது இந்து நாட்காட்டியான சாகா நாட்காட்டியின் உண்மையான பெயர்.
- இந்து மதத்தில், புனித மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களைக் கணக்கிட பயன்படுத்தப்படுகிறது.

## முக்கியத்தவம்

- இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட நாட்காட்டி சீர்திருத்தக் குழு, 1957 ல் சாகா நாட்காட்டியை தேசிய நாட்காட்டியாக ஏற்றுக்கொண்டது.
- சில தவறுகளை சரிசெய்த பிறகு, குழுவானது வானியல் தரவுகளை சீரமைக்கவும் இந்த நாட்காட்டியின் பயன்பாட்டை ஒருங்கிணைக்கவும் வேலை செய்தது.
- கிரிகோரியன் நாட்காட்டியின் படி இது முதன்முதலில் மார்ச் 22, 1957 ல் பயன்படுத்தப்பட்டது. அதே சமயம் சக சம்வத்தின் படி, இது முதன் முதலில் சைட்ரலில் 1879 ல் பயன்படுத்தப்பட்டது.
- அந்த நேரத்தில் நாட்டில் 30 பல்வேறு வகையான நாட்காட்டிகள் பயன்பாட்டை ஒத்திசைக்க இந்தியாவின் தேசிய நாட்காட்டியாக இந்த நாட்காட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இது ஜீலியன் காலண்டர் சகாப்தத்தில் 78 ம் ஆண்டை ஒத்துள்ளது.
- இது மகாசக்கர சகாப்தம் அல்லது ஷாலிவாஹன சாகா சகாப்தம் என்றும் அழைக்கப்படுகிறது.
- சாகா சகாப்தம் மன்னர் ஷாலிவாஹனாவின் முக்கிய இராணுவ வெற்றிகளை நினைவு கூறுகிறது.
- சோமராஜாவால் கன்னட மொழியில் எழுதப்பட்ட உத்பதகவ்யா – என்ற இலக்கியமானது, அரசர் ஷாலிவாஹனாவிற்கும் மற்றும் சாகா சகாப்தத்திற்கும் இடையே உள்ள தொடர்பை கூறுகிறது.
- பாலி மற்றும் ஜாவா வில் உள்ள இந்தோனேசிய இந்துக்கள் சாகா காலண்டரை பயன்படுத்துகின்றனர்.
- இந்த நாட்காட்டி கிரிகோரியன் நாட்காட்டியுடன் இணைந்து இந்திய அரசிதழில் பயன்படுத்தப்படுகிறது.

## இந்தியாவில் உள்ள காலண்டர்களின் வகைகள்

- காலண்டர் என்ற சொல் ரோமானிய வார்த்தையான காலெண்ட்ஸ் அல்லது கேலண்ட்ஸ் என்பதிலிருந்து வந்தது. இது குடிமை வாழ்க்கைக்காக நேரத்தை குறிப்பிட்ட காலங்களாகப் பிரிக்கும் முறையைக் குறிக்கிறது.
- ஒரு நாட்டின் தேசிய நாட்காட்டி அதன் வரலாற்று காலகட்டத்துடன் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ளது மற்றும் அதனுள் ஒரு பொற்காலத்தைக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் நான்கு வகையான காலண்டர்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

  1. விக்ரம் சம்வத்
  2. சாகா சம்வத்
  3. ஹிஜ்ரி காலண்டர்
  4. கிரிகோரியன் காலண்டர்

## விக்ரம் சம்வத்

- விக்ரம் சகாப்தம் கிறிஸ்தவ சகாப்தத்திற்கு 56 ஆண்டுகளுக்கு முன்பு, கி.மு 56 ல் தொடங்கியது. வங்காள பகுதியைத் தவிர இந்தியா

முழுவதும் இன்னும் நடைமுறையில் உள்ளது.

- வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, உஜ்ஜயினியின் மன்னர் விக்ர-மாதித்யா சாகா ஆட்சிய-ாளர்களுக்கு எதிரான வெற்றியை நினைவு கூறும் வகையில் இந்த சகாப்தத்தை நிறுவினார்.




- இது பண்டைய கால இந்து நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்ட சந்திர நாட்காட்டியாகும்.
- இந்தியாவின் பெரும்பாலான பகுதியில் விக்ரம் சகாப்தம், கார்த்திகை முதல் மாதமாக கொண்டு தொடங்குகிறது.
- ஒவ்வொரு மாதமும் இரண்டு பகுதிகளாக (பதினைந்து நாட்கள்) பிரிக்கப்பட்டுள்ளது. பிரகாசமான மற்றும் இருண்ட பாதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- சூரிய வருடத்துடனான 11 நாள் வித்தியாசத்தை ஈடு செய்ய, விக்ரம சம்வத்3 ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சிக்குப் பிறகு 5 ஆண்டுகளுக்கு கூடுதலாக ஆதிக் - மாசா என்ற மாதம் இணையும்.
- விக்ரம் சம்வத்தின் பூஜ்ஜிய ஆண்டு வரலாற்றுக்கு முந்தைய ஆண்டு 56.

## சாகா சம்வத்

- வரலாற்றுக்கு பிந்தைய காலம் 78 ல் ஷாலிவாஹறன் என்ற அரசர் இந்த காலண்டர் முறையை உருவாக்கினார். இது சாகா சகாப்தம் என்றும் அறியப்படுகிறது. ஏனென்றால் ஷாலிவாகன், சாகா பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவர்.
- இதன் பூஜ்ஜிய ஆண்டானது, 78 வது, இரவு, பகல் சம நாளுக்கு அருகில் தொடங்குகிறது.
- சிரிகோரியன் லீப் வருடத்தை தவிர சாகா காலண்டர் மார்ச் 22 அன்று தொடங்கும். லீப் வருடத்தில் மார்ச் 21 அன்று தொடங்கும்.
- சாகா வருடத்தில் 365 நாட்கள் உள்ளன.

## ஹிர்ஜி காலண்டர்

- அராபிக் மொழியில் உருவாக்கப்-பட்டது.
- முன்னதாக, அமுல்ஃபில் என அறியப்பட்டது. ஹிர்ஜி அல்லது ஹிஜிரா என்ற சொல் முஹம்மது நபியின் மரணத்திற்குப் பிறகு அவரது ஹிஜ்ரா அல்லது மெக்கா-விலிருந்து மதீனா வரையிலான பயணத்தை நினைவு கூறும் வகையில் உருவாக்கப்பட்டது. இந்த நிகழ்வு அவரின் 52 வது ஆண்டில் அதாவது 622 வரலாற்றுக்கு பிந்தைய ஆண்டில் நிகழ்ந்தது. இந்த வருடம் ஹிர்ஜியின் பூஜ்ஜிய ஆண்டாகும்.
- இந்த காலண்டர் ஆனது லூனர் ஆண்டாகும் இது 12 மாதங்களாகப் பிரிக்கப்பட்டது. இது 354 நாட்களைக் கொண்டது.
- இந்தியாவில், இஸ்லாமிய ஆட்சியாளர்களின் காலத்தில் இந்த காலண்டரானது ஏற்றுக் கொள்ளப்பட்டது.




- முதல் மாதமான மொஹரம் மாதத்தில், எந்தவொரு தொழில் சார்ந்த பயணம் செய்ய தடை விதிக்கப்படுகிறது.
- 12 மாதங்களில் நான்கு மாத-மானது புனிதமான மாதம் ஆகும். முதல், ஏழாவது, பதினொராவது மற்றும் பன்னிரெண்டாவது மாதங்கள் புனிதமான மாதங்கள் ஆகும்.
- ரம்ஜான், ஹஜி மற்றும் இஸ்லாமிய பண்டிகைகளை அனுசரிப்பதற்கு உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்களால் இந்த காலண்டர் பயன்படுத்தப்படுகிறது.

## கிரிகோரியன் காலண்டர்

- இந்த காலண்டர் ஆனது கிருஸ்துவ மதத்தின் நிறுவனரான இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.
- உலகம் முழுவதிலும், பிரபலமாக அனைவராலும் பயன்படுத்தப்-படுகிறது. பதின்மூன்றாம் போப் கிரிகோரி-யின் பெயர் இந்த காலண்டருக்கு வைக்கப்பட்டுள்ளது.
- சிவில் காலண்டர், கிரிகோரி காலண்டர் அடிப்படையில் உள்ளது.
- முதன் முறையாக 1852 ல் பயன்-படுத்தப்பட்டது.
- ஜீலியன் காலண்டருக்கு பதிலாக கிரிகோரி காலண்டர் பயன்-படுத்தப்பட்டது. ஏனென்றால், ஜீலியன் காலண்டரில் லீப் வருடம-ானது தவறாக கணக்கிடப்பட்டுள்ளது.
- தேசிய நாள்காட்டியில் உள்ள தேதி-கள், கிரிகோரியன் நாள்காட்டியில் உள்ள தேதிகள் ஒருங்கிணைந்து காணப்படுகிறது. கிரிகோரியன் நாள்காட்டியுடன், சாகா காலண்டர் மார்ச் 22, 1957 ல் உருவாக்கப்பட்டது.

# III. முக்கிய நபர்கள் மற்றும் இடங்கள், விளையாட்டு, புத்தக ஆசிரியர்கள்

## 1. முக்கிய நபர்கள்

### அபிஜித் சென்

- மிகவும் பிரபலமான பொருளாதார அறிஞரும் மற்றும் திட்டக்குழுவின் முன்னாள் உறுப்பினருமான அபிஜித் சென் இயற்கை எய்தினார்.



### அபிஜித் சென் பற்றி

- இந்திய திட்டக்குழுவின் முன்னாள் உறுப்பினராக பணியாற்றியுள்ளார் மற்றும் மிகவும் பிரபலமான வேளாண் சார்ந்த பொருளாதார நிபுணர் (2004 - 2014).
- 1985 ல் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பொருளாதார கல்வி மற்றும் திட்ட மையத்தின் இணைந்துள்ளார்.
- இவர் சசக்ஸ், ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் மற்றும் ஏசக்ஸ் பல்கலைக்கழகங்களில் பொருளாதாரம் கற்பித்துள்ளார்.

### முக்கிய பங்களிப்புகள்

- 1997 ல் விவசாய செலவு மற்றும் விலை ஆணையத்தின் (CACP) தலைவராக நியமிக்கப்பட்ட போது விவசாய பொருட்களுக்கான ஆதரவு விலையை பரிந்துரைக்கும் பொறுப்பு அவர்க்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஜூலை 2000 முதல் நீண்டக்கால பயிர் கொள்கைக்கான உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் ஆசிரியராக செயல்பட்டியுள்ளார். இந்த குழுவானது ரொக்கமாகவும், பொருளாகவும் வழங்கப்படும் அனைத்து சாகுபடி செலவுகளின் அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலையானது நிர்ணயம் செய்ய பரிந்துரைக்கப்பட்டது.
- சுவாமி நாதன் சூத்திரமானது பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குறைந்தது 50% அதிகமாக உற்பத்தி விலையில் இருத்தலுடன் இந்த கொள்கையானது இணைக்கப்பட்டுள்ளது.
- இவர் உலகளாவிய பொது விநியோகத் திட்டம் மூலம் வழங்கக்கூடிய அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றிற்கு ஆதரவாக வறுமைக் கோட்டிற்கு கீழ், வறுமைக் கோட்டிற்கு மேல் என்ற பாகுபாட்டினை நீக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளார்.
- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013 ஆனது காங்கிரஸால் தலைமை வகிக்கக்கூடிய ஐக்கிய முற்போக்கு கூட்டணியால் கொண்டுவரப்பட்டது.
- கூடுதலாக, அபிஜித் சென் அவர்கள் வறுமை தொடர்பான டென்டுல்கர் கமிட்டி அறிக்கைக்கு கூடுதல் உள்ளீட்டினை வழங்கியுள்ளார்.
- இவர் தொழில்நுட்ப ரீதியான மண்ணின் சுரங்க செயல்பாட்டினை ஆதரிக்கவில்லை மற்றும் இயற்கை கார்பன் உள்ளடக்கம் 2017 ல் குறைதல் பற்றி வர்த்தத்தினை பதிவு செய்துள்ளார்.

### பரவலாக்கப்பட்ட நிர்வாகத்தின் ஆதரவாளர்

- மாநில சுயாட்சியானது பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்தினை வலுப்படுத்துவதன் மூலம் உயர்த்த முடியும் என முன்மொழிந்தார்.
- 2007 ல் திட்டக்குழு ஆணையத்தில் இவர் உறுப்பினராக இருந்த பொழுது ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் திட்டமானது கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டம் மாநில சுயாட்சிக்கான எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

### பொதுச்சேவைக்கான விருது

- ஆபிஜித் செப் அவர்கள் 2010 ஆண்டு சமூகத்தின் மீதான பங்களிப்பிற்கான பத்ம பூஷன் விருதினை பெற்றார்.

### விவசாய செலவு மற்றும் விலை நிர்ணய அமைப்பினைப் பற்றி

- இந்திய அரசாங்கத்தின் வேளாண்மை மற்றும் விவசாய மேம்பாட்டு அமைசகத்தின் கீழ் ஒருங்கிணைப்புடன் செயல் படக்கூடிய அலுவலமாகும்.
- 1965 ஜனவரி மாதம் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- தேவை மற்றும் அளிப்பு, உற்பத்தி செலவு, ஊடுபயிர் சமநிலை ஆகியவற்றை கணக்கில் கொண்டு குறைந்தபட்ச ஆதரவு விலையானது கணக்கிடு செய்கிறது.
- தற்சமயம் இந்த ஆணையமானது தலைவர், உறுப்பினர் செயலாளர் மற்றும் இரண்டு உறுப்பினர்கள் (அலுவலகம் சாராத) உள்ளடக்கியுள்ளது.

- குறிப்பிடத்தக்க காரிப் மற்றும் ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையினை வழங்குவதற்காக மத்திய அமைச்சத்தின் பொருளாதார விவாகாரங்கள் குழுவிற்கு பரிந்துரைத்தது.
- அரசாங்கமானது இந்த ஆணையத்தின் பரிந்துரைகளை செயல்படுத்தக் கூடிய கட்டாயம் இல்லை.
- தற்போது இந்த ஆணையம் 23 வேறுபட்ட பொருட்கள் அதாவது 7 வகையான பயிர் வகைகள் (நெல், கோதுமை, சோளம், கரும்பு, திணை, பார்லி மற்றும் இராகி) 5 வகையான தானியங்கள் (துவரம் பருப்பு, பாசி பருப்பு, உளுந்தம் பருப்பு) 7 எண்ணெய் வித்துகள் (நிலக்கடலை, கடுகு, சோயா பீன், எள், சூரிய காந்தி, குங்கும பூ, நைஜர் விதை) 4 வகையான வணிகப்பயிர் (தென்னை, கரும்பு, பருத்தி, சணல்) ஆகியவற்றிற்கு குறைந்தபட்ட ஆதர விலையினை வழங்குகிறது.
- ஒவ்வொரு வருடமும் இந்த ஆணையமானது விலைக்கொள்கை அறிக்கையை அதன் பரிந்துரைகளுடன் அரசாங்கத்திடம் ஒப்படைக்கிறது.
- காரிப் பயிர்கள், இராகி பயிர்கள், கரும்பு, சணல் மற்றும் தென்னை ஆகியவற்றிற்கு ஒவ்வொரு பிரிவிற்கும் ஒன்று என்ற விகிதத்தில் வழங்குகிறது.

## ஐக்கிய இராச்சியத்தின் (UK) புதிய பிரதமர்

### ஐக்கிய இராச்சியத்தின் புதிய பிரதமர்

- ஆளக்கூடிய பழைமைவாத கட்சியின் தலைவராக லிஸ் ட்ரூஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் மற்றும் நாட்டின் அடுத்த பிரதமாராக பதவி ஏற்க உள்ளார்.
- லிஸ் ட்ரூஸ் அவர்கள் ஐக்கிய இராச்சியத்துக்கு பிரதமராக தேர்ந்தெடுக்கக்கூடிய மூன்றாவது பெண் தலைவர் ஆவார்.
- 20 ஆயிரம் ஓட்டுகளுக்கு மேலாக லிஸ் ட்ரூஸ் பெற்று இந்திய வம்சாவளியான ரிஷி சுனக் தோற்கடித்து பிரதமராக பதவி ஏற்க உள்ளார்.
- ஐக்கிய இராச்சியமானது தற்போது அதிகப்படியான வாழ்க்கைச் செலவு தொழிலகநிலைத்ததன்மையின்மை மற்றும் பொருளாதார மந்த நிலையில் உள்ளது.

### ஐக்கிய இராச்சியத்தின் புதிய பிரதமர் பற்றிய முக்கிய குறிப்புகள்

- பழமைவாதக் கட்சி உறுப்பினர்களுக்கிடையே வாக்களிப்பு முடிவுகள் அறிவிக்கப்படும் பொழுது மாஸ்கோலிருந்து பல மாதங்களாக அவமதிப்பிற்கு உள்ளான வெளி உறவு செயலாளர் லிஸ் ட்ரூஸ் அவர்கள் பிரிட்டனின் பிரதமராக போரிஸ் ஜான்சன் பின் பதவி ஏற்க உள்ளார்.
- ட்ரூஸ் தனக்கு எதிராக தேர்தலில் போட்டியிட்ட ரிஷி சுனக் தோற்கடித்துள்ளார்.
- தொடர்ந்து பல வாரங்கள் போரிஸ் ஜான்சன் மீதான சர்ச்சைக்குரிய கட்சியின் தலைமை தேர்தல் தொடர்பானது ட்ரூஸ் அவர்களை ரிஷி சுனக் எதிரான களம் காண வைத்தது.
- பல மாதங்களுக்கு பிறகு போரிஸ் ஜான்சன் ஜூலை மாதத்தில் தன்னுடைய பதவி விலகலை கட்டாயமாக தெரிவித்தார்.
- போரிஸ் ஜான்சன் அவர்கள் இராணி எலிசபெத்திடம் தன்னுடைய இராஜினாமா கடிதத்தை கொடுப்பதற்காக ஸ்காட்லாந்துக்கு பயணம் செய்தார்.

## ராணி இரண்டாம் எலிசபெத்

### ஏன் செய்திகளில்



- ராணி இரண்டாம் எலிசபெத்தின் மறைவிற்குப் பின், அவருடைய மகன் பிரிட்டிஸ் அரசியலமைப்பு முடியாட்சிக்கு ராஜாவாக மூன்றாம் சார்லஸ் உறுதி மொழி எடுத்துக் கொண்டார்.
- 70 வருட நீண்ட கால ஆட்சிக்குப் பின் பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத் தன்னுடைய 96 வயதில் இயற்கை எய்தியுள்ளார்.

### யார் இராணி இரண்டாம் எலிசபெத்?

- இரண்டாம் எலிசபெத் என்று பிரபலமாக அறியப்பட்ட எலிசபெத் அலெக்ஸாண்டரா மேரி ஏப்ரல் 21 1926 ல் இங்கிலாந்தின் லண்டன் நகரில் பிறந்தார்.
- யார்க்கின் பிரபுவான ஆல்பர்ட் மற்றும் அவருடைய மனைவி எலிசபெத் பௌசல்யான் அவர்களுக்கு மூத்த மகளாக இராணி எலிசபெத் பிறந்தார்.
- வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் 1947 ஆம் ஆண்டு இளவரசி எலிசபெத் இளவரசர் பீலிப் திருமணம் செய்து கொண்டார்.
- இவருடைய மூத்த குழந்தை இளவரசர் சார்லஸ் 1948 ல் பிறந்தார்.
- வெஸ்ட்மினிஸ்டர் அபேயில் ஜூன் 2, 1953 ல் 8,500 விருந்தினர்க்கு முன் அவையில் இராணியாக முடி சூடிக் கொண்டார்.

### முடியாட்சியல் பல்வேறு வகைகள் என்றால் என்ன?

- **அரசியலமைப்பு முடியாட்சி**
  - அரசியலமைப்பு முடியாட்சி என்பது அரசியலமைப்பின் ஒரு முறையாகும். இதில் ஒரு மன்னர் அரசியலமைப்பு கூட்டாளியான அரசாங்கத்துடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்கிறார்.
  - மன்னர் உண்மையா அரசின் தலைவராகவோ அல்லது முற்றிலும் சம்பிரதாயமான தலைவராகவோ இருக்கலாம், அவர் சம்பிரதாய செயல்களை மட்டுமே செய்கிறார் ஆனால் பிரதமரின் உண்மையான அதிகாரம் இவருக்கு இல்லை.
  - அரசியலமைப்பானது அரசாங்கத்தின் இதர பிரிவினரான சட்டத்திற்கும் மற்றும் நீதி அமைப்பிற்கும் அதிகாரங்களை பிரித்து வழங்கியுள்ளது.

    – அரசியலமைப்பு முடியாட்சிக் கொண்ட நாடுகள் இங்கிலாந்து, பெல்ஜியம், கம்போடியா, ஜோர்டான், நெதர்லாந்து, நார்வே, ஸ்பெயின், சுவீடன் மற்றும் தாய்லாந்து.
- **முழுமையான முடியாட்சி**
  - முழுமையான முடியாட்சி என்பது ராஜா அல்லது ராணி முழுமையான, எதேச்சதிகார அதிகாரத்தை வைத்திருக்கும் அரசாங்க வடிவம் ஆகும்.
  - முழுமையான முடியாட்சிகளில் அரசு பரம்பரையின் வாரிசுகள் மட்டுமே முடி சூடிக் கொள்ள முடியும். அரியணை ஆளும் அரசக் குடும்பத்தின் உறுப்பினர்களிடையே மட்டுமே பகிரப்படுகிறது.
  - ஒரு முடியாட்சியில் மாநில அதிகாரம் ஒரு குடும்பத்தால் நடத்தப்படுகிறது. இது தலை–முறையிலிருந்துதலைமுறைக்கு கடந்து செல்கிறது.
  - இடைக்காலத்தில் எழுந்த முழுமையான முடியாட்சி பதினாறாம் நூற்றாண்டில் மேற்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியில் நிலவியது.
  - பிரான்ஸ் நாட்டுடன் 14 ஆம் லூயிஸ் மன்னரால் அங்கீரிக்கப்பட்ட முழுமையான முடியாட்சியின் மன்னர்கள் இங்கிலாந்து, ஸ்பெயின் மற்றும் ஆஸ்திரியா உள்ளிட்ட பிற ஐரோப்பிய நாடுகளை ஆட்சிச் செய்தனர்.
  - முழுமையான முடியாட்சி உள்ள நாடுகள் ப்ரூனி, ஈஸ்வதினி, ஓமன், சவுதி அரேபியா, வாட்டிகன் நகரம், ஐக்கிய அரபு எமிரகம்.

### பிரிட்டன் முடியாட்சியின் பண்புகள் மற்றும் அதிகாரங்கள் யாவை?

- **பற்றி**
  - பிரிட்டிஷ் முடியாட்சி என்பது அரசியலமைப்பு சார்ந்து முடியாட்சி ஆகும். ஏனெனில் நாட்டின் இறையாண்மை அரசு தலைவராக இருப்பதால், சட்டத்தை இயற்றும் மற்றும் நிறைவேற்றும் திறன் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு உள்ளது.
  - பிரிட்டன் முடியாட்சியை பிரிட்டன் மன்னர் ஆட்சி செய்கிறார் ஆனால் அவருடைய ஆட்சி என்பது மாநிலத்தின் தலைவராக இருந்தாலும் அவர்க்கு உண்மையான அதிகாரம் இல்லை.
  - அரசியல் தொடர்பான விஷயங்களில் மன்னர் கண்டிப்பாக நடுநிலையாக இருக்க வேண்டும்.

### பங்குகள் மற்றும் அதிகாரங்கள்

- **பிரதம அமைச்சர் மற்றும் அரசாங்கத்தின் நியமனம்**
  - பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு ஆதரவு பெற்ற ஒருவரை நாட்டின் அரசர் அல்லது அரசி பிரதமராக நியமிக்கிறார்.
  - பொதுத் தேர்தலில் கட்சியின் தலைவர் வெற்றி பெற்று விட்டால் நாட்டின் தலைவரான அரசர் அல்லது அரசி, வெற்றி பெற்ற நபரை பக்கிங்காம் அரண்–மனைக்கு அரசாங்கத்தை அமைப்பதற்காக வரவேற்கிறார்.
  - பிரதமரை நியமிக்கும் அல்லது பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் மன்னரிடம் கிடையாது.
- **பாராளுமன்றத்தின் தொடங்கி வைத்தல்**
  - மன்னர் பாராளுமன்ற ஆண்டினை அரச திறப்பு விழாவுடன் தொடங்குகிறார்.
  - அப்பொழுது மன்னர் அல்லது அரசி ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸில் நிர்வாகத்தின் திட்டமிடப்பட்ட கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகள் பற்றி உரையாற்றுகிறார்.
- **ஒப்புதல் சட்டம்**
  - ஹவுஸ் ஆஃப் லார்ட்ஸ் மற்றும் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்–களுக்கு இறையாண்மையுடன் அவருடைய அரசு ஒப்புதலை அளிக்கிறார். ஆனால் இம்முறையில் தற்பொழுது இரப்பர் ஸ்டாம்பிங் பயிற்சி–யாக உள்ளது. ஏனெனில் 1707 ஆம் ஆண்டில் ராணி அன்னே அனுமதியை மறுத்த மசோதாவிலிருந்து இப்பயிற்சி பின்பற்றப்பட்டது.

- **காமன்வெல்த் பகுதிகள்**
  - பிரிட்டன் மன்னர் காமன்வெல்த் நாடுகளில் தலைவராகவும் உள்ளார். இது முந்தைய பிரிட்டிஷ் பேரரசின் விளைவாகும்.
  - இது 2.4 பில்லியன் மக்கள் தொகைக் கொண்ட 56 சுதந்திர நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

## கமல் நரேன் சிங்

### செய்திகளில்

- உச்சநீதிமன்ற நீதிபதியாக முன்னாள் பதவி வகித்த கமல் நரேன் சிங் அவருடைய 95 வது வயதில் இயற்கை எய்தினார்.
- நீதிபதி நரேன் 17 நாட்கள் மட்டுமே இந்தியாவின் தலைமை நீதிபதியாக பதவி வகித்துள்ளார். மிகவும் குறைந்தக்காலம் நாட்டின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்த நபர் என்ற சிறப்பினை பெற்றுள்ளார்.
- இவர் 22 வது இந்தியாவின் தலைமை நீதிபதியாக 25 நவம்பர் 1991 முதல் டிசம்பர் 12, 1991 வரை பதவி வகித்துள்ளார்.

### பற்றி

- டிசம்பர் 13, 1926 கமன் நரேன் பிறந்தார். 1977 ல் அலகபாத் உயர்நீதிமன்றத்தின் துணை நீதி பதியாக பதவியேற்றதிலிருந்து இவருடைய நீதிபதி தொழிலை தொடங்கியுள்ளார்.
- பின் 1972 ல் நிரந்தர நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார்.
- 1986 ல் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார் மற்றும் அடுத்த 5 வருடத்திற்குள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி உயர்வு அடைந்தார்.
- மேலும் இவர் 13 வது சட்ட ஆணையத்தின் தலைவராக 1991 – 94 வரை பதவி வகித்துள்ளார்.
- மறைந்த நீதிபதி நரேன் அவர்கள் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகளில் அதாவது கங்கை மாசு வழக்கு, மரணத்தண்டனையின் செல்லுபடி தன்மையின் சவால் செய்யும் வழக்கு போன்ற வழக்குகளில் ஒரு பகுதியாக இருந்துள்ளார்.

## பணமோசடி தடுப்புச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவர்

### செய்திகளில்

- மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான முனிஸ்வர் நாத் பண்டாரி பணமோசடி தடுப்புச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைவராக மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

### பற்றி

- நிதி அமைச்சகத்தின் கீழ் வருவாய்த் துறையால் இந்த ஆணையானது வெளியிடப்பட்டுள்ளது.
- SAFEMA இன் கீழ் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கான தீர்ப்பாயம் மற்றும் பணமோசடி தடுப்புச் சட்ட மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஆகியவை 2016 ஆம் ஆண்டில் பொருளாதார சட்டம் 2016 ன் படி இணைக்கப்பட்டது.
- இந்த தீர்ப்பாயத்தின் தலைவர் பதவியானது செப்டம்பர் 2019 முதல் காலியாக இருந்துள்ளது.
- இந்திய குடியரசுத் தலைவர், மாண்புமிகு நீதிபதி முனிஸ்வர் நாத் பண்டாரி அவர்களை கடத்தல் மற்றும் அந்நிய செலவாணிச் சட்டத்தின் (SAFEMA) கீழ் மேல்முறையீட்டுத் தீர்பாயத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மாதத்திற்கு 2,50,000 வருமானத்–துடன் நான்கு வருடம் அல்லது 70 வயதை அடைதல் அல்லது மேற்கொண்டு உத்தரவு வருதல். இவற்றுள் எது முந்தையதோ தீர்ப்பாயத்தின் 2021 ன் படி அவர் பணிபுரிவார்.

### நீதிபதி பண்டாரி பற்றி

- ஜுலை 2007 ல் நீதிபதி பண்டாரி ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்திற்கு நீதிபதியாக பதவி ஏற்றார்.
- பின் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் மார்ச் 2019 ல் நீதிபதியாக பணி மாற்றம் பெற்றார். மற்றும் ஜுன் 2019 ல் செயல் நீதிபதியாக அலகாபாத் உயர்நீதிமன்றத்திற்கு நியமனம் செய்யப்பட்டார்.
- உச்சநீதிமன்ற கொலிஜியத்தின் பரிந்துரையின் படி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக இருந்த சஞ்சிப் பானர்ஜி மேகாலயா உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக மாறுதல் அடைந்ததையொட்டி நீதிபதி பண்டாரி அவர்கள் அலகாபாத் உயர்நீதிமன்றத்திலிருந்து மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக பொறுப்பேற்றார்.
- முன்னதாக இந்த வருடம் பிப்ரவரி மாதம் வரை செயல் நீதிபதியாக பதவி வகித்தார். பின் தலைமை நீதி பதியாக பொறுப்பேற்றுக் கொண்டார்.

## அன்வி விஜய் சன்சருகியா

- ‘இரப்பர் பெண்மணி’ என்று பொது–வாக அறியப்பட்ட அன்வி விஜய் சன்சருகியா யோகாசனத்தில் அவருடைய கடின உழைப்பு மற்றும் அவருடைய வளத்தின் தன்மையால் இந்தப் பெயரினை அடைந்துள்ளார்.




SURESH'

- அவருடைய உடல் மற்றும் மனரீதியான இயலாமை இருந்த போதிலும் அவர்க்கு பிரதம மந்திரி ராஷ்டிரிய பாலன் புரஸ்கார் விருது வழங்கப்பட்டது.
- அன்வி என்றால் பல இயலாமையுடன் பிறந்த பெண் குழந்தை என பொருள்படும். அன்வி, பிறந்ததிலிருந்து 3 வகையான உடல் ரீதியான சவால் களுடன் வாழ்ந்து வருகிறார். "பிறவி இதய குறைபாடு" அதற்காக வேர் திறந்த இதய அறுவை சிகிச்சை செய்துள்ளார். 75% அறிவுசார் இயலாமை கொண்ட "TRISOMY 21" மற்றும் பெரிய குடலை பாதி க்கும் ஒரு நிலை (பெருங்கடல்) மற்றும் ஹிர்ஸ்ப்ரங் நோய் மலம் கழிப்பதில் சிக்கலை ஏற்படுத்துகிறது.
- அனைத்து ஊனமுற்ற குழந்தைகளுக்கும் அன்வி ஒரு முன்மாதிரியாக இருக்கிறார். அவர் தனது உறுதி யினாலும், கடின உழைப்பினாலும் யோகாவில் பல்வேறு மாநில மற்றும் தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- மேலும் யோகாவில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கென தனி பிரிவு இல்லாததால், சாதாரண குழந்தைகளுடன் அதாவது ஆரோக்கியமான குழந்தைகளுட் போட்டியிட்டு இந்த விருதுகளை எல்லாம் வென்றுள்ளார் என்பது முக்கியமான விஷயம்.

## இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் (அட்டர்னி ஜெனரல்)

- இரண்டாவது முறையாக மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹட்கி இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக பொறுப்பேற்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது.



### முக்கிய குறிப்பு

- அக்டோபர் 1 முதல் மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹட்கி இந்தியாவின் உயர்ந்த சட்ட அலுவலராக பதவி ஏற்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது.
- தற்போது உள்ள இந்தியாவின் மூத்த வழக்கறிஞரின் பதவிக்காலம் செப்டம்பர் 30 அன்று முடிவடைகிறது மற்றும் அவர் இரண்டாவது முறையாக தன்னுடைய வயது மூப்பின் காரணமாக பதவி வகிக்க மறுத்துள்ளார்.
- ஜுன் 30, 2017 ல் 91 வயதான வேணுகோபால், இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக பதவியேற்றதிலிருந்து பல்வேறு முறை பணிக்காலம் நீட்டிக்கப்பட்டு பணியாற்றியுள்ளார்.
- முகுல் ரோஹட்கி 2014 முதல் 2017 வரை மூன்று வருடத்திற்கு இந்தியாவின் தலைமை வழக்கறிஞராக பதவி வகித்துள்ளார்.
- முகுல் ரோஹட்கி, டெல்லி உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான அவத் பெஹாரி ரோஹட்கியின் மகன் ஆவார்.
- பிரதமராக வாஜ்பாய் இருந்த காலத்தில் 1999ல் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக முகுல் ரோஹட்கி நியமிக்கப்பட்டார்.
- உச்ச நீதிமன்றத்தில் 2002 கலவர வழக்குகளில் இவர் குஜராத் அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.
- அட்டர்னி ஜெனரலாக, இவர் தேசிய நீதிபதிகள் நியமன ஆணையச் சட்டம் மற்றும் 99 வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு ஆதரவினை வழங்கினார். இது உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமிக்க தேசிய நீதிபதி கள் நியமன ஆணையத்தை நிறுவ உதவியது.
- ஆதார் வழக்கில் பயோமெட்ரிக் தரவைப் பயன்படுத்துவதைப் பாதுகாக்கும் அதே வேளையில், ஒரு தனி நபருக்கு தனது சொந்த உடலின் மீது முழுமையான உரிமை இல்லை என்று அவர் வாதிட்டார்.
- பதவிக்காலம் முடிவடைந்தப்பின் விதி 377, தன் பாலின சேர்க்கையை எதிர்த்த அரசியலமைப்பு விதியை எதிர்த்து வாதிட்டார், மற்றும் தன் பாலின ஈர்ப்பாளர்கள் இயற்கை மற்றும் ஒருவரின் சுய அடையாளம் என கூறினார்.
- மராத்திய சமூகத்தின் சட்டம் மற்றும் நுழைவு ஒதுக்கீட்டினை அறிமுகப்படுத்திய மகாராஷ்டிரா சட்டத்தினை பாதுகாப்பதில் தோல்வியடைந்தார்.
- ரிபப்ளிக் தொலைகாட்சியின் நிறுவனர் அர்னாப் கோஸ்வாமியை மகாராஷ்டிரா காவல்துறை கைது செய்த பிறகு அவர் வாதாடினார்.
- 2007 ஆம் ஆண்டு முதல்வர யோகி ஆதித்யநாத் மீது ஆவேசப் பேச்சு நடத்தியதாகக் கூறி வழக்குத் தொடர அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை எதிர்த்து அவர் சமீபத்தில் உத்திரப் பிரதேச அரசின் சார்பில் ஆஜரானார்.

## இந்தியாவின் தலைமை வழக்கறிஞர்

- இந்திய அரசாங்கத்திற்கு மூத்த சட்ட ஆலோசகர் தலைமை வழக்கறிஞர் ஆவார் மற்றும் உச்ச நீதிமன்றத்தி ன் முன் அரசாங்கத்தின் முதன்மை வழக்கறிஞர் ஆவார்.

- இந்திய அரசியலமைப்பின் விதி 76 ஆனது, இந்திய குடியரசுத் தலைவரால், உச்ச நீதிமன்ற நீதிபதிக்கு இணையான தகுதியுடைய நபரை அட்டர்னி ஜெனரலாக நியமிக்க அனுமதிக்கிறது.

### மலேசியாவின் கேபினெட் அமைச்சர் சாமிவேலு

- மலேசியாவின் முன்னாள் கேபினட் அமைச்சரும், மலேசியாவிலிருந்து முதல் பிரவாசி பாரதீய சம்மன் விருதினை பெற்றவருமான சாமிவேலுவின் இறப்பிற்கு இந்திய பிரதமர் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.
- சாமி வேலு தன்னுடைய 86 வது வயதில் மரணமடைந்துள்ளார்.
- ஜூன் 1983 முதல் ஜூன் 1989 மற்றும் மே 1995 முதல் மார்ச் 2008 வரை தொழில் துறை அமைச்சகத்தில் மலேசிய அரசியல் வாதியான எஸ், சாமிவேலு பணியாற்றியுள்ளார்.
- ஜனவரி 1, 2011 முதல் அமைச்சர் பதவிக்கு இணையான, இந்தியா மற்றும் தென்னாசிய பகுதிகளின் உள்கட்டமைப்பிற்கு மலேசியாவின் சிறப்பு தூதுவராக சாமிவேலு நியமிக்கப்பட்டார்.

## 2. விளையாட்டு

### ஜேம்ஸ் ஆன்டர்சன்

**பற்றி**

- இங்கிலாந்து வீரரான ஜேம்ஸ் ஆன்டர்சன் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டுகளில் 950 விக்கெட்டுகளை வீழ்த்திய அதிவேக பந்து சுழற்சியாளர் என முன்னேறியுள்ளார்.




- இந்த வரலாற்று ரீதியான அடியினை தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாவது நாளில் அடைந்துள்ளார்.
- இவர் ஆஸ்திரேலியாவின் கெலன் மெக்ரக்கின் சாதனையை (949 விக்கெட்டு) முறியடித்துள்ளார்.
- சர்வதேச விக்கெட் போட்டியில் மிகவும் வெற்றிகரமான பந்து வீச்சாளர்கள் இலங்கையின் முத்தையா முரளிதரன் (1347 விக்கெட்) ஆஸ்திரேலியாவின் வேக பந்து வீச்சாளர் சேன் வார்ன் (1001 விக்கெட்) மற்றும் இந்திய வேகப் பந்து வீச்சாளர் அணில் கும்ப்லே (956 விக்கெட்).

### ஆன்டர்சனின் பணிகள்

- 2003 ன் சர்வதேச விளையாட்டுப் போட்டியில் ஆன்டர்சனின் முதன்முதலாக களம் கண்டார். தற்போது, 27.18 என்ற விகிதத்தில் 951 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- 664 விக்கெட்டுகளை டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் வீழ்த்தியுள்ளார். 2015 முதல் டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்த விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.
- டெஸ்ட் விக்கெட்டில் 600 அதிகமாக விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள ஒரு நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- அதனுடன் ஆன்டர்சன் 269 ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் அதில் பெரும்பாலனவை இங்கிலாந்திற்காக விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

### 3 ராஞ்சி கோப்பை போட்டிகள்

**செய்திகளில்**

- முதல்முறையாக வருகின்ற டிசம்பர் மாதத்தில் சிக்கிம் மாநிலமானது 3 ராஞ்சி கோப்பை போட்டிகளை நடத்த உள்ளது.

**இதைப் பற்றி**

- முதல்முறையாக வருகின்ற டிசம்பர் மாதத்தில் சிக்கிம் மாநிலமானது 3 ராஞ்சி கோப்பை போட்டிகளை நடத்த உள்ளது.
- இந்த மாநிலமானது 3 வடகிழக்கு குழுக்களான மிசோரம், மணிப்பூர் மற்றும் அருணாச்சலப்பிரதேசம், ஆகியவை ரங்பூக்கு அருகேயுள்ள விளையாட்டு திடலுக்கு வரவேற்று உள்ளது. சிக்கிம் மாநிலத்தில் கிரிக்கெட் விளையாட்டின் ஆக்க முயற்சிக்காக பிசிசிஐ அமைப்பானது 3 ராஞ்சி கோப்பை போட்டிகளை சிக்கிம் மாநிலத்தில் நடத்த உத்தரவினை வழங்கியுள்ளது.
- ராஞ்சி கோப்பை போட்டிகளுக்கு நடுவே 2 கூச் பெகார் கோப்பை போட்டிகளும் மற்றும் மூன்று கோல் சிகே நாயுடு கோப்பை போட்டிகளும் ரன்பூ மைனிங் விளையாட்டு திடலில் நடக்க உள்ளது.
- நவம்பர் 12 ல் அசாமிற்கு எதிரான கூச் பெகார் கோப்பை போட்டியானது

முதல் உள்நாட்டிலேயே நடத்தக்கூடிய போட்டியாக சிக்கில்மில் நடைபெறவுள்ளது.

- 19 வயதிற்கு கீழான ஆடவர் கிரிக்கெட் போட்டியானது டிசம்பர் 13 ல் முதல் முறையான நடைபெற உள்ளது.
- மணிப்பூர் மூத்த ஆண்கள் போட்டிக்கான ராஞ்சி கோப்பை 2022 - 23 ல் நடைபெற உள்ளது.

### குறிப்பாக

- 8 புது மாநிலங்கள் சிக்கி முட்பட ராஞ்சி கோப்பையில் இணைந்துள்ளன மற்றும் அதனுடைய உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகள் 2018 ல் நடைபெற்றுள்ளது.
- கிரிக்கெட் மைதானம் குறைவாக காணப்படுவதால் சிக்கிம் மாநிலமானது பொதுத் தளமாக இப்போட்டிகளை நடத்துகிறது.
- மைனிங் மைதானத்தின் மேம்பாடானது கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக உள்ளது.
- ஆனால் கோவிட் - 19 தொற்றுக்காலத்தில் பிசிசிஐ ஆனது உயிரி பாதுகாப்பு சுற்றுச்சூழலுக்காக குறிப்பிட்ட மைதானம் மற்றும் போட்டிகளை நடத்த வலியுறுத்தியது.

## நீரஜ் சோப்ரா

- இந்தியாவின் ஒலிம்பிக் சாதனையாளர் நீரஜ் சோப்ரா தன்னுடைய வெற்றி பாதகையில் மேலும் ஒரு தங்க இறகினை இணைத்துள்ளார்.



- சூரிஜ் ஜில் நடைபெற்ற டைமண்ட் லீக் இறுதி போட்டியில் நீரஜ் 88.44 மீட்டர்கள் ஈட்டி எரிதல் தங்க பதக்கத்தை வென்றுள்ளார்.
- ஜெர்மனியின் ஜூலியன் வெப்பர், செக் குடியரசின் ஜாகூப் வதேஜா ஆகியோரை எதிர்த்து 24 வயதான ஒலிம்பிக் சாதனையாளரை வீழ்த்தி இந்தப் பதக்கத்தை பெற்றுள்ளார்.

## வீடியோ உதவியுடன் நடுவர் (VAR)

### செய்திகளில்

- இந்தியாவில் நடைபெறவிருக்கும் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் உலகக் கோப்பை 2022, வீடியோ அசிஸ்டென்ட் ரெஃப்ரி தொழில் நுட்பமானது காட்சிப் பொருளாக அறிமுகமாகும் என்று உலக கால்பந்து நிர்வாகக் குழு FIFA அறிவித்துள்ளது.
- அனைத்திந்திய கால்பந்து சம்மேளனத்தின் (AIFF) 11 நாள் நீண்ட இடைநிறுத்தத்தை நீக்கிய பின்னர் FIFA அனுமதி வழங்கிய இந்த மதிப்புமிக்க போட்டியானது புவனேஸ்வர் (கலிங்கா மைதானம்), மார்கோவ் (JLN மைதானம்) மற்றும் நவி மும்பையில் நடைபெறும். (DY பட்டேல் மைதானம்) அக்டோபர் 11 30 வரை நடைபெற உள்ளது.

### வீடியோ நடுவர் தொழில்நுட்பம் பற்றி

- நான்கு விளையாட்டை திசை திருப்பும் நிலைகளில் முடிவெடுக்கும் நடைமுறைக்கு இந்த தொழில் நுட்பம் உதவியாக உள்ளது. இலக்குகள் மற்றும் இலக்குகளுக்கு எதிரான நிலை தண்டத்தொகை வழங்கும் நேரங்களில் மற்றும் தண்டத்தொகைக்கு எதிரான நேரங்களில் நேரடியான சிவப்பு அட்டை சம்பவங்களில் மற்றும் தவறுதலான முன்னெடுப்புகளில் முடிவெடுக்க உதவுகிறது.
- போட்டிகள் முழுவதும் தெளிவான மற்றும் நிலையான ஆய்விற்கு மற்றும் இந்த நான்கு நிலைகள் தொடர்பான தவறுகளை குறிப்பதற்கு இந்த தொழில்நுட்பமானது உதவுகிறது.

### நியாபகத்தில் வைத்து கொள்வதற்கு

- இந்தியாவில் நடைபெறும் U - 17 மகளிர் உலகக் கோப்பை, U - 20 மகளிர் உலகக் கோப்பை கோஸ்டாரிகா 2022 மற்றும் FIFA மகளிர் உலகக் கோப்பை பிரான்ஸ் 2019 க்குப் பிறகு VAR ஐப் பயன்படுத்தும் மூன்றாவது FIFA மகளிர் போட்டியாகும்.
- இந்தியாவில் VAR தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுவது இது இரண்டாவது முறையாகும், இந்த ஆண்டு பிப்ரவரியில் நாடு நடத்திய AFC மகளிர் ஆசிய கோப்பையின் காலிறுதி கட்டத்தில் இருந்து முதல் முறையாகும்.

## அபேக்ஸா பெர்னான்டஸ்

### செய்திகளில்

- நீச்சல் போட்டிகளில் இளையோர்க்கான உலக நீச்சல் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவில் முதல் பெண்ணான அபேக்ஸா பெர்னான்டஸ் வெற்றியடைந்துள்ளார்.




- 2:18:18 என்ற நேரத்தில் அபேக்ஸா பெர்னான்டஸ் புதிய தேசிய உச்சத்தினை அடைந்துள்ளார்.
- பட்டாம் பூச்சி நீச்சல் பிரிவில் 2 : 19 : 14 என்ற காலத்தில் 200

மீட்டர் தொலைவில் FINA உலக இளையோர் நீச்சல் சாம்பியன்ஷிப் 2022 ல் பதக்கத்தை பெற்றுள்ளார்.

- இதற்கு முன் தேசிய பதிவான ஜுன் 22 ல் தன்னுடைய ரேக்கார்டை 2 : 18 : 39 என்ற நேரத்தில் அவரே தாண்டியுள்ளார்.
- இவர் 0.65 வினாடிகள் என்ற கணக்கில் அதிகமான எதிர்வினை ஆற்றக் கூடிய போட்டியாளராக இருந்துள்ளார்.

### பற்றி

- ஆண்களுக்கான 200 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் ஹுட்ஸ் போட்டியில், வேதாந்த் மாதவன் தவறான தொடக்கத்தால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.
- சாம்பவி ராமராவ் எட்டு பேர் கொண்ட இறுதிக் போட்டிக்கு தகுதி பெறவில் லை, அவர் 1 : 55 : 71 இல் 27 வது இடத்தைப் பிடித்தார்.
- 200 மீட்டர் ஃப்ரீஸ்டைல் போட்டியில் ஜீனியர் உலக சாம்பியன் பட்டத்தை ருமேனியாவை சேர்ந்த டேவிட் போபோவிசி வென்றுள்ளார்.
- டேவிட் போபோவிசி இதற்கு முன்பு ஐரோப்பிய ஜுனியர் சாம்பியன்ஷிப், உலக சாம்பியன்ஷிப் மற்றும் ஐரோப்பிய சாம்பியன்ஷிப்பை வென்றார்.
- தங்கம் பெறுவதற்கான அவரது நேர சாதனை 1 : 46 : 18 புதிய சாம்பியன்ஷிப் சாதனையை உருவாக்கியது.

### 68வது நேரு கோப்பை

- கேரளாவின் ஆழப்புழா மாவட்டத்தில் புன்னமடா ஏரியில் நடைபெற்ற 68 வது நேரு கோப்பை படகு போட்டியில பள்ளத்துருத்தி படகானது கோப்பையை வென்றது.
- கோவிட் பெருந்தொற்று காலத்தில் இரண்டு வருட இடைவெளிக்கு பிறகு இந்த போட்டியானது அந்தமான் மற்றும் நிக்கோபார் ஒன்றிய பிரதேசத்தின் துணை ஆளுநரான டி.கே. ஜோஷி அவர்களால் கொடி அசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.



### முக்கியக் குறிப்பு

- இந்த போட்டியில் பள்ளத்திருத்தி படகு அமைப்பின் மகாதேவி காடுகட்டில் தேகத்தில் என்ற படகானது கோப்பையை வென்றது மற்றும் படகு அமைப்பின் குமரக்கமின் நடுபாகம் என்ற படகானது இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.
- ஒன்பது பிரிவுகளின் கீழ் இந்தப் போட்டியானது ஏற்பாடு செய்யப்படுகிறது 20 பாம்பு படகுகள் உட்பட 77 படகுகள் இந்த போட்டியில் கலந்து கொண்டுள்ளது.
- தொடக்கத்தில் 22 பாம்பு படகுகள் இந்த போட்டியில் இடம் பிடித்துள்ளன ஆனால் தற்போது இரண்டு படகுகள் இந்தப் போட்டியிலிருந்து விலகியுள்ளது.
- இந்த போட்டியில் 1.15 கிலோ மீட்டர் தூரத்தினை 4 : 30 : 77 நிமிடங்களில் கடந்து முதல் இடத்தை பள்ளத்திருத்தி படகு அமைப்பானது பெற்றுள்ளது.
- நேரு கோப்பையின் முதல் இடத்தை பிடித்த பள்ளத்திருத்தி படகானது 3 முறையாக இந்தக் கோப்பையை வென்றுள்ளது.
- இந்த பள்ளத்திருத்தி படகினை சந்தோஷ் சக்கோ என்பவரால் தலைமை தாங்கியுள்ளார்.
- படகு போட்டி CBL (சாம்பியன்ஸ் போட் லீக்), விளையாட்டை மாற்றும் முயற்சிக்காகக் கருதப்பட்டது, கேரளாவின் பெருமளவில் சிதறிக் கிடக்கும் பாம்பு – படகு பந்தயங்களைத் தொழிலாக மாற்ற முயல்கிறது, அதே நேரத்தில் விளையாட்டின் பாரம்பரிய உணர்வை இழக்காமல் அவற்றை வணிகமாக்குகிறது.

### நேரு கோப்பை படகு போட்டி பற்றி

- 1952 ல் உருவாக்கப்பட்டது இந்தி யாவில் முதல் பிரதமர் ஆழப்புழா ஏரியையும் இந்தப் பகுதிக்கு வருகை தந்துள்ளார்.

### முதல்முதலான மலை இருசக்கர உலக கோப்பை

- இந்தியாவில் முதன் முறையாக லே பகுதியில் மலை இருசக்கர உலக கோப்பையானது நடைபெற உள்ளது.
- இந்தியாவின் சைக்கிலிங் அமைப்பு மற்றும் லடாக் ஒன்றிய பிரதேச நிர்வாகமும் இணைந்து இந்த போட்டியை நடத்த உள்ளது.



- உலக முழுவதிலும் பல்வேறு நகரங்களில் நடைபெற்ற 10 தொழில் ரீதியான போட்டியை ஒருங்கிணைத்து லடாக்கில் நடைபெற உள்ளது.
- UCI MTB எலிமினேட்டர் உலகக் கோப்பை கிராஸ் கன்ட்ரி எரிமினேட்டர், XCE, ஜநூறு

SURESH'

மீட்டர் வடிவ இயற்கை மற்றும் செயற்கையான தடைகளுடன் கூடிய குறுகிய டிராக் ரேஸாக இருக்கப் போகிறது.

- இந்த வரவிருக்கும் நிகழ்வில், மொத்தம் 20 சர்வதேச, 55 தேசிய மற்றும் உள்ளூர் சைக்கிள் ஓட்டுநர்கள் பங்கேற்க உள்ளனர்.
- UCI MTB எலிமினேட்டர் உலகக் கோப்பை இந்தியாவில் முதன்முறையாக நடைபெறவிருப்பதால், அனைத்து சைக்கிள் ஓட்டுநர்களும் இந்த நிகழ்வைக் கண்டு உற்சாகமடைந்துள்ளனர்.

### 36வது தேசிய போட்டிகள்

- அகமதாபாத்தில் உள்ள டிரான்ஸ் மைதானத்தின் 36 வது தேசிய விளையாட்டு போட்டிக்கான சின்னம் மற்றும் கீதத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டுள்ளார்.

36TH NATIONAL GAMES
GUJARAT 2022
Celebrating Unity Through Sports

- சின்னத்தின் பெயரானது சவாஜ் எனப்படும் இதன் அர்த்தம் குஜராத்தின் குட்டி எனப்படும்.
- ஏக் பாரத் ஸ்ரெஸ்தா பாரத் என்ற கருதுப்பொருளின் அடிப்படையில் கீதமானது உருவாக்கப்பட்டது.
- தேசிய போட்டியானது ஆகஸ்ட் மாதம் 29 ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் மாதம் 12 ம் தேதி வரை அகமதாபாத், காந்தி நகர், சூரத், வதோதரா, ராஜ் கோட் மற்றும் பாவ் நகர் ஆகிய ஆறு நகரங்களில் நடைபெற உள்ளது.
- 11 ஆவது விளையாட்டு மகா பெருவிழாவானது நடைபெற உள்ளது.
- அமித்ஷா அவர்களின் கையால் விளையாட்டு மகா பெருவிழாவின் சாதனையாளர்களுக்கு விருதானது வழங்கப்பட்டுள்ளது.

### துபாயில் பிறந்த சதுரங்க போட்டி

- 7.5 புள்ளிகள் அடிப்படையில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்டரான அரவிந்த் சிதம்பரம் 22 ஆவது துபாய் சதுரங்க போட்டியினை வென்றுள்ளார்.



- 7 இந்தியர்கள் இந்த போட்டியில் முதல் 10 இடத்தைப் பிடித்துள்ளனர். அதில் தமிழகத்தை சேர்ந்த ஆர். பிரக்கியாநந்தா இரண்டாவது இடத்தில் உள்ளார்.
- 9 வது மற்றும் இறுதி போட்டியில் அரவிந்த் சிதம்பரம் மற்றும் ஆர். பிரக்கியாநந்தா சமநிலையில் இருந்தனர் களத்தில் 7.5 புள்ளிகள் என்ற கணக்கில் அரவிந்த் சிதம்பரம் இந்தப் போட்டியினை வென்றுள்ளார்.

### இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் அரவிந்த் சிதம்பரம் பற்றிய முக்கியக் குறிப்புகள்

- 13 வது வயதில் முன்னாள் இந்திய சாம்பியர்ரானார்.
- 9 போட்டிகளில் 6 போட்டியை வென்று மற்றும் 3 போட்டிகளில் சம நிலையில் இருந்துள்ளார்.
- இவர் ரீனத் ஜீம்பாயவ் மற்றும் அர்ஜீன் எரிகைசி ஆகியேரை வென்றுள்ளார்.
- ஆர். பிரக்கியாநந்தா, அலெக்ஸாண்டர் பிரத்கே, அபிஜித் குப்தா, ஜெய் குமார் சமத் செட்டி மற்றும் எஸ்.பி. சேதுராமன் ஆகிய ஐந்து போட்டியாளர்கள் 7 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தை பிடித்துள்ளனர்.
- மியாமியில் நடைபெற்ற FTX கிரிப்டோ கோப்பை போட்டியில் உலகத்தின் நம்பர் 1 சதுரங்கள வீரரான மேக்னஸ் கார்ல்சன் வீழ்த்தி ஆர். பிரக்கியாநந்தா பட்டத்தை வென்றுள்ளார். கஜகஸ்தான் நாட்டில் நடைபெற்ற போட்டியில் கிராண்ட் மாஸ்டரான ரீனத் ஜும்பாயவ் வெற்றி பெற்றுள்ளார்.

### லின்த்தோய் சணம்பம்

- இந்தியாவின் ஜூடோவீரர் லின்த்தோய் இந்தியாவிற்கான முதல் பதக்கத்தை உலக ஜூடோ சாம்பியன்சிப் போட்டியில் பெண்களுக்கான 57 கிலோ பிரிவில் தங்கப்பதக்கதினை வென்றுள்ளார்.
- 15 வயதான பிரேசிலின் பினாகாரேஷ் தோற்கடித்து 57 கிலோ பிரிவில் பதக்கத்தை வென்றுள்ளார்.

### லின்த்தோய் சணம் – இன் வேலை

- அனைத்து வயதினருக்கு இடையில் இந்தியாவிற்கான ஜூடோ வேலையாட்டிற்கான



பதக்கத்தை உலக சாம்பியன்சிப் பிரிவில் லின்த்தோய் சணம்பம் வென்றுள்ளார்.

- 15 வயதான இந்தியாவின் ஜூடோகோ வீரர் கடந்த இரண்டு வருடங்களில் மிக முக்கிய வீரராக களத்தில் உள்ளார்.

- அவர் 2017 ஆம் ஆண்டுசப் ஜூனியர் தேசிய ஜூடோ சாம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் கவனத்தை ஈர்த்தார், அதன் பின்னர் அவர் JSE இன் இன்ஸ்பயர் இன்ஸ்டிடியூட் ஜூடோ திட்டத்தில் பயிற்சி பெற்று வருகிறார்.
- வெள்ளிக்கிழமை வரலாற்று வெற்றிக்கு முன், 2021 இல் தேசிய கேடட் ஜூடோ சாம்பியன்ஷிப்பில் சணம்பம் தங்கப் பதக்கத்தை வென்றார், அதைத் தொடர்ந்து லெபனானின் பெய்ரூட்டில் நடந்த ஆசியா – ஓசியானியா கேடட் ஜீடோ சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்றார்.

## UEFA விருதுகள்

- துருக்கியின் இஸ்தான்புல்லில்



நடந்த விழாவில் UEFA ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஆண்டின் சிறந்த வீரருக்கான பரிசுகளை வென்றதன் மூலம் கரீம் பென்செமா மற்றும் அலெக்ஸியா புடெல்லாஸ் ஆகியோர் அவுட் ஸ்டாண்டிங் சீசன்களுக்காக வெகுமதி பெற்றனர்.

- சாம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டியில் லிவர்பூலுக்கு எதிராக ரியல் மாட்ரிட் அணியை ஃபிரான்ஸ் ஸ்டிரைக்கர் பென்சிமா வெற்றி பெறச் செய்தார், மேலும் போட்டியில் 15 கோல்களை அடித்தார், அதே சமயம் பெண்கள் சாம்பியன்ஸ் லீக்கில் புட்டெல்லாஸ் அதிக கோல் அடித்தவர், பார்சிலோனா லியானிடம் தோற்று இறுதிப் போட்டிக்கு வர உதவினார்.
- கடந்த சீசனில் இரண்டு பெரிய நிகழ்வுகளில் வெற்றி பெற்ற மாட்ரிட்டின் கார்லோ அன்செலோட்டி மற்றும் இங்கிலாந்தை யூரோ 2022 பட்டத்திற்கு அழைத்துச் சென்ற சரினா வீக்மேன் ஆகியோருக்கு பயிற்சியாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

### முக்கிய புள்ளிகள்

- மாட்ரிட் கோல்கீப்பர் திபாட் கோர்டோயிஸ் மற்றும் மான்செஸ்டர் சிட்டியின் மிட்ஃபீல்டர் கெவின் டி ப்ரூய்ன் ஆகியோர் அடங்கிய மூன்று வீரர்களின் இறுதிப்பட்டியலில் பென்சிமா வென்றார்.
- யூரோ 2022 ல் அதிக கோல் அடித்த இங்கிலாந்து வீரர் பெத் மீட் மற்றும் ஜெர்மனியின் மிட்ஃபீல்டர் லீனா ஓபர் டோர்ஃப் ஆகியோரை விட புட்டெல்லாஸ் தனது வாக்குகளை பெற்றுள்ளார்.
- யூரோ பீன் போட்டிகளின் விளையாடிய பயிற்சியாளர்கள் மற்றும் ஐரோப்பா முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திரிக்கையாளர்களால் வாக்களிப்பு செய்யப்பட்டது.

## ஸ்பான்சர்ஷிப் உரிமைகள்

### செய்திகளில்

- மாஸ்டர்கார்டு இந்திய பார்வையாளர்களுக்கு அதன் மூலோபாய ரீதியை விரிவுபடுத்துவதற்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்துடன் (பிசிசிஐ) தனது ஒத்துழைப்பை அறிவித்துள்ளது.
- மாஸ்டர்கார்டு மற்றும் பிசிசிஐ இடையேயான ஒத்துழைப்பின் போது, சொந்த மைதானத்தில் நடைபெறும் ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட அனைத்து சர்வதேச போட்டிகளுக்கும், துலீப்




டிராபி, ரஞ்சி டிராபி மற்றும் இரானி டிராபி போன்ற உள்நாட்டு கிரிக்கெட் போட்டிகளுக்கும் மாஸ்டர்கார்டு தலைப்பு ஸ்பான்சராக இருக்கும்.
- மேலும், அனைத்து ஜூனியர் கிரிக்கெட் போட்டிகளும் இந்தியாவில் நடத்தப்படுகின்றன.

### பற்றி

- ஸ்பான்சர்ஷிப் மற்றும் ஒத்துழைப்பு நாடு முழுவதும் உள்ள கிரிக்கெட் பிரியர்களுடன் Mastercard இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. UETA, சாம்பியன் லீக், கிராமிஸ், கேன்ஸ் திரைப்பட விழா மற்றும் ஆஸ்திரேலிய மற்றும் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டிகள் உள்ளிட்ட உலகளாவிய



ஸ்பான்சர்ஷிப்களிலும் மாஸ்டர்கார்டு முதலீடு செய்துள்ளது.

- மாஸ்டர்கார்டு அதன் வலுவான சர்வதேச அடிப்படையிலான ஸ்பான்சர்ஷிப் சொத்துக்களை தனித்தன்மை வாய்ந்த இந்தியர்–களுடன்ஆர்வப்புள்ளிகள்முழுவதும் மேம்படுத்த முயற்சிக்கிறது.
- நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக பிராண்ட் தூதராக எம்எஸ் தோனியையெழுத்திட்டதன் மூலம் இந்த ஆர்வத்தை அதிகரிக்க மாஸ்டர்கார்டு உழைத்தது.

## US ஓபன்

### US ஓபன் பற்றி

- யுனைடெட் ஸ்டேட்ஸ் டென்னிஸ் அசோசியேஷன் (யுஎஸ்டிஏ) நடத்தும் யுஎஸ் ஓபன், கடின மைதானத்தில் நடைபெறக்கூடிய டென்னிஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டியாகும், இது ஒவ்வொரு வருடமும் ஒருமுறை நடத்தப்படுகிறது.
- 1881 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட யுஎஸ் ஓபன் 1975 மற்றும் 1977 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகளுக்கு புல் மற்றும்பின்னர்களிமண்பரப்புகளில போட்டியாக தொடங்கியது. இறுதியாக 1978 ஆம் ஆண்டு முதல் கடினமான மைதானத்திற்கு மாற்றப்பட்டது.
- 1978 முதல் யுஎஸ் ஓபன் ஃப்ளஷிங் மெடோ – கொரோனா பார்க் குயின்ஸில் உள்ள யுஎஸ்டிஏ ஹில்லி ஜீன் கிங் நேஷனல் டென்னிஸ் மையத்தில் நடைபெற்று வருகிறது, நியூயார்க் சிட்டி யுஎஸ் ஓபன், முன்னதாக யுஎஸ் நேஷனல் சாம்பியன்ஷிப் என்று அழைக்கப்பட்டது, இதுவரை 141 முறை பல சாம்பியன்கள் பல ஆண்டுகளாக பட்டம் பெற்றுள்ளனர்.
- ஆண்கள் பிரிவில், ஸ்பெயின் வீரர் அல்கராஸ் கார்க், சி ரூட்டை தோற்கடித்து தனது முதல் கிராண்ட்ஸ்லாம் கோப்பையை வென்றார், 19 வயதில் உலகின் நம்பர் 1 இடத்தை அடைந்த இளைய வீரர் ஆனார்.
- இந்நிகழ்ச்சி நியூயார்க்கில் உள்ள ஆர்தல் ஆஷ் ஸ்டேடியத்தில் நடைபெற்றது.
- பெண்கள் பிரிவில், போலந்து டென்னிஸ் வீராங்கனை i. Swatek 2022 US open பெண்கள் ஒற்றையர் இறுதிப் பட்டத்தை ஓ.ஜபியூரை தோற்கடித்தார்.
- 2022 இல் யுஎஸ் ஓபன் மொத்த பரிசுப் பணப்பைக்கான புதிய சாதனை 2021இல் 57.5 மில்லியன் டாலரில் இருந்து 60 மில்லியன் டாலருக்கும் அதிகமாக இருந்தது.
- பெண்கள் மற்றும் ஆண்களின் பாவம் கிலேஸுக்கு, மொத்த பரிசுத் தொகை $ 42,628,000 ஆகும். வெற்றியாளர்கள் முறையே $ 2.6 மில்லியன் ஆகும்.
- ஆண்கள் மற்றும் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ரன்னர் – அப்கள் ஒவ்வொருவரும் $ 1.3 மில்லியன் பெறுவார்கள்.

**பல்வேறு பிரிவுகளில் உள்ள வெற்றியாளர்களின் முழு தொகுப்பு**

| எண் | பிரிவு | வெற்றியாளர் | இரண்டாம் இடம் பிரித்தவர் |
|---|---|---|---|
| 1. | ஆடவர் ஒற்றையர் பிரிவு | சி. அல்கராஸ் கார்பியா | சி. ரூட் |
| 2. | மகளிர் ஒற்றையர் பிரிவு | ஐ. சுவாயடெக் | ஓ. ஜபேர் |
| 3. | ஆண்கள் இரட்டையர் பிரிவு | ஆர்.ராம் மற்றும் ஜே. செய்ல்ஸ்பரி | டபிள்யு. கூழ்கோப் மற்றும் என் ஸ்குப்ஸ்கி |
| 4. | பெண்கள் இரட்டையர் பிரிவு | கே. சினியாகோவா மற்றும் பி. கிரேஷிகோவா | சி. மெக்நெலி மற்றும் டி. டவுன்ஸ் சென்ட் |
| 5. | கலப்பு இரட்டையர் பிரிவு | எஸ். சான்டர்ஸ் மற்றும் ஜே. பியர்ஸ் | கே. பிலீப்கேன்ஸ் மற்றும் இ. ரோகர் வாஸ்லின்ட் |



# 3. நிகழ்வுகள்/விருதுகள்

## தேசிய ஊட்டச்சத்து வாரம் 2022

### இவற்றைப் பற்றி

- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் வாரம் தேசிய ஊட்டச்சத்து வாரமாக கொண்டாடப்படுகிறது.
- இது செப்டம்பர் 1 முதல் 7 வரை அனுசரிக்கப்படுகிறது.
- ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை நிலை நிறுத்துவதற்கு ஆரோக்கியமான உணவு பழக்கங்கள் மற்றும் சரியான ஊட்டச்சத்து மதிப்பு குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த வாரத்தின் நோக்கமாகும்.
- இந்த வாரம் முழுவதும் ஊட்டச்சத்து விழிப்புணர்வுகளை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை அரசாங்கம் அறிமுகப்படுத்துகிறது.

### கருப்பொருள்

- இந்த ஆண்டிற்கான கருப்பொருள் "சுவைகளின் உலகம்".
- தேசிய ஊட்டசத்து வாரத்தின் ஒரு பகுதியாக அந்த ஆண்டின் கருப்பொருளில் முதன்மை கவனம் செலுத்தும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கம் கருப்பொருளை அறிவிக்கிறது.
- கடந்த ஆண்டு அரசாங்கம் ஊட்டச்சத்து வாரத்திற்கான கருப்பொருளாக தொடக்கத்திலிருந்து ஸ்மார்ட் உணவு என்று அறிமுகப்படுத்தியது.

### முக்கியத்துவம்

- ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவைப் பற்றி மக்களுக்கு கற்பிப்பதற்கான தேசிய ஊட்டச்சத்து வாரம் நினைவுகூறப்படுகிறது.
- இந்திய அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து வாரியம் ஊட்டச்சத்து பற்றி மக்களுக்கு தெரிவிக்க ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஊட்டச்சத்து வாரத்தை கொண்டாடுகிறது.
- மனித உடலில் ஆரோக்கியமான முக்கியத்துவமும் பங்கும் வழியுறுத்தப்படுகின்றன.
- ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் செயல்பாட்டிற்கு அத்தியாவசியமான ஊட்டசத்துக்கள் நிறைந்த ஒரு சீரான உணவு அவசியம்.
- இந்திய அரசாங்கம் நல்ல ஊட்டச்சத்து முழு உணவு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை வலியுறுத்தும் திட்டங்களை தொடங்கியுள்ளது.

### வரலாறு

- தேசிய ஊட்டசத்து வாரம் 1975ல் அமெரிக்க உணவு முறை சங்கத்தின் உறுப்பினர்களால் நிறுவப்பட்டது.
- நல்ல ஊட்டசத்தின் மதிப்பு மற்றும் சுறுசுறுப்பான வாழ்க்கைமுறையின் அவசியம் குறித்துபொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த வாரம் ஒதுக்கப்பட்டது.
- மக்களிடம் இருந்து கிடைத்த நேர்மறையான வரவேற்பின் காரணமாக 1980ல் இந்த வார விழா ஒரு மாதம் முழுவதும் நீடித்தது.
- அந்தக் காலகட்டத்தில் இந்தியாவின் பெரும்பாலான மக்கள் ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சனையால் அவதிபட்டனர்.
- 1982ல் தேசிய ஊட்டசத்து வாரம் இந்தியாவில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

## ஸ்மாட் தீர்வுகளின் சவால் உள்ளடக்கிய நகரங்கள் விருது 2022

### செய்திகளில் ஏன்?

- சமீபத்தில் ஸ்மார்ட் தீர்வுகளில் சவால் உள்ளடக்கிய நகரங்கள் விருது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தால் வழங்கப்பட்டது.




### நிகழ்வின் முக்கிய சிறப்பம்சங்கள் என்ன?

- ஆரம்ப நிலை கண்டுபிடிப்புகள் பிரிவில் க்ளேவெட்ரிக்ஸ் நிறுவனத்தின் ஐந்தாம் அறிவு என்ற அணியக்கூடிய தொழில் நுட்ப தயாரிப்பு வெற்றிப் பெற்றது.
- இந்த தயாரிப்பு சென்சார்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி சைகை மொழிகளை பேச்சு மற்றும் உரைநடைக்கு மொழிப்பெயர்க்கிறது.
- இரண்டாவது பிரிவில் மவுஸ்வேர் வெற்றிப் பெற்றது.
- இந்தப் பிரிவு சந்தைக்கு உடனடியாக தீர்வுகள் சொல்லும் பிரிவாகும்.
- மவுஸ்வேர் என்பது தலையில் அணியக்கூடிய சாதனமாகும்.

- இது கணினி மற்றும் ஸ்மார்ட் பொருட்களில் கைகளில் செயல் பாட்டை கட்டுப்படுத்துகிறது.
- செயல்படுத்தப்பட்ட தீர்வுகள் அடிப்படையில் மாற்றுத்திறனாளிகள் எளிதாக அணுகுவதற்கான கல்வி மற்றும் சுகாதார பாதுகாப்பை வழங்குகிறது.
- விருதுகளைப் பற்றி நாம் என்ன தெரிந்துகொள்ளவேண்டும்.
- ஸ்மார்ட் தீர்வுகளின் சவால் என்பது இந்தியாவில் உள்ள தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் ஒரு முயற்சியாகும்.
- இந்தியாவில் உள்ள மாற்றுத் திற-னாளிகள், முதியவர்கள், பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை புதுமையான தொழில் நுட்பம், புதுமையான தயாரிப்புகள், தீர்வுகள் மூலம் பிரச்சனைகளை சமாளித்தல்.

## முக்கியத்துவம்

- இந்த தீர்வுகள் உலகளாவிய வடிவமைப்பை ஒருங்கிணைக்கும் மேலும் இது நிலையான குறிக்-கோளை அடைவதற்கு உதவி-கரமாக இருக்கும்.
- இது எளிதாக அணுகக் கூடிய வகையில் உள்ளடங்கிய வளர்ச்சியை கொண்டு இருக்கும்.

## நகர்ப்புற விவகாரங்களுக்கான தேசிய நிறுவனம் என்றால் என்ன?

- இது நகர்புற வளர்ச்சி மற்றும் மேலாண்மை சம்மந்தப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி வழங்குவதற்கான ஒரு நிறுவனம் ஆகும்.
- இது இந்தியாவில் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- இது சங்கங்கள் பதிவு சட்டம் 1860ன் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பாக 1976ல் நிறுவப்பட்டது.
- இந்த நிறுவனம் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் இந்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புற பிரச்சனைகளுடன் தொடர்புடைய பிற நிறுவனங்களால் ஆதரிக்கப்படுகிறது.

# சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினம்

## இவற்றைப் பற்றி

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் சனிக்கிழமை சர்வதேச கழுகு தினம் கொண்டாடப்படுகிறது.




## விவரங்கள்

- கழுகுகள் சுற்றுச்சூழலின் ஒரு முக்கியமான உயிரினமாகும்.
- ஆனால் அவை வாழும் பல பகுதிகளின் நிகழும் அச்சுறுத்தல் காரணமாக அவற்றின் வாழிடம் பாதிக்கப்பட்டு வருகிறது.
- கழுகுகளின் பல இனங்கள் அழுத்த நிலையிலும் மற்றும் சில இனங்கள் அழிவை எதிர்கொள்கின்றன.
- தென்னாப்பிரிக்காவில் உள்ள அழிந்து வரும் வனவிலங்கு அறக்கட்டளை மற்றும் இங்கிலாந்தில் உள்ள ஒரு அறக்கட்டளை ஆகியவை இணைந்து கழுகு விழிப்புணர்வு நாட்களை கொண்டாடியது.
- பின் இது சர்வதேச கழுகு விழிப்புணர்வு தினமாக விரிவு-படுத்தப்பட்டது.
- இவற்றின் மூலம் கழுகுகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் உலகிற்கு அறிவுறுத்தப்படுகிறது.

## அலர்ஜியை எதிர்க்கும் மருந்துகள் இந்தியாவில் கழுகுகளுக்கு ஒரு பெரிய அச்சுறுத்தலாக உள்ளது.

- இந்திய அரசாங்கம் கடந்த இரண்டு தசாப்தங்களாக கழுகின் மக்கள் தொகை குறைந்து வருவதை தடுப்பதற்காக பல முயற்சிகளை எடுத்துக்கொண்டுள்ளது.
- 2006ம் ஆண்டு கழுகுகளின் இறப்பிற்கு காரணமான டைக்ளோபினக் என்ற மருந்தை மத்திய அரசு தடைசெய்தது.
- அதற்கு பதிலாக ஏயிக்ளோபினக், கெட்டோப்ரோபன், நிமிசுலிட் என்ற மருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- 2003ல் 40,000க்கும் அதிகமாக இருந்த கழுகுகளின் எண்ணிக்கை 2015ல் 18,645 ஆக குறைக்கப்-பட்டது.
- இது இந்த அறிக்கை அரசு-களுக்கிடையேயான பறவைகள் பற்றிய சர்வதேச அமைப்பு அறிவித்தது.
- 2020-2025க்கான இந்தியாவின் கழுகு பாதுகாப்பு செயல்திட்டம் மூன்று மருந்துகளின் கால்நடை பயன்பாட்டிற்கான மருந்தை தடை செய்ய பரிந்துரைத்தது.
- ஆப்பிரிக்கா யுரேசியா கழுகுகளை பாதுகாப்பதற்கான புலம் பெயர்ந்த உயிரினங்களின் பல செயல்-திட்டத்தின் இந்தியாவும் கையெழுத்-திட்டுள்ளது.
- மேலும் இது இந்தியாவில் கழுகுகளுக்கு கால்நடைகளுக்கு பயன்படுத்தும் மருந்துகள் (NSAIDS) ஒரு பெரிய அச்சுறுத்-தலாக இருப்பது அங்கீகரிக்கப்-படுகிறது.
- டிக்ளோ ஃபெனாக் பதிலாக மெலோச்சிகாமை பரிந்துரைக்கிறது.

- டோல்ஃபெனாமிக் அமிலம் மற்ற பாதுகாப்பான ஒரு மாற்றாகும்.

## டிக்ளோ ஃபெனாக்

- கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தப்படும் டிக்ளோ ஃபெனாக் என்ற மருந்து கழுகுகளின் சிறுநீரக செயலழிப்பு மற்றும் பறவைகளின் எண்ணிக்-கையின் குறைவு ஆகியவற்றின் தொடர்புடையது.
- இந்த மருந்து 2006ல் தடை செய்யப்பட்டாலும். அது இன்னும் பயன்பாட்டிற்கு கிடைக்கிறது.
- இது கால்நடை சிகிச்சையளிக்க பயன்படுத்தப்பட்டாலும் கழுகுகளின் இது நச்சுப்பொருளாக செயல் படுகிறது.
- கழுகுகள் இறந்த கால்நடைகளை உண்பதால் உணவு சங்கிலி அமைப்பின் மூலம் இவை கழுகின் உடலுக்குள் செல்கின்றது.
- இந்தியாவில் மூன்று வகையான கழுகு தினங்கள் உள்ளன.
- அவற்றில் ஜிப்ஸ் இண்டிகஸ், ஜி .டெனுயிரோஸ்டிரிஸ் ஆகிய-வற்றின் இனங்கள் 1992 மற்றும் 2007க்கு இடையில் 97% குறைந்துள்ளது.
- அதே சமயம் ஜி.பென்கேலென்சிஸ் கிட்டத்தட்ட 99% குறைந்துள்ளது.

## கழுகு பாதுகாப்புக்கான செயல் திட்டம் 2020-2025

- இது உத்திரப்பிரதேசம், திரிபுரா, மஹாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு அகிய மாநிலங்களில் கழுகு பாதுகாப்பு இனப்பெருக்க மையங்களை நிறுவ முன்மொழி-கிறது.
- சிவப்பு தலைக் கழுகு மற்றும் எகிப்திய கழுகுகளுக்கான பாதுகாப்பு இனப்பெருக்க திட்டம் மற்றும் எஞ்சிய இருக்கும் கழுகு-களை பாதுகாப்பதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் குறைந்த பட்சம் கழுகு பாதுகாப்பு மண்டலம் இருக்கும்.
- வெவ்வேறு புவியியல் பகுதிகளில் நான்கு மீட்பு மையங்கள் இருக்கும்.
    - வட இந்தியாவில் பிஞ்சோர்
    - மத்திய இந்தியாவில் போபால்
    - வடகிழக்கு இந்தியாவில் கவு-காத்தி
    - தென்னிந்தியாவில் ஹைதரா-பாத்
- கழுகுகளின் எண்ணிக்கையை கண்காணிக்க வழக்கமான ஆய்வுகள் மற்றும் திட்டங்கள் செயல் படுத்தப்படுகிறது.

## இயற்கையை பாதுகாக்க கழுகுகளின் முக்கியத்துவம்

- கழுகுகள் இறந்த உயிரினங்களை உண்பதால் இவை இயற்கையாக நோய்த் தொற்று கட்டுப்பாட்டு உயிரினமாக இருக்கின்றது.
- மேலும் கழுகுகள் துப்புரவு பணி-களை செய்து சுற்றுச்சூழலை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.
- கழுகுகள் இறந்த உயிரினங்களை உண்டாலும் அவற்றிற்கு நோய்த்-தொற்று ஏற்படாது ஏனெனில் அவற்றின் வயிற்றில் உள்ள அமிலங்கள் நோய்க்கிருமிகளை கொல்லும் ஆற்றல் வாய்ந்தவை-யாகும்.
- இது ஆந்த்ரக்ஸ், காலரா, கால் மற்றும் வாய் நோய்கள் ரேபிஸ் போன்ற நோய்க்கிருமிகளின் பரவலை கட்டுப்படுத்துகின்றது.
- கழுகள் நீர் மாசுபடுவதை தடுக்கிறது.
- குறிப்பாக காடுகளில் நீர் செல்லும் பகுதிகளில் இறக்கும் விலங்குகளினால் தொற்று நோய்கள் விரைவாக பரவி மரணம் ஏற்படும் அபாயம் உள்ளது.
- ஆனால் கழுகுகள் இறந்த விலங்குகளை உண்பதால் இவை தடுக்கப்படுகிறது.

## இந்தியாவில் ஒன்பது கழுகினங்கள் உள்ளன

- நீளமான கழுத்துக்கழுகு (இந்தியக் கழுகு) சிவப்புத் தலை கழுகு, வெள்ளை ரம்கழுகு, எகிப்திய கழுகு போன்றவை மேற்கு தொடர்ச்சி மலையின் நீலகிரி உயிர்க்கோளத்தில் காணப்படுகின்றன.
- கடந்த நான்கு ஆண்டுகளின் கழுகுகளின் தொகை 10% அதிகரித்-துள்ளது.
- கழுகுகளின் இனப்பெருக்க காலம், மெதுவாக வளரும் தன்மை போன்றவை மக்கள் மீட்டெடுப்பதை ஒரு பெரிய பணியாக கொண்டுள்ளது.
- கழுகினங்கள் அழிந்தால் அவை மிகப்பெரிய விளைவுகளை சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும்
- எலிகள் மற்றும் நாய்கள் போன்ற இறந்த உயிரினங்களை உண்ணும் உயிரிகள் இருந்தாலும் அவைகளினால் ரேபிஸ் போன்ற தொற்று வியாதிகள் ஏற்படும்.

# கடமைபாதை (கர்தவ்யா பாதை)

## செய்திகளில் ஏன்?

- சமீபத்தில் புதுடெல்லியில் ராஷ்டிரபதி பவனிலிருந்து இந்திய கேட் வரையிலான ராஜ்பாத் பாதை தற்போது கடமை பாதை என்று மறுபெயரிடப்பட்டு பிரதமரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- இந்தியா கேட்டின் கீழ் நிறுவப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திபோஸின் 28அடி கிரானைட் சிலையும் திறந்து வைக்கப்பட்டது.

SURESH'

- இராஜ்பாத்தின் புதிய பெயர் மற்றும் தோற்றம், நேதாஜியின் சிலை ஆகியவை பெருமை மிக்க புதிய இந்தியாவின் உணர்வை குறிக்கும்.



## அரசுபாதை - இராஜ்பாதை வரலாற்று பின்னணி

- 100 ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சியின் போது 3 கி.மீ நீளம் கொண்ட பகுதியானது எட்வின் லுட்யென்ஸ் ஹெர்பர்ட் பேக்கர் என்ற கட்டிட கலைஞர்களால் கட்டப்பட்டது.
- அக்காலத்தில் இது அரசப்பாதை என்று அழைக்கப்பட்டது.
- 1911ம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசின் தலைநகரம் கல்கத்தாவில் இருந்து புதுடெல்லிக்கு மாற்றபட்டது.
- அதன் பிறகு பல ஆண்டுகள் கட்டுமானம் தொடர்ந்தது.
- 1911ம் ஆண்டு தர்பாரின் போது டெல்லிக்கு வந்த அப்போதைய அரசர் ஐந்தாம் ஜார்ஜ் அவரின் நினைவாக இதற்கு அரசப்பாதை என்று பெயரிடப்பட்டது.
- இந்த வழிமுறை லண்டனிலிருந்து பெறப்பட்டது.
- சுதந்திரத்திற்கு பிறகு இந்த சாலைக்கு அதன் ஹிந்தி பெயர் ராஜ்பாத் என்று வழங்கப்பட்டது. அதை தொடர்ந்து பல தசாப்தங்களாக குடியரசுத் தின அணிவகுப்புகள் நடைபெற்றன.

## கடமைபாதை என்றால் என்ன?

- நேதாஜி சிலையில் இருந்து ராஜ்ரபதி பவன் வரையிலான பாதை கடமை என்று அழைக்கப்படுகிறது.
- காலனித்துவ ஆதிக்கத்தை ஒதுக்கி வைத்துவிட்டு இந்தியா தமது சொந்த பாரம்பரியத்துடன் இந்தியா @100 என்ற குறிக்கோளை நோக்கி நகர்வதை நோக்கமாக கொண்டுள்ளது.
- மேலும் பொது சேவை மனப்பான்மை என்று வெறும் ஆளுவது மட்டுமல்லால் சேவை செய்ய வேண்டிய கடமை என்பதை நினைவூட்டுகிறது.
- இந்த பெயர் மாற்றத்தின் மூலம் பொதுவுடமை, அதிகாரம் அளிக்கும் செயலுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

## அம்சங்கள்

- இது முந்தைய ராஜ்பாத் மற்றும் மத்திய விஸ்டா புல்வெளிகளை உள்ளடக்கியது.
- இந்த நிலப்பரப்புகள் நடைபாதைகள் கொண்ட புல்வெளிகள், கூடுதல் பசுமையான இடங்கள், புதுப்பிக்கப்பட்ட கால்வாய்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை கொண்டுள்ளது.
- இது புதிய பாதசாரி சுரங்கப்பாதைகள் மற்றும் பார்க்கிங் இடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட இரவு விளக்குகள் ஆகியவற்றுடன் பொது அனுபவத்தை மேம்படுத்துகிறது.
- திடக்கழிவு மேலாண்மை, பயன்படுத்திய நீரை மறுசுழற்சி செய்தல் புயல் நீர் மேலாண்மை மழை நீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் திறன் கொண்ட விளக்கமைப்புகள் போன்ற பல நீடித்த திறன் அம்சங்களையும் உள்ளடக்கியது.

## வெஸ்ட்(WEST) தொடக்கம்

- சமீபத்தில் மத்திய அரசு ஒரு புதிய i-STEM (இந்திய அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் பொறியியல் வசதிகள்) முயற்சியை பெண்கள் பொறியியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் (WEST)என்ற பெயரில் அறிமுகப்படுத்தியது.



## முக்கிய கருத்துகள்

- வெஸ்ட் திட்டம் ஸ்டெம் (STEM) பின்னணியில் உள்ள பெண்களை இலக்காக கொண்டது
- மேலும் அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் புதுமையான சுற்றுச்சூழல் அமைப்புக்கு பங்களிக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும்.
- இந்த வெஸ்ட் திட்டத்தின் மூலம் பெண் தொழில் முனைவோரின் ஸ்டாட் அப்களுக்கு ஸ்டெம்பால் வழங்கப்பட்டு வரும் ஆதரவு மேம்படுத்தப்படும்.
- அர்பணிப்பு உள்ள பெண்கள் குழு இந்த முயற்சியை வெற்றிகரமாக செயல்படுத்துவதை உறுதி செய்யும்.
- இந்த தளம் மூலம் கிடைக்கும் அறிவியல் மற்றும் மேம்பாட்டு வசதி கள், அறிவியல் மற்றும் மேம்பாட்டு மென்பொருள் தளங்கள். அவற்றின் அணுகலை அதிகப்படுத்தி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் பெண் தொழில் முனைவோருக்கு வலுவான ஆதரவு வலையமைப்பை உருவாக்கும்.
- மேலும் ஸ்டெம் மூலம் விரைவான இணைப்பு என்ற டிஜிட்டல் குழுவும் இணைக்கப்பட்டது.

- இது ஆன்லைன் விவாதம் மற்றும் உடனடி விவாதங்களை குறிப்பிட்ட தளம் மூலம் அளிக்கும்.

### வெஸ்டின் முக்கியத்துவம்

- i-STEM ஆனது அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் கண்டு-பிடிப்புகள் மூலம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்-வதற்கான கருத்துக்களை பரிமாறிக் கொள்ள பெண் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு தளத்தை வழங்கும்.
- இந்த அனுபவம் உள்ள பெண்கள் தொழில் முனைவர், ஆலோசராகவும் இந்த இயங்கு தளம் பணியாற்றலாம்.
- அவர்களின் தொழில் இடைவேளிக்கு பிறகு பெண்களை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையில் மீண்டும் கொண்டு வருவதற்கு இந்த முயற்சி உதவும்.
- மேலும் இது திறன் இடைவேளியை நிரப்புவதற்கும் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது உபகரணங்களை மக்கள் பயன்படுத்துவதற்கு ஒரு நல்ல வய்ப்பாக அமையும்.

### i-STEM தளம்

- இது இந்திய அறிவியல் தொழில் நுட்ப பொறியியல் வசதிகளின் வரைபடமாகும்.
- ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பயனர்கள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கு தேவைப்-படும் வசதிகளை கண்டறிவதற்கான நுழைவுவாயிலாக இந்த தளம் செயல்படும்.
- மேலும் இந்த தளத்தில் வசதியைப் பெறுவதற்கு ஆராய்ச்சியாளர்கள் இந்த தளத்தில் முன்பதிவு செய்-யலாம்.
- இதன் மூலம் ஸ்டாட் அப் நிறுவனங்கள் பொது மற்றும் தனியார் முதலீடுகளை பயன்படுத்தி வெற்றிகரமான சேவைகள் மற்றும் தயாரிப்புகளை கொண்டுவரமுடியும்.
- தொடக்கத்தில் இந்த வசதி பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் மற்றும் மும்பையில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தில் இருந்தது.
- பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனம் நானோ அறிவியல் மற்றும் பொறியியல் மைய வசதியை அளிக்கிறது.

## எதிர் ரேன்சம்வர் பயிற்சி

### இவற்றை பற்றி

- இந்தியாவின் தேசிய பாதுகாப்பு கவுன்சிங் செயலகம் மற்றும் இங்கிலாந்து அரசின் பிஏஇ அமைப்புடன் இணைந்த ரேன்சம்-வர்க்கு எதிரான மெய்நிகர் சைபர் பயிற்சியை வெற்றிகரமாக நடத்-தியது.

### மெய்நிகர் சைபர் பயிற்சி பற்றி

- இந்த பயிற்சியானது தேசிய இணைய பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளரின் தலைமையில் இந்தியாவால் நடத்தப்படும் ரேன்சம்-வருக்கு எதிரான இந்த பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.
- **பயிற்சியின் நோக்கம் :** ஒரு பெரிய இணைய வைரஸ்க்கு எதிரான சம்பவத்திற்கு பதிலாளிப்பதில் பங்கேற்கும் நாடுகளில் திறனை சோதிக்க அனுமதிப்பது மற்றும் பெரிய இணைய சம்பவத்தின் போது தகவல்களை பகிர்வது மற்றும் கூட்டாய்வின் பலனை நிருவிப்பது இந்த பயிற்சியின் முக்கிய நோக்க-மாகும்.
- **பங்கேற்கும் நாடுகள்:** சுமார் 26 நாடுகள் மற்றும் அந்த நாட்டை சேர்ந்த நிறுவனங்கள் இந்த பயிற்சியை பங்கேற்றன.
- **கருப்பொருள்:** இது எரிசக்தி துறையை அடிப்படையாக கொண்டது.
- இதில் பங்கேற்கும் நாடுகள் அந்த தேசிய சைபர் நெருக்கடி மேலாண்மை குழுக்கள் பல மின்சார விநியோக நிறுவனங்களின் இணைய வைரஸ்தாக்குதல்களை சமாளிக்க வேண்டும்.

## பெங்களூரில் விண்வெளி கண்காட்சியின் (2022) 7வது பதிப்பு

### செய்திகளில்

- பெங்களூரில் விண்வெளி கண்காட்சியின் 7வது பதிப்பு, இந்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN-SPACE) மற்றும் நியூஸ்பேஸ் ஆகிய-வற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



- விண்வெளித்துறைக்கான மேம்பட்ட தொழில் நுட்பங்கள் மற்றும் தயாரிப்புகளை காட்சிப்படுத்து-வதற்காக 100க்கும் மேற்-பட்ட நிறுவனங்கள் சுமார் 15 நாடுகளிலிருந்து கலந்து கொண்டனர்.

### இவற்றைப் பற்றி

- விண்வெளித்துறையில் இந்தியாவின் சாதனைகள் மற்றும் எதிர் காலத்தின் தனியார் துறைக்கான வணிக வாய்ப்புக்களை முன்னிலைப்படுத்த கண்காட்சியில் இந்தியாவுடன் மற்ற விண்வெளி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் சேர்ந்து இஸ்ரே ஒரு பெரிய அரங்கமைப்பு இது ஒரு மூன்று நாள் நிகழ்வாகும்.
- இந்நிகழ்வை தொடர்ந்து சர்வதேச மாநாடு நடக்கும் இந்த மாநாட்டின் கருப்பொருளானது இந்தியாவின் புதிய விண்வெளியை வளர்ப்பதாகும்.
- மேலும் இது இந்தியா மற்றும் சர்வதேச விண்வெளி ஏஜென்சிகளுக்கு மற்றும் இந்த துறையில் உள்ள நிறுவனங்களுக்கு சிறந்த தளத்தை வழங்கும்.

### INSPIRE விருதுகள்

- இந்த விருதானது அறிவியல் ஆராய்ச்சியில் புதுமையை கொண்டு வருவதற்காக ஊக்கம் அளிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது.
- இது அறிவியல் மற்றும் தொழில் நுட்ப துறை, மூலம் தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை சுதந்திரமான அறிவியல் தொழில்நுட்ப முகமை, ஸ்டார்ட் அப் தொடக்கம் போன்றவற்றுடன் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இது தேசிய மற்றும் மாநில அளவில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் இருந்து மாணவர்கள் அழைக்கப்படுகின்றன.
- அவர்கள் தலா ரூ10,000 நிதியுதவி பெறுவார்கள்.
- அவர்கள் திட்டத்திற்காக சமர்ப்பிக்க யோசனைகளின் முன்மாதிரிகளை உருவாக்க முடியும்.
- பின்னர் அவர்கள் மாவட்ட, மாநில, இந்திய அளவிலான கண்காட்சி மற்றும் போட்டிகளில் பங்கேற்கின்றன.
- இது குழந்தைகளின் சிந்திக்கும் திறன் மற்றும் புதுமைகளை உருவாக்க தூண்டுதல்.

### இலக்குகள்

- பள்ளி மாணவர்களிடையே படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பு சிந்தனைக் கலாச்சாரத்தை ஊக்குவிக்கும்.
- அறிவியல் மற்றும் சமூக தாக்கங்களுடன் தனித்துவமான சிந்தனைகள் மற்றும் புதுமைகள் பெறப்படுகின்றன.
- வளர்ச்சியை ஊக்குவிக்கும்போது சமூக சவால்களை எதிர்கொள்ள அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல். இதன் மூலம் பொறுப்பான மற்றும் புதுமையான தலைவர்களை உருவாக்க முடியும்.

### திட்டத்தின் குறிக்கோளை புரிந்து கொள்ளுதல்

- அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் முதன்மையான முன் முயற்சிகளின் இத்திட்டம் ஒன்றாகும்.
- நாட்டில் உள்ள இளைஞர்களை ஆக்கப்பூர்வமான முறையில் அறிவியலை தொடர ஊக்குவிப்பதும்.
- இளம் வயதிலே பாடத்தில் திறமைகளை ஈர்க்கவும் நாட்டின் அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைப்பை வலுப்படுத்தவும் தேவையான மனித வளத்தை உருவாக்குவதும் இதன் இலக்காகும்.
- 2010 முதல் இத்திட்டம் இந்திய அரசால் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டமானது 10 முதல் 32 வயது வரையிலான மாணவர்களுக்கு கிடைக்கும். மேலும் இது 5 கூறுகளை கொண்டுள்ளது. அத்தகைய கூறுகளில் ஒன்று மேனோக் (MANAK) ஆகும்.

### இது தொடர்பான வேறு முயற்சிகள்

- தேசிய அறிவியல் தொழில் நுட்ப புதுமை கொள்கை 2020ல் வரைவு.
- இது நாட்டில் பொருளாதார வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மையை அதிகரிக்கும் வகையிலும் இந்தியாவின் அறிவியல் தொழில் நுட்பத்தை சர்வதேச அளவில் உயர்த்துவது.
- இது இந்தியாவில் உள்ள அறிவியல் தொழில் நுட்பத்தில் பலம் மற்றும் பலவீனங்களை கண்டறிந்து தீர்ப்பதை இவ்வறியல் கொள்கை நோக்கமாக கொண்டுள்ளது.

### செர்ப் பவர் திட்டம் SERB - POWER

- இத்திட்டம் அறிவியல் கல்வி நிறுவனங்கள், அறிவியல் மற்றும் மேம்பாட்டு ஆய்வகங்களிலும் பல்வேறு அறிவியல் தொழில் நுட்பங்களிலும் பெண் ஆராய்ச்சியாளர்களின் பங்களிப்பை அதிகப்படுத்துவது . இதன் மூலம் பாலின வேறுபாட்டை குறைப்பதாகும்.

### ஸ்வர்ணஜெயந்தி உதவித் திட்டம்

- இத்திட்டம் நம்பிக்கைக்குரிய இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு குறிப்பிட்ட உதவி மற்றும் ஆதரவை வழங்குகிறது.
- அவர்கள் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் அதிநவீன துறைகளில் அடிப்படை ஆய்வுகளை தொடர முடியும்.

## வெளிநாட்டு பயண விருது - 2023

### செய்திகளில்

- ஐக்கிய நாடுகளின் உலக சுற்றுலா அமைப்பின் பசிபிக் பகுதியின் துணை உறுப்பினரான பசிபிக் ஏரியா டிராவல் ரைட்டர்ஸ் அசோசியேஷன் மூலம் கலாச்சாரத்திற்கான சிறந்த இடத்திற்கான சர்வதேச பயண விருது 2023ல் மேற்கு வங்க மாநிலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- மார்ச் 9 2023 அன்று ஜெர்மனியின் பெர்லியின் நடைபெறும் உலக விமான மற்றும் சுற்றுலா தலைவர்கள் உச்சிமாநாட்டின் இந்த விருது வழங்கப்படும்.
- தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக உலக பயண விருதுகள் 2022ல் கரீபியனின் முன்னணி கலாச்சார இடமாக கியூபா குடியரசை தேர்ந்தெடுத்தன.

### பசிபிக் ஏரியா டிராவல் ரைட்டர்ஸ் அசோசியேஷன் பற்றி

- இந்த அமைப்பு 1998ல் நிறுவப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும்.
- இது நிலையான வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பயணம் மற்றும் சுற்றுலா தரத்தை மேம்படுத்தவும் பொது மற்றும் தனியார் துறை-களுடன் இது ஒத்துழைத்து செயல் படுகிறது.
- இது யுனெஸ்கோ மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை கொள்கைகளை நிலைநிறுத்துகிறது.

### விருதுகள் பற்றி

- சர்வதேச பயண விருதுகள் என்பது மிகவும் மதிப்புமிக்க விருதாகும்.
- இது பயணம் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளில் அவற்றிற்கு செய்யும் கடின உழைப்-பிற்காக இந்த விருது வெகுமதி அளிக்கிறது.
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற இடங்கள் எல்லா வகையிலும் எதிர்-பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் பயணத் துறையில் அவர்கள் ஆற்றிய பங்களிப்பு-களுக்கு வெகுமதி அளிக்கப்படுவதை உறுதி செய்கிறது.
- ஹோட்டல்கள் மூலம் சுற்றுலா பலகைகள் வரை ஈர்க்கும் இடங்கள், பயண நிறுவனங்கள் மற்றும் பல விருதுகள் ஒவ்வொரு தொழில் துறையிலும் சிறந்து விளங்குவதை அங்கீகரிக்க முயல்கின்றன.
- இது உலகின் மிக சிறந்த நிறுவனங்-களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- ஒவ்வொரு வருடமும் இந்த நிகழ்வுகளுக்கான நிகழ்வுகள் தொடர்ந்து மேம்படுத்த பட்டு வருகிறது.
- மேலும் மற்ற வணிகங்களை போல் இல்லாமல் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு அதிக லாபத்தை அளிக்கும் வகையில் இது செயல்படுத்தப்படுகிறது.

## உலக பால் வள உச்சி மாநாடு 2022

- சமீபத்தில் நெய்டாவில் உலக பால் உச்சி மாநாட்டை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- அத்தகைய கடைசி பால் உச்சி மாநாடு சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு 1974ல் இந்தியாவில் நடைபெற்றது.

### உச்சி மாநாட்டின் முக்கிய சிறப்பம்சங்கள்

- கருப்பொருள் "ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதரத்திற்கான பால்"

### விலங்கு அடிப்படைத் திட்டம்

- நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் விலங்கு அடிப்படைத்-திட்டத்தின் கீழ் பயோ மெட்ரிக் முறையில் அடையாள சரிபார்ப்பு செய்யப்படுகிறது.

### பால் விலங்குகளின் தரவு தளம்

- பால் விலங்குகளின் மிகப் பெரிய தரவுத் தளத்தை இந்தியா உருவாக்கி வருகிறது.
- பால் துறையுடன் தொடர்புடைய ஒவ்வொரு விலங்கும் இதில் குறிப்பிடப்படும்.
- 5-6 ஆண்டுகளில் விவசாயம் மற்றும் பால் துறையில் 1000க்கும் மேற்பட்ட ஸ்டாட்அப்கள் அமைக்கப்-பட்டுள்ளன.

### இந்திய பால் உற்பத்தி துறையின் தரவுகள்

- உலகளாவிய பால் உற்பத்தியில் இந்தியா சுமார் 23% கொண்டுள்ளன.
- இது ஆண்டுக்கு சுமார் 210 மில்லியன் டன்களை உற்பத்தி செய்கிறது.
- மேலும் எட்டுக் கோடிக்கு அதிகமான பால் விவசாயிகளுக்கு இது உதவுகிறது.
- நாட்டின் மொத்த பால் உற்பத்தி மதிப்பு 8.5 இலட்சம் கோடி ரூபாய் ஆகும். இது நெல் மற்றும் கோதுமை உற்பத்தியின் மொத்த மதிப்பை விட அதிகம்.
- பசுதன் 1000 ஆண்டுகள் பழமையான இந்தியா கலாச்சாரத்தின் முக்கிய பகுதியாக பசு மற்றும் பசுத் தொடர்புடைய தொழில்கள் உள்ளன.

### கட்டித்தோல் நோய்க்கான உள்நாட்டு தடுப்பூசி

- நமது நாட்டு விஞ்ஞானிகள் கட்டித்தோல் நோய்க்கான உள்நாட்டு தடுப்பூசியை உருவாக்கியுள்ளன.

- நோய் பற்றிய சோதனையை துரிதப்படுத்தி விலங்குகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நோயை கட்டுப்படுத்த முடியும்.

## 31வது வியாஸ் சம்மான்

- வியாஸ் சம்மான் என்ற விருது ஹிந்தி எழுத்தாளர் டாக்டர் அஸ்கர் வஜாஹத் என்பவர் டெல்லியில் நடந்த விழாவில் வழங்கப்பட்டது.
- மகாபலி நாடகத்திற்காக மதிப்புமிக்க வியாஸ் சம்மான் என்ற விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- அவரது நாடகமான மகாபலியில் முகலாய பேரரசர் அக்பர் மற்றும் கவிஞர் துளசிதாஸ் மீது கவனம் செலுத்துகிறார்.
- நாடகத்தின் மூலம் உண்மையான மகாபலி யார்? கவிஞர் அல்லது பேரரசர் என்று பதிலளிக்க முயற்சிக்கிறார்.

### வியாஸ் சம்மான் பற்றி

- கடந்த பத்தாண்டுகளில் வெளியிடப்பட்ட இந்திய குடிமகன்கள் எழுதிய ஹிந்தியில் சிறந்த பணிகளுக்காக வியாஸ் சம்மான் கே.கே. பிர்லா அறக்கட்டளையால் வழங்கப்படுகிறது.
- இது 4 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பாராட்டு சான்றிதலும் பலகையும் கொண்டது.
- இது 1991ல் தொடங்கப்பட்டது. ராம்விலாஸ் சர்மா 1991ம் ஆண்டு பாரத் கே விரச்சீன் பாஷா பரிவார் அவுர் ஹிந்தி பணிக்கா 1991ம் ஆண்டு வியாஸ் சம்மான் பெற்றார்.
- பேராசிரியார் ஷரத் பகாரே தனது நாவலுக்காக 30வது வியாஸ் சம்மான் விருது பெற்றார்.

## சைபர் கிரைம் விசாரணை மற்றும் உளவுத்துறை உச்சிமாநாடு 2022

- நான்காவது சைபர் கிரைம் புலனாய்வு உச்சிமாநாடு மத்திய பிரதேச காவல் துறையால் நடத்தப்பட்டது.
- சைபர் கிரைம்களை திறம்பட தடுப்பதற்காகவும் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் மூத்த விசாரணை அதிகாரிகளின் அறிவுத்திறன் மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டன.
- 6000க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ள பதிவுசெய்துள்ளதாக மாநில சைபர் காவல் துறை அறிவித்தது.

### இவற்றைப் பற்றி

- சைபர் க்ரைம் விசாரணை உளவுத் துறை உச்சிமாநாடு மத்திய பிரதேச காவல்துறையால் மாநில சைபர் போலீஸ் மற்றும் பரிவால் ஆய்வகங்கள் மூலம் யூனிசெப், சாப்ட் கிளிக்ஸ் பவுண்டேசன், கிளியாடாப், தொழில் நுட்பம் ஆகியவற்றுடன் இணைந்து இது உருவாக்கப்பட்டது.
- மத்திய பிரதேச மாநிலம் கோபாலில் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.
- 10 நாள் உச்சிமாநாட்டின் போது 30க்கும் மேற்பட்ட மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து 6,000க்கும் மேற்பட்ட வெவ்வேறு போலீஸ் நீதித்துறை சார்ந்த நபர்கள் கலந்துக் கொண்டனர்.
- இந்த முறை நேரடியாகவும் இணைய வழியாகவும் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

## நீர் ஹீரோக்கள்

- நீர் ஹீரோக்கள் : உங்கள் கதைகளை பகிரவும் நீர் வள அமைச்சகம் நீர் ஹீரோக்கள் உங்கள் கதைகளை பகிர்ந்துகொள்ளுங்கள் என்ற போட்டியை தொடங்கியுள்ளது.
- இது முதல் செப்டம்பர் 1, 2019 முதல் ஆகஸ்ட் 2020 வரை இந்த நிகழ்வு நடந்தது.

जल शक्ति मंत्रालय
MINISTRY OF
JAL SHAKTI
सत्यमेव जयते

- இதில் வெற்றிபெறும் நபருக்கு 10,000 ரூபாய் ரொக்கப் பரிசும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### குறிக்கோள்கள்

- பொதுவாக நீரின் மதிப்பை ஊக்குவித்தல் மற்றும் நீர்வள பாதுகாப்பு மற்றும் நீர்வளங்களின் நிலையான வளர்ச்சிக்கான நாடுதழுவிய முயற்சிகளை ஆதரித்தல்.
- மேலும் நாட்டு மக்களுக்கு நீர் சேமிப்புக்கான காரணத்தை கூறி அவர்களை ஊக்கப்படுத்துதல்.
- நீர் ஹீரோக்களின் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் நீர் பாதுகாப்பிற்கான அறிவை மேம்படுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மேலும் மக்களின் நடத்தை மாற்றத்திற்காக நீர் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை குறித்த அணுகுமுறையை உருவாக்குதல்.

### முக்கியக் கருத்துகள்

- நீர் ஹீரோக்கள் கதையை பகிருங்கள் என்ற போட்டி ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகிறது மற்றும் அவற்றின் விவரங்களை என்னுடைய அரசாங்கம் (My Gov) என்ற தளத்தின் மூலம் அணுகி போட்டியில் பங்கேற்கலாம்.

SURESH

- பங்கேற்பாளர்கள் 1 முதல் 5 நிமிட வீடியோ வடிவில் தண்ணீர் பாதுகாப்பு மற்றும் அவற்றின் விளைவு குறித்த தங்கள் வெற்றிக்கதைகளை 300 வார்த்தைகள் எழுதவும் மற்றும் சில புகைப்படங்களை இணைக்க வேண்டும்.
- பங்கேற்பாளர்கள் தன்னுடைய வீடியோக்களை என்னுடைய அரசாங்கம் என்ற தளத்தில் பகிர வேண்டும்.

### இந்த போட்டியின் வெற்றியாளர்கள்

- **திவ்யான்ஷ் டோண்டன் :** இவர் நீர் பஞ்சாயத்து பிரச்சாரத்துடன் தொடர்புடையவர்.
- இவர் நீர் பஞ்சாயத்து பிரச்சாரத்தின் கீழ் பல்வேறு கிராமங்கள், தெருக்கள், நகரங்கள், பள்ளிகள் மற்றும் உள்ளாட்சிகளுக்கு சென்று பொதுமக்களுக்க விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.
- **வினய் விஸ்வநாத் கவாஸ் :** இவர் கோவாவில் திட்ட இயக்குநராக உள்ளார். மேலும் இவர் கோவாவில் கூரை மலை மேல் சேகரிப்பு மற்றும் போர்வெல் ரீசார்ஜ் பற்றி பிரச்சாரம் செய்கிறார்.
- **அமீத் :** டெல்லியில் கிராமத்தில் ஆரம்ப பள்ளியில் ஆரோக்கியமான உணவுகளை வழங்குதல், தோட்ட பணிகளில் ஈடுபடுதல் பல்வேறு வளர்ச்சி பணிகளை செய்துள்ளார்.
- சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் வண்டல் நடவடிக்கைகள் மூலம் நீர் சுத்திரகரிப்பு பிரச்சாரம் செய்கிறார்.
- **பபிதா ராஜ் குவாரா :** இவர் நான்கு தடுப்பு அணைகள் மற்றும் போரிபந்தன் கட்டுமானத்தில் ஈடுபட்டுள்ளார்.
- **அருராக் படேல் :** இவர் தண்ணீரை பாதுகாக்கும் பிரச்சாரங்களில் ஈடுபட்டு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.
- 126 குளங்களில் உள்ள நீர்த்தாமரைகளை அகற்ற நடவடிக்கை எடுத்தார்.
- சந்திரவால் நதியை மீண்டும் இளமையாக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.
- **சினேலதா ஷர்மா:** இவர் கடந்த ஒரு வருடமாக நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை துறையில் குறிப்பிடத்தக்க மற்றும் பாராட்டத்தக்க வேலையை செய்துவருகிறார்.

### உலக நீர் கண்காட்சி 2022

- இது உலக நீர் காங்கிரஸ் மற்றும் கண்காட்சி டென்மார்க்கில் ஏற்பாடு செய்யப்பட்டது.

### முக்கியக் கருத்துக்கள்

- உலகநீர்கண்காட்சியானது சிலவருட இடைவெளியில் நுண்ணறிவுகளை பகிர்ந்து கொள்வதற்கும், வணிகம் செய்வதற்கும், நிபுணர்களை ஒன்றிணைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.
- தற்போதைய சிக்கல்கள் மற்றும் போக்குகளின் கவனம் செலுத்துவதற்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படும் இதற்கு வலிமை பற்றி சிந்திக்கவும் இது வாய்ப்பு அளிக்கிறது.
- 2022ம் ஆண்டு கோபன் ஹெக்கனில் ஸ்மார்ட் வாழக்கூடிய நகரங்களுக்கான நீர் என்ற கருப்பொருள்களின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.
- இது டென்மார்க் மற்றும் ஆர்டிக் கண்டத்தை ஒட்டியுள்ள நாடுகளின் சிறந்த நடைமுறைகள், உலகில் உள்ள பிற பகுதி-களிலும் உள்ள நடைமுறைகள் காட்சிப்படுத்தப்பட்டது.
- சமீபத்திய மிகப்பெரியது (ம) மிகவும் விரிவானது குறித்த திட்டங்கள்.
- இது டென்மார்க் தென்னாப்பிரிக்கா மற்றும் பலநகரங்களின் பங்களிப்பு-களை உள்ளடக்கியது.
- நிகழ்வின் போது இந்தியா மற்றும் டென்மார்க் இணைந்து இந்தியாவின் நகர்புற கழிவு நீர் கட்சி என்ற கூட்டு வெள்ளையறிக்கையை வெளியிட்டன.
- இந்த வெள்ளையறிக்கையானது நிதி ஆயோக், ஜல்சக்தி அமைச்சகம், அடல் புதுமை இயக்கம், சர்வதேச ஏஜென்சியின் புதுமை நிலையம் டென்மார்க் ஆகியவை இணைந்து இந்திய அரசாங்க குழுவுடன் சேர்ந்து. கூட்டாக வெள்ளைத்தாள் தயாரிக்கப்பட்டது.

### இந்தியாவின் நகர்ப்புற கழிவுநீர் காட்சி என்றால் என்ன?

- இந்தியாவின் நகர்ப்புற கழிவுநீர் காட்சி பற்றிய வெள்ளைத்தாள் அறிக்கை தற்போதைய நிலையை விரிவாக படம்பிடிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.
- இதனுடைய நோக்கம் எதிர்கால சுத்திகரிப்பு கூட்டமைப்புகளை கூட்டு ஆய்வுகள் மூலம் உருவாக்கு-வதாகும்.
- இந்தோ டேனிஸ் இருதரப்பு பசுமை மூலோபாய கூட்டாண்மையின் விளைவாக இது உருவாகிறது.

- மேலும் இந்த கூட்டாண்மையின் முக்கிய நோக்கம் பசுமை ஹைட்ரஜன், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நீர் மேலாண்மை போன்ற பகுதிகளை கொண்டுள்ளது.


**இந்திய டேனிஸ் இருதரப்பு பசுமை மூலோபய கூட்டாண்மை பற்றி**

- 2020ம் ஆண்டில் பிரதமர் மோடிக்கும் டேனிஸ் நாட்டினருக்கும் இடையிலான மெய்நிகர் உச்சி-மாநாட்டின் போது இந்தோ டேனிஸ் இருதரப்பு பசுமை மூலோபய கூட்டாண்மை நடைமுறைக்கு வந்தது.
- இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்புக்கான கூட்டு ஆணையத்தை நிறுவி பொருளாதார வளர்ச்சி வேலைவாய்ப்பு பசுமை மாற்றம் மற்றும் ஐ.நாவின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைதல் ஆகியவற்றின் பரஸ்பர நன்மைகளை வழங்கும் தற்போதைய உடன்படிக்கையை இது உருவாக்குகிறது.

## 4. வரலாற்று நபர்கள்

### டாக்டர் ராதா கிருஷ்ணன்

**இவற்றைப் பற்றி**



- இந்தியாவில் செப்டம்பர் 5 ம் தேதி ஆசிரி-யர் தினமாக கொண்டாடப்-படுகிறது.
- இதுடாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளை நினைவு கூறும் வகையில் கொண்டாடப்படுகிறது.

**இவரைப்பற்றி**

- **பிறப்பு:**
  - செப்டம்பர் 5, 1888ல் இவர் பிறந்தார்.
  - 1962 முதல் 1967 வரை இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதியாக இருந்தார்.
  - 1952 முதல் 1962 வரை இந்தியாவின் முதல் துணை ஜனாதிபதியாகவும் பணியாற்றினார்.
  - இவர் ஒரு புகழ் பெற்ற அறிஞர் தத்துவவாதி ஆவார்.
  - இவர் பாரத ரத்னா விருது பெற்றார்.
- **இலக்கிய படைப்புகள்**
  - ராதா கிருஷ்ணனின் தத்துவம் அத்வைத வேதாந்தத்தில் அமைந்துள்ளது.
  - 1917ம் ஆண்டு ரவீந்திரநாத் தாகூரின் தத்துவம் என்ற புத்தகத்தை எழுதினார்.
  - அவரது மற்ற படைப்புகள் இந்திய தத்துவம். உபநிடதங்களின் தத்துவம், கிழக்கு மதங்கள் மற்றும் மேற்கத்திய சிந்தனை மற்றும் கிழக்கு மேற்கு, சில பிரதிபலிப்புகள் என்ற புத்தகத்தை எழுதினார்.
- **விருதுகள் மற்றும் கௌரவங்கள்:**
  - அவருக்கு 1954ல் இந்தியாவின் உயரிய சிவில் விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது.
  - 1931ல் இவருக்கு நைட்குட் என்ற பட்டமும் 1963ல் பிரிட்டிஷின் கௌரவ ராயல் மெம்பர் சீப்பை பெற்றார்.
  - அவர் 1948ல் யுனெஸ்கோவின் நிர்வாக குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- **சமூகத்திற்கான பங்களிப்புகள்:**
  - இந்தியாவின் முதியோர்களுக்கு உதவி செய்வதற்கான ஹெல்பேஜ் என்ற தொண்டு நிறுவனத்தை நிறுவியவர்களின் இவரும் ஒருவர்.
  - ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தின் ஆசிரியராக பதவி வகித்த முதல் இந்தியர் இவர் ஆக்ஸ்போர்டு கழகத்தின் கிழக்கத்திய சமயங்கள் மற்றும் நெறிமுறைகளின் ஆசிரியராக இருந்தார்.
  - இவர் இந்து மதத்தை மேற்கத்திய விமர்சனங்களுக்கு எதிராக பாதுகாத்தார் மற்றும் சமகால இந்து அடையாளத்தை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்தார்.

### தாராஷிகோ

**இவற்றைப்பற்றி**

- துணை ஜனாதிபதி தாராஷிகோவை சமூக நல்லிணத்தின் ஜோதியாக அழைக்கிறார்.

**தாராஷிகோ யார்?**

- **அவரது வாழ்க்கை:**
  - தாராஷிகோ முகலாய பேரரசர் ஷாஜகானின் மூத்த மகன் ஆவார்.
  - 1657ம் ஆண்டின் ஷாஜகானின் நோய் காரணமாக அவரது

இளவரசரருக்கு இடையே வாரிசுரிமை போரைத் தூண்டியது.

- அதில் தாரா மற்றும் ஔவுரங்சீப் ஆகியோருக்கு மட்டுமே வெற்றிப்பெற வாய்ப்பு கிடைத்தது.
- 1658ம் ஆண்டு சமோ-கர்ப் போர்க்களத்தில் தாரா ஔவுரங்சீப்பால் தோற்கடிக்கப்பட்டார்.

- **அவரது கொள்கை**
  - தாராஷிகோ சூஃபி அறிஞர் ஆவார்.
  - அவர் மத சகிப்புத்தன்மையை விரும்பினார். மேலும் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கு இடையே ஒற்றுமை இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.
  - தாராஷிகோ குத்ரிசூஃபி மியான் மிர்யை பின்பற்றினார்.
- **அவரது படைப்புகள்**
  - தாராஷிகோ இஸ்லாமியருக்கும் இந்துமதத்திற்கும் இடையே ஒரு பொதுவான மாயமொழி கண்டுபிடிப்பதில் அதிக முயற்சி எடுத்தார்.
  - இந்த இலக்கை அடைவதற்காக அவர் உபநிடதங்களை சமஸ்கிருத்திலிருந்து பாரசீகத்திற்கு மொழி பெயர்த்தார்.
  - அதனால் அந்த நூல்களை முஸ்லீம் அறிஞர்கள் படிக்க முடிந்தது.
  - அவரது மொழிப்பெயர்ப்பு பெரும்பாலும் சிர் அக்பர் அல்லது மிகப்பெரிய மர்மம் என்று அழைக்கப்படுகிறது.
  - அரபு மொழியின் உபநிடதங்கள் கிதாப் அல் மக்னுன் அல்லது மறைக்கப்பட்ட புத்தகம் என்று குறிப்பிடப்படுகிறது.
  - இவரது பிரபலமான படைப்பு மஜ்முல் பஹ்ரைன் (இரண்டு பெருங்கடல்களின் இணைப்பு) இந்த படைப்பு இந்து மத்தி-ற்கும் சூஃபி தத்துவத்திற்கும் இடையிலான பொது தன்மைகளை கண்டறிவதற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
  - அவர் நுண்கலைகள் இசை மற்றும் நடனம் ஆகியவற்றை சிறந்த திறமையுடையவராக விளங்கினார். இது அவரது உடன் பிறந்த ஔவுரங்கசீப்பால் வெறுக்கப்பட்டது.

## புலித்தேவர்

### செய்திகளில்

- செப்டம்பர் 1 புலித்தேவர் பிறந்த தினத்தில் பிரதமர் அவருக்கு மரியாதை செலுத்தினார்.



### புலித்தேவர் பற்றி

- அவர் 1715ல் பிறந்தார்.
- பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த முதல் இந்தியர்களின் இவரும் ஒருவர்.
- இவர் தமிழ் பிராந்தியத்தில் உள்ள 77 பாலிகர்கள் அல்லது உள்ளூர் தலைவர்களில் ஒருவர் ஆவார்.
- 1755ம் ஆண்டு பிரிட்டிஷ் கர்னல் அலெக்ஸாண்டர் ஹெரான் மேற்கு தமிழ் பகுதியில் அணிவகுத்து சென்றபோது புலித்தேவர் முதன் முதலில் ஆங்கிலப் படையை சந்தித்தார்.
- புலிக்கோட்டையின் தடிமனான கல்சுவர்களுக்கு எதிராக பிரிட்டிஷ் பீரங்கிகள் செயலிழந்தன.

### புலித்தேவர் கிளர்ச்சி (1755-1767)

- 1755ம் ஆண்டு மதுரை ஆற்காடு நவாப்பின் சகோதரர் மாபூஸ்கான் மற்றும் கர்னல் ஹெரான் தலைமையில் மதுரை எளிதாக வீழ்ந்தது.
- ஆனால் திருநெல்வேலி அவர்களுக்கு எதிராக எதிர்த்து நின்றது.
- புலித்தேவர் மேற்கத்திய பாளையக்காரர் மீது அதிக செல் வாக்கு செலுத்துயதால் அவர் ஆங்கிலேய கம்பெனியின் அதி காரத்தை மீறினார்.
- கர்னல் ஹெரான் திரும்ப அழைக்கப்பட்டு சேவையிலிருந்து நீக்கப்பட்டு. மதுரையில் பீரங்கிகள் மற்றும் வீரர்கள் வரும் வரை ஹெரான் காத்திருந்தார்.

### பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான அணியின் கூட்டமைப்பு

- நவாப் சந்தாசாகிப்பின் மூன்று பதான் அதிகாரிகள் மியானா, முடிமியா, நபிகான் கட்டக் ஆகியோர் திருநெல்வேலி மற்றும் மதுரை பகுதிகளில் படைகளுக்கு தலைமை தாங்கினார்.
- இந்த பதான் அதிகாரிகள் தமிழ் பாளையக்காரர்களுக்கு ஆற்காடு நவாப்பை எதிர்த்து ஆதரவு வழங்கினார்.
- சிவகிரி, எட்டயபுரம், பாஞ்சலக்குறிச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த பாளையக்காரர்களை தவிர எல்லா மறவர் பாளையக்காரர்களும் புலித்தேவரை ஆதரித்தனர்.

- இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களின் ஆதரவை பெறுவதின் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்ற போது கூட்டாட்சியில் மேலும் பிளவு ஏற்பட்டது.
- மைசூர் ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் ஆதரவை பெறுவதில் வெற்றிப் பெறவில்லை.
- ஏனெனில் மராட்டியர்களுடன் ஏற்கனவே ஹைதர் அலி கடுமையான மோதலில் ஈடுபட்டு இருந்தார்.

## களக்காடு போர்

- நவாப் சந்தா சாகிப் அனுப்பிய படைகளுடன் சேர்ந்து மாபுஸ்கானின் சிப்பாய்களின் படை திருநெல்வேலியின் வலுப்படுத்தப்பட்டுள்ளது.
- மபுஸ்கான் கர்நாடகாவிலிருந்தும் படைகளில் ஆதரவு பெற்றார்.
- ஆனால் களக்காடு போரில் மபுஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
- மபுஸ்கான் தனது படைகளை களக்காடு அருகே நிறுத்துவதற்கு முன்பு திருவாதாங்கூரிலிருந்து 2000 வீரர்கள் புலித்தேவரின் படையில் இணைந்தனர்.

## யுசுப்கான் மற்றும் புலித்தேவர்

- புலித்தேவரின் கீழ் இருந்த பாளையக்காரர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக திருநெல்வேலி விவகாரங்களில் ஆங்கிலேயர் நேரடியாக தலையிட தொடங்கினர்.
- 1756 முதல் 1763 வரை திருவிதாங்கூர் ராஜாவின் உதவியாளரின் புலித்தேவர் தலைமையிலான திருநெல்வேலியின் பாளையக்காரர்கள் நவாப்பின் அதிகாரத்திற்கு எதிராக தொடர்ந்து கிளர்ச்சியில் இருந்தனர்.
- யூசுப்கான் ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களால் அனுப்பப்பட்டவர்.
- 1760ம் ஆண்டு யூசுப்கான் நெற்கட்டும் சேவல் கோட்டையை தாக்கத் தொடங்கினார்.
- இந்த தாக்குதல் சுமார் இரண்டு மாதங்கள் தொடர்ந்தனர்.
- இறுதியாக 1761ல் மே 16 அன்று புலித்தேவரின் மூன்று பெரிய கோட்டைகள் (நெற்கட்டும் சேவல், வாசுதேவநல்லூர், பனையூர்) யூசுப்கானின் கட்டுப்பாட்டில் வந்தது.
- பாண்டிச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றிய பிறகு பிரெஞ்சு ஆதரவு கிடைக்கததால் பாளையக்காரர் ஒற்றுமை உடைய தொடங்கியது.
- இதற்கு இடையில் திருவாதாங்கூர், செய்தூர், ஊத்துமடை மற்றும் சுரண்டை அவர்களின் ஆதரவுகளை எதிர் முகாமுக்கு மாற்றினர்.
- ஆனால் யூசுப்கான் துரோக குற்றச்சட்டப்பட்டு கம்பெனி நிர்வாகத்துக்கு தெரிவிக்காமல் பாளையக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதால் 1764ல் தூக்கிலிடப்பட்டார்.

## புலித்தேவரின் வீழ்ச்சி

- கான்சாகிப் மரணத்திற்கு பிறகு புலித்தேவர் 1764ல் நெற்கட்டும் சேவலை மீண்டும் கைப்பற்றினார்.
- எனினும் அவர் 1767ல் கேப்டன் கேம்பெல் என்பவரால் தோற்கடிக்கபட்டார்.

## வ.உ.சிதம்பரம் பிள்ளை

### செய்திகளில்



- சமீபத்தில் சுதந்திர போராட்ட வீரர் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் பிறந்த நாளில் பிரதமர் அவரை பாராட்டினார்.

### வ.உ. சிதம்பரம் பிள்ளை பற்றி

- **ஆரம்ப கால வாழ்க்கை:**
  - வ.உ.சிதம்பரம் பிள்ளை செப்டம்பர் 5, 1872ல் தமிழ்நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடராம் என்ற ஊரில் பிறந்தார்.
- **அரசியல் :**
  - வ.உ.சிதம்பரம் பிள்ளை 1905ம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸில் உறுப்பினராகி தீவிர அரசியலில் நுழைந்தார்.
  - இந்த நேரத்தில் இந்தியாவில் சுதேசி இயக்கம் ஏற்கனவே உச்ச நிலையை அடைந்திருந்தது.
  - இவர் லாலா லஜபதிராய் மற்றும் பாலகாங்கதர திலகர் போன்ற தலைவர்களுடன் இணைந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடினார்.
- **கப்பல் நிறுவனம்:**
  - இவர் கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்பட்டார்.
  - காங்கிரஸில் இணைந்த பிறகு வ.உ.சிதம்பரம் பிள்ளை இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்க சுதேசி இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.
  - சுதேசி இயக்கத்தின் ஒரு பகுதியாக பிரிட்டிஷ் கப்பல் ஏகாதிபத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக சுதேசி கப்பல் நிறுவனத்தை நிறுவினார்.
  - அரபிந்த் கோஷ் மற்றும் பால காங்கதர திலகர் ஆகியோரின் உதவியுடன் வ.உ.சிதம்பரம் பிள்ளை இரண்டு நீராவி கப்பல்களான கலிலியோ, லாவா என்ற இரு கப்பல்களை வாங்கினார்.

- **தேசிய உணர்வு:**
  - திருநெல்வேலியில் உள்ள கோரல் பஞ்சாலை தொழிலாளர்களின் ஆதரவை பெற்றார்.
  - மேலும் தேசிய பத்திரிக்கைகள் அவரது தேசிய வாத உணர்வை வெகுவாக பாராட்டினார்.
  - சிறையில் இருந்த நாட்களில் வ.உ.சிதம்பரம் பிள்ளை மற்ற அரசியல் கைதிகளை நடத்திய முறையில் நடத்தப்படவில்லை. அதற்கு மாறாக அவர் மற்ற குற்றவாளிகளை போல சிறையில் கடினமாக நடத்தப்பட்டார்.
  - பாரீஸ்டர் பட்டம் வ.உ.சிதம்பரம் பிள்ளையிடமிருந்து பறிக்கப்பட்டது.
  - அதனால் இவர் வழக்கறிஞர் பயிற்சியை செய்ய முடியாது.
- **இலக்கிய படைப்புகள்:**
  - அவர் சிறையில் இருந்த போது தனது சுயசரிதையை தொடங்கினார். 1912ம் ஆண்டு சிறையிலிருந்து விடுதலையானவுடன் தனது சுயசரிதையை முடித்தார்.
  - வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒரிரு நாவல்களை எழுதினார். அவர் பல ஜேம்ஸ் ஆலன் படைப்புகளை தமிழில் மொழிபெயர்த்தார்.
  - திருக்குறள் மற்றும் தொல்காப்பியம் போன்ற முக்கியமான தமிழ் படைப்புகளை தொகுத்தார்.
- **இறப்பு:**
  - வ.உ.சிதம்பரம் பிள்ளை நவம்பர் 18, 1936ல் தனது வாழ்க்கையை இறுதி வரை வறுமையில் வாழ்ந்தார்.
  - தூத்துக்குடியில் உள்ள இந்திய தேசிய காங்கிரஸ் அலுவலகத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை காலமானார்.

## 5. புத்தக ஆசிரியர்கள்

| வரிசை எண் | தலைப்பு | நூலாசிரியர் | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| 1. | ஆசாதி : சுதந்திரம் பாசிசம் புனைகதை | அருந்ததிராய் | இந்த புத்தகத்தின் அதிகரித்து வரும் அதிகார உலகில் சுதந்திரத்தின் பொருளைக் காட்டும் கட்டுரைகளின் தொகுப்பாகும்.. |
| 2. | எதிர் புக்குரல்கள் | ரொமிலா தாப்பர் | இந்த நூலில் நாட்டின் அண்மைக்காலமாக நடந்த போராட்டங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தி கருத்து வேறுபாடுகளை ஆராயும் வரலாற்று கட்டுரையாகும். |
| 3. | பசுமை நுகங்களின் சிறிய புத்தகம் | ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால் தொடங்கப்பட்டது | இந்த புத்தகம் உலகெங்கிலும் உள்ள 200 மில்லியன் மாணவர்களை சுற்றச்சூழலுக்க உகந்த பழக்க வழக்கங்களையும் பசுமையான வாழ்க்கை முறையும் பின்பற்ற ஊக்குவிக்க நோக்கம் கொண்டது. |



# IV. வரலாறு மற்றும் வரலாற்று நிகழ்வுகள்

## மகராஷ்டிரா மாநில அரசு தௌலதபாத் கோட்டையை தேவகிரி கோட்டை என மறுபெயரிட்டது

### செய்திகளில்

- மகராஷ்டிரா சுற்றுலாத்துறை அமைச்சகம் தௌலதபாத் கோட்டையை தேவகிரி கோட்டை என அறிவித்தது.
- தொல் பொருள் ஆய்வுத் துறையால் பராமரிக்கப்படும் தேசிய பாரம்பரிய நினைவுச் சின்னத்தை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- முன்னதாக மகராஷ்டிராவின் ஔரங்கபாத் சாம்பாஜி நகர் என பெயர் மாற்றப்பட்டது.

### தௌலதபாத் கோட்டை பற்றி

- மகராஷ்டிராவில் ஔரங்கபாத் நகருக்கு அருகில் உள்ள தேவகிரி கிராமத்தில் வரலாற்று சிறப்புமிக்க தௌலதபாத் கோட்டை அமைந்துள்ளது.
- இது முன்னர் யாதவ வம்சத்தின் தலைநகராகவும் சிறிது காலம் டெல்லி சுல்தானின் தலைநகராகவும் இருந்தது.
- முகமது துக்ளக் ஆல் இந்த இடத்திற்கு தௌலதபாத் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- 14ம் நூற்றாண்டில் தென்னிந்தியாவின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஒரு தளமாக அதன் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு தலைநகரை உருவாக்கும் யோசனையை முகமது துக்ளக்உருவாக்கினார்.
- இந்த தௌதலபாத் கோட்டை பின்னர் குப்துல் இஸ்லாம் என்று அழைக்கப்பட்டு நாணயங்கள் இதன் பெயரில் அச்சிடப்பட்டது.

## ஷீமங் லீலா

### செய்திகளில்

- 50வது மணிப்பூரில் ஷீமங் லீலா திருவிழா இம்பாலில் உள்ள அரண்மனை வளாகத்தில் தொடங்கப்பட்டது.



### இவற்றை பற்றி

- ஷீமங் லீலா என்பது மணிப்பூரில் ஒரு பாரம்பரிய நாடக வடிவமாகும். இதில் பெண் கலைஞர் பாத்திரங்கள் அனைத்தும் ஆண் நடிகர்களால் நடிக்கப்படுகின்றன. மேலும் ஆண் கதாபாத்திரங்களில் பெண் கலைஞர்கள் நடித்து உள்ளனர்.
- 2017ம் ஆண்டில் சௌக்ரக்பம் ஹேமந்தாவுக்கு கௌரவமான சங்கீத நாடக அகாடமி விருது வழங்கப்பட்டது.
- இது ஷீமங் லீலாவுக்கு அவர் அளித்த பங்களிப்பின் காரணமாக வழங்கப்பட்டது.
- இதன் மூலம் இந்த கலைவடிவத்திற்கான விருதை பெற்ற முதல் நபர் என்ற பெருமையை பெற்றார்.
- ஆரம்ப கட்டத்தில் ஷீமங் லீலா குழுக்களில் மனித நேயம் சகிப்புதன்மை, நம்பிக்கை, பக்தி உண்மை மற்றும் நீதி ஆகியவற்றை தங்கள் நிகழ்ச்சிகளின் மூலம் முன்னெடுத்து செல்ல முயற்சி எடுத்தனர்.
- இன்றைய ஷீமங் லீலா முக்கியமாக ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு ஆகிய பிரச்சனைகளில் கவனம் செலுத்த முயற்சித்து வருகின்றனர்.
- மாநிலத்தில் உள்ள பல்வேறு சமூகத்தினரிடையே நட்புறவை வலுப்படுத்த முயற்சித்து வருகின்றனர்.

## உலக பாரம்பரிய பரிந்துரை 2022-2023

### செய்திகளில் ஏன்?

- மத்திய கலாச்சார அமைச்சகம் சமீபத்தில் ஹொய்சாலா கோயில்களின் சாக்ரட் குழுமங்களை உலகப் பாரம்பரிய சின்னமாக பரிந்துரைத்தது.
- இந்த ஹொய்சாலா புனத குழுமங்கள் 12 மற்றும் 13 ம் நூற்றாண்டு கட்டப்பட்டது.
- இது கர்நாடகாவில் உள்ள பேலூர், ஹலேபிட், சோமநாதபுரம் ஆகிய மூன்று இடங்களால் பிரதிநிதிப்படுத்தப்படுகிறது.
- மூன்று ஹொய்சாலா கோவில்களும் இந்திய தொல்லியல்துறையின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் ஆகும்.
- ஹொய்சாலாவின் கோபால் குழுக்கள் 2014 ஏப்ரல் முதல் தற்காலிக பட்டியலில் உள்ளனர்.
- மேலும் இக்கோயில்கள் இந்தியாவின் வளமான வரலாற்று மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கு சாட்சியாக நிற்கிறது.

- யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய மையம்மானது, இந்தியாவின் உள்ள யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளங்களில் ஹிந்தி விளக்கங்களை யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய மையம் இணையதளத்தில் வெளியிட ஒப்புக் கொண்டது.

**சென்னகேசவா கோவில், ஹோய்சலேஸ்வரா கோவில், கேசவத கோவில்களில் சிறப்பு அம்சங்கள் என்ன?**

**பேலூர் சென்ன கேசவ கோவில்:**

- இந்த கோயிலின் கட்டுமானம் கி.பி. 1117ல் கட்டப்பட்டு 103 ஆண்டுகள் நீடித்தது.
- இந்த கோயில் விஷ்ணுவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- கோவிலின் ஆடம்பரமான செதுக்கப்பட்ட வெளிப்புறம் விஷ்ணுவின் வாழ்க்கை மற்றும் மறுபிறப்புகளின் காட்சிகளையும் இராமாயணம் மற்றும் மகாபாரதத்தின் இதிகாசங்களின் படங்களையும் சித்தரிக்கிறது.
- மேலும் சில சிவன் பிரதிநிதித்துவங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

**ஹலேபிட் ஹோய் சலேஸ்வரா கோவில்**

- இது ஹொய்சலா கட்டிடக்கலைக்கு ஒரு முன்மாதிரியாக உள்ளது.
- இது 1121ம் ஆண்டு ஹொய்சலா மன்னன் விஷ்ணுவர்த நாஹொய் சலேசுவறன் காலத்தில் கட்டப்பட்டது.
- சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயிலாகும். இது செல்வந்தரான துவார சமுத்திர நகர மக்கள் மற்றும் வணிகர்களால் நிதியுதவி செய்யப்பட்டு கட்டப்பட்டது.



- 2040க்கும் மேற்பட்ட சுவர் சிற்பங்களுக்காக இந்த கோயில் நன்கு அறியப்படுகிறது.
- ஹலேபிட் என்பது மூன்று ஹொய்சாலா காலா கோயில்கள் மற்றும் ஒரு அடுக்கு கிணறு கொண்ட ஒரு சுவர் வளாகம் ஆகும்.

**சோமநாதபுர கேசவ கோயில்**

- இது மற்றொரு அற்புதமான ஹொய்சாலா நினைவுச் சின்னமாகும்.
- இது கிஷ்ணன் மூன்று அவதாரங்களாக (ஜனார்தனா, கேசவா மற்றும் வேணுகோபாலா) வழிபடும் இடமாகும்.



- துரதிஷ்டவசமாக முக்கிய கேசவத சிலை காணாமல் போயிள்ளது மற்றும் ஜனர்த்தனா, வேணு கோபால் சிலைகள் சேதமடைந்துள்ளன.

**ஹொய்சாலா கட்டடிக்கலையின் தனித்துவமான குணாதிசயங்கள்**

- ஹொய்சாலா என்பது 11-14ம் நூற்றாண்டுகளில் முதன்மையாக தெற்கு கர்நாடகாவில் ஹொய்சாலா பேரரசின் ஆட்சியின் போது செய்தோங்கிய ஒரு கட்டிடப் பணியாகும்.
- ஹொய்சாலா கோயில்கள் தனித்துவமான பாணியை கடைப்பிடிக்கின்றன.
- அதாவது திராவிடத்திற்கும் நகரா கட்டிடக்கலை அமைப்புகளுக்கும் இடையில் இருக்கின்றன.
- ஹொய்சாலா கோயில்கள் அடிப்படை திராவிட உருவ அமைப்பை கொண்டுள்ளன ஆனால் அவை மத்திய இந்தியாவில் பிரபாலமான பூமிஜபாணி வடக்கு மற்றும் மேற்கிந்தியாவின் நகரா அமைப்புகள் மற்றும் கர்நாடகாவின் கல்யாணி சாளுக்கிய ஆகியவடிவங்களின் தாக்கத்தை வெளிப்படுத்துகின்றன.
- இதன் விளைவாக ஹொய்சாலா கட்டிடகலையின் வெவ்வேறு கோயில் வகைகளின் அம்சங்களை கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டன.
- பின்னர் மாற்றியமைக்கப்பட்ட முற்றிலும் புதிய வடிவமான ஹொய்சாலா கோயில் வடிவம் பிறந்தது.
- ஒரு தூண் மண்டபத்துடன் கூடிய எளிய உள் அறைக்கு பதிலாக ஹொய்சாலா கோயில்கள் ஒரு நடுத்தூண் மண்டபத்தை சுற்றி பல ஆலையங்களை கொண்டு இருக்கின்றன.
- அவைநுணுக்கமானவடிவமைக்கப்பட்ட நட்சத்திரத்தின் வடிவில் கட்டப்பட்டுள்ளன.
- தலைநகர் சிற்பங்களை சிக்கலான முறையில் செதுக்கிருக்கிறார்கள் ஏனெனில் அவை ஒப்பிட்ட அளவில் மென்மையான சோப்புக்கல்லால் செய்யப்பட்டன.
- கோவில் சுவர்களில் உள்ள கடவுள்களின் நகைகளின் இது குறிப்பாக தெரிகிறது.

**யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளம் என்றால் என்ன?**

- ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பின் உலக

பாரம்பரிய பட்டியலிடப்பட்டுள்ள பல்வேறு பகுதிகள் அல்லது பொருட்களில் ஒன்றாகும்.

- உலக கலாச்சார மற்றும் இயற்கை பாரம்பரியத்தை பாதுகாப்பதை தொடர்பான 1972 மாநாட்டில் சிறந்த உலகளாவிய மதிப்பை கொண்ட வரலாற்று தளங்கள் பாதுகாப்பது தொடர்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- உலக பாரம்பரிய மையம் 1972 மாநாட்டின் செயலகமாக செய்யப்படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள கலாச்சார மதிப்புமிக்க பகுதிகள் மற்றும் இயற்கை பகுதிகளின் பாதுகாப்பில் சர்வதேச ஒத்துழைமைப்புக்கான கட்டமைப்பை இது நிறுவுகிறது.
- மூன்று வகையான பிரிவுகள் உள்ளன. அவை கலாச்சாரம், இயற்கை மற்றும் கலப்பு பிரிவு-களாகும்.
- பாரம்பரிய கட்டிடங்கள் மற்றும் நகரத்தளங்கள் குறிப்பிடத்தக்க தொல்பொருள் தளங்கள் மற்றும் நினைவுச் சின்ன சிற்பம் அல்லது ஓவியம் ஆகியவை கலாச்சார பாரம்பரிய தளங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- உதாரணமாக ஹரப்பா நகரத்தின் தோலவிரா பகுதியாகும்.
- இயற்கை பாரம்பரிய தளங்கள் சிறந்த சுற்றுச்சூழல் தளங்கள் மற்றும் அரிதான அல்லது அழிந்து வரும் உயிரினங்களின் தனித்தவமான இயற்கை தோற்றம் போன்றவற்றுடன் காணும் இயற்கை பகுதிகளை குறிப்பிடப்படுகிறது. உதாரணமாக ஹிமாலயா தேசியப் பூங்கா.
- இயற்கை மற்றும் கலாச்சாரம் இரண்டும் கலந்து செயல்படும் தளங்கள் கலப்புத் தளங்கள் ஆகும்.
- காங்செண்ட்சோங்கா தேசியப் பூங்கா கலப்புத்தளங்களுக்கு உதாரணமாகும்.
- இந்தியாவில் உள்ள உலக பாரம்பரிய தளங்களின் எண்ணிக்கை 40 ஆகும்.
- இது 32 கலாச்சார பண்புகளை கொண்ட தளமும், 7 இயற்கை பண்புகளை கொண்ட தளமும், ஒரு கலப்பு தளமும் உள்ளது.
- சமீபத்திய செயற்கை தோலவிரா நகரமாகும்.
- **நியமன செயல்முறை:** யுனெஸ்கோவின் 2019 செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் படி இறுதி நியமன ஆவணத்திற்கு பரிசிலப்படுவதற்கும் முன் எந்த ஒரு நினைவுச் சின்னமும் தளமும் ஒரு வருடத்திற்கு தற்காலிக பட்டியலில் வைக்கப்படவேண்டும்.
- நியமன முடிந்ததும் அது உலக பாரம்பரிய மையத்திற்கு அனுப்பப்-படும் அந்த மையம் தொழில் நுட்ப ஆய்வகம் நடத்தும்.

## V. அரசியல் – இந்தியாவில் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியலமைப்புகள்

### அரசியல் கட்சிகளுக்கான ரொக்க நன்கொடைகளுக்கான வரம்பு

#### செய்திகளில்

- அரசியல் கட்சிகளுக்கு அளிக்கப்-படும் நன்கொடைகளுக்கு உச்ச வரம்பு வழங்குமாறு தலைமை தேர்தல் ஆணையர் சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.
- முன்மொழிவுகள் அரசியல் கட்சிகள் பெறும் நன்கொடைகளில் சீர்-திருத்தங்கள் மற்றும் வெளிப்படைத்-தன்மையை கொண்டுவருவதை நோக்கமாக கொண்டுள்ளன.

#### பரிந்துரைகள் என்ன?

- கறுப்புப் பணத்தை ஒழிக்க தேர்தல் ஆணையம் அநாமதேய அரசியல் நன்கொடைகளை ரூபாய் 20,000லிருந்து ரூபாய் 2,000ஆக குறைக்க முன்மொழிந்துள்ளது.
- இந்த திட்டத்தின் படி அரசியல் கட்சிகள் 2,000ரூபாய்க்கு கீழ் பெறப்பட்ட ரொக்கத்தை தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.
- மத்திய தேர்தல் ஆணையம் நாட்டிற்கு 20% அல்லது 20கோடி ரூபாயில் எது குறைவோ அது கட்டுப்படுத்த முன்மொழிந்துள்ளது.
- தேர்தல் ஆணையத்தின் முன்-மொழியப்பட்ட மற்றொரு முக்கிய சீர்திருத்தம் தேர்தல் விதிகள் 1961ன் விதி 89 திருத்துவதன் மூலம் வேட்பாளர்கள் தேர்தல் செலவினங்களுக்காக ஒரு தனி வங்கி கணக்கை பாரம்பரிக்க வேண்டும் என்பதற்கான சட்டப்பூர்வமான ஆதரவு ஆகும்.
- வேட்பாளர்கள் இந்த கணக்கு மூலம் அனைத்து செலவுகள் மற்றும் இரசீதுகளை அனுப்ப வேண்டும் மற்றும் அவர்களின் தேர்தல் செலவு கணக்கில் இந்த விவரங்களை வழங்க வேண்டும்.
- தற்போது தேர்தல் செலவினங்-களுக்காக தனி வங்கி கணக்கை பராமரிப்பது அறிவுறுத்தலின் ஒரு பகுதியாகும்.
- ஆனால் தேர்தல் நடத்தை விதிகளில் ஒரு பகுதியாக மாற்ற வேண்டும் என்று தேர்தல் குழு விரும்புகிறது.

- வெளிநாட்டு நன்கொடைகள் அரசியல் கட்சிகளுக்கு மறைமுகமாக சென்றடையாமல் இருப்பதற்காக வெளிநாட்டு நன்கொடை ஒழுங்குமுறை சட்டம் 2010ஐ திருத்த வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.
- மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி 29-C பிரிவு திருத்துவதன் மூலம் அநாமதேய ரொக்க நன்கொடைகளுக்காக உச்ச வரம்பு தொடர்பாக வருமானவரிச் சட்டம் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 ஆகியவற்றுக்கு இடையே உள்ள முரண்பாடுகளை சரி செய்யும்மாறு தேர்தல் ஆணையம் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டுள்ளது.
- 2017ல் திருத்தப்பட்ட வரிச்சட்டத்தின் பிரிவு 13-A 2,000 ரூபாய்க்கு மேல் எந்த ரொக்க நன்கொடையும் அரசியல் கட்சியால் பெறக்கூடாது என்று கூறுகிறது.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 29-C பிரிவு அரசியல் கட்சிகள் 20,000 ரூபாய்க்கு மேல் உள்ள காசோலைகளை மட்டுமே வெளியில் தெரிவிக்க வேண்டும் என்று கூறுகிறது.

### அரசியல் நன்கொடைகள் தொடர்பான தற்போதைய விதிகள்

- மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 29-C ரூபாய் 20,000க்கு மேல் பெறப்பட்ட நன்கொடைகளின் பட்டியலை தேர்தல் ஆணையத்திடம் அரசியல் கட்சிகள் சமர்பிப்பதை கட்டாயமாக்கியுள்ளது.
- ஒரு அரசியல் கட்சி அறிக்கையை சமர்ப்பிக்க தவறினால் அந்த சட்டத்தின் கீழ் அது எந்த வரிச்சலுகைக்கும் தகுதிப் பெறாது.

### இந்திய தேர்தல் ஆணையம்

- இந்தியாவில் உள்ள தேர்தல் ஆணையம் இந்தியாவில் யூனியன் மற்றும் மாநில தேர்தல் செயல்முறைகளை நிர்வகிப்பதற்கு பொறுப்பான ஒரு தன்னாட்சி அதிகார பெற்ற அமைப்பாகும்.
- இந்திய தேர்தல் ஆணையம் இந்தியாவில் உள்ள மக்களவை, மாநிலங்களவை, மாநில சட்டப்பேரவைகள் மற்றும் குடியரசுத் தலைவர், துணைக்குடியரசுத்தலைவர் அலுவலகங்களுக்கான தேர்தலை இந்த அமைப்பு நிர்வகிக்கிறது.

### இந்திய தேர்தல் ஆணையத்தின் கட்டமைப்பு

- இந்திய தேர்தல் ஆணையம் 1950ல் நிறுவப்பட்டது.
- தொடக்கத்தில் அது ஒரு தலைமை தேர்தல் கமிஷனரை மட்டுமே கொண்டு செயல்பட்டது.
- 1989 அக்டோபர் 16ம் நாளில் மேலும் இரண்டு தேர்தல் ஆணையர்கள் நியமிக்கப்பட்டு மொத்தம் மூன்று உறுப்பினர்கள் இருந்தனர்.
- தேர்தல் ஆணையத்தின்திருத்தச் சட்டம் 1989,1990 ஜனவரி 1 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இது தேர்தல் ஆணையத்தை மூன்று உறுப்பினர்கள் கொண்ட பல உறுப்பினர் அமைப்பாக மாற்றியது.
- அது முதல் தற்போது வரை அது தேர்தல் ஆணையம் மூன்று உறுப்பினர்களை கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

## உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு

### செய்திகளில்

- அனைத்து அரசியலமைப்பு சார்ந்த நீதிபதிக்குழுக்கள் விசாரணைகள் செப்டம்பர் 27 முதல் உச்சநீதிமன்றத்தின் நேரடி ஒலிபரப்பு செய்யப்படும்.

### இவற்றைப் பற்றி

- செப்டம்பர் 20 அன்று கூடிய முழு நீதிமன்றத்தின் உச்ச நீதிமன்றம் செப்டம்பர் 22 முதல் விசாரிக்கப்படும் முக்கியமான அரசியலமைப்பு வழக்குகள் மற்றும் அதன் சார்பு வழக்குகளை நேரடியாக ஒளிபரப்பு செய்ய முடிவு செய்தது.
- வெளிப்படைத்தன்மையின் நலனுக்கான வேண்டுகோள் வைக்கப்பட்டு கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளுக்கு பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- அதற்கு முன் இந்திய தலைமை முன்னாள் நீதிபதி என்.வி.ரமணா ஓய்வு பெறும் நாளில் உச்சநீதிமன்றம் அதன் நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பியது.
- ஆனால் 2018ம் ஆண்டில் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளின்

### ஸ்வப்னில் திரிபாதி V/S உச்சநீதிமன்றம் 2018

- உச்சநீதிமன்றத்தின் கருத்துப்படி திறந்த நீதிமன்றங்களின் கோட்பாட்டின் நீட்டிப்பாக நேரடி ஒளிபரப்பு இருக்கிறது.
- பரந்த சாத்தியமான தகவல்களை பரப்புவதற்கும், நீதித்துறைக்கு வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை வழங்குவதற்கும் வழிவகுக்கும் செயல்முறையாகும்.
- மேலும் உச்சநீதிமன்றம் இந்திய அரசியலமைப்பின் சரத்து 21-ன் படி நீதியை அணுகுவது அடிப்படை உரிமைகளின் ஒன்றாகும் எனறு கூறியது.

நேரடி ஒளிபரப்புக்கான முதல் படிகள் எடுக்கப்பட்டன.

- அப்போதைய தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா அடங்கிய மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, நீதித்துறை நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புக் கோரிய பொது நல வழக்கை விசாரிக்க ஒப்புக் கொண்டது.
- மேலும் இந்த வழக்குகள் அரசியலமைப்பு மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்.
- மார்ச் 2018ல் இந்திய அட்டர்னிஜெனரல் கே.கே. வேணுகோபாலுக்கு இந்த பிரச்சனைகள் பற்றிய தன்னுடைய கருத்தை தெரிவிக்கும் மாறு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.
- தற்போது ஜார்கண்ட் கார்நாடகா மத்திய பிரதேசம் ஒரிஸ்ஸா மற்றும் பாட்னா உயர்நீதிமன்றங்கள் தங்கள் நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்புகின்றன.

## உச்சநீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின் தொகுப்பு

- அட்டர்னி ஜெனரல் பரிந்துரைத்த வழிகாட்டுதல்களின் தொகுப்பை உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. அதில் அவற்றின் நடவடிக்கைகள் மற்றும் எழுத்துபூர்வமான தகவல்களை காப்பகப்படுத்துவது அடங்கும்.
- ஒளிபரப்பை நிறுத்திவைப்பதற்கான அதிகாரத்தை நீதிமன்றம் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.
- மேலும் பின்வரும் வழக்குகளில் நீதிமன்றம் அதை அனுமதிக்கக் கூடாது என்று அட்டர்னி ஜெனரல் பரிந்துரைத்துள்ளது.
  - திருமண விசயங்கள்
  - சிறார்களின் நலன்கள் அல்லது இளம் குற்றவாளிகளின் தனிப்பட்ட வாழ்க்கையின் பாதுகாப்பு சம்பந்தபட்ட விசயங்கள் தேசிய பாதுகாப்பு விவரங்கள்.
  - பாதிக்கப்படக்கூடிய மற்றும் பயமுறுத்தல் சாட்சிகளுக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
  - அவர்கள் ஒளிபரப்ப ஒப்புக்கொள்ளும்போது அவர்களின் முகத்தை காட்டாமல் ஒளிபரப்புவதற்கு அனுமதியளிக்க வேண்டும்.
  - பாலியல் வன்கொடுமை மற்றும் பலாத்காரம் தொடர்பான அனைத்து விசயங்களையும் உள்ளடக்கிய இரகசியமான அல்லது முக்கியமான தகவல்களை பாதுகாக்க வேண்டும்.
  - நீதிநிர்வாகத்திற்கு எதிராக இருக்கும் விசயங்கள்
  - உணர்வுகளை தூண்டி, உணர்ச்சியை தூண்டி சமூகங்களிடையே பகையை தூண்டக்கூடிய வழக்குகள்.

## மற்ற நாடுகளில் தொடரும் நேரடி ஒளிபரப்பு

- அமெரிக்க உச்ச நீதிமன்றம் அதன் நடவடிக்கைகளை ஒளிபரப்புவதற்கான மனுக்களை நிராகரித்தாலும் 1955ம் ஆண்டிலிருந்து ஒலிப்பதிவு மற்றும் வாய்வழி வாதங்களின் பிரதிகளை அனுமதித்தது.
- ஆஸ்திரேலியாவில் நேரடி அல்லது தாமதமான ஒளிபரப்பு அனுமதிக்கப்படுகிறது. ஆனால் நீதிமன்றத்திற்கு நீதிமன்றம் நடைமுறைகள் மாறும்.
- பிரேசில் 2002 முதல் நீதிமன்ற சார்பு நேரடி வீடியோ மற்றும் ஆடியோ ஒளிபரப்பு நீதிமன்றத்தால் நீதிபதிகளால் எடுக்கப்பட்ட விவாதங்கள் மற்றும் வாக்களிக்கும் செயல்முறை உட்பட அனுமதியளிக்கப்படுகிறது.
- கனடாவில் நீதிமன்ற நடவடிக்கைகள் பாராளுமன்ற விவகார சேனலில் நேரலையாக ஒளிபரப்பப் படுகின்றன.
- அதனுடன் ஒவ்வொரு வழக்கின் விளக்கங்களும் மற்றும் நீதிமன்றத்தின் ஒட்டுமொத்த செயல்முறைகள் மற்றும் அதிகாரங்கள் அடங்கியிருக்கும்.
- தென்னாப்பிரிக்காவில் 2017 முதல் குற்றவியல் விவகாரங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்ப ஊடகங்களுக்கு அனுமதியளிக்கபட்டது.
- இது கருத்து சுதந்திரத்திற்கான உரிமையின் நீட்டிப்பாகும்.
- பிரிட்டிஷ் அரசாங்கம் 2005ல் உச்சநீதிமன்றத்தின் நடவடிக்கைகளை பதிவு செய்வதற்காக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சட்டத்தை நீக்குவதற்கு திருத்தம் செய்யப்பட்டது.
- நீதிமன்றத்தின் இணையத்தளத்தில் ஒரு நிமிட தாமதத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகள் நேரடியாக ஒளிபரப்பப்படும். ஆனால் உணர்வுபூர்வமான தகவல்கள் தடைசெய்யப்படுகின்றன.

## நீதிமன்ற நடவடிக்கையின் நேரடி ஒளிபரப்பின் நன்மைகள்

- நீதிமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வது பல நன்மை களை கொண்டுள்ளது.
- இவ்வாறு நேரடி செய்யும் போது வெளிப்படைத் தன்மை மற்றும் நீதி யமைப்புக்கான அதிக அணுக்கள் மற்றும் வழக்குரைஞர்கள் தங்கள் வழக்கறிஞர்களின் விளக்க காட்சியை பார்க்கலாம்.
- தொலைதூரப் பகுதியிலிருந்து நீதிமன்றத்திற்கு வராமல் இருக்கும் நபர்கள் தங்கள் இடத்திலிருந்து வசதி யாக நேரடியான நடவடிக்கைகளை பார்க்கலாம்.
- குறைவான குறுக்கீடுகள் ஒத்தி-வைப்புகள் தவிர்க்கபடலாம்.
- நீதிமன்ற சார்பு நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு கல்விசார்ந்த உதவி அளிக்கும்.
- வழக்கறிஞர்கள் மற்றும் நீதி த்துறை சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்ச்சிசெய்தவற்கு இது முக்கிய நன்மை வாய்ந்ததாக அமையும்.
- மேலும் செலவு குறைந்த நிலையில் வழக்குகள் தீர்க்கப்படலாம்.

## நேரடி ஒளிபரப்பு பற்றிய தீமைகள்

- நேரடி ஒளிபரப்பு பற்றிய கவலைகள் நீதிபதிகள் மற்றும் மக்கள் இருவருக்கும் இந்த நடவடிக்கை-களை பற்றிய கவலைகள் உள்ளன.
- இந்திய நீதிமன்றத்தின் நடவடிக்கைகளின் சில வீடியோ ஆடியோக்கள் பிற சமூகத்-தளங்களில் பரப்பான தலைப்பின் கீழ் வெளியிடுகின்றன. உதாரணம ாக ராணுவ அதிகாரி மீது உயர்நீதிம ன்றம் கடுங்கோபம்.
- பொறுப்பற்ற அல்லது ஊக்கமளிக்கும் உள்டக்கத்தை பயன்படுத்துவது பொது-மக்களிடையே தவறான தகவலை பரப்பக்கூடும் என்ற அச்சம் உள்ளது.
- இணைய குற்றவாளிகள் அங்கீகரிக்கப்படாத மறுதயாரிப்பை கட்டுப்படுத்துவது. அரசாங்கத்தின் தரப்பில் சவாலாக இருக்கும்.
- சமூக தளங்களின் மூலம் பகிரப்படும் வீடியோக்கள் நீதிபதி அல்லது வழக்கறிஞர்களின் கேள்வி பதில் களின் சில விநாடிகள் உள்ள வீடியோ கிளிப்பை எடுத்து பிரச்சார வீடியோக்களை உருவாக்கி சமூகத்தி ற்கு பாதிப்புட்டும் செயல்களில் ஈடுபடுகின்றன.

## வழிகாட்டுதல்கள்

- நீதிமன்ற நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்பு என்பது நீதியை அணுகுவதற்கான உரிமையின் ஒரு பகுதியாகும். இது வெளிப்-படைத்தன்மை மற்றும் நீதித்-துறையின் மீது பொதுமக்களின் நம்பிக்கை மீண்டும் உணரச் செய்கிறது.
- நேரடி ஒளிபரப்பு வழக்குகளை கவனமாக தேர்ந்தெடுப்பது ம ற்றும் இதுபோன்ற வீடியோக்களை சட்டப்பூர்வமாக மற்றும் தொழில் நுட்ப ரீதியாக சாத்தியமாகும் வரை உச்சநீதிமன்றம் அதன் இணையத்தளத்தில் காப்பகப்-படுத்தப்பட்ட வீடியோக்களை பதிவேற்றாமல் இருப்பது முக்கிய-மாகும்.
- இந்த முன்னெச்சிரிக்கை நடவடிக்கைகள் நாடுமுழுவதும் அரசியல் சாசனத்தை வளம ாக்குவதை நேரடி ஒளிபரப்பு உறுதி செய்யும்.
- நாட்டின் நிலவும் தகவல் கசிவு உச்சநீதிமன்றத்தை பாதிப்பான வழியில் நிறுத்த வாய்ப்புள்ளது.

## உத்திரபிரதேசத்தின் உத்தரவை அலகாபாத் உயர்நீதிமன்றம் ரத்து செய்தது

### செய்திகளில் ஏன்?

- இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்த 17 துணை வகுப்பினர் பட்டியல் சாதிகளாக அறிவிக்கப்பட்ட உத்திர பிரதேச அரசின் உத்தரவை அலகாபாத் உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.

### வழக்கு என்ன?

- 2016ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட உத்திரபிதேச அரசாங்கத்தின் ஆணைகளை எதிர்த்து உயர்நீதிம ன்றத்தில் ஒரு மனுதாக்கல் செய்யப்பட்டது.
- அந்த வழக்கின் படி இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பனரை தாழ்த்தப்பட்ட வகுப்பினராக அறிவிப்பதற்கான ஆணையம் ஆகும்.
- அரசியலமைப்பின் சரத்து 341 -ன் படி எந்த ஒரு பிரிவினரையும் பிற்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்க்க நாட்டின் பாராளுமன்றத்திற்கு மட்டுமே உரிமை உண்டு என்று மனுதாரர் வாதிட்டார்.

### நீதிமன்றத்தின் தீர்ப்பு

- 17 இதர பிற்படுத்தப்பட்ட துணை ஜாதிகளை அட்டவணை ஜாதி யாக அங்கீரித்த உத்திரபிரதேச அரசின் உத்தரவை நீதிமன்றம் தடை செய்தது.
- மேலும் அரசியலமைப்பின் 341 வதுபிரிவிக் படி பட்டியலில் ஈடுபட்ட பிரிவில் சேர்க்க பாராளமன்றத்தி ற்கும் மட்டுமே அதிகாரம் உள்ளது என்று நிதிமன்றம் கூறியது.
- அரசியல் அமைப்பு (பட்டியலிடப்பட்ட ஜாதிகள்)ஆணை 1950 அவற்றின் படி ஜாதிகள் பிரிக்கப்படுகின்றன.

- ஆனால் இந்த ஆணை குடியரசுத் தலைவரால் மட்டுமே உருவாக்கப்படும்.
- அரசியலமைப்பு சட்டம் சரத்து 314ன் படி குடியரசுத் தலைவரின் உத்திரவின் பேரிலே குறிப்பிட்ட ஜாதியினரை பாராளுமன்றம் அட்டவணையில் சேர்க்கமுடியும்.

## 2021ம் ஆண்டில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருப்பது 23.7 % அதிகரித்துள்ளது

### செய்திகளில்

- கடந்த மாதம் தேசிய குற்றப்பதிவு பணியகம் வெளியிட்ட சமீபத்திய குற்றப்புள்ளி விவரங்களின் படி முந்தைய ஆண்டை விட தடுப்பு காவலில் வைக்கப்பட்டள்ளள நபர்களின் எண்ணிக்கை 23.7% அதிகரித்துள்ளது.
- மேலும் 1.1லட்சத்திற்கும் அதிகமானோர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 151வது பிரிவின்படி எந்த ஒரு அடையாளம் காணப்படிய திட்டத்தை தடுக்க தடுப்பு காவல் முறையில் கைது செய்ய காவல் துறைக்கு அதிகாரம் உள்ளது.
- மேலும் இந்த காவலை தேவைப்பட்டால் 24மணிநேரத்திற்கு அப்பால் நீட்டிக்கமுடியும்.

### கருத்து

- அரசியல் அமைப்பு விதிகளின் பிரிவு 22 கைது செய்யப்பட்ட அல்லது தடுப்பு காவலில் உள்ள நபர்களுக்கு பாதுகாப்பை வழங்குகிறது அவை இருவகைப்படும்.
- தடுப்புக்காவல் மற்றும் தண்டனை-யாகும்.
- தண்டனைக்காவல் என்பது குற்றம் செய்யப்பட்ட நபர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு பிறகு நீதிமன்றத்தினால் தண்டனை பெற்றுத்தருவதாகும்.
- தடுப்புக் காவல் என்பது நீதிமன்றத்தால் விசாரணை மற்றும் தண்டனையின்றி ஒரு நபரை காவலில் வைப்பதாகும்.
- அரசியலமைப்பு பிரிவு 22 இரண்டு பகுதிகளை கொண்டுள்ளது. முதல் பகுதி சாதாரண சட்டத்தின் வழக்குகளையும் இரண்டாம் பகுதி தடுப்புச் சட்ட வழக்குகளையும் கையாள்கிறது.

### தடுப்புக்காவலின் கீழ் வழங்கப்படும் உரிமைகள்

- ஒரு ஆலோசகர் குழு நீட்டிக்கப்பட்ட தடுப்புக்காவலுக்கு போதுமான காரணத்தை தெரிவிக்காத வரையில் ஒரு நபரின் தடுப்புக்காவல் மூன்று மாதங்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்று கூறியுள்ளது.
- மேலும் அந்த ஆலோசகர் குழு உயர் நீதிமன்ற நீதிபதிகளை கொண்டிருக்க வேண்டும்.
- தடுப்பு காவலின் காரணங்களை கைது செய்யப்பட்ட நபருக்கு தெரிவிக்க வேண்டும்.
- இருப்பினும் பொது நலனுக்கு எதிராக கருதப்படும் உண்மைகளை வெளியிட வேண்டியதில்லை.
- தடுப்புக் காவலுக்கு எதிராக பிரதிநிதித்துவம் ( வக்கீல்) ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பை கைது செய்யப்பட்ட நபருக்கு வழங்க வேண்டும்.
- இந்த பாதுகாப்பு குடிமக்கள் மற்றும் வெளிநாட்டினர் இருவருக்கும் கிடைக்கும்.
- அரசியலமைப்பு சரத்து 22 பாராளுமன்றத்திற்கு பரிந்துரைப்பதற்கும் அதிகாரம் அளிக்கிறது.
    - ஒரு நபர் தடுப்புக்காவலின் கீழ் மூன்று மாதங்களுக்கு மேலாக காவலில் வைக்கப்படக்கூடிய சூழ்நிலைகளை ஆலோசனைக்குழுவின் கருத்து இல்லாமலே நீட்டிக்க முடியும்.
    - தடுப்புக்காவல்சட்டத்தின் கீழ் எந்த வகை வழக்குகளிலும் ஒருவர் தடுத்து வைக்கப்படக்கூடிய அதிகபட்ச காலம்.
    - விசாரணையின் ஆலோசனைக்குழு பின்பற்றவேண்டிய நடைமுறை.
- மேற்கண்ட கருத்துக்களில் பாராளு-மன்றம் தன்னுடைய அதிகாரத்தை செயல்படுத்தமுடியும்.
- தடுப்புக்காவல் பற்றி சட்ட-மியற்றுவதற்கு அரசியலமைப்பு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உரிமை அளித்துள்ளது.
- வெளியுறவு, இந்தியாவின் பாதுகாப்பு, பாதுகாப்புத் துறை சம்பந்தப்பட்ட சட்டங்களை இயற்றுவதற்கு பாராளுமன்றத்-திற்கு தனிப்பட்ட அதிகாரம் உள்ளது.
- ஒரு மாநிலத்தின் பாதுகாப்பு, பொது ஒழுங்கை பாராமரித்தல் மற்றும் சமூகத்திற்கு தேவையான சேவைகளை பராமரிப்பது தொடர்புடைய காரணங்களுக்காக நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்கள் இரண்டும் ஒரே நேரத்தில் தடுப்புக் காவல் சட்டத்தை உருவாக்க முடியும்.

## உச்சநீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு

### செய்திகளில்

- இந்திய 49வது தலைமை நீதிபதி உதேய் உமேஷ் லலித் உச்சநீதி-மன்றத்தில் ஆண்டு முழுவதும் குறைந்தபட்ச ஒரு அரசியல்

அமைப்பு அமர்வு செயல்படும் என்று உறுதியளித்துள்ளார்.

## இவற்றைப் பற்றி

- அரசியலமைப்பு அமர்வு என்பது 5 அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளை கொண்ட உச்சநீதிமன்ற அமர்வாகும்.
- இந்த உச்சநீதிமன்ற அமர்வு சுழற்சி முறையானது அல்ல.
- நீதிமன்றத்தில் முன் உள்ள பெரும்பாலான வழக்குகள் இரண்டு நீதிபதிகள் சில சமயங்களில் மூன்று நீதிபதி கொண்ட அமர்வால் விசாரிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகின்றன.

## அரசியலமைப்பு அமர்வு இருப்பதற்கான சூழ்நிலைகள்

- அரசியலமைப்பு சரத்து 145(3) அரசியலமைப்பு விளக்கம் அல்லது அது சம்பந்தப்பட்ட துணைக்கேள்விகள் குறித்து சந்தேகங்கள் எழும்போது குறைந்தபட்ச நீதிபதிகளின் எண்ணிக்கை 5 நபர்களைக் கொண்டு விசாரிக்க வேண்டும்.
- **சரத்து 143:** அரசியலமைப்பின் 143வது பிரிவின் கீழ் ஜனாதிபதி தனது கேள்விகளுக்கு கருத்துக்களை உச்சநீதிமன்றத்தில் கேட்கலாம்.
- மேலும் பொதுநல சம்பந்தப்பட்ட கேள்விகளை தீர்க்க உச்சநீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.
- மேலும் உச்சநீதிமன்ற இந்த விவகாரங்களில் குடியரசுத் தலைவர்களுக்கு அறிவுரைகளை வழங்கலாம்.
- ஆனால் இந்த அறிவுரைகளை குடியரசுத்தலைவர் ஏற்றுக்கொள்ளவே அல்லது ஏற்றுக்கொள்ளாமலும் இருக்கலாம்.
- உச்சநீதிமன்றத்தின் இரண்டு அல்லது மூன்று நபர்கள் கொண்ட நீதிபதிகள் அமர்வு முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து தீர்ப்பு வழங்கினால் ஒரு பெரிய உச்சநீதிமன்றத்தின் அமர்வு மூலம் சட்டத்தின் விளக்கம் மற்றும் வெளிப்பாடு தேவைப்படுகிறது.
- மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் இருக்கும்போது தற்காலிக அடிப்படையில் அரசியல் அமைப்பு அமர்வுகள் அமைக்கப்படுகின்றன.

## ஏன் உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நிரந்தர அரசியலமைப்பு அமர்வை நாடுகிறார்?

- தற்போது அரசியலமைப்பு அமர்வுகள் தேவை ஏற்படும்போது தற்காலிகமாக அமைக்கப்படுகின்றன.
- நீதிபதிகள் தங்களின் கவனம் தேவைப்படும் வழக்குகளை கண்டறிந்து விசாரணை செய்து நிவாரணம் வழங்க உதவுவதுடன், நீதிபதிகள் முன் விசாரணைக்கு பட்டியலிடுவதின் உள்ள தாமதத்தை தவிர்க்க உதவுவதே இதன் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2017ல் 50,000க்கு குறைவாக இருந்த உச்சநீதிமன்றத்தின் நிலுவை வழக்குகள் தற்போது 71,000 தாண்டியிருப்பதால் இது மிகவும் அவசியமானதாகும்.
- ஆகஸ்ட் 2019ல் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 34 ஆக உயர்த்தப்பட்டது.

## முன்னோக்கிய பாதை

- அரசியலமைப்பு அமர்வுகள் வழக்குகளை விசாரிக்கமலே தள்ளுபடி செய்வதினால் அரசியலமைப்பு அமர்வின் நீண்டகால பலன்களை இழக்க நேரிடும்.

## விரைவு நீதிமன்றங்கள்?

### செய்தியில்

- பெண்கள், குழந்தைகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க அந்தந்த மாநிலங்களில் விரைவு நீதிமன்றங்கள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கும் செயல்முறையே விரைவுப்படுத்துமாறு உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளுக்கு சட்ட அமைச்சகம் கிரண் ரிஜிஜீ கடிதம் எழுதியுள்ளார்.

### பின்னணி

- விரைவு நீதிமன்றங்கள் 2000 ஆண்டின் 11வது நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்டது.
- அடுத்த ஐந்தாண்டுகளில் மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் உள்ள நிலுவை வழக்குகளை கணிசமாக குறைக்க பரிந்துரைக்கப்பட்டது.
- நீதி ஆணையத்தின் அறிக்கையை தொடர்ந்து 5 ஆண்டுகளில் வெவ்வேறு மாநிலங்களின் 1734 கூடுதல் நீதிமன்றங்களை உருவாக்க 502.90 கோடி ரூபாய் மத்தியரசால் வழங்கப்பட்டது.
- 2011ல் மத்திய அரசு, அரசு விரைவு நீதிமன்றங்களுக்கு நிதியுதவி செய்வதை நிறுத்தியது.
- இது 2012ல் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. ஆனால் உச்சநீதிமன்றம் மாநிலங்களின் நிதிநிலைமையை பொறுத்து இந்த நீதிமன்றங்களை தொடர்வது அல்லது முடுவது என்பது மாநிலங்களின் முடிவாகும் என்று தீர்ப்பு வழங்கியது.
- மஹராஷ்டிரா தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மூன்று மாநிலங்கள்

இந்த நீதிமன்றங்களை தொடர்ந்து நடத்திவருகின்றன.

- அதே நேரத்தில் டெல்லி, மேற்கு வங்கம், ஹிமாச்சல பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகியவை 2013 வரை தொடரும் என்று கூறியுள்ளார்.
- டிசம்பர் 2012 நிர்பயா வழக்கை தொடர்ந்து மத்திய அரசாங்கம் நிர்பயா நிதியை அமைத்தது.
- சிறார் நீதி தடைச்சட்டத்தில் திருத்தம் செய்து விரைவு மகிளா நீதிமன்றங்களை அமைத்தது.
- உத்திரபிரதேசம், ஜம்மு காஷ்மீர், பீகார் போன்ற மாநிலங்கள் பாலியல் வன்கொடுமை வழக்குகளுக்கு விரைவு நீதிமன்றங்களை அமைத்தனர்.
- **விரைவு சிறப்பு நீதிமன்றங்களுக்கான சட்டம்**
    - 2019ம் ஆண்டின் இந்திய தண்டனைச்சட்டம் மற்றும் போக்ஸோ சட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள பாலியல் வன்புறுத்தல்கள் வழக்குகளை விரைவாக தீர்ப்பதற்காக நாடு முழுவதும் 1023 விரைவு சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதற்கான திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
    - 2019 ஜுலையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மத்திய நிதியுதவியுடன் கூடிய சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க உச்சநீதிமன்றம் உத்தரவுவிட்டது.
    - விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் நீதியை விரைவாக வழங்குவதை உறுதிசெய்யும்.
    - வழக்கமான நீதிமன்றங்களுடன் ஒப்பிடும்போது இவை சிறந்த தெளிவான விசாரணை நடத்துகின்றன.
    - இது பாலியல் குற்றவாளிகளை தடுக்கும் கட்டமைப்பையும் வலுப்படுத்துகிறது.
- **விரைவு சிறப்பு நீதிமன்றங்களின் செயல் திறன்:**
    - தேசிய குற்றறிக்கை 2019ன்படி நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.
    - விசாரணைக்கான மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 89.5% உள்ளது.
    - தண்டனை விகிதம் 27.8% ஆகும்.
    - போக்ஸோ வழக்குகளில் 88.8% வழக்குகள் ஆண்டின் இறுதியில் நிலுவையில் இருந்தன. மேலும் 34.9% வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன.

## விரைவு நீதிமன்றத்தின் சவால்கள்

- **உள்கட்டமைப்பு இல்லாமை:**
    - விரைவு நீதிமன்றங்கள் வழக்கமான நீதிமன்றங்களை விட வித்தியாசமாக செயல்படவில்லை.
    - மாவட்ட நீதித்துறையில் உள்ள மற்ற நீதிமன்ற மண்டங்களைப் போலவே இதுவும் உள்ளது.
    - வழக்குகளை விரைவாக முன்னெடுப்பதற்கு சட்டசெயல்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.
    - செயல்முறை பொறியியலில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. ஏனெனில் காலகெடுவை சந்திக்கிறதா என்பதை உறுதிப்படுத்த எந்த உள்கட்டமைப்பு வசதியும் இல்லை.
- **தெளிவான ஆணை இல்லை:**
    - விரைவு நீதிமன்றங்கள் எந்த வகையான வழக்குகளை விசாரிக்க வேண்டும் என்பதில் தெளிவான உத்தரவுகள் இல்லை.
    - நிர்பாய நிதியின் கீழ் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை குடும்ப வன்முறை போன்ற பாலினஅடிப்படையிலான வன்முறைகள் அனைத்தும் அவற்றின் வரம்புக்கு உட்பட்டாத என்பது தெளிவாக தெரியவில்லை.
- **தீர்ப்பில் தாமதம்:**
    - சாட்சிகள் இல்லாததால் ஏற்பட்ட தாமதம் ஒத்தி வைக்கப்படுவதன் காரணமாக முக்கிய காரணங்களில் ஒன்றாக காணப்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.
    - தாமதத்திற்கு மற்றொரு காரணம் வழக்கறிஞர்களால் கோரப்படும் ஒத்திவைப்பாகும்.
    - இந்தியாவில் உள்ள வழக்கு காலாச்சாரம் வழக்குகள் ஒத்திவைக்கப்படுவதை ஊக்குவிக்கிறது.
    - உண்மையில் வாடிக்கையாளர்கள் தாமதப்படுத்த வழக்கறிஞர்கள் வருகிறார்கள்.
    - சில சமயங்களில் தாமதங்கள் விரைவு நீதிமன்றத்தின் தீர்ப்பு உச்சநீதிமன்றத்திலோ அல்லது உயர்நீதிமன்றத்திலோ இருக்கும்.
- **நீதிபதிகளின் பணி சுமை:**
    - நீதித்துறை அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவு.
    - பிப்ரவரி 2020 நிலவரப்படி பல்வேறு மாநிலங்களின் துணை நீதிமன்றங்களின் அமைக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 21% காலியாகவுள்ளது.

- பெரும்பாலான நீதிபதிகள் மற்ற நீதிமன்றங்களின் நீதி பதிகளாக உள்ளதனால் அவர்களுக்கு விரைவு நீதிமன்றங்களால் கூடுதல் பொறுப்பு வழங்கப்படுகிறது.

## முன்னோக்கிய பாதை

- விரைவு நீதிமன்றங்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்க குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். இதற்காக செயல்முறைகளை மறுசீரமைக்கும்போது அர்ப்பணிப்புள்ள நீதிபதிகள் மற்றும் திறமையான பணியாளர்களை கொண்டு மனிதத்திறனை மேம்படுத்துவத அவசியமாகிறது.
- வழக்குகள் தொடர்ந்து விசாரிக்கப்படும் வகையில் நீதி பதிகள் நியமிக்க வேண்டும்.
- ஒவ்வொரு வழக்குக்கும் உண்மையான மதிப்பீடு இருக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு வழக்குக்கும் போதுமான நேரத்தை வழங்கும் சரியான நேர அட்டவணையை வைத்திருக்க வேண்டும்.
- ஸ்பெயின் மற்றும் லைபீரியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது போல் விரைவு நீதிமன்றங்களுக்கு தெளிவான உத்தரவு இருக்க வேண்டும்.
- குறிப்பிட்ட காலக்கெடுவில் விசாரணைகள் நடைபெற வேண்டும்.
- பாலின அடிப்படையிலான வன்முறை தொடர்பான எந்த வழக்கும் தானாகவே இந்த நீதிமன்றங்களுக்கு மாற்றப்படும்.

## செயலற்ற அரசியல் கட்சிகளை பட்டியலிருந்து நீக்குதல்

### செய்திகளில்

- சமீபத்தில் தேர்தல் ஆணையம் 253 அரசியல் கட்சிகளை செயலாற்றதாக அறிவித்தது.
- மேலும் 86 பதிவுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை இல்லாதவை என்று கண்டறியப்பட்டது.

### முக்கிய கண்டுபிடிப்புகள்

- பின்வரும் காரணங்களுக்காக அவர்கள் செயல்படாதவை என்று பட்டியலிடப்படுகின்றன.
- அவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடிதம் அல்லது அறிவிப்புக்கு எதிர்வினையாற்ற தவறிவிட்டன.
- மேலும் 2014 மற்றும் 2019ம் ஆண்டுகளில் மாநில தேர்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் பங்கேற்க தவறிவிட்டன.

### தாக்கம்

- தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு ஆணை 1968ன் படி கட்சிகள் தங்கள் வேட்பாளர்களுக்கு பொதுவான சின்னத்திற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கும்
- மேலும் செலற்றதாக அறிவிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் இதில் பலனை எதிர்பார்க்கமுடியாது.
- பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் ஒரு மாநிலத்தின் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஈடாக ஒரு பொதுவான சின்னத்தை 5% கலத்தில் உள்ள உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது.

### அரசியல் கட்சிகள்

- இது தனிநபர்கள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை உருவாக்குவதற்காக தேர்தலில் போட்டியிடும் ஒரு அமைப்பாகும்.
- அரசியல் கட்சிகள் பல சமூக கொள்கைகள் மற்றும் பொதுநலனை மேம்படுத்தும் திட்டங்களை தெரிவிக்கின்றன.
- மேலும் திட்டங்களில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கும்போது அரசியல் கட்சிகள் தங்கள் திட்டங்களை சிறந்தது என்று தனிநபர்களை நம்ப வைக்க முயற்சி செய்கின்றன.
- தேர்தல் மூலம் அரசியல் கட்சிகளின் கொள்கைகளை பறை சாற்றி மக்களின் ஆதரவை பெறுகின்றனர்.
- இதன் மூலம் ஒரு அரசியல் கட்சி மாநில அல்லது தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படுகிறது.

### மாநில கட்சி

- மக்களவை தேர்தலின் போது மாநிலத்தின் பதிவான மொத்த வாக்குகளின் 8% அல்லது பாராளுமன்ற தேர்தல்களின் மாநிலத்திலிருந்து ஒரு எம்.பி அல்லத சட்டமன்ற தொகுதிகளில் 3% அல்லது 3 இடங்கள் (எது அதிகமோ).

### தேசிய கட்சியாக பதிவு செய்தல்

- நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களின் கட்சி ஒரு சட்டபூர்வம ான அரசியல் கட்சிகளாக மாற்றப்பட வேண்டும்.
- நான்கு மக்களவை தொகுதிகளில் வெற்றிபெறுவதோடு, நான்கு மாநிலங்களின் குறைந்த பட்சம் 6% வாக்குகளை பெற்றுருக்க வேண்டும்.
- குறைந்தபட்ச மக்களவை இடங்களில் இரண்டு சதவீதம் (அதாவது 543 உறுப்பினர்களை கொண்ட தற்போதைய சபையில் 11 இடங்கள்)

### இந்தியாவில் அரசியல் கட்சிகள் எவ்வாறு பதிவு செய்யப்படுகின்றன?

- மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 29 கீழ் அரசியல் கட்சிகளை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் பதிவு செய்கிறது.
- இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சரத்து 324 மற்றும் மக்கள் பிரதி நிதித்துவ சட்டம் 1951ல் பிரிவு 29 ஏ ஆகியவற்றால் வழங்கப்பட்ட அதி காரத்தை பயன்படுத்துவதன் மூலம் அந்த பிரிவின் கீழ் ஆணையத்தை பதிவு செய்ய விரும்பும் கட்சிகள் 30 நாட்களுக்குள் தேர்தல் ஆணையத்தி ற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பத்துடன் ரூ.10,000-க் கான காசோலை சேர்க்கப்பட வேண்டும்.
- மேலும் கட்சியின் விதி கள்குறிப்பாணை ஆகியவற்றுடன் அச்சிடப்பட்ட நகலும் சேர்க்கப் படவேண்டும்.
- குறைந்தது 100 கட்சி உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்ட வாக்களர்கள் என்பதை சரிபார்க்க வேண்டும்.
- மேலும் அந்த நபர்கள் மிக சமீபத்திய தேர்தல் பட்டியல்களை பெறுவது அவசியமாகும்.
- விண்ணப்பிக்கும் கட்சியின் உறுப்பினர்கள் எவரும் வேறு எந்த அரசியல் கட்சியுடன் தொடர்புடையவர்கள் அல்ல என்று உறுதி மொழி தேவை.
- கட்சியின் முன்மொழியப்பட்ட பெயரை இரண்டு தேசிய நாளிதழ்களிலும், இரண்டு உள்ளூர் நாளிதழ்களிலும் இரண்டு நாட்களில் வெளியிட வேண்டும்.
- தேர்தல் ஆணையத்தின் முன் கட்சியின் முன்மொழியப்பட்ட பதிவுக்கு ஏதேனும் ஆட்சபனை இருந்தால் அது வெளியிடப்பட்ட 30 நாட்களுக்கள் வெளியிட வேண்டும்.
- தேர்தல் ஆணையத்தின் இணையதளத்திலும் வெளியிடு-வதற்கான அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

### பகுதி நீக்கம் செய்வதற்கான தகுதிகள்

- ஒரு கட்சி பின்வரும் சூழ்நிலைகளில் மட்டுமே பதிவு நீக்கம் செய்யப்-படலாம்.
  - அரசியல் கட்சிகள் பதிவு மோசடியாக இருந்தால்.
  - மத்திய அரசு சட்டவிரோதம் என்று தெரிவித்து இருந்தால்.
  - ஒரு கட்சி தனது உள் அரசியலமைப்பு மாற்றி இனி இந்திய அரசியலமைப்பு கடைபிடிக்க முடியாது என்று தேர்தல் ஆணையத்திடம் கூறினால்.

### தேர்தல் ஆணையத்தில் பதிவு - செய்வதின் முக்கியத்துவம்

- தேர்தல் ஆணையம் சின்னங்களை ஒதுக்கும் போது இந்திய தேர்தல் ஆணையத்தின் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் தேர்தல்களில் குறிப்பிட்ட பகுதிகளில் வெற்றிப்பெறும் போது மாநில மற்றும் தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்படுகிறது.
- ஒரு கட்சி மாநில கட்சியாக அங்கீகரிக்கப்படும்போது அது அங்கீகரிக்கப்பட்ட மாநிலத்தில் அதன் சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்கி பிரத்யோக உரிமை வழங்குகிறது.

### தேர்தல் ஆணையம்

- ஜனவரி 25, 1950ம் ஆண்டு தேர்தல் ஆணையம் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டது.
- இது இந்தியாவில் யூனியன் பிரதேசம் மாநிலங்கள் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை நடத்துவதற்கான ஒரு பொறுப்பான சுயாதீனமான அமைப்பாகும்.
- மாநிலங்களில் உள்ள பஞ்சாயத்துக்கள் மற்றும் நகராட்சிகளுக்கான தேர்தல் தேசிய தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுவதில்லை.
- இந்த தேர்தல்கள் தனிமாநில தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படுகின்றன.



# VI. பொது விழிப்புணர்வும் பொது நிர்வாகமும்

## சுயஉதவி குழுக்களின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான பிரச்சாரம்

### செய்திகளில் ஏன்?

- சமீபத்தில் கிராமப்புற அமைச்சகம் தீன்தயாள் உபாத்யாய தேசிய கிராமப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவி குழுக்களிலிருந்து வெளியேறிய பெண்களை மீண்டும் சேர்ப்பதற்காக நாடு தழுவிய பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.

### முக்கிய கருத்துக்கள்

- தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா கிராமப்புற வாழ்வாதார இயக்கம் பற்றி
  - அஜீவிகா தேசிய கிராமப்புற வாழ்வாதர இயக்கம் 2011 தொடங்கப்பட்டது.
  - 2015ம் ஆண்டு இது தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா
  - கிராமப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் கீழ் வருகிறது.
  - இது ஸ்வர்ணஜெயந்தி கிராம் ஸ்வரோஸ்கர் யோஜனாவின் மறுகட்டமைக்கப்பட்ட பதிப்பாகும்.
  - இது ஒரு மத்திய நிதியுதவித் திட்டமாகும்.

### நோக்கம்

- கிராமப்புற ஏழைகளுக்கு திறமையான மற்றும் பயனுள்ள நிறுவனத்தளங்களை உருவாக்குதல்.
- வாழ்வாதாரங்களை அதிகரிக்கவும் மற்றும் நிதி சேவைகளை ஊக்குவிக்கவும் இத்திட்டம் செயல்படுகிறது.
- **முக்கிய அம்சங்கள்:**
  - உலகளாவிய சமூக அணித்திரட்டல் (ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண் சுய உதவிக்குழுவில் இருத்தல்)
  - ஏழைகளின் பங்கேற்பு அடையாளம் (கிராம சபாவினர் அடையாளம் காணப்பட்ட ஏழைகள் பங்கேடுத்தல்).
  - சூழலும் நிதி மற்றும் கூட்டு முதலீட்டு நிதி
  - வாழ்வாதாரம் (பண்ணை முறை அல்லது பண்ணை அல்லாத முறை)

### சுய உதவிக்குழுக்கள் பற்றி

- சுய உதவிக்குழு என்பது ஒரே மாதிரியான வகுப்பைச் சார்ந்த மக்களால் சேரப்பட்ட ஒரு சிறியக் குழுவாகும்.
- அவர்கள் தங்கள் வளங்களையும் கொள்கைகளையும் ஒருங்கிணைக்கிறார்கள்.
- வளங்களின் மூலம் உறுப்பினர்களுக்கு சிறிய வட்டி தாங்கிக் கடன்களை வழங்குகிறார்கள்.

### சுய உதவிக்குழுக்களின் முக்கியத்துவம்:

- இதன் மூலம் பெண்கள் தன்னிறைவு அடைகிறார்கள்.
- இது ஒரு குறுகிய நிதியமைப்பாகும்.
- உறுப்பினர்களிடையே தொழில் முனைவோர் தகுதியை வளர்த்துக்கொள்ளுதல்.
- கிராமப்புறங்களில் உள்ள பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்.
- பெண்கள் சமூகப் பொருளாதார சுயாதீனத்தை அடையதல்.
- நிதி ஒழுக்கத்தை ஊக்குவித்தல்.

## பல்கலைகழக மானிய குழு கல்லூரி திரள்களை உருவாக்குவதற்கு முன்மொழிகிறது.

### செய்திகளில்

- பல்கலைகழக மானிய குழு கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை பல்துறை நிறுவனங்களாக மாற்றுவதற்கான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.
- ஒவ்வொரு நிறுவனத்திற்கும் அருகாமையில் அமைந்துள்ள நிறுவனங்களுடன் சேர்த்து செய்யும் (College Cluster) அணுகுமுறைகளை பரிந்துரைத்துள்ளது.

### முக்கியக் கருத்துக்கள்

- இந்த வழிகாட்டுதல்கள் மாநில அரசுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் தகுந்த விதிகள் மற்றும் கொள்கைகளை உருவாக்குவதையே நோக்கமாக கொண்டுள்ளது.
- பல்துறை நிறுவனங்களை ஊக்குவிப்பது தேசிய கல்விக் கொள்கை 2020ன் முக்கிய பரிந்துரையாகும்.
- பல்கலைக்கழக மானிய குழு உயர்கல்வி நிறுவனங்களின் திரள்கள் மூலம் நிறுவனங்களுக்கிடையே கல்வி ஒத்துழைப்பை ஊக்குவிக்க பரிந்துரைத்துள்ளது.
- இதன் மூலம் கல்லூரிகளின் ஆராய்ச்சி மற்றும் கல்விகள் மேம்படும்.
- கல்லூரிகளின் திரள்கள் அமைப்பு பலவகையான கல்வி முறைகளுக்கு உதவும்.

- உதாரணமாக வேலை சார்ந்த செயல்கள், புதுமையான பல்துறை படிப்புகள் குறைவான நிதியுடன் படிப்புகள் போன்றவற்றிற்கு கல்லூரி திரள்கள் உதவும்.
- தேசிய மதிப்பீடு (NAAC) அங்கீகாரத்தின் மூலம் கல்வி மையங்கள் தங்கள் தரங்களை மேம்படுத்த இது உதவும்.
- கூட்டாளர் நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து அவர்கள் தங்கள் கால அட்டவணையை வடிவமைக்க வேண்டும்.
- இதன் மூலம் மாணவர்கள் படிக்கும் திட்டமிடல் பாதிப்படையாமல் இருக்கும்.
- திரளில் உள்ள உறுப்பு கல்லூரிகள் ஆரம்பக் கட்டத்தில் பல்கலைக்கழகத்தின் கீழ் இணைந்த கல்லூரிகளாக செயல்படும்.
- அப்பொழுது அக்கல்லூரிகள் மாணவர்களுக்கு திட்டங்களை வழங்குவதற்கும், ஆராய்ச்சி திட்டங்களை வழிகாட்டுவதற்கும் தங்கள் ஆதரங்களை பகிர்ந்து கொள்கின்றன.
- ஆரம்ப ஆண்டுகளுக்கு பிறகு இணைந்த பல்கலைக்கழகம் கல்லூரிகளில் தொகுப்பை ஒரே அலகாக பதிவு செய்யலாம்.
- இதன் மூலம் அவை தன்னாட்சி பட்டம் வழங்கும் கல்லூரியாக உருவாகுவதற்கு முன் தரப்படுத்தப்பட்ட நிலையை கடந்து செல்லும்.
- இதன் பின்னர் இக்கல்லூரிகள் ஆராய்ச்சி அல்லது கற்பித்தல் பல்கலைக்கழகங்களாக உருவாகலாம்.
- பல்கலைகழக மானிய குழு ஏற்கனவே உள்ள கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகங்களை பல்துறைகளாக மாற்றுவதற்கு இரண்டு அணுகுமுறைகளை பரிந்துரைத்துள்ளது.
    - ஒரே மேலாண்மை அல்லது வெவ்வேறு நிர்வாகங்களின் கீழ் ஒற்றை நிலை நிறுவனங்களை பல்துறை நிறுவனங்களுடன் இணைத்தல்.
    - மேலும் மொழிகள் இலக்கியம் இசை விளையாட்டு போன்ற புதிய பாடங்களை சேர்ப்பதன் மூலம் கல்லூரிகள் மற்றும் பல்கலைகழக்களின் துறைகளில் எண்ணிக்கையை விரிவுபடுத்துதல்.
- ஒத்துழைப்பு மற்றும் இணைப்புகளின் விளைவாக வழங்கப்படும் படிப்புகளை தேர்ந்தெடுக்கும் மாணவர்கள் கூட்டாண்மை நிறுவனங்களுக்கிடையே கடன் இயக்கத்தையும் பெறலாம்.
- மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் தேசிய மின்னாளுமை பிரிவின் கீழ் தளங்களை (ABCதளம்) உருவாக்கி உள்ளது.
- இதன் மூலம் மாணவர்கள் கல்விக் கணக்கை திறக்கவும் மற்றும் அவர்களின் மதிப்பெண் பட்டியலை இந்த தளத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.
- மேலும் அவர்களின் பட்டங்களை படிப்புகளையும் இதில் சேர்க்கலாம்.
- வழிகாட்டுதல்கள் மாணவர்களின் குறிக்கோள்களை பற்றி அறிந்து கொள்ளவும் மற்றும் புதிய விருப்பங்களை தெரிவிப்பதற்கான ஒரு முக்கிய அங்கமாக இந்த வழிகாட்டல்கள் இருக்கின்றன.
- பல்கலைக்கழகமானியக்குழுஆசிரியர்களுக்கு கற்றுத்தருவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும் மற்றும் பலதரப்பட்ட கல்வித் திட்டங்களின் ஆராய்ச்சி செய்வதற்கும் வசதிகளை உருவாக்குவதற்கு சரிந்துரைத்துள்ளது.

## பல்கலைக்கழக மானியக் குழு

- பல்கலைக்கழக மானியக் குழு என்பது பல்கலைக்கழக மானியக் குழுசட்டம்1956ன்படிகல்வியமைச்சகத்தின் உயர்கல்வித்துறையால் அமைக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது இந்தியாவில் உயர்கல்வியின் தரத்தை ஒருங்கிணைத்தல் நிர்யயித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுடன் பொறுப்பேற்றுள்ளது.
- இந்தியாவில் உள்ள பல்கலைகழங்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.
- மேலும் அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கு நிதியை வழங்குகிறது.
- இதன் தலைமையகம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.
- இது ஆறு பிராந்திய மையங்களைக் கொண்டு செயல்படுகிறது. (புனே, போபால், கொல்கத்தா, ஹைதராபாத், கௌகாத்தி, பெங்களூர்)
- **பல்கலைக்கழக மானியக் குழுவால் ஒழுங்குப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் வகைகள் பின்வருமாறு:**
    - மத்திய பல்கலைக்கழகங்கள் அல்லது யூனியன் பல்கலைக்கழங்கள் நாடாளுமன்றத்தின் சட்டத்தால் நிறுவப்பட்டு கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறையின் கீழ் உள்ளன.
    - மாநில பல்கலைகழகங்கள் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலங்கள் மற்றும்

பிரதேசங்களின் மாநில அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன.

- மேலும் அவை பொதுவாக உள்ளூர் சட்டமன்றத்தால் நிறுவப்படுகின்றன.
- பல்கலைக்கழகமாக கருதப்படும் பல்கலைக்கழகத்திற்கு, பல் கலைக்கழக மானியக்குழுவின் சட்டத்தின் விதி 3 பிரிவின் கீழ் பல்கலைகழக மானியக் குழு ஆலோசனையின் படி உயர்கல் வித்துறையால் வழங்கப்பட்ட தன்னாட்சி நிலையாகும்.
- தனியார் பல்கலைக்கழகங்களும் பல்கலைகழக மானியக் குழுவால் அங்கீகரிக்கப்படுகின்றன.

- அவர்கள் பட்டங்களை வழங்க முடியும் ஆனால் வளாகத்திற்கு வெளியே இணைந்த கல்லூரிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படுவதில்லை.

## புதிய கடற்படை கொடி

### செய்திகளில்

- நவீன கடற்படைக்கு அடித்தளமிட்ட சத்ரபதி சிவாஜி முத்திரையுடன் கூடிய புதிய கடற்படை கொடியை இந்தியப் பிரதமர் கொச்சியில் வெளியிட்டார்.





### சிவாஜியும் கடல்களும்

- சத்ரபதி சிவாஜி கடற்பயணம் திறமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார் மேலும் 17 நூற்றாண்டில் ஒரு நவீன கடற்படைக்கு அடித்தளம் அமைத்தார்.
- இந்திய கடற்படை லோநவ்லாவில் உள்ள ஒரு பயிற்சி நிறுவனத்திற்கு INS சிவாஜி என்று பெயரிடப்பட்டுள்ளது.
- மேற்கு கடற்படை கட்டளையின் தளவாடங்களுக்கு மாராட்டிய தளபதி யான கண்ஹோஜி ஆங்ரேக்குப் பிறகு INS ஆங்ரே என்று பெயரிடப்பட்டது.
- புதிய கடற்படை கொடியில் சிவாஜியின் எண்கோண முத்தி ரையை பயன்படுத்துவது மராட்டிய பேரரசின் கடற்படையுடன், இந்திய கடற்படைக்கு இடையே உள்ள உறவுகளின் முத்திரையாகும்.

### கடற்படை வலிமையின் அளவு

- மராட்டிய பேரரசின் கடல் வணிகத்தை பாதுகாக்க கொங்கன் கடற்கரையில் ஒரு வலுவான கடற்படை இருப்பு நிறுவப்பட்டது என்பதை சிவாஜியின் சிந்தனை உறுதி செய்கிறது.
- சிவாஜியின் கீழ் கடற்படை மிகவும் பலமாக இருந்தது.
- மராட்டியர்கள் பிரிட்டிஷ், போர்ச்சுக்கீசியம் மற்றும் டச்சுக்காரர்களுக்கு எதிராக தங்கள் கட்டுப்பாட்டை வைத்திருக்க முடியும்.
- சிவாஜி வணிகத்திற்காகவும் சண்டையிடுவதற்காகவும் கல் யாண், பிவன்டி, கோவா போன்ற நகரங்களில் கடற்படையை நிறுவுவதற்காக கப்பல்களை கட்டினார்.
- பழுதுபார்ப்பதற்கும் சேமிப்பதற்கும் தங்குவதற்கும் பல கடல் கோட்டைகளையும் தளங்களையும் கட்டினார்.
- சிவாஜி கடற்கரையின் பல நீண்ட போர்களை நடத்தினார்.
- அவர் தக்காணத்தின் எட்டு அல்லது ஒன்பது துறைமுகங்களை சொந்தமாக வைத்திருந்தபிறகு வெளிநாட்டவருடன் வர்த்தகம் செய்ய தொடங்கினார்.

### கன்ஹோஜாஜீங்கன்

- கன்ஹோஜாஜீங்கன் மராட்டிய கடற்படையின் தளபதியாக இருந்தார். மேலும் அவர் வலிமையான கடற்படையை அமைத்த பெருமைக்குரியவர் ஆவார்.
- கடற்படைகளின் அமைப்பு மராட்டியர்களின் கடல்கடந்து செல்லும் ஆற்றலை பெற்றிருந்தது உறுதிச் செய்கிறது.
- கன்ஹோஜாஜீங்கன் போர்ச்சுக்கீசியம், டச்சும், பிரிட்டிஷ் கடற்படைகளுக்கு எதிராக சொந்தமான கடற்படைகளை வைத்திருந்தார்.
- மராட்டிய சம்ராஜ்யத்திற்காக வணிகம் செய்யும் வணிகர்கள் கடலில் பாதுகாக்கப்படுவதை அவர் உறுதி செய்தார்.
- ரத்தினகிரிக்கு அருகில் உள்ள சுவந்துர்க்கு மற்றும் விஜயதுர்க்கு ஆகிய இடங்களில் தளங்களை அமைத்தார்.

### ஜாஞ்சிரா

- ஜாஞ்சிரா பகுதி பிரிட்டிஷ் ராஜ்யத்தின் போது இந்தியாவில் ஒரு சமஸ்தான -மாக இருந்தது.
- ஜாஞ்சிரா பகுதி இன்றைய மகராஷ்ராவின் ராயக்காட்டு மாவட்டத்தில் கொங்கன் கடற்கரையில் அமைந்துள்ளது.

## சிறை சீர்திருத்தங்கள்

### செய்திகளில்

- சமீபத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அனைத்துமாநிலங்களும் தங்கள் சிறைகளை நவீனமயமாக்கும்படி கேட்டுக்கொண்டதுடன் சிறை சீர்திருத்தங்கள் குறித்த புதிய சட்டம் விரைவில் வரவுள்ளதாக கூறினார்.

## இவற்றை பற்றி

- **காலனித்துவ சிறையமைப்பு :**
  - இந்தியாவின் சிறைச்சாலை அமைப்பு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அமைக்கப்பட்டது என்று உள்துறை அமைச்சர் கூறினார்.
  - இது அரசியல் கைதிகளை அடைத்து வைக்க உபயோகப்படுத்தினர்.
- **நவீன மயமாக்கல் தேவை**
  - சிறைச்சாலைகளை நவீனமாகவும், தொழில் நுட்பரீதியாகவும் கடுமையான பாதுகாப்பு வசதியுடன் உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.
  - மேலும் சிறையில் சிறந்த சுகாதார வசதிகள், நூலகம், கைதிகளுக்கு சிறந்த பயிற்சித் திட்டங்கள் போன்றவற்றை கொண்டுவருவதன் மூலம் மனவளர்ச்சியை மேம்படுத்தும்.
- **மாதிரி சிறைகையேடு:**
  - அரசாங்கம் 2016ல் ஏற்கனவே உள்ள சிறைக்கையேட்டை மாற்றுவதற்காக மாதிரி சிறைக்கையேட்டை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - கையேட்டில் மனித உரிமை-கள், சமூகத்தில் கைதி-களின் மறுவாழ்வு போன்ற அம்சங்களை அரசாங்கம் பரிசிலித்துள்ளது.
  - சிறைத்தண்டனைப் பெற்ற பெண்களின் உரிமைகள், சிறை ஆய்வுக்கான சட்டங்கள் மற்றும் மரணத்தண்டனைப் பெற்ற கைதிகளுக்கு கூட கல்வி பெறும் உரிமை.
- **மாநிலத்தின் நிலை :**
  - சிறைகள் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 7 அட்டவணையின் மாநில பட்டியலில் கீழ் உள்ள பிரிவாகும்.
  - எனவே சிறைகளின் நிர்வாக சம்பந்தப்பட்டது மாநில அரசின் கீழ் வருகிறது.
  - 11 மாநிலங்கள் மற்றும் மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் யூனியன் பிரதேசங்கள் மட்டுமே மாதிரி சிறைக்கையேட்டை அறிமுகப்படுத்தியுள்ளன.
  - சிறை சீர்திருத்தங்களுக்கான புதிய கையேட்டை தாமதமின்றி ஏற்றுக்கொள்ளுமாறு மற்ற மாநிலங்களையும் அவர் வலியுறுத்தினார்.
- **சிறையமைப்புக்கா மாதிரிச் சட்டம்:**
  - சிறைச்சாலை அமைப்-பிற்கான மாதிரிச்சட்டத்தை அறிமுகப்படுத்த மாநிலங்-களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்துகிறது.
- **சிறைகளில் கூட்ட நெரிசல்:**
  - தேசிய குற்ற ஆவண காப்ப-கத்தின் 2021 புள்ளிவிவரங்-களின் படி இந்தியா முழுவதும் 554034 பேர் சிறைகளில் உள்ளனர்.
  - ஆனால் இந்தியாவில் உள்ள சிறைகளில் மொத்த கொள்ளளவு 425609.
  - 2020 மற்றும் 2019 சிறைகளில் அதிகக் கூட்டம் காணப்படுகிறது.

## சிறைக்கைதிகள் எதிர்கொள்ளும் பிற சிக்கல்கள்

- கூட்டநெரிசல்
- விசாரணைக்கைதிகளை நீண்ட காலமாக தடுத்து வைத்தல்
- ஒரு ஏழை மனிதன் திருட்டு போன்ற சிறிய குற்றங்களுக்காக ஒரு வருடத்திற்க்கு மேலாக விசாரணையின்றி சிறையில் இருக்கின்றார்.
- பல கைதிகள் ஜாமீன் தொகை கூட கொடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.
- திருப்தியற்ற வாழ்க்கை நிலைமைகள்.
- சிறை ஊழியர்களின் அலட்சிய-மான மற்றும் மனிதாபிமான மற்ற செயல்களின் குற்றச்சாட்டுகள் பல ஆண்டுகளாக விமர்சகர்களின் கவனத்தை மீண்டும் மீண்டும் ஈர்த்துள்ளன.

### கைதிகளுக்கான வாழ்க்கை உரிமை மற்றும் தனிப்பட்ட சுதந்திரம்

**சரத்து 21**

- இந்திய அரசியலமைப்பின் சரத்து 21 உச்சநீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் சரத்து 21ன் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமையை உத்தரவாதம் செய்துள்ளது.
- மருத்துவ பராமரிப்பு இந்த சரத்தின் கீழ் வருகிறது.
- மேலும் இந்த சரத்து உள்நாட்டவர் வெளிநாட்டவர்களுக்கும் பொருந்தும்.
- இந்த சரத்தின் படி மனிதாபிமானமற்ற கொடூரமான மற்றும் இழிவான நடத்தைகளையும் தடை செய்கிறது.

**சரத்து 39A**

- இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 39 A குற்ற குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்ட நபர்கள் தங்களை தற்காத்துக்கொள்ள வழியில்லாத போது அதாவது வழக்கறிஞரை நியமிக்க முடியாத சூழ்நிலையில் உள்ள அவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்குவது பற்றி அரசின் கடமையை கூறுகிறது.

## சிறை சீர்திருத்தத்திற்கான பரிந்துரைகள்

- **இந்திய சட்ட ஆணையத்தின் 268 வது அறிக்கையின் பரிந்துரைகள்:**
    - 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையுடன் வரும் நபர்கள் அந்த காலத்தில் மூன்றில் ஒரு பங்கு முடிந்தவுடன் விடுவிக்கப்பட வேண்டும்.
    - நீண்டகால சிறைத்தண்டனை அனுபவிப்பவர்கள் அந்த காலத்தின் பாதி முடிந்தவுடன் விடுவிக்கப்படவேண்டும்.
    - காவல்துறை தேவையற்ற கைதிகளைதவிர்க்கவேண்டும்என்றும் மாஜிஸ்ட்ரேட்கள் இயந்திர காவலில் வைக்கப்படுவது என்பது பரிந்துரைத்தது.
- **நீதிபதி அமீர்தவராய் குழுவின் பரிந்துரைகள்:**
    - 2018ம் ஆண்டின் உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி அமீர்தவராய் தலைமையில் நாடு முழுவதும் உள்ள சிறை சீர்திருத்தங்கள் மற்றும் சிறைகளின் நெரிசல் உள்ளிட்ட பல அம்சங்களை பரிந்துரை செய்வதற்காக மூன்று நபர் கொண்ட குழு உச்சநீதிமன்றம் பரிந்துரைத்தது.
    - அவர்களின் பரிந்துரைகள் பின்வருவான
    - 5 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ள சிறு சிறு குற்றங்களை விசாரிக்க சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.
    - மேலும் குற்றம் சட்டப்பட்ட நபர்களுக்கு ஜாமீன் வழங்குபோது உத்திரவாதத்தை ஏற்பாடு செய்ய முடியாதவர்களுக்கு தனிப்பட்ட அங்கீகார பத்திரத்தின் கீழ் விடுவிக்கப்படவேண்டும்.
    - நீதி வெளிப்பாடு சட்ட சீர்திருத்திற்கான தேசிய இயக்கம் அமைக்கப்பட வேண்டும்.
- **திறந்த வெளிச்சிறைகள்:**
    - 1980ல் அமைக்கப்பட்ட அகில இந்திய குழு சிறை சீர்திருத்தத்திற்கு இராஜஸ்தானில் உள்ள சங்கேனார் திறந்த வெளி முகாமை போன்று ஒவ்வொரு மாநிலத்திலும் மற்றும் யூனியன் பிரதேசத்திலும் திறந்த வெளி சிறைகளை அமைக்கவும் மேம்படுத்தவும் அரசுக்கு பரிந்துரைத்தது.
    - நல்ல முன் கணிப்பை வழங்கும் ஆயுள் தண்டனை கைதிகளை அரை திறந்த மற்றும் திறந்த வெளி சிறைகளுக்கு மாற்ற வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

### திறந்த சிறை என்றால் என்ன?

- கட்டுப்படுத்தப்பட்ட சிறைகளுடன் ஒப்பிடும்போது திறந்த வெளி சிறைகளின் கடுமையான விதிகள் குறைவாக உள்ளன.
- குறைந்த பட்ச பாதுகாப்பு சிறை, திறந்த வெளி முகாம்கள் என பல பெயர்களால் அவை அழைக்கப்படுகின்றன.
- திறந்த வெளி சிறைச்சாலையின் அடிப்படை விதி என்னவென்றால் குறைந்த அளவு பாதுகாப்பு மற்றும் கைதிகளின் சுய ஒழுக்கத்தில் செயல்படுவது.
- ஐக்கிய நாடுகளின் கைதிகளின் குறைந்த பட்ச விதிகள் பிரபலமாக நெல்சன் மண்டேலா விதிகள் என்று அறியப்படுகின்றன.
- இது திறந்த சிறைகளின் நோக்கங்களை வகுத்தது. மேலும் அத்தகைய சிறைகள் தப்பிப்பதற்கு எதிராக எந்தவிதமான உடல் பாதுகாப்பையும் வழங்கவில்லை ஆனால் கைதிகளின் சுய ஒழுக்கத்தை நம்பியுள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளின் மறு வாழ்வுக் சாதகமான சூழ்நிலைகளை வழங்குகிறது.

### முன்னோக்கிய பாதை

- சிறைச்சாலைகள் சித்ரவதையின் காப்பகமாக இருப்பதை விட சீர்திருத்த நிறுவனமான மாறுவதற்கு பல தடைகள் உள்ளன.
- தண்டனையின் தடுப்பு செயல்பாடுகள், மறு வாழ்வு அணுகுமுறை போன்ற காரணிகளால் முன்னேற்றம் தடுக்கப்படுகிறது.
- பல்வேறு குழுக்களின் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் இருந்த போதிலும் அவற்றின் வெற்றி உண்மையான அமலாக்கத்தில் உள்ளன.

## இந்தியாவின் சாலை விபத்துக்கள்

### செய்திகளில்

- சைரஸ் மிஸ்திரியின் சமீபத்தில் ஏற்பட்ட துரதிஷ்டவசமான மரணம் இந்தியாவில் நடக்கும் சாலை விபத்துக்களில் கவனத்தை ஈர்த்துள்ளது.

### சமீபத்திய நிலை

- தேசிய குற்றப் பதிப்பு ஆணைய அறிக்கையின் படி இந்தியாவின் சாலை விபத்துக்களின் இறப்பு 17% அதிகரித்துள்ளது.

- 2021ல் சுமார் 1.55 இலட்சம்போர் இறந்துள்ளனர். ஆனால் 2020ல் இவற்றின் அளவு 1.33 இலட்சமாக உள்ளது.
- அதிகபட்சமான வழக்குகள் தமிழகத்தில் பதிவாகியுள்ளன.
- **காரணங்கள்:** வாகனங்களை வேகமாக இயக்குவது இறப்புகளின் பாதிக்கும் மேலானது. மேலும் ஆபத்தமான மற்றும் கவனக்குறைவான வகையில் வாகனம் ஒட்டுவது 42,000 இறப்புகளுக்கு காரணமாகின்றன.

## கார் விபத்தை தடுப்பதற்கான வழிமுறைகள்?

- மூன்று புள்ளி இருக்கை பெல்ட் என்பது ஒரு குறைந்த விலை கட்டுப்பாட்டு அமைப்பாகும்.
- இது ஒரு விபத்தில் வாகனத்தில் இருப்பவர்கள் முன்னோக்கி வீசப்படுவதை தடுக்கிறது.
- 2017ம் ஆண்டில் 26,896 நபர்கள் சீட்பெல்ட்டை பயன்படுத்தாதல் உயிர் இழந்துள்ளனர். அவர்களின் 16,876 நபர்கள் பயணிகள் ஆவர்.
- சீட் பெல்ட்டானது விபத்தின் போது இடுப்பு மற்றும் மார்பு போன்ற வலுவான பாகங்கள் முழுவதும் உடலின் சக்தியை விநியோகிக்கும்.
- **சீட் பெல்ட் மற்றும் காற்று பைகள்:** காற்றுபைகள் மட்டும் பொருத்தப்பட்டிருந்தாலும் கட்டுபாடற்ற விசையின் போது கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தி கடுமையான காயங்களை ஏற்படுத்தலாம். எனவே காற்றுபைகள் சீட் பெல்ட்டுடன் இணைந்து வேலை செய்யும் போது காயங்களை குறைக்கின்றன.
- காற்றுபைகள் இறப்பை 63% குறைக்கிறது என்று டெல்லி ஐஐடி ஆய்வு மூலம் கண்டறிந்து உள்ளது.
- சரிசெய்யக்கூடிய மாதிரிகள் அல்லது இருக்கைகளுடன் சேர்ந்த மாதிரி வடிவமைக்கப்பட்டுள்ளது. காயங்களை தடுக்கிறது. (திடீர் பின்னோக்கி நகர்வு மற்றும் நேருக்குநேர் மோதலின் முன்னோக்கி நகர்வு)

## இந்திய ஒழுங்குமுறை

- நெடுஞ்சாலை துறை அமைச்சகம் அனைத்து வாகனங்களிலும் (8 இருக்கை வாகனங்கள் வரை) மூன்று புள்ளி சீட் பெல்ட்களை வழங்குவதற்கான வரைவு அறிவிப்பை வெளியிட்டது.
- 2019ம் ஆண்டில் திருத்தப்பட்ட மோட்டார் வாகனச் சட்டத்தின் படி ஒட்டுநர் மற்றும் பயணிகள் சீட் பெல்ட் அணிய வேண்டும் இல்லாவிட்டால் அபராதம் விதிக்கப்படும்.
- வெளிப்படையாக கார்களின் சீட் பெல்ட்கள் இருந்தாலும் பின் இருக்கையின் சீட் பெல்ட்கள் அமலாக்கம் இந்தியாவின் நடைமுறையில் இல்லை.

## என்ன செய்ய வேண்டும்?

- நிறுவனங்களின் சான்றுகளின் அடிப்படையிலான இந்தியாவின் குறிப்பிட்ட மற்றும் பயனுள்ள சாலை பாதுகாப்பு கொள்கைகள்.
- சிறந்த சாலை வடிவமைப்பு மற்றும் சாலை மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்பு பராமரிப்பு
- நகரங்களுக்கு இடையேயான நெடுஞ்சாலைகளின் உள்ள வேகத்தடைகளை அகற்றி அதற்கு பதிலாக எஃகு பாதுகாப்பு தண்டவாளங்கள் அல்லது கம்பிக்கயிறு தடைகளாக மாற்றுதல்.
- சீட்பெல்ட் பயன்படுத்தவது மற்றும் காற்றுபைகள் பொருத்துதல் பற்றிய விழிப்புணர்வு.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது பாதுகாப்பு ஒழுங்குமுறையை பயன்படுத்துதல்.
- இதன்படி அவசர நேரங்களில் ரோக்கிங் தொழில் நுட்பம் மோதலின் போது தானகவே இயங்கும்.

## அடிப்படை கற்றல் ஆய்வு

### செய்திகளில்

- மத்திய கல்வி அமைச்சகம் மற்றும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT) இணைந்து நடத்திய ஆய்வில்
  - மூன்றாம் வகுப்பு மாணவர்களில் 37% பேர் வரையறுக்கப்பட்ட அடிப்படை எண் திறன்களை கொண்டுள்ளனர். அதாவது எண்களை அடையாளம் காண்பதில் மட்டும்.
  - 11% பேர் அடிப்படை அறிவு மற்றும் திறன்கள் இல்லாமல் உள்ளனர்.
  - 15% பேருக்கு ஆங்கிலத்தில் அடிப்படை திறன்கள் இல்லை.
  - 30% பேர் வரையறுக்கப்பட்ட திறன்களைகொண்டு இருப்பதாக கண்டறியப்பட்டது.
  - மத்திய கல்வித்துறை அமைச்சர் கூறுகையில் குழந்தைகளுக்கு ஆறு முதல் ஏழு வயதுக்குள் 80 முதல் 90% வரை மூளை வளர்ச்சி அடைகிறது.
  - இதனால் தான் ஆரம்ப ஆண்டுகளில் குழந்தைகளுக்கு சிறந்த வளர்ச்சி, மேம்பாடு மற்றும் கற்றலுக்கான வலுவான அடித்தளத்தை அமைப்பதில் கவனம் செலுத்தகிறது.
  - இதன் மூலம் மனித மூலதனம், திறமையான வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது.

## இவற்றைப் பற்றி

- அடிப்படை கற்றல் ஆய்வு முடிவுகள் ஒவ்வொரு பங்கேற்பாளருடனும் ஒருவருக்குக்கொருவர் நேரிடையான நேர்காணல்களின் மூலம் கண்டறியப்பட்டது.
- மாணவர்களின் செயல்திறனைப் பொறுத்து அவர்கள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன.
  - அடிப்படை அறிவும் திறமையும் இல்லாதவர்கள்
  - குறைந்த அறிவையும் திறமையும் கொண்டிருந்தவர்கள்.
  - போதிய அறிவையும் திறமையும் வளர்த்துக் கொண்டவர்கள்.
  - உயர்ந்த அறிவையும் திறமையும் வளர்த்து கொண்டவர்கள்

## சர்வதேச எழுத்தறிவு மற்றும் எண்ணியலுக்கான ஐந்து மடங்கு உத்திகள்



**பாடத்திட்ட மறுசீரமைப்பு:** இளம் மாணவர்களிடையே கற்கும் ஆர்வத்தை வளர்ப்பது

**கல்வியியல் கண்டுபிடிப்புகள்:** புதுமையான வகுப்பறை செயல் முறைகள் மற்றும் கல்வியியல் தலையீடுகளை உருவாக்குதல்

**ஆசிரியர் கல்வித் திட்டங்களின் மறுசீரமைப்பு:** வகுப்பறைகளில் உகந்த சூழலை உருவாக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல்

**மதிப்பீடுகளை மறுபரிசிலனை செய்தல்:** சிறந்த பாடத்திட்டம் கற்பித்தலுக்கான ஒருங்கிணைந்த பகுதியாக மதிப்பீடுகள் பார்க்கப்பட வேண்டும்

**நிர்வாக ஆதரவு:** அனைத்து கல்வி பங்குதாரர்களும் இணைந்து பணியாற்ற வேண்டும்

  - இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகள் நிபுன் பாரத்தின் (புரிதல் மற்றும் எண்களை வாசிப்பதில் நிபுணத்திற்கான தேசிய முன்முயற்சி) அடிப்படையே அமைக்கும்.

## நிபுன்

- இது நிர்மான் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான தேசிய முயற்சியாகும்.
- வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு திற பயிற்சியை அளிக்க நிபுன் முயற்சியை தொடங்கியுள்ளார்.
- தேசிய தீன்தயாள் அந்த்யோதாயா யோஜனா திட்டத்தின் நிர்மான் தொழிலாளர்களின் மேம்படுத்துவதற்கான தேசிய முயற்சி தொடங்கப்பட்டது.
- நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் 1 இலட்சத்திற்கும்அதிகமானகட்டுமான தொழிலாளர்களுக்கு பயிற்சி அளிக்கிறது.
- இது தொழிலாளர்களுக்கு திறன்களை வழங்குவதோடு தூசு நிறைந்த கட்டுமானத்தில் எதிர்கால போக்குகளை பின்பற்ற அவர்களுக்கு உதவும்.
- இது அவர்களின் திறன்களை மேம்படுத்துவதன் அவர்களின் திறன்களை பல்வகைப்படுத்தும்.

## புதிய இந்தியா எழுத்தறிவு திட்டம்

- 2022-2027 நிதியாண்டுக்கான வயது வந்தோருக்கான கல்வியின் புதிய திட்டமான புதிய எழுத்தறிவு திட்டத்திற்கு சமீபத்தில் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- தேசிய கல்வி கொள்கை 2020 மற்றும் பட்ஜெட் அறிவிப்புகள் 2021 -2022 ஆகியவற்றுடன் இணைவதற்கு வயது வந்தோருக்கான கல்வியின் அனைத்து அம்சங்களும் உள்டக்கும் வகையில் 2022-2027 நிதியாண்டுக்கான புதிய இந்தியா எழுத்தறிவுத் திட்டம் உருவாக்கப்பட்டது.
- தேசியக் கல்விக் கொள்கை 2020 வயது வந்தோருக்கு கல்வி மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் ஆகியவற்றை பரிந்துரைத்தது.

## திட்டத்தின் நோக்கங்கள்

- வாழ்க்கை திறன்களை ஊக்குவித்தல்: நிதி எழுத்தறிவு, டிஜிட்டல் கல்வி அறிவு, வணிக திறன்கள், சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு குழந்தைப் பராமரிப்பு மற்றும் குடும்ப நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வியறிவு இல்லாதவர்களோ இந்த திட்டம் உள்ளடக்கும்.
- இது தேசிய தகவல் மையத்துடன் இணைந்து இணையவழி கற்பித்தல்,

கற்றல் மற்றும் மதிப்பீட்டு முறை (OTLAS) பயன்படுத்தி 5 கோடி கற்பவர்களுக்கு உதவி அளிக்கிறது.

## திட்டத்தின் அம்சங்கள்

- வயது வந்தோர் கல்வி என்ற வார்த்தை அனைவருக்கும் கல்வி என்று மாற்றப்பட வேண்டும்.
- இணையதள முறையை பயன்படுத்தி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்த வேண்டும்.
- தன்னார்வலர்களின் பயிற்சி மற்றும் பட்டறைகள் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நேருக்கு நேர் நடைபெற வேண்டும்.
- அனைத்து பொருள்களும் மற்றும் வளங்களும் டிஜிட்டல் முறையில் வழங்கப்பட வேண்டும்.
- வெவ்வேறு வயதினருக்கு வெவ்வேறு உத்திகள் பின்பற்றப்பட வேண்டும்.
- புதுமையான முயற்சிகளை மேற்கொள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நெகிழ்வுத் தன்மை வழங்கப்பட்டது.
- மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் மாவட்ட அளவிலான செயல்திறன் குறியீடு ஒவ்வொரு மாநிலங்களின் செயல்திறனை காண்பிக்கும் வகையில் உருவாக்கப்பட வேண்டும்.
- **எழுத்தறிவின் கீழ் முன்னுரிமை திட்டம் :**
  - 15 முதல் 35 வயதிருக்கு உட்பட்டவர்கள் முதலில் பயிற்சி அளிக்கப்படுவார்கள்.
  - பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
  - பட்டியலினப் பிரிவினர், பழங்குடியினர், சிறுபான்மையினர், விளிம்பு நிலைய மக்கள், நாடோடிகள், கட்டுமானத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 60% சதவீதத்திற்கும் பெண்களின் கல்வி அறிவு விகிதங்களைக் கொண்ட மாவட்டங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**மாணவர்களின் மனநிலையை பிரச்சனைகளை முன்கூட்டியே அடையாளம் காண பள்ளிகளுக்கு, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (NCERT)வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.**

## செய்திகளில்

- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் பள்ளி குழந்தைகளிடையே மனநல கணக்கெடுப்பை தொடர்ந்து "பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரின் மனநல பிரச்சனைகளை முன் கூட்டியே கண்டறிந்து தலையீடுகள்" என்ற தலைப்பில் வழிகாட்டுதல்களை வெளியீட்டுள்ளது.

## பள்ளி செல்லும் குழந்தைகளிடையே மன அழுத்தம் மற்றும் பதட்டத்திற்கான காரணங்கள் என்ன?

- தேர்வு அழுத்தம், பெற்றோரின் எதிர்பார்ப்பு மற்றும் பள்ளி வாழ்க்கை.

## தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் வழங்கிய முக்கிய வழிகாட்டுதல்கள் என்ன?

- பள்ளிகள் மன நல ஆலோசனை குழுவை உருவாக்க வேண்டும். இது பள்ளித் தளாளர் தலைமையில் இருக்க வேண்டும்.
- இந்த குழுவில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
- இது விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு வயது மற்றும் பாலினத்திற்கு ஏற்ற ஒரு பள்ளி மனநலத் திட்டத்தை திட்டமிட்டு செயல்படுத்தும்.
- போதைப் பொருள் பயன்பாடு ஒழுங்கினங்கள் உள்பட மாணவர்களின் நடத்தை முறைகளை முன்கூட்டியே கண்டறிவதற்கான வழிமுறைகள் இருக்க வேண்டும்.
- மேலும் மாணவர்களின் தொடக்க பிரச்சனைகளான மற்றவர்களை சார்ந்து இருத்தல், பழகும் தன்மை, பிரிவினை கவலை போன்றவற்றிற்கான ஆரம்ப அறிகுறிகளை மாணவர்களிடையே கண்டறிவதற்கு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.
- மனசோர்வு நிலைகள் அறிவுசார் இயலாமை மற்றும் கற்றல் குறைபாடுகள் ஆகியவற்றை கண்டறிந்து தீர்வு காண வேண்டும்.
- ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கொடுமைப்படுத்துதல் தொடர்பான விசயங்கள் மற்றும் விழிப்புணர்வுகளை மாணவர்களுக்கு கல்வி கற்பதன் மூலம் அளிக்க வேண்டும்.
- மேலும் பள்ளி மாணவர்களிடையே மனநல பேணுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.
- **மனோதர்பன் :**
  - இந்த முயற்சி மாணவர்களின் உளவியல் சிக்கல்களை தீர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.
  - மாணவர்களின் மனநல மற்றும் நலன்கள் குறித்து அவர்களுக்கு வழங்கும் ஆதரவு மற்றும் ஆலோசனைகள் இதில் அடங்கும்.

- ○ மாணவர்கள் கவுன்சிலிங்கிற்கு கட்டணமில்லா தேசிய உதவி எண் 8448440632.
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் தொடங்கிய இத்திட்டம் ஏப்ரல் 2020ல் தொடங்கப்பட்டது.
- இது கோவிட் தொற்றுக் காலத்தில் மாணவர்களில் மனநல பிரச்சனைகளை தீர்ப்பதற்கான தொடங்கப்பட்டது.
- **சஹியோக் :** குழந்தைகளின் மன அழுத்திற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றன.
- மன நலனைப் பற்றிய தகவல்கள் 1-12 மாணவர்களுக்கு மதியம் 12 மணி இ- வித்தியா என்ற சேனலில் ஒளிப்பரப்பப்படுகிறது.
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி அமைப்பு ஏற்கனவே மன-நலம் பற்றிய முன்கூட்டி மாதிரிகளை வழங்கியுள்ளது.
- மாணவர்கள் மற்றும் ஆசிரியர்-களின் மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு தொடர்பான செயல் பாடுகளை கொண்ட "உணர்ச்சி நல்வாழ்வு மன ஆரோக்கியம்" என்ற தொகுப்பு வழங்கப்பட்டது.

## காவல் வன்முறை

### செய்திகளில்

- காவல்துறைகளில் அடாவடி நடவடிக்கைகளால் காவல் வன்முறை இந்தியாவில் அதிகமான பதிவை கொண்டுள்ளது.
- 2001 மற்றும் 2018 இடைப்பட்ட காலத்தில் 1727 கைதிகள் போலீஸ் காவலில் இறந்துள்ளனர்.
- 26 காவலர்கள் மட்டுமே இத்தகயை மரணங்களுக்கு தண்டனைப் பெற்றுள்ளனர்.
- தமிழ்நாட்டின் சமீபகாலமாக நிகழ்ந்த வரும் காவலில் வைக்கப்பட்ட மரணங்கள், விசாரணையின் போது காவல் துறை பயன்படுத்தும் முறைகளை வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.
- காவல்துறையினருக்கு அறிவியல்-பூர்வமான புலனாய்வு முறைகளை பயிற்சிவிப்பதற்காக அதிக நேரமும் பணமும்செலவுஅளிக்கப்பட்டபோதி-லும் காவல் மரணங்கள் தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கின்றன.

### தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல்

- காவல் வைக்கப்பட்ட மரணங்களின் சிக்கலை கருத்தில் கொண்டு தொழில் நுட்பம் பல குழுக்களால் முன்மொழியப்பட்டது.
- காவல் மரணங்களை தடுக்க பல தொழில் நுட்ப தீர்வுகள் உள்ளன.
- **பயன்படுத்தப்படும் தொழில் நுட்பங்கள்:** இதில் உடல் கேமராக்கள் மற்றும் தானியங்கி பிரில்லேட்டர்கள் அடங்கும்.
- இதன் மூலம் போலீஸ் காவலின் மரணங்கள் தடுக்கப்படும்.
- DDT முறையில் குற்றம் தொடர்பான குற்றவாளிகளை கண்டறிய முடியும்.
- மூளை கைரேகை அமைப்பு குற்றங்களை தீர்ப்பதற்கும், குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்கும், குற்றமற்ற சந்தேக நபர்களை விடுவிக்கவும் காரண-மாக உள்ளது.
- ரோபோட்கள் வெடிகுண்டு கண்டு-பிடிப்பு, பாதுகாப்பு கண்காணிப்பு போன்றவற்றில் அவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.
- பல துறைகள் சந்தேகத்திற்கு இடமானசந்தேகநபர்களுக்குரோபோட்டிக் விசாரணையாளர்களை விரும்பு கின்றனர்.
- நுண்ணறிவு தொழில் நுட்பம், சென்சார் தொழில் நுட்பம் போன்றவை இத்துறையில் சரியான தீர்வை கொண்டு வர முடியும்.

### சவால்கள்

- ரோபோ விசாரணைகள், செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில் நுட்பங்களை பயன்படுத்தும் போது சட்டரீதியாகவும், நெறிமுறையாகவும் சவால்களை கொண்டுள்ளது.
- சில சமயங்களில் தனிநபர்கள் மற்றும் சமூகங்களை குறிவைக்கும் எம் எல் அல்காரிதம்கள் அச்சுறுத்தல் மற்றும் கண்காணிப்புக்கு தவறாக பயன்படுத்தப்படலாம்.
- காவல் துறை மற்றும் சட்ட அமலாக்க நிறுவனங்களுக்கு கிடைக்கும் தொழில் நுட்பம் தொடர்ந்து மேம்பட்டு வரும் அதே வேளையில் காவல் மரணங்கள் தடுக்கமுடியாத பிரச்சனையாக இருக்கின்றன.

### வழிகாட்டுதல்கள்

- சட்டங்கள், தொழில் நுட்பம், பொறுப்பு கூறல் மற்றும் சமூக உறவுகளை உள்ளடக்கிய பலவிதமான தயாரிப்புகளில் மூலோபய உத்திகள் உள்ளன.
- 2003 இந்திய சட்ட ஆணையத்தின் முன் மொழி சாட்சி சட்டத்தை மாற்றியமைத்து சித்ரவதை செய்யப்-பட்ட நபர்கள் இல்லை என்பதற்கான ஆதரத்தை காவல் துறையின் பொறுப்பில் வைப்பது பற்றி பரிசீலிக்க வேண்டும்.
- கே.பாசு மற்றும் மேற்கு வங்க-மாநிலம் (1997) உச்சநீதிமன்றம் பிறப்பித்த கட்டளைகளை மீறும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- இந்த தீர்ப்பானது இந்தியாவில் அதி கரித்து வரும் காவலில் வைக்கப்பட்ட மரணங்கள் தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய ஒரு முக்கிய தீர்ப்பாகும்.
- வன்கொடுமை தடுப்பு மசோதா 2017 மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

# VII. பொது நல அமைப்பின் நலன்சார்ந்த திட்டங்கள் மற்றும் பொது விநியோக அமைப்புகளில் நிலவும் சிக்கல்கள்

## 1. மத்திய அரசாங்கம்

### பிரதான் மந்திரி ஸ்ரீயோஜனா(PM-SHRI)

#### செய்திகளில்

- ஆசிரியர் தினத்தையொட்டி பிரதான் மந்திரி பள்ளிகள் வளர்ச்சி இந்தியா (PM-SHRI) யோஜனா திட்டத்தின் கீழ் இந்தியா முழுவதும் 14,500 பள்ளிகளில் அரசு மேம்படுத்தும் என்று பிரதமர் எடுத்துரைத்தார்.




- இந்த திட்டம் இந்தியா முழுவதும் லட்சகணக்கான மாணவர்களுக்கு பயன் அளிக்கும் என்று தேசிய கல்விக் கொள்கையை செயல் படுத்துவதற்கு ஆதரவு அளிக்கும் என்று பிரதமர் கூறினார்.
- புதிய கல்வி கொள்கை 2020
- தேசிய கல்விக் கொள்கை 2020ல் ஜுலை 2020 அன்று வெளியிடப்பட்டது.
- இந்தக் கொள்கை 1986ல் உள்ள தேசிய கல்விக் கொள்கைக்கு பதிலாக இருக்கும்.
- இது தொடக்கப் பள்ளி முதல் 12 ம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு பள்ளியில் அனைத்து நிலைகளிலும் சர்வதேச அணுகலை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- 3-6 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான ஆரம்ப குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வியை இது உறுதி செய்கிறது.
- இது புதிய பாடத்திட்டம் மற்றும் கல்வியியல் அமைப்பை அறிமுகப்படுத்துகிறது.
  - அடித்தள நிலையில் 5 ஆண்டுகள் (வயது 3- 8 வரை)
  - 3 வருட ஆயத்த நிலை (8 முதல் 11 வயது வரை அல்லது 3 முதல் 5 வகுப்புகளுக்கு)
  - 3 ஆண்டுகள் நடுத்தர நிலை (வயது 11 முதல் 14 வரை அல்லது வகுப்புகள் 6 முதல் 8 வரை)
  - 4 ஆண்டுகள் 2ம் நிலை (வயது 14 முதல் 18 வரை அல்லது வகுப்புகள் 9 முதல் 12 வரை)
- கலை மற்றும் அறிவியலுக்கு இடையில், பாடநெறி மற்றும் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயல் பாடுக்கு இடையில் மற்றும் தொழில் மற்றும் கல்வி நீரோட்டங்களுக்கு இடையில் கடுமையான பிரிவுகள் இல்லை.
- எண்ணியல் மற்றும் எழுத்தறிவுக்கு தேசிய இயக்கத்தை நிறுவுதல்
- பன்மொழி மற்றும் இந்திய மொழிகளில் ஊக்குவித்தல்
- மதிப்பீட்டி வாரியத்தில் சீர்திருத்தத்தை கொண்டு வருதல் ஒரு புதிய தேசிய அளவீட்டு மையத்தை அமைத்தல் அந்த மையத்தின் பெயர் பராக் ( முழுமையான வளர்ச்சிக்கான அறிவின் செயல்திறன் மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் பகுப்பாய்வு)
- சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குழுக்களுக்கு சிறப்பு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- பின்தங்கிய பகுதிகள் மற்றும் பின்தங்கிய குழுக்கள் போன்றவற்றிற்கு தனி பாலின சேர்க்கை நிதி மற்றும் சிறப்பு கல்வி மண்டலங்களை நிறுவுதல்.
- ஆசிரியர்களை ஆள் சேர்ப்பு செய்வதற்கான ஒரு வெளிப்படையான செயல் முறை மற்றும் தகுதி அடிப்படையிலான செயல்திறன் அமர்வு.
- பள்ளி வளாகங்கள் மற்றும் தொகுப்புகள் மூலம் அனைத்து வளங்களும் கிடைப்பதை உறுதி செய்தல்
- மாநில பள்ளி தர நிர்ணய ஆணையத்தை அமைத்தல்.
- பள்ளி மற்றும் உயர் கல்வி அமைப்புக்கான தொழில் கல்வியை ஊக்குவித்தல்.
- உயர்கல்வியில் மொத்த சேர்க்கை வீதத்தை 50% உயர்த்துதல்.
- பல நுழைவு மற்றும் வெளியேற்ற விருப்பங்களை கொண்ட பல்துறை கல்விகளை ஏற்படுத்துதல்.
- கல்வித்துறைக்கான கடன் வங்கி நிறுவுதல் பல்துறை கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகங்களை அமைத்தல்.

- தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையை அமைத்தல் மாணவர்களின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்க திறந்த நிலை கல்வியை அதிகரித்தல்
- அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் மறுசீரமைக்கப்பட்டு மூன்று வகைகளாக பிரிக்கப்படும்.
    - பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் சமமாக கவனம் செலுத்துகின்றன.
    - கற்பித்தல் பல்கலைக்கழகங்கள் முதன்மையாக கற்பித்தலின் கவனம் செலுத்துகின்றன.
    - பட்டம் வழங்கும் கல்லூரிகள் முதன்மையாக பட்டதாரிகள் கற்பித்தலின் கவனம் செலுத்துகின்றனர்.
- பல்வேறு வகையான வழிமுறைகள் உயர் கல்வியின் வணிக மயமாக்கலை தடுத்து நிறுத்தும்.
- அனைத்து கல்வி நிறுவனங்களும் ஒரே மாதிரியான தணிக்கை மற்றும் லாபா நோக்கமற்ற நிறுவனங்களாக வெளிப்படுத்தப்படும்.
- கல்வித்துறையில் பொது முதலீட்டை அதிகரிக்க மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% விரைவில் எட்டுவதற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து செயல்படும்.
- தரமான கல்வியில் ஒட்டுமொத்த கவனம் செலுத்துவதற்கு ஒருங்கிணைப்பை உறுதி செய்வதற்காக மத்திய கல்வி ஆலோசனை வாரியத்தை வலுப்படுத்துதல்.

## இந்தியா கல்வி அமைப்புகளின் சவால்கள்

- இந்தியா தொடக்கநிலையில் உலகளாவிய மாணவர் சேர்க்கையை அடைந்துள்ளது.
- இது ஒரு பெரிய சாதனையாக கருதப்பட்டாலும். மாணவர்களை பள்ளிக்கு அழைத்துச் செல்வது மனித மூலதன உருவாக்கத்தின் ஆரம்பம் மட்டுமே.
- தகுதி வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை காலவாதியான பாடத்திட்டம், வரையறுக்கப்பட்ட பல்கலைக்கழக தொழில் கூட்டாண்மை இந்திய வம்சாவளியை சேர்ந்த விஞ்ஞானிகள் நோபல் பரிசை வென்றுள்ளனர்.
- வெளிநாட்டில் படிக்கும் மற்றும் பணிபுரியும் இந்தியர்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் போது இந்தியாவில் உள்ள ஆராய்ச்சியாளர்களால் முடியாமல் இருப்பதற்கு காரணம் இந்தியாவில் உள்ள கல்வி மற்றும் ஆராய்ச்சியுடன் தொடர்புடையது.
- நிர்வாக அமைப்பு மாற்றியமைப்பு, பயனுள்ள மற்றும் கணக்கிடக்கூடிய நிர்வாக அமைப்புகள் தேவை.
- ஒவ்வொரு மாணவரிடம் இருந்தும் அதிகபட்ச சம்பாதிக்க வேண்டும் என்ற தனியார் கல்லூரிகளின் பேராசை மாணவர்களை மன உளச்சலுக்கு ஆளாக்கின்றார்கள்.
- பள்ளியில் பாதியிலே இடைநிற்பது ஆண்களைவிட பெண்களே அதிக அளவில் இருக்கின்றன.
- பெண்கள் பொதுவாக வீட்டில் தங்கி வீட்டு வேலைகளுக்கு உதவுவது பாலின இடைவெளியின் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- தொற்று நோய்கள் மற்றும் டிஜிட்டல் பிளவு காரணமாக கற்றல் இழப்பு.

## அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்

- 86வது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் 21 ஏ பிரிவின் கீழ் இலவச மற்றும் கட்டாயக்கல்விக்கான அடிப்படை உரிமையை வழங்குகிறது.
- பணக்காரனும், ஏழையும் ஒரே கூரையின் கீழ் கல்வி கற்கும் பொதுவான கல்வி முறையை உள்ளக்கியது.
- ராஷ்ரிய உச்சதர் சிக்ஷா அபியான் தகுதி உள்ள மாநில உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது.
- நாட்டில் உள்ள இந்திய மாணவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த கல்வியை வழங்க கல்வி நிறுவனங்களை மேண்மை (Eminence) கல்வி நிறுவனங்களாக அறிவித்தல்.
- முதன்மையான கல்வி நிறுவனங்களில் உயர்தர உள்கட்டமைப்புக்காக உயர் கல்வி நிதியளிப்பு முகமை உருவாக்கும்.
- உயர் கல்வி நிறுவனங்களை தரவரிசைப்படுத்துவதற்கான தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு ஏற்படுத்துதல்.
- GIAN தொடக்கம் புகழ் பெற்ற கல்வியாளர்கள், தொழில் முனைவோர், விஞ்ஞானிகள் மற்றும் உலகெங்கிலும் உள்ள முதன்மையான நிறுவனங்களின் முன்னாள் நிபுணர்களை இந்தியாவில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களின் கற்பிக்க அழைக்கிறது.
- மாணவர்களின் தேவைகளின் அடிப்படையில் தனிப்பயனாக்கப்பட்ட வழிமுறைகளை வழங்க செயற்க்கை நுண்ணறிவு பயன்படுத்தலாம்.
- டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவது மாணவர்களுக்கு ஸ்மார்ட் போன் மற்றும் மடிக்கணினி கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.
- ஆன்லைன் படிப்புகளுக்கான ஸ்வையம் தளம்.
- ஸ்வையம் பிரபா கல்வி சேனல்கள் 24×7 அடிப்படையில் வழங்குகிறது.
- சோத்கங்கா இந்தியாவில் உள்ள பல்கலைக்கழங்களின் தேசிய களஞ்சியத்தை உருவாக்கவும்

உயர் கல்விக்கான டிஜிட்டல் படிப்பு கருவிகளை வழங்குகிறது.

- சமகிரா சிக்ஷா திட்டம் பள்ளிக்கல்வியில் அனைத்து மட்டங்களிலும் உள்ளடக்கிய சமமான தரமான கல்வியை உறுதிச் செய்கிறது.

## ஆன்லைன் விளையாட்டிற்கான புதிய சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புக்கு அரசுக் குழு அழைப்பு விடுத்துள்ளது

### செய்திகளில்

- சமீபத்தில் அரசுக்குழு தனது அறிக்கையில் இந்தியாவில் ஆன்லைன் விளையாட்டை ஒழுங்குப்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை வழங்கியுள்ளது.

### முக்கியக் கருத்துக்கள்

- இந்தியாவின் ஆன்லைன் விளையாட்டுத் துறை 2022ல் 1.5 பில்லியன் டாலரில் இருந்து 2025ல் 5 பில்லியன் டாலர் எட்டும் என மதிப்பீடப்பட்டுள்ளது.
- அரசுக்குழுவானது இந்திய தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் கீழ் ஒரு புதிய ஒழுங்குமுறை ஆணையத்தை உருவாக்க அழைப்பு விடுக்கிறது.
- அதில் எந்த ஆன்லைன் விளையாட்டுகள் திறமை விளையாட்டுக்களாக தகுதி பெறுகின்றன என்பதை தீர்மானிக்கவும், இணக்கங்கள் மற்றும் அமாலக்கத்தை பெறும் என வற்புறுத்துகின்றன.
- இது டிஜிட்டல் இந்தியா சட்டத்தை முன்மொழிந்தது.
- தடைசெய்யப்பட்ட விளையாட்டுகளுக்கு எதிரான அரசாங்கத்தின் தண்டனை விதிகள் மற்றும் தடுப்பு அதிகாரங்களுடன் ஒழுங்கு முறை நெகிழ்வுத் தன்மையை வழங்குதல்.

**STREAMLINING ONLINE GAMING**

- Regulatory body to introduce rules to block prohibited formats
- Panel to take a stricter stance on gambling websites
- Panel wants 'de-addiction measures' for user safety
- Proposals aimed at ironing out regulatory uncertainty for sector



- புதிய சட்டக் கட்டமைப்பு இலவச மற்றும்பணம்செலுத்திவிளையாடும் விளையாட்டுகளுக்கு பொருந்தும்.
- வாய்ப்பு அடிப்படையிலான விளையாட்டுக்களை அரசாங்கம் தீங்கு விளைவிப்பதாக வகைப்படுத்தலாம் இருப்பினும் சூதாட்டத்தை அனுமதிக்கலாமா என்பது குறித்த மாநிலங்களை அனுமதிக்கும்.

### ஆன்லைன் விளையாட்டுகள்

- ஆன்லைன் விளையாட்டுகள் மூன்று வகையான உள்ளன.
  - **இ-விளையாட்டு :** இந்த வீடியோ விளையாட்டுகள் 1990களில் தனிப்பட்ட முறையிலோ அல்லது வீடியோ விளையாட்டுக்களில் பணியகங்களிலோ விளையாடப்பட்டன.
  - ஆனால் இப்போது தொழில் முறை விளையாட்டு வீரர்களுக்கு தனித்தனியாக குழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் ஆன் லைனில் விளையாடப்படுகின்றன.
  - **கற்பனையான விளையாட்டுகள் :** இந்த விளையாட்டுகளில் வீரர்கள் வெவ்வேறு அணிகளிலிருந்து உண்மையான விளையாட்டு வீரர்களின் குழுவை தேர்ந்தெடுத்து நிஜவாழ்க்கையை எவ்வளவு சிறப்பாக செயல் படுகிறார்கள் என்பதை பொறுத்து புள்ளிகளை பெறுவார்கள்.
  - **ஆன்லைன் கேஷ்வல் விளையாட்டுகள் :** இது திறன் அடிப்படையிலானதாக இருக்கலாம். இதன் முடிவு பெரும்பாலும் மன அல்லது உடல் திறன் அல்லது வாய்ப்பின் அடிப்படையில் பாதிக்கப்படுகிறது.
  - பகடை உருட்டுதல் போன்ற சில சீரற்ற செயல்பாடுகளால் முடிவு தீர்மானிக்கப்படுகிறது.

### விளையாட்டுத்திறன் மற்றும் வாய்ப்புகளுக்கு இடையே ஆன வேறுபாடு

- ஒரு திறன் விளையாட்டு என்பது ஒரு வீரரின் மன அல்லது உடல் நிலை நிபுணத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகிறது.
- திறன் விளையாட்டில் தங்கள் திறமைகளை ஆராய வீரர்களுக்கு சுதந்திரத்தை வழங்குகிறது.
- வாய்ப்பு விளையாட்டு எந்த வகையிலும் ஒரு சீரற்ற காரணி மூலம் தீர்மானிக்கப்படுகிறது.
- வாய்ப்பு விளையாட்டுகளில் திறமையின் பயன்பாடு உள்ளது அதிக அளவிலான வாய்ப்பு வெற்றியை தீர்மானிக்கிறது.

### டாக்டர் லட்சுமணன் மற்றும் தமிழ்நாடு மாநிலம் (1996)

- குதிரைப்பந்தயம் என்பது சூதாட்டம் அல்லது விளையாட்டு என்று கருதப்படக்கூடாது மாறாக வெறும்

திறமையுள்ள விளையாட்டு என்றும் இதில் வெறும் திறமை என்ற வெளிப்பாடு கணிசமான அளவு அல்லது திறமையின் பரவலை குறிக்கும் என்று உச்சநீதிமன்றம் கூறியது.

### குர்திப்சிங்சச்சார் மற்றும் இந்தியா

- கற்பனை 11 விளையாட்டு வெற்றியானது சிறந்த அறிவு, தீர்ப்பு மற்றும் கவனத்தின் அடிப்படையில் தனது திறமையை பயன்படுத்தும் பயனரின் திறனைப் பொருத்தது என்று மும்பை உயர் நீதிமன்றம் கூறியது.


### சட்டக்குழு பரிந்துரை

- அரசிலயமைப்பின் பிரிவு 249 அல்லது 252ஐ அதன் அதிகாரங்களை பயன்படுத்தி சூதாட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு பாராளுமன்றம் சட்டமியற்றுதல்.
- இந்த நடவடிக்கைகளின் தீய விளைவுகளிலிருந்து பொது மக்களைபாதுகாக்கமற்றும்மேம்பட்ட வெளிப்படைத்தன்மை, மாநில மேற்பார்வை போன்றவற்றை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும்.
- விளையாடும்நபர்கள் (ம) ஆபரேட்டர்கள்ஆகியோரின்தகவல்கள்ஆதார் அட்டை மற்றும் பான்கார்டுடன் இணைக்கப்படவேண்டும்.
- விளையாட்டு வீரர்களுக்கும் மற்றும் செயல்பாட்டார்களுக்கும் இடையே செய்யப்படும் பரிவர்த்தனைகள் கட்டாயமாக பணமற்ற பரிவர்த்தனைகளாக இருக்க வேண்டும்.

## மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் சமூக தணிக்கை தாமதங்கள்

### செய்திகளில்

- சமீபத்தில் கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம் சமூகத்தணிக்கை காலண்டர் மற்றும் தணிக்கைகள் என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை இந்த நிதியாண்டில் திட்டமிட்ட தணிக்கைகளில் 14.29% மட்டுமே நிறைவடைந்துள்ளது.




- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் சமூக தணிக்கையை மாநில அரசு மேற்கொள்ள தவறினால் பணத்தை பிடித்தம் செய்வது உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சகம் தெரிவித்துள்ளது.

### பிரச்சனை என்ன?

- இந்த சமூக தணிக்கை பிரிவுகளின் படி நிர்வாக செலவுகள் மத்திய அரசால் ஈடுபடு செய்யப்படுகின்றன.
- மேலும் நிதிப் பரிமாற்றத்தில் பண வசதி இல்லாததனால் இத்தகைய சமூக தணிக்கை முடங்குகிறது.
- இதன் விளைவாக கேரளா, ஹிமாச்சாலப்பிரதேசம், சட்டிஸ்கர் ஆகியவை மாநிலங்களின் தணிக்கையாளர்களின் சம்பளம் வழங்குவதில் மூன்று மடங்கு தாமதம் ஏற்பட்டுள்ளது.
- உதாரணமாக இந்த நிதியாண்டின் முதல் தொகையான 1.30 கோடி செப்டம்பர் முதல் வாரத்தில் தான் இமாச்சலப் பிரதேசத்திற்கு செலுத்தப்பட்டது.
- தணிக்கைத்துறையின் பல முறை கோரிக்கைகளுக்கு பிறகு ஒரு வருடத்திற்கு மேலாக அதன் தணிக்கையாளர்களுக்கு தொகை செலுத்தப்படவில்லை.
- தணிக்கையாளர்களின் ஊதியத்தை மாநிலங்களால் செலுத்த முடியாததால் குறிப்பிடத்தக்க தேய்வு விகிதம் உள்ளது.

### சமூக தணிக்கை என்றால் என்ன?

- சமூக தணிக்கை என்பது உத்யோக பூர்வ பதிவுகளை மறு ஆய்வு செய்வது மற்றும் மாநில அறிக்கை செலவினங்கள் செலவழித்த உண்மையான தொகையை பிரதிபலிக்கிறது என்பதே தீர்மானிக்கும் ஒரு செயல்முறையாகும்.
- சமூக தணிக்கையானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு சட்டத்தின் கீழ் இருந்தது.
- ஆனால் தணிக்கை அளவுகோல்கள் டிசம்பர் 19, 2016 வரை வெளியிடப்படவில்லை.

### முக்கியத்துவம்

- இது செயல்பாட்டின் பொறுப்புணர்வை உருவாக்குகிறது.
- தணிக்கையானது இந்த திட்டத்தினால் உருவாக்கப்பட்ட உள்கட்டமைப்பின் தரத்தை ஆய்வு செய்தல், ஊதிய முறைகேடுகளை தேடுதல் மற்றும் நடைமுறையில் ஏதேனும் முறைகேடுகளை கண்டறிதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- தணிக்கைகள் இந்த திட்டத்தின் உள்ள நிர்வாகத்தின் ஊழலை தடுக்க அவை நிறுவப்பட்டுள்ளன.
- மாநிலங்கள் மத்திய அரசிமிடருந்து நிதியுதவி பெறவேண்டும்.

### சவால்கள்

- மாநிலங்கள் 2020-2021ல் தங்களுக்கு தகுதியான பட்ஜெட்டில் பாதிக்கு குறைவாக பெற்றுள்ளன என்று சமீபத்தில் இலாப நோக்கமற்ற நிறுவனத்தின் அறிக்கையின் படி வெளியிட்டது.

- 2021ம் ஆண்டில் மகாராஷ்டிரா ஜார்காண்ட், உத்தரகாண்ட், பீகார், சட்டீஸ்கர், கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு பணத்தை விநியோகிகத்தது.
- பீகார் ஒரு வித்தியாசமான உதாரணம் ஏனெனில் சமூக தணிக்கைப் பிரிவு ஏப்ரல் 27, 2020 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எந்த பணத்தையும் பெறவில்லை.
- மேலும் இந்த மாநிலங்கள் தங்களின் முழு நிதி ஒதுக்கீட்டையும் பெறவில்லை.
- 2020-2021 நிதியாண்டில் இந்த திட்டத்தின் மூலம் 6,000 கோடி ரூபாய்க்கு மேல் கூட்டுச் செலவு செய்த போதிலும் பீகார், மகாராஷ்டிரா, சட்டிஸ்கர் போன்ற மாநிலங்களில் சமூக தணிக்கை-களை மேற்கொள்ள நிதிபெற-வில்லை.
- சமூக தணிக்கைகள் தொடர்ந்து செயல்பட ஜார்கண்ட், நாகலாந்து தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் கர்நாடகாவில் உள்ள சமூக தணிக்கை பிரிவுகள் அந்தந்த மாநில அரசுகளிடமிருந்து கடன் பெற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- இது சமூக தணிக்கைகளின் தனி உரிமையை பாதிக்கும் ஊதியத்தை ஒத்திவைப்பது ஊழலுக்கு வழிவகுக்கும்.

## காரணம்

- ஊரக வளர்ச்சி அமைச்சகம் கூறியது போல் பொது நிதி மேலாண்மை அமைப்பை மறுசீரமைப்பதால் நிதி வழங்குவது தாமதம் ஏற்படுகிறது.

## இந்த திட்டம் பற்றி

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் முன்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் என்று அழைக்கப்பட்டது.
- இச்சட்டம் செப்டம்பர் 7, 2005 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- இச்சட்டம் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் சமூக பாது-காப்பிற்காகவும் உருவாக்கப்பட்டது.
- இச்சட்டம் அனைத்து மாவட்டங்-களையும் உள்ளடக்கும் வகையில் உருவாக்கப்பட்டது. (100% நகர்ப்புற மக்கள் தொகை கொண்ட மாவட்டங்களை தவிர)
- இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு கிராமப்புற குடும்பத்திற்கும் ஒரு நிதியாண்டில் குறைந்த பட்ச 100நாட்களுக்கு உத்ரவாதமான ஊதிய வேலைவாய்ப்பை வழங்குவதாகும்.

## முக்கிய நோக்கங்கள்

- இத்திட்டத்தின் மூலம் வேலை-வாய்ப்பை உருவாக்கி உற்பத்தியை உருவாக்குதல்.
- ஏழைகளின் வாழ்வாதார ஆதரத்தை வலுப்படுத்துதல்.
- சமூக உள்ளடக்கத்தை மேம்படுத்துதல் பஞ்சாயத்து அமைப்புகளை வலுப்படுத்துதல்.

## இலக்குகள்

- **சமூக பாதுகாப்பு :** இந்தியாவில் உள்ள கிராமப்புறங்களில் மிகவும் நலிவடைந்த மக்களுக்கான சமூக பாதுகாப்பு மற்றும் ஊதிய வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை உத்திரவாதம் செய்தல்.
- நீடித்த சொத்துக்களை உருவாக்குதல் இதன் மூலம் கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதார பாதுகாப்பை மேம்படுத்துதல்.
- **இயற்கை வளங்களின் புத்து-யிர் :** கிராமப்புறங்களில் இயற்கை வளங்களை புதுப்பித்தல்
- **தாங்கக் கூடிய உள்கட்டமைப்பு :** மீள்தன்மை மற்றும் உற்பத்தித்-திறன் கொண்ட சொத்து தளத்தை உருவாக்குதல்.
- **பலவீனமானவர்களுக்கு அதிகாரம் அளித்தல் :** உரிமைகள் அடிப்படையிலான சட்டங்களை பயன்படுத்துவதன் மூலம் சமூகத்தில் பின்தங்கியவர்கள் உரிய அதிகாரம் பெற்றுள்ளனர்.
- **பங்கேற்பு திட்டமிடல்:** பல வறுமை எதிர்ப்பு மற்றும் வாழ்வாதார திட்டங்கள் பரவலாக்கப்பட்ட பங்கேற்பு திட்டத்தை வலுப்படுத்துகிறது.
- **அடிமட்ட அளவில் ஜனநாயகத்தை வலுப்படுத்துதல்:** பஞ்சாயத்துராஜ் நிறுவனங்களை வலுப்படுத்துவதன் மூலம் அடித்தளத்தில் ஜன-நாயகத்தை ஆளப்படுத்துதல்.

## சவால்கள்

- **குறைந்த ஊதியம் :** தற்போது 21 முக்கிய மாநிலங்களில் ஏறத்தாழ 17 மாநிலங்களில் சம்பள விகிதங்கள் விவசாயத்திற்கான மாநில குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைவாக உள்ளன.
- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் தரவுகளின் படி 2017ல் பொது விவசாய தொழிலாளர்களின் சராசரி தினசரி ஊதியம் ஆண்களுக்கு 264.05 ரூபாயும் பெண்களுக்கு 205.32ரூபாய் ஆகும்.
- மிகக் குறைந்த ஊதிய விகிதங்களின் விளைவாக இத்திட்டத்தில் வேலை செய்வது தொழிலாளர்கள் ஆர்வத்தை இழந்துள்ளனர்.
- மேலும் ஒப்பந்ததரர்கள் மற்றும் இடைத்தரகர்கள் உள்கட்டுபாட்டை அனுமதிக்கின்றனர்.
- **போதிய நிதி:** பணப்-பற்றாக்குறையால் மாநில அரசுகளால் இத்திட்டத்தின் வேலைக்கான தேவையை பூர்த்தி செய்ய முடியவில்லை.
- **கொடுப்பனது தாமதங்கள் :** இத்-திட்டத்தின் தேவையான ஊதியத்தை

15 நாட்களுக்குள் வழங்குதில் மாநிலங்கள் முக்கிய தோல்வி அடைந்துள்ளன.

- மேலும் தொழிலாளர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்கப்படாவிட்டால் அவர்களுக்கு வெகுமதி வழங்கப்படுவதில்லை.
- இதன் காரணமாக தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் வேலை செய்வதின் அதன் ஆர்வத்தை இழக்க தொடங்கி உள்ளனர்.
- இத்திட்டத்தின் ஊதியம் நிலுவையில் இருப்பது பற்றி உச்சநீதிமன்றம் 2016 தீர்ப்பில் மாநில அரசு செய்த தெளிவான அரசியலமைப்பு மீறல் என்றும் பிச்சைக்காரர்களின் நவீன வடிவம் என்றும் தீர்ப்பில் கூறியது.
- **பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்தின் பயனற்ற செயல்பாடு :** கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு தன்னாட்சி இல்லாததால் இந்த சட்டத்தை திறம்பட மற்றும் திறமையாக செயல் படுத்த முடியவில்லை.
- **முடிக்கப்படாத பணிகள் :** இத்திட்டத்தின் திட்டங்கள் முடிவடைவதில் தாமதம் ஏற்படுகிறது மற்றும் திட்ட ஆய்வுகள் ஒழுங்கற்றவையாக உள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் வேலை தரம் மற்றும் சொத்து மேம்பாட்டிலும் சிக்கல் உள்ளது.
- **வேலை அட்டைகளின் மோசடி :** மோசடியான வேலை அட்டைகள், போலிப் பெயர்கள், விடுபட்ட பதிவுகள் மற்றும் தாமதங்கள் ஆகியவை உள்ளன.
- வேலை செய்யாதவர்கள், நாட்டில் இல்லாதவர்கள் மற்றும் சிவில் நிறுவனங்களின் பணிபுரியும் ஊழியர்களின் கணக்குகளுக்கு சட்ட விரோதமாக பணம் செலுத்தப்படுகிறது.

## முன்னோக்கிய பாதை

- **வேலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்:** தேவை எதுவாக இருந்தாலும் வேலை கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- அரசு திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும்.
- மதிப்புக்கூட்டல் மற்றும் சமூக சொத்துக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.
- **திட்டத்தின் செயல் திறனை அதிகரித்தல் :** பல்வேறு அரசு துறைகளுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு பணி ஒதுக்கீடு மற்றும் அளவீடும் செயல்முறை ஆகியவை தேவை.
- சமீபத்திய ஆண்டுகளில் மிகவும் வெற்றிகரமான திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.
- மேலும் இது கிராமப்புற ஏழைகளுக்கு உதவிச் செய்கிறது.
- அரசாங்க அதிகாரிகள் மூலோபயத்தை செயல்படுத்த முன் முயற்சி எடுக்க வேண்டும் மாறாக அவற்றை தடுக்க கூடாது.
- ஆண்களுக்கு பெண்களுக்கும் இடையே உள்ள ஊதிய வேறுபாடு குறைக்கப்படவேண்டும்.
- சராசரியாக ஆண்களை விட பெண்கள் 22.24% குறைவாக சம்பாதிக்கின்றனர்.

# அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல்

## செய்திகளில்


- சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இதில் 34 புதிய மருந்துகளை சேர்ந்துள்ளது. மற்றும் முந்தைய பட்டியலிருந்து 26 பழைய மருந்துகளை நீக்கியுள்ளது.
- இந்த பட்யடிலில் மொத்தம் 384 மருந்துகள் 27 சிகிச்சை வகைகளின் கீழ் இடம்பெற்றுள்ளன.
- இந்த திருத்தப்பட்ட பட்டியல் 7 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு வெளிவந்துள்ளன.

## அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் என்றால் என்ன?

- அத்தியாவசிய மருந்துகள் சுகாதார பாதுகாப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் மருந்துகளாகும்.
- மேலும் அத்தியாவசிய மருந்துகள் செயல்திறன் பாதுகாப்பு தரம் மற்றும் சிகிச்சையின் மொத்த செலவு ஆகியவற்றின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும் தேவைகளை பூர்த்தி செய்யும்.
- இது மூன்று முக்கிய அம்சங்கள் (விலை, பாதுகாப்பு மற்றும் செயல்திறன்) ஆகியவற்றை கருத்தில் கொண்டு மருந்துகளின் பகுத்தறிவு பயன்பாட்டை ஊக்குவிப்பது ஆகும்.
- அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் முதல் முதலில் 1996ல் உருவாக்கப்பட்டது. 2003, 2011 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டது.
- அத்தியாவசிய மருந்துகளின் தேசிய பட்டியல் மருந்துகள் நிலையின் அடிப்படையில் மூன்று வகையாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை முதன்மையான சுகாதார நிலையமைப்பு, இரண்டாம், மூன்றாம் சுகாதார நிலையமைப்பாகும்.
- இந்த பட்டியலின் கீழ் இடம்பெறும் மருந்துகள் திட்டமிடப்பட்ட மருந்துகள் என்று அழைக்கப்படுகின்றன.
- தேசிய மருந்தக விலை அலுவலர் மொத்த விலை குறியீட்டு பண வீக்கத்தின் அடிப்படையில் இந்த

## DRUGS LIST GETS A REJIG

- **Four major anti-cancer drugs** – bendamustine hydrochloride (leukemia), irinotecan HCl trihydrate (pancreatic cancer), lenalidomide (multiple myeloma), and leuprolide acetate (prostate and uterine cancer) – added to NLEM 2022
- **Insulin glargine and anti-diabetic drug** teneligliptin also included
- **Patented drugs dolutegravir** (anti-HIV), daclatasvir (Hepatitis C), and bedaquiline and delamanid (anti-TB) also part of the list
- **Common gastrointestinal** drug ranitidine removed
- **Disinfectants like bleaching powder** also taken off the list



மருந்துகளின் விலைகளை நிர்ணயிக்கிறார்.

- இந்த மருந்துகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் அதிகபட்சமாக 10% உயர்த்த அனுமதிக்கப்படுகிறது.
- தற்போது திட்டமிடப்பட்ட மருந்துகள் உள்நாட்டு மருந்து சந்தையில் 17 -18% ஆகும்.
- மேலும் அம்மருந்துகளின் மதிப்பு ரூபாய் 1.6டிரில்லியன் மதிப்பாகும்.

### இப்பட்டியலின் முக்கியத்துவம் என்ன?

- இந்த பட்டியல் சுகாதார துறையில் மலிவு விலையில் தரமான மருந்துகளின் அணுகலை உறுதி செய்கிறது.
- இது செலவு குறைந்த தரமான மருந்துகளுக்கு ஊக்கமளிக்கும் மற்றும் மக்களின் சுகதார செலவினங்களை குறைக்கும்.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட தேசிய சுகாதார கணக்கு மதிப்பீடுகள் 2018-2019ல் குடும்பங்கள் சுகாதார பாதுகாப்புக்காக அதிக தொகையை செலுத்து வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டியது.
- மேலும் இது இந்தியார்களை வறுமையில் தள்ளுகிறது.
- உதாரணமாக உத்திரப்பிரதேசத்தில் மாநிலத்தின் மொத்த சுகாதார செலவில் 71.3% சுகாதார செலவாகும்.
- இந்தியாவை பொறுத்தவரை இந்த எண்ணிக்கை 48.2% ஆகும்.

## பிரதான் மந்திரி டி.பி.முக்த்பாரத் அபியான்

### செய்திகளில்

- சமீபத்தில் இந்திய குடியரசுத்தலைவர் பிரதான் மந்திரி டி.பி.முக்த்பாரத் அபியானை தொடங்கினார்.

### இவற்றைப் பற்றி

- காச நோய் சிகிச்சையில் உள்ளவர்களுக்கு ஆதரவு அளிப்பதற்கும், காச நோய் ஒழிப்பு தேசத்தை நோக்கிய நாட்டின் முன்னேற்றத்தை விரைவுப்படுத்தவதற்கும் அனைத்து பங்குதரர்களையும் ஒருங்கிணைக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.
- இது 2025ம் ஆண்டிற்குள் காசநோயை நாட்டிலிருந்து அகற்றுவது நோக்கமாக கொண்டுள்ளது.
- **இத்திட்டத்தின் கூறுகள் :** நிக்சாய் மித்ரா முன் முயற்சி ஒரு முக்கிய தொகுப்பை உருவாக்குகிறது மேலும் இது அபியானுடன் இணைந்து தொடங்கப்பட்டது.
- இந்த தளமானது காசநோய் சிகிச்சையில் இருப்பவர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குகிறது.
- இது மூன்று வகையான ஆதரவை வழங்குகின்றது.
  - ஊட்டச்சத்து
  - கூடுதல் நோய் அறிதல்
  - தொழில் ஆதரவு
- **கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கான தத்து எடுப்பு ஏற்பாடு:**
  - இத்திட்டத்தின் கீழ் தனிநபர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் 1 முதல் 3 ஆண்டுகளுக்கு காசநோயாளிகளை தத்து எடுக்கலாம். தத்து எடுத்து அவர்களுக்கு ஆதரவு வழங்கலாம்.
  - இந்த முயற்சியில் சேர அவர்கள் தளத்தில் பதிவு செய்ய வேண்டும். இது காசநோயாளிகளின் பட்டியலை கொண்டுள்ளது.
  - மேலும் இது முதன்மை சுகாதார மையங்கள், தொகுதிகள் மற்றும்

**காசநோயாளிகளுக்கான மாதாந்திர உணவுக் கூடைகள்**

| | வயது வந்தோருக்கு | சிறுவர்களுக்கு |
|---|---|---|
| தானியங்கள்/ தினை | 3 கி.கி | 2கி.கி |
| பருப்பு வகை | 1.5 கி.கி | 1 கி.கி |
| காய்கறிசமையல் எண்ணெய் | 250கி.கி | 150கி.கி |
| பால் பவுடர்/பால்/நிலக்கடலை | 1கி.கி/ 6 லிட்டர்கள்/1கி.கி | 750கி.கி/ 3.5லிட்டர்கள்/ 0.7கி.கி |
| முட்டை (விரும்பினால்) | 30 | 30 |

SURESH

மாவட்டங்கள் மாநிலங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளது.

○ ஆதரவு வழங்குபவர்கள் அவர்களின் திறனைப் பொறுத்து எண்ணிக்கையை தேர்ந்தெடுக்கலாம்.

**முக்கியத்துவம்:**

- இத்திட்டத்தின் ஆதரவு அளிப்பவர்கள் காசநோயாளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு தொழில் பயிற்சி வழங்கலாம்.
- மேலும் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலனோர் குடும்ப தலைவர்கள் ஆவார்.
- இதன் மூலம் அவர்களுக்கு நிதி நெருக்கடி ஏற்படுகிறது.
- ஏனவே அவற்றை குறைப்பதற்கு நிதியுதவி செய்யலாம்.
- ஒரு குடும்ப உறுப்பினர்கள் ஒரு தொழிலில் பயிற்சி பெற்றால் அவர்கள் தொடர்ந்து சம்பாதிக்க முடியும்.

**காசநோய்**

- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 20-25 லட்சம் காசநோய்கள் கண்டறியப்பட்டு கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர் இறக்கின்றனர்.
- தற்போது 13.5 இலட்சம் பேர் காசநோய் சிகிச்சையில் உள்ளனர்.
- அவர்களில் 9.26 இலட்சம் பேர் ஏற்கனவே இந்த முயற்சியின் கீழ் தத்தெடுக்க ஒப்புதல் அளித்துள்ளனர்.
- **நோய் ஏற்படுவதற்கான காரணம் :** இதுமைக்கோ பாக்டீரியா டியூபர் குளோசிஸ் பாக்டீரியா மூலம் ஏற்படுகிறது.
- இது பெரும்பாலும் நுரையீரலை பாதிக்கிறது.
- **பரவும் முறை :** நுரையீரல் காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இருமல் தும்மல் அல்லது துப்பும் போது காச நோய் காற்றில் பரவுகிறது.
- ஒருவரின் தடைக்காப்பு மண்டலம் பலவீனமான இருக்கும்போது காசநோய் பரவுகிறது.
- **அறிகுறிகள் :**
  - ○ நீடித்த இருமல், மார்பு வலி, பலவீனம் சோர்வு எடையிழப்பு, காய்ச்சல் போன்றவை.
  - ○ பெரும்பாலும் இந்த அறிகுறிகள் தொடக்கத்தில் மிதமான இருக்கும்.
  - ○ இதனால் கவனிப்பு பெருவதில் தாமதம் ஏற்படுவதோடு மற்றவர்களுக்கு தொற்று பரவும் அபாயமும் அதிகரிக்கும்.
  - ○ பெரும்பாலான மக்கள் உடலில் காசநோய் பாக்டீரியாவை கொண்டுள்ளனர்.
  - ○ ஊட்டச்சத்து குறைவாக இருக்கும்போது நோய் எதிர்ப்பு அமைப்பு பலவீனமாக இருக்கும் போது இந்த பாக்டீரியா செயல் படுத்தப்படுகிறது.
- **நோய் கண்டறிதல்:**
  - ○ சந்தேகத்திற்குரிய வகையில் நோய் இருக்கும்போது சளி மாதிரி சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது.
  - ○ திசுக்களின் மாதிரிகள் சில சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகிறது.
  - ○ உலக சுகாதார அமைப்பு ஆரம்ப சோதனைகளாக விரைவான மூலக்கூறு கண்டறியும் சோதனைகளை பரிந்துரைக்கிறது.
  - ○ மார்பு எக்ஸ்ரே போன்ற முறைகளிலும் கண்டறியப்படுகிறது.
- **சிகிச்சை:**
  - ○ காசநோய் தொற்று மற்றும் நோய் இரண்டும் நுண்ணுயிர் எதிர்ப்புகளை பயன்படுத்தி குணப்படுத்தும்.
  - ○ இது நாலு நுண்ணுயிர் எதிர்ப்புகளின் ஆறுமாத நிலையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
  - ○ காசநோய் நிலையான மருந்துகளுக்கு சிகிச்சை அளிக்காது.
  - ○ நோய்த்தொற்று தொடக்கத்தில் காசநோய் தடுப்பு சிகிச்சை நோயின் தொடக்கத்தை நிறுத்தலாம்.
  - ○ இந்த சிகிச்சையானது குறுகிய காலத்திற்கு ஒரே மருந்துகளை பயன்படுத்துகிறது.
  - ○ பொதுவான மருந்துகள் ரிபாம்பிசின் மற்றும் ஐசோனியாசிட் ஆகும்.
  - ○ மேலும் பெடாகுலின் மூலமும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

**சவால்கள்**

- **மருந்து எதிர்ப்பு:** காசநோய் மருந்துகளை பல மாதத்திற்கு தொடர்ந்து கொடுப்பது சவாலாக உள்ளது. ஆனால் அவ்வாறு செய்யாவிடில் நோய் மருந்து எதிர்ப்பு வடிவங்களுக்கு வழிவகுக்கும்
- **சரியான நோய் அறிதல் :** கிராமப்புறங்களில் உள்ள பலருக்கு வயிறு, மூளை அல்லது எலும்பில் கூடுதல் நுரையீரல் காசநோய் உள்ளது.
- இது முறையாக கண்டறியப்படுவதில் லை. எனவே நோயின் முடிவில் நோய் அறிதல் நிகழ்கிறது.
- நுரையீரல் இல்லாத காசநோய் குறித்து கொள்கை உருவாக்கம், திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் புற சுகாதார மையங்களில் சேர்க்கப்படவில்லை.

**எடுக்கப்பட்ட முயற்சிகள்**

- **உலகளாவிய முயற்சிகள்:**
  - ○ ஒரு உலகளாவிய காசநோய் தடுப்பு திட்டம் மற்றும் அறிக்கை,

1+1 முன் முயற்சி மற்றும் காசநோய்க்கான பல்துறை பொறுப்புணர்வு கட்டமைப்பு உலக சுகாதார அமைப்பால் உருவாக்கப்பட்டது.

- நிலையான மேம்பட்ட இலக்குகள் 2030ன் கீழ் காசநோய் தொற்றை முடிவுக்கு கொண்டு வருதல்.
- காசநோயை முடிவுக்கு கொண்டு வர மாஸ்கோ பிரகடனம்.

- **இந்தியா முயற்சிகள் :**
  - உலகளாவிய இலக்கான 2030விட ஐந்து ஆண்டுகளுக்கு முன்னதாக 2025 ஆண்டில் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது.
  - தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் 2025ம் ஆண்டு அளவில் காசநோயை முடிவுக்கு கொண்டு வருவதற்காக தேசிய உக்தி திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
  - சர்வதேச நோய் தடுப்பு திட்டம் தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் திருத்தப்பட்ட தேசிய காசநோய் கட்டுப்பாட்டுத் திட்டம்.
  - நிக்சாய் தளம் மற்றும் காச-நோய் மாதிரி போக்குவரத்து வலைப்பின்னல்.
  - காசநோய்க்கான தேசிய பாலின பொறுப்புணர்வு அணுகு-முறைக்களை கட்டமைத்தல்.

### வழிகாட்டுதல்கள்

- இந்த திட்டம் மக்களுக்கு தேவையான ஊட்டச்சத்து ஆதரவை வழங்கும் மேலும் இந்த சமூகத்தை இணைக்கும்.
- சுகாதாரத் துறை அமைப்பு வலுப்படுத்தப்பட வேண்டும்.
- மேலும் நுரையீரல் அல்லா காசநோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் அதிகமாக இருக்க வேண்டும்.
- மேலும் மருந்தை பெற வரும் நபர்கள் பற்றி மருந்தகங்கள் தகவல் களை தெரிவிக்க வேண்டும்.
- இதன் மூலம் தகவல்களை தவறவிடப்படவிடாது.
- சரியான நேரத்தில் சிகிச்சை அளித்து மருந்து எதிர்ப்பை நிறுத்த முடியும்.

## தேசிய சுகாதார கணக்கு மதிப்பீடுகள்(2018-2019)

### செய்திகளில்

- சமீபத்தில் நிதி ஆயோக் குடும்ப நல அமைச்சகத்தின் செயலாளர் முன்னிலையில் 2018 -2019க்கான இந்தியாவுக்கான சுகாதார கணக்கு மதிப்பீட்டுகளை வெளியிட்டது.

### உடல் நலத்திற்கு செய்யும் செலவு பற்றிய மதிப்பீடுகள்

- 2018-2019 ம் ஆண்டின் மத்திய அரசின் மருத்துவ செலவினம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முந்தைய ஆண்டின் 1.35 % -1.28% மாக குறைந்துள்ளது.
- 2018-2019க்கான தேசிய சுகாதார கணக்குகள் மதிப்பீட்டின் படி நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அரசின் சுகாதார செலவினங்களின் பங்கில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை காட்டுகிறது.
- 2013-2014ல் 1.15% இருந்தது. 2018-2019ல் 2.8% அதி கரித்துள்ளது.
- கூடுதலாக மொத்த சுகாதார செலவினத்தின் அரசாங்கம் சுகாதார செலவினத்தின் பங்கும் காலப்போக்கில் அதிகரித்துள்ளது.
- 2018-2019ல் அரசாங்கம் செலவினங்களின் பங்கு 2013-2014ல் இருந்த 28.6 சதவீதம் பங்கைவிட 40.6% அதிகமாக இருந்தது.
- தேசிய சுகாதார கணக்கு மதிப்பீடுகள் படி தற்போதைய சுகாதார செலவினம் 23.2% (2013-2014) இருந்து 34.5%(2018-2019) அதி கரித்துள்ளது.
- தனி நபர் மருத்துவ செலவு 74% அதிகரித்துள்ளது.(ரூ.1042-1815)
- தற்போதைய அரசின் சுகாதார செலவில் 80% அதிகமான சுகாதார செலவுகள் முதன்மை ம ற்றும் இரண்டாம் நிலை சுகாதார செலவாகும்.
- தனியார் துறையை பொருத்தவரை மூன்றாம் நிலை பராமரிப்பு பங்கு அதிகரித்துள்ளது.
- மேலும் தனியார் துறையில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பராமரிப்பு வீழ்ச்சி போக்கை காட்டுகிறது.(82%லிருந்து 70%)

### தேசிய சுகாதார கணக்கு மதிப்பீட்டின் படி பாக்கெட்டிலிருந்து செலவு செய்வது

- பாக்கெட்டுலிருந்து செலவு செய்வது மொத்த சுகாதார செலவினத்தின் 64.2%லிருந்து 48.2%கணிசமாக 16% புள்ளிகள் குறைந்துள்ளது.
- தற்போதைய சுகாதார செலவினத்தில் பாக்கெட்டுலிருந்து செலவு செய்வது தற்போது குறைந்துள்ளது. (69.1% லிருந்து 53.2%)
- தனிநபர் பாக்கெட்டிலிருந்து செலவு செய்வது குறைந்துள்ளது. (ரூபாய் 2366லிருந்து 2155 ஆகும்).

### தேசிய சுகாதார கணக்கு மதிப்பீட்டின் மற்ற கண்டுபிடிப்புகள்

- சமூக பாதுகாப்பில் கவனம் செலுத்துவதன் விளைவாக மொத்த சுகாதார செலவினத்தின் சுகாதாரத்தி ற்கான செலவினம் 6% லிருந்து 9.6% அதிகரித்துள்ளது.
- 2013-2014 அரசாங்கத்தால் நிதி அளிக்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டு செலவு 167% அதிகரித்துள்ளது.

SURESH' IAS ACADEMY

### NHA மதிப்பீடுகள் சுகாதாரத் துறையின் போக்குகள்

| குறிகாட்டுகள் | 2017-18 (கோடிகளில்) | 2018-19 (கோடிகளில்) | % மாற்றம் |
|---|---|---|---|
| மொத்த உள் நாட்டு உற்பத்தி | 1,70,90,042 | 1,88,99,668 | 11% |
| பொது அரசு செலவு | 45,15,946 | 50,40,707 | 12% |
| சுகாதார மொத்த செலவு | 5,66,644 | 5,96,440 | 5% |
| அரசாங்க சுகாதார செலவு | 2,31,104 | 2,42,219 | 5% |

### தேசிய சுகாதார கணக்கீடு மதிப்பீடு

- இந்தியாவின் 2018 -2019க்கான தேசிய சுகாதார கணக்கு மதிப்பீட்டின் 6வது பதிப்பாகும்.
- சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கட்டமைப்பை பயன்படுத்தி தேசிய சுகாதார கணக்கீட்டு மதிப்பீடு மதிப்பீட்டாளர்களால் தயாரிக்கப்படுகிறது.
- இது உலக சுகாதார நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சுகாதார கணக்குகளின் தரநிலை 2011 படி தயாரிக்கப்பட்டது.
- இந்த மதிப்பீடுகள் சர்வதேச அளவில் ஒப்பீடக்கூடியவை மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு சுகாதார நிதிக்குறியீட்டுகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க கொள்கை வகுப்பாளர்களுக்கு உதவுகிறது.

## 2. மாநில அரசு

### கிராமப்புறத்தில் கொல்லைப்புற பகுதியில் பன்றி வளர்ப்பு திட்டம்

- மேகலாய முதல்வர் தேசிய கால் நடை இயக்கத்தின் கீழ் கிராமப்புற கொல்லைப்புற பன்றி வளர்ப்பு திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- இதன் முக்கிய நோக்கம் இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் நிலையான வாழ்வாதாரத்தை ஈட்டுவதை உறுதி செய்ய 6000 குடும்பங்களுக்கு 15.18கோடி ரூபாய் செலவில் நன்கு மேம்படுத்தப்பட்ட உயர்திறன் கொண்ட பன்றிகளை அரசாங்கம் விநியோகம் செய்யும்.
- இது இத்திட்டத்தின் முதல்கட்டமாகும்
- இரண்டாம் கட்ட திட்டத்தில் மேலும் 25கோடி செலவிடப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழக்கமான வருமானத்தை வழங்குவதற்காக பன்றி வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக நான்கு பன்று குட்டிகள் (3 பெண் 1 ஆண் பன்றிகுட்டி) விவசாயிகளுக்கு வழங்கப்படும்.
- பன்றி இறைச்சியில் மாநிலத்தில் தன்னிறைவு பெறச் செய்ய அரசாங்கம் மிகப்பெரிய பன்றி வளர்ப்பு திட்டங்களில் ஒன்றாக மேகலாயா பன்றி வளர்ப்பு இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது.
- இத்திட்டத்தின் கீழ் பன்றி வளர்ப்பதற்கு 0% வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படுகிறது.

### ஒவ்வொரு வீட்டிலும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் தயாரிக்கப்பட்ட தூய நீர்

#### செய்திகளில்

- ஒவ்வொரு வீட்டிற்கும் தூய நீர் வழங்கும் சிறப்பைப் பெற்ற முதல் கிராமமாக உத்திரப்பிரதேசத்தின் பர்தௌல் ஆகும்.
- இவற்றைப்பற்றி
- இது சுமார் 7000 மக்களை கொண்டுள்ளது.
- ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான பாதுகாப்பான தண்ணீர் வழங்கப்படுகிறது.
- ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தமான நீரை வழங்குவதற்கு ஆதர்ஷ் கிராமப் பஞ்சாயத்து திட்டத்தின் மூலம் எதிர் சவ்வூடு பரவல் முறை அமைக்கப்பட்டது.
- இப்போது வரை கிராமத்தில் நான்கு எதிர் சவ்வூடு பரவல் ஆலைகள் நிறுவப்பட்டன. மேலும் பல ஆலைகளை நிறுவுவதற்கான வேலைப்பாடுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன.
- இந்த ஆலைகள் பிரதான விநியோக தொட்டிகளுடன் இணைக்கப்பட்டன.
- இது ஒவ்வொரு வீட்டிற்கும் சுத்தாமன தண்ணீரை வழங்க உதவுகிறது.
- மேலும் இத்தகைய அமைப்புகள் மூலம் நீர் மூலம் பரவும் நோய்கள் குறையும்.

### புதுமை பெண் திட்டம்

#### செய்திகளில்

- தமிழக முதல்வர் சென்னையில் முகலூர் ராமாமிர்தம் அம்மாள்

உயர் கல்வி உறுதித் திட்டம், புதுமை பெண் என்ற தலைப்பில் புதுத்திட்டம் தொடங்கப்பட்டது.




## இத்திட்டம் பற்றி

- புதுமைப்பெண் திட்டத்தில் மாநில அரசுப் பள்ளியில் 5ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை படித்த பெண் மாணவர்களுக்கு அவர்களது பட்டப்படிப்பு அல்லது டிப்ளமோ முடிக்கும் வரை மாத உதவியாக ரூபாய் 1000 வழங்கப்படும்.
- இத்திட்டத்தின் ஒவ்வொரு ஆண்டும் 6 இலட்சம் பெண்கள் பயன்பெறுவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- மேலும் இத்திட்டத்தை செயல்படுத்த பட்ஜெட்டில் ரூபாய் 698 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் திருமண உதவித் தொகைத் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மாள் உயர் கல்வி உறுத்திட்டமாக மாற்றப்-பட்டு தற்போது புதுமைப்பெண் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது.
- பொருளாதாரத்தில் நலிவடைந்த குடும்பங்களின் நலனுக்காகவே, நிதி நெருக்கடியால் தங்கள் பெண் குழந்தைகளை கல்லூரிக்கு அனுப்பமால் இருக்கும் பெண்குழந்தைகளுக்காக இத்-திட்டம் கொண்டுவரப்பட்டது.

## தக்சைல் பள்ளிகள்

### செய்திகளில்

- தமிழக முதல்வர் டெல்லி மாதிரி பள்ளி திட்டத்தின் கீழ் தக்சைல் பள்ளிகளை தொடங்கி வைத்தார்.

### மாடல் பள்ளித் திட்டம் மற்றும் சிறப்பு பள்ளிகள்

- இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தின் 26 சிறப்பு பள்ளிகளும் 15 மாதிரிப் பள்ளிகளும் முதல்கட்டமாக சேர்க்கப்பட்டுள்ளன.
- இந்த பள்ளிகளுக்கு தக்சைல் பள்ளிகள் என்றும் மாதிரிப் பள்ளிகள் என்றும் பெயர் சுட்டப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 6 – 12 வரை படிக்கும் அனைத்து மாணவிகளுக்கும் அவர்களது பட்டப்படிப்பை தடையின்றி முடிக்கும் வகையில் அவர்களது வங்கி கணக்கில் நேரடியாக ரூ.1000 செலுத்தப்படும்.

### தமிழ்நாட்டில் கல்வி

- இந்தியாவில் கல்வி அறிவு அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்.
- 2011ம் ஆண்டின் மாநிலத்தின் கல்வியறிவு விகிதம் 80.33% உள்ளது.
- இது தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது.
- இந்திய மாநிலங்களில் மொத்த பதிவு விகிதத்தில் தமிழ்நாடு முதன்மையான இடத்தில் உள்ளது.
- ஆரம்ப மற்றும் மேல்நிலைக்கல்வியில் கிட்டத்தட்ட 100% மொத்த பதிவு விகிதம் உள்ளது.
- 2019 -2020க்கான மத்திய கல்வி அமைச்சகத்தின் செயல்திறன் தரவரிசை குறியீட்டின் படி அணுகல் சமத்துவம் உள்கட்டமைப்பு மற்றும் நிர்வாக செயல்முறைகள் போன்ற கல்வியின் முக்கிய அளவுகோல்களின் முதல் 5 சாதனையாளர்களில் தமிழ்நாடு உள்ளது.
- இந்த தரவரிசையில் மாநிலம் ஆயிரத்துக்கு 906 மதிப்பெண்களை பெற்றுள்ளது.
- இது கடந்த ஆண்டு 793 மதிப்பெண்களை விட அதிகமாகும்.
- தமிழகத்தின் மற்ற மாவட்டங்களை விட சிறந்த கற்பித்தல் முடிகளைய அளிக்கும் மாவட்டங்களாக மாநிலத்தில் தர்மபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

## பள்ளிகளில் காலை உணவு திட்டம்

### செய்திகளில்

- சமீபத்தில் மதுரை சிம்மக்கல்லில் உள்ள மதுரை மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் தமிழக முதல்வர் காலை உணவு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இத்திட்டம் 1-5 ம்வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டமாகும்.

### இத்திட்டம் பற்றி

- இத்திட்டம் தமிழக அரசுப்பள்ளிகளில் ஏழை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த உதவுகிறது.
- ஏழைப் பள்ளி மாணவர்களுக்கு ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சனையை சமாளிக்கவும் மாணவர்கள் பள்ளியிலிருந்து இடைநீற்றலை தவிர்க்கவும் உதவுகிறது.
- முதற்கட்டமாக சில நகராட்சிகள் மாநகராட்சிகள் தொலைதூர கிராமங்களில் இத்திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.
- அரசு பள்ளிகளில் 1 -5 வகுப்பில் படிக்கும் அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்.
- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை திறம்பட செயல்படும் வகையில் உணவுத் தயாரிக்கும் ஒருங்கிணைந்த சமையல் அறைகள் பள்ளிகளுடன் இணைந்து அமைக்-கப்படும்.

SURESH'

- பள்ளிகள் சமையல் அறைகளை ஆய்வு செய்வதற்கான திட்ட செயலாக்க வழிகாட்டுதல்கள் வெளியிடப்படும்.

## பயனாளிகளின் எண்ணிக்கை

- தற்போதைய நிலவரப்படி 43,190 சத்துணவு மையங்களில் கிட்டத்தட்ட 46.7 இலட்சம் பயனாளிகள் உள்ளனர்.
- தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் சிறப்பு பள்ளிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3500 ஆகும்.
- 2022-2023க்கான மாநில பட்ஜெட்டில் சத்தான உணவு திட்டத்திற்காக சுமார் 2077 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- இவற்றைத் தவிர ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்டம் மற்றும் சத்தான உணவுத் திட்டம் ஆகிய-வற்றின் கூட்டு செயல்பாட்டின் விளைவாக இரண்டு முதல் ஐந்து வயது வரை உள்ள சுமார் 15.8 இலட்சம் குழந்தைகள் சத்தான உணவைப் பெறுகின்றனர்.

## மதிய உணவுத்திட்டம்

- மதிய உணவுத்திட்டம் என்பது இந்திய அரசின் பள்ளி உணவுத் திட்டமாகும்.
- இது நாடு முழுவதும் பள்ளி வயது குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த கையொப்பம் இடப்பட்டுள்ளது.
- குழந்தைகளின் உரிமை மாநாட்டின் குழந்தைகளுக்கு போதுமான சத்தான உணவை வழங்குவதற்கு இந்தியா உறுதி அளித்துள்ளது.
- மதிய உணவுத் திட்டம் தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம் 2013ன் கீழ் உள்ளது.
- ஆரம்ப மற்றும் மேல்நிலை வகுப்புகளில் உள்ள குழந்தை-களுக்கு வேலைநாட்களில் இலவச மதிய உணவை இந்த திட்டம் வழங்குகிறது.
- இந்த திட்டத்தில் அரசுப் பள்ளிகள் அரசு உதவிப் பள்ளிகள் உள்ளாட்சி கல்வி நிலையங்கள், கல்வி உத்தரவாதத் திட்டம் மற்றும் மாற்று புதுமையான கல்வி மையங்கள், சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் உள்ள மதரசா மற்றும் மக்தப்புக்கள், தொழிலாளர் அமைச்சகத்தால் நடத்தப்படும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டப்பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள மாணவர்களுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தில் உணவு அளிக்கப்படுகிறது.

## மதிய உணவுத் திட்டம் எப்படி வந்தது?

- சுதந்திரத்திற்கு பிறகு 1960-களில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- பள்ளி குழந்தைகளுக்கு உணவு வழங்கும் மத்திய அரசின் திட்டம் 1995ல் கொண்டு வரப்பட்டது.
- இருப்பினும் பெரும்பாலான மாநிலங்கள் ரேஷன் வழங்குவதோடு தங்களது பணியை மட்டுப்படுத்தி கொண்டன.

## பள்ளிக் கல்வியில் மதிய உணவுத்-திட்டத்தின் தாக்கம்

- 1982ல் மதிய உணவுத் திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட பதிப்பிற்கு பிறகு தொடக்கப்பள்ளியின் பதிவு விகிதம் 10% மாக முந்தைய ஆண்டை விட அதிகரித்தது.
- சிறுவர்களின் சேர்க்கை அதிகப்-பரிப்பு 12% மாக இருந்தது. சிறுமிகளின் சேர்க்கை 7% மாக இருந்தது.
- மேலும் 1982ல் வருகையின் எண்ணிக்கை முந்தைய ஆண்டின் எண்ணிக்கையை விட 33% அதிகரித்துள்ளது.

## எதில் கவனம் செலுத்த வேண்டும்

- இரத்த சோகை என்பது தமிழ்நாட்டில் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே ஒரு பெரிய உடல் நல பிரச்சனையாக இருப்பதாக தேசிய குடும்ப சுகாதார ஆய்வின் அறிக்கையில் கூறுகிறது.
- 2015-2016 ல் குழந்தைகளின் இரத்த சோகை பாதிப்பு 50% இருந்தது.
- அது 2019-2021ல் இரத்த சோகை பாதிப்பு 57% மாக அதிகரித்துள்ளது.
- பள்ளிக் கல்வி, பொதுச்சுகாதாரம் சமூக நலன், மகளிர் மேம்பாட்டு துறைகளின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் பல சுகாதார வழக்குகளுக்கு தீர்வு காணமுடியும்.
- நிபுணர்களின் ஆலோசனைப்படி சத்தான உணவு திட்டத்தை செயல் படுத்தும் பொறுப்பில் உள்ளவர்கள் குறிப்பிட்ட பிரச்சனைகளை கொண்ட குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தின் கூறுகளை மேம்படுத்தலாம்.
- சமீபத்திய காலை உணவுத் திட்டம் இத்திசையின் ஒரு படியாகும்.

# முதல் சினிமா சுற்றுலாக் கொள்கை (2022-2027)

## செய்திகளில்

- குஜராத் முதல்வர் முதல் சினிமா சுற்றுலாக் கொள்கையை

தொடங்கிவைத்தார்.

- இந்த புதிய கொள்கையானது குஜராத்திற்கு சாத்தியமான வாய்ப்புகளை உருவாக்குவதுடன் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தும்.
- குஜராத்தில் கட்ச் பகுதியில் வெள்ளைப் பாலைவனம், சிவராஜ்பூர் கடற்கரை போன்ற பல இடங்கள் உள்ளன.
- மேலும் இந்த இடங்களை படப்பிடிப்பிற்கு ஏற்ற தளங்களாக மாற்றுவதற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

### முக்கியக் கருத்துகள்

- திரைப்பட தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீடு செய்வதற்கு ரூபாய் 1022கோடி மதிப்பிலான நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்-திட்டப்பட்டுள்ளன.
- குஜராத்தின் ஸ்டுடியோ உள்கட்டமைப்பு, நடிப்பு பள்ளிகள் சில முதலீட்டாளர்களால் சுற்றுலாத்துறையுடன் கையெழுத்திடப்பட்டுள்ளன.
- இந்த புதிய கொள்கை குஜராத்தில் திரைப்பட தயாரிப்புக்கான சாத்தியமான வாய்ப்புகளை உருவாக்குவதோடு உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும்.

## உணவுப் பாதுகாப்பின் வரைபடப் புத்தகம்

### செய்திகள்

- பீகார் மற்றும் ஒடிசாவிற்கு அடுத்தப்படியாக ஜார்கண்ட் உணவுப் பாதுகாப்பு வரைபட புத்தகத்தை வெளியீட்டது.
- பீகார் மற்றும் ஒடிசா 2018ம் ஆண்டில் உணவுப் பாதுகாப்பு வரைபட புத்தகத்தை வெளியிட்டது.

### முக்கியக் கருத்துகள்

- இந்த வரைபடப் புத்தகம் மாநிலத்தின் உணவு பாதுகாப்பு நிலையை வரைபடாமாக்குவதற்கான முயற்சி-யாகும்.
- மும்பையில் உள்ள இந்திரா காந்தி ஆராய்ச்சி மேம்பாட்டின் நிறுவனத்தின் ஆராய்ச்சி முயற்சியில் ஒரு பகுதியாக டெல்லியை தளமாக கொண்ட மனித மேம்பாட்டு நிறுவனம் இதை




தயாரித்துள்ளது.
- கொள்கைகளை தெரிவிப்பதில் இந்த ஆவணம் முக்கிய பங்கு வகிக்கும்.
- இந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் மாநிலத்தில் பல மாவட்டங்களில் வறட்சி நிலவுகிறது.
- மாநிலத்தின் குறைந்த அளவிலான நீர்ப் பாசனம் கிடைப்பது உணவுப் பாதுகாப்புக்கு பிரச்சனையாக உள்ளது.
- 75% மக்கள் பசியில் உள்ளனர்.

### முக்கியப் பரிந்துரைகள்

- உணவு வரைபடத்தில் 24 மாவட்டங்-களில் 14 மாவட்டங்கள் மற்றும் சந்தால் பர்க்கானா பகுதியில் உணவு பாதுகாப்பு இன்மை காணப்படுகிறது.
- ஒட்டுமொத்த உணவு பாதுகாப்பு அடிப்படையில் சிறப்பு முக்கியத்து-வம் கொடுக்கப்பட வேண்டும் என்று உணவு வரைப்பட புத்தகம் பரிந்துரைக்கிறது.
- அதிக பலபரிமாண வறுமையுள்ள மாவட்டங்கள் ஒட்டு மொத்த உணவுப் பாதுகாப்பின் அடிப்படையில் மிகவும் பாதுகாப்பற்ற மாவட்டங்கள் மற்றும் மிகவும் மோசமான உணவு பாதுகாப்பு விளைவுகளை கொண்டு இருப்பதாக உணவு வரைபட புத்தகம் தெரிவிக்கிறது.
- உணவு தானிய உற்பத்தியில் மாநிலத்தில் அதிக உறுதியற்ற தன்மை இருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பயிர் பல்வகை படுத்தல் ஜார்கண்ட்டில் மிகவும் குறைவாக உள்ளது. முக்கியமாக ஜார்கண்ட்டில் ஒரு பயிர் பரப்பு ஆகும்.
- பயிர் தீவிரம் மற்றும் ஒட்டு-மொத்த உணவு பாதுகாப்பு மூலம் விவசாய உற்பத்தியை நிலைப்படுத்த தேவையான கொள்கையில் சிறந்த நீர்ப்பாசன வசதி உள்ளது.
- மழைப்பொழிவு மாறுபட்டை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மற்றும் முன்னுரிமை மாவட்டங்களுக்கு மழை அறுவடைச் செய்ய பரிந்துரைக்கிறது.
- அணைக்கட்டுதல் குளங்களை புனரமைத்தல் போன்றவை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தின் ஒருங்கிணைந்த நீர்நிலைகளின் கீழ் பெரியளவில் தொடங்கப்படலாம்.
- பயிர்களை பல்வகைப்படுத்துதல், உணவுக்கான அணுகலை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பை விரிவுபடுத்துதல் போன்ற-வற்றையும் இது பரிந்துரைக்கிறது.

- பண்ணை அல்லாத துறைகளில் வாய்ப்புகள், மரம் அல்லாத வனப்பொருள்களை பதப்படுத்துவதில் கிராமப்புற மக்களின் அதிக ஈடுபாடு, பொதுவிநியோக முறைகளின் மூலம் தினை விநியோகம், மகாத்மாகாந்திதேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் வேலையாட்களுக்கு பணிகளை விரிவுப்படுத்துதல்.

## பட்டியலிடப்பட்ட ஜாதியினர், பட்டியலிடப்பட்ட பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான இட ஒதுக்கீடு

### செய்திகளில்

- ஜார்கண்ட் மாநிலம் மாநில அமைச்சரவை கூட்டத்தில் எஸ். சி, எஸ்.டி, பிற்படுத்தப்பட்ட பிரிவினர், இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு, பொருளாதார நலிவடைந்த பிரிவினருக்கு 77% இடஒதுக்கீடு உள்ளூர் கொள்கை முன்மொழிவு அதாவது 1932ல் உள்ள காதியான் அடிப்படையில் முடிவு செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

### முக்கிய கருத்துகள்

- மாநில அரசு, அரசு பணியாளர் துணைநிலைச் சட்டம் 2001ல் திருத்தங்களை கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- இதன் மூலம் 77% இடஒதுக்கீடு கிடைக்கும்.
- இடஒதுக்கீடு மசோதா அங்கீகரிக்கப்பட்டது
- 1932ல் காதியானின் அடிப்படையில் உள்ளூர் கொள்கையை முடிவு செய்வதற்கும், பிற்படுத்தப்பட்டவருக்கு 27% இடஒதுக்கீடு உட்பட பல்வேறு வகுப்பினருக்கு மொத்த 77% அரசு வேலைகளில் இடஒதுக்கீடு செய்வதற்கும் தனி மசோதாக்கள் மாநில சட்டசபையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- இரண்டு மசோதாக்களையும் பேரவையில் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்கு பிறகு மத்திய அரசுக்கு அனுப்பவும் அமைச்சரவை முடிவு செய்தது.
- இந்த இரண்டு சட்டங்களையும் அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்குமாறு மத்தியரசிடம் கோருவதற்கு மாநில அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கும் போது எந்த நீதிமன்றத்திலும் நிதிப் புனராய்வு செய்ய முடியாது.
- உள்ளூர் கொள்கையின் திருத்தம் கொண்டுவரப்படும் புதிய மசோதா ஜார்கண்டின் உள்ளூர் நபர்களின் வரைமுறை மற்றும் அதன் விளைவாக சமூக கலாச்சார பிற வரையறைகளை நீட்டிக்க "மசோதா 2022" அறிமுகப்படுத்தப்படும்.
- இந்த மசோதா மூலம் உள்ளூர் மக்கள் அமைச்சரவை முடிவின் படி சேர்க்கப்படுவார்கள்.
- இப்போது மாநிலத்தின் 1932ம் ஆண்டு காதியனில் பெயரிடப்பட்டவர்கள் மட்டுமே உள்ளூர் வாசிகளாக கருதப்படுவார்கள்.
- சொந்தமாக நிலம் அல்லது சொத்து இல்லாதவர்கள் 1932க்கு முன் மாநிலத்தில் வசிப்பவர்கள் என்பதற்கான ஆதாரத்தை அவர்களின் கிராம சபையில் பெற வேண்டும்.
- முன்மொழியப்பட்ட வேலை இடஒதுக்கீட்டுக் கொள்கையில் மாநில வேலையில் பட்டியலிடப்பட்ட ஜாதியினருக்கு 10% லிருந்து 12% மாக, பழங்குடியினருக்கு 26% லிருந்து 28% மாக, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 14% லிருந்து 27%மாகவும் உயர்த்துவதற்கு ஏற்பாடு இருக்கும்.
- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 15% மற்றும் பிற்படுத்தப்பட்ட 12% இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- அரசாங்கத்தின் முடிவை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் மொத்த இடஒதுக்கீடு 77% இருக்கும்.
- மேலும் இந்த மசோதா மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தின் பின் தங்கிய பொதுப்பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

Make Progress.. Not Excuses..!
SURESH' IAS ACADEMY
TUTICORIN | TIRUNELVELI
RAMANATHAPURAM | MADURAI

# VII. புவியியல் மற்றும் புவியியல் குறியீடுகள்

## லா நினோ

### செய்திகளில்

- இந்திய வானிலை ஆய்வுத்துறை வெளியிட்ட சமீபத்திய தரவுகளின் படி செப்டம்பர் 2020 முதல் பூமத்திய ரேகையில் பசிபிக் பெருங்கடலில் நிலவும் லா நினோ நிலமைகள் மூன்றாம் ஆண்டில் நுழைந்துள்ளன.
- இது அசாதாரண நிகழ்வு ஆகும். 1950 களிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த லா நினோ நிகழ்வுகள் 6 முறை மட்டுமே நடந்துள்ளது.
- தொடரும் லா நினோ நிகழ்வுகள் இந்திய பருவமழைக்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.
- இந்த ஆண்டு இந்தியாவில் சராசரியாக பருவ மழை பெய்தற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.




### லா நினோ என்றால் என்ன?

- கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலில் நிகழ்வுவாகும்.
- இது உலகளாவிய வானிலை நிலையை பாதிக்கிறது.
- லா நினோ என்றால் ஸ்பானிஷ் மொழியில் சிறு பெண்ணாகும்.
- இது ஒரு குளிர் நிகழ்வாகும்.
- லாநினோவில் மத்திய மற்றும் பூமத்தியரேகை பசிபிக் பெருங்கடலில் கடல் மேற்பரப்பு இயல்பை விட குளிராக இருக்கும்.

### லாநினோ எதனால் ஏற்படுகிறது?

- கிழக்கு பசிபிக் பெருவியன் கடற்கரையிலிருந்து குளிர்ந்த பெருங்கடல் நீரோட்டம் (ஹம்போல்டு நீரோட்டம்) தோன்றுவதால் இது ஏற்படுகிறது.
- இதன் காரணமாக கிழக்கு பூமத்திய ரேகை பசிபிக் பகுதியில் வலுவான உயர் அழுத்தமும், அதே நேரத்தில் மேற்கு பசிபிக், ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவில் குறைந்த காற்றழுத்தம் நிலவுகிறது.

### லாநினோ விளைவாக பின்வரும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன

- ஈக்வாடார் மற்றும் பெருவில் வறட்சி.
- ஆஸ்திரேலியாவில் கடும் வெள்ளம்
- மேற்கு பசிபிக், இந்திய பெருங்கடல் மற்றும் ஆப்பிரிக்காவின் சோமாலியா கடற்கரையில் அதிக வெப்ப நிலை.
- இந்தியாவில் லா நினோ நிகழ்வுகளின் போது நல்ல பருவ-மழை கிடைக்கிறது.
- இது சாதாரண பருவமழை விகிதத்தைவிட இந்த காலங்களில் அதிகமான மழைப்பொழிகிறது.
- எல்நினோ மற்றும் லாநினோ இரண்டும் நான்கு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்கின்றன.
- இது பொதுவாக ஒன்பது முதல் 12 மாதங்கள் வரை நீடிக்கும்.
- லாநினோவை விட எல்நினோ மிகவும் பொதுவானதாகும்.

### எல்நினோவிலிருந்து லாநினோ எவ்வாறு வேறுபடுகிறது?


- எல்நினோவிற்கு ஸ்பானிஷ் மொழியில் லிட்டில் பாய் என்று பொருள் படும்.
- கிழக்கு பசிபிக் பெருங்கடலில் மேற்பரப்பில் அசாதாரண வெதுப்பான நீர் காணப்படுகிறது.
- எல்நினோ, வெப்பமடைந்த பகுதி (Warm Phase), தெற்கு அலைவு ஒன்றாக எல்நினோ தெற்கு அலைவு என அழைக்கப்படுகிறது.
- லாநினோ மற்றும் எல்நினோ ஆகியவை உலக வானிலை வெப்பநிலை, காற்று மற்றும் மழைப் பொழிவை பாதிக்கும் பெரிய அளவிலான கடல் நிகழ்வாகும்.
- இது வறட்சி வெள்ளம், வெப்பம் மற்றும் குளிர் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகளை தூண்டும் திறன் கொண்டவை.

### லாநினோவால் இந்தியாவின் தாக்கம்

- லாநினோ இந்திய கால-நிலையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- லாநினோ இந்திய பருவமழையுடன் இணைந்து இந்தியாவில் சராசரி ஆண்டு மழைப்பொழிவை விட அதிக மழைப்பொழிவை பொழிகிறது.
- இதன் மூலம் எல்நினோ காலங்களில் காணப்படும் வறட்சியை தவிர்க்கிறது.

### எதிர்மறை தாக்கம்

- தொடர்ச்சியான லாநினோ நிகழ்வு இந்தியாவின் ஜெட் காற்றுடன் இணைந்து நீண்ட காலத்திற்கு இந்தியாவில வெப்ப அலைகளை ஏற்படுத்தலாம்.




- இது மார்ச் 2022ல் வெப்பமான மாதமாக இருந்ததற்கு காரணமாகும்.
- இது வங்காள விரிகுடாவில் அதிக அளவு புயல்களை உருவாக்குகிறது.
- வங்காள விரிகுடா மற்றும் அட்லாண்டிக் பெருங்கடலில் அடிக்கடி மற்றும் தீவிரமான சூறாவளிகளுக்கு பெயர் பெற்றது.

## சர்வதேச தினை ஆண்டு 2023

### செய்திகளில்

- ஐக்கிய நாடுகளின் பொதுசபை 2023ம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக அறிவித்தது.

### பின்னணி

- 2018ல் இந்திய அரசாங்கம் 2018ம் தேசிய தினை ஆண்டாக கொண்டாட முடிவு செய்தது.
- விவசாய அமைச்சகம் மற்றும் இந்திய தினை நிறுவனம் சர்வதேச தினை ஆண்டை கொண்டாடுவதற்கான முனை நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஐக்கிய சபையில் 2023ம் ஆண்டை சர்வதேச தினையாண்டாக கொண்டாடுவதற்கு இந்தியா முன்மொழிந்தது.
- 72 நாடுகளின் ஆதரவுடன் தினை ஊக்குவிக்கும் இந்தியாவின் முயற்சி அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் ஐக்கிய நாடுகளின் பொதுசபை 2023ம் ஆண்டை சர்வதேச தினை ஆண்டாக அறிவித்தது.
- உணவு மற்றும் விவசாயத்திற்கான சர்வதேச அமைப்பு 2023ம் ஆண்டிற்கான நோக்கமாக உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்

### தினைப்பற்றிய தரவுகள்

- உலகளவில் தினை உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- உலகளாவிய உற்பத்தியில் 20% ஆசியா அளவில் 80% உற்பத்தி செய்கிறது.
- தினை என்பது சிறிய விதையுள்ள புற்களை வகைப்படுத்துவதாகும்.
- இது பெரும்பாலும் ஊட்டச்சத்து தானியங்கள் அல்லது உலர் தானியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இவற்றுக்கு உதாரணமாக முத்து தினை, ராகி, சிறு தினை போன்றவை ஆகும்.

### தினைகளின் உலகளாவிய விநியோகம்

- இந்தியா நைஜீரியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் உலகளவில் தினை உற்பத்தியாளர்களாக உள்ளனர்.
- மேலும் உலகளாவிய உற்பத்தியில் 55% அதிகமான பங்கை கொண்டுள்ளது.
- பல ஆண்டுகளாக இந்தியா தினை உற்பத்தியில் முன்னணியில் இருந்தது. இருப்பினும் சமீபத்திய ஆண்டுகளில் தினை உற்பத்தி ஆப்பிரிக்காவில் வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது.

குறித்த தினைப் பற்றிய விழிப்புணர்வை அதிகரிப்பதாகும்.

- மேலும் அதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு முதலீடுகளை ஊக்குவிப்பதாகும்.
- சர்வதேச ஆண்டாக கொண்டாடப்படுவதற்கான முக்கிய நோக்கம், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தில் தினையில் பங்களிப்பு பற்றிய விழிப்புணர்வை உயர்த்துவதாகும்.
- இது நிலையான தினை உற்பத்தியை உருவாக்குவதில் பங்குதாரர்களை ஊக்குவிக்கிறது.
- மேலும் தினைகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு விரிவாக்கத்தில் முதலீடு செய்தல்.

## தினைகளின் முக்கியத்தும்

- **குறுகிய காலம் மற்றும் வளமற்ற மண்:** தினைகளை பயிர் செய்வதற்கு அதிக நீர் தேவைப்படாது மற்றும் குறுகிய காலத்தில் தயாரிகிவிடும்.
- தினைகள் வளர உயர்தர மண் தேவையில்லை எனவே வளர்ந்து வரும் மக்கள் தொகையின் தேவைகளை எளிதில் பூர்த்தி செய்யும்
- **ஊட்டச்சத்து உணவு :** தினைகள் அதிக ஊட்டச்சத்துகளை கொண்டுள்ளது.
- உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலை அறிக்கையின் படி தினைகளின் அதிகளவு நார்ச்சத்து உள்ளது.
  - 7-12% புரதம்
  - 2-5% கொழுப்பு
  - 65-75% கார்போஹைட்ரேட்
  - 15-20% நார்ச்சத்து
- **ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்குதல் :** இவற்றில் உள்ள வைட்டமின்கள், தாதுக்கள், உணவு நார்ச்சத்து போன்ற ஊட்டச்சத்துக்களின் அதிகளவு காரணமாக இது ஊட்டச்சத்து குறைபாட்டை போக்குவதற்கான சிறந்த தானியங்களாகும்.
- கோவிட் 19 தொற்றுநோய்க்கு பிறகு உலகளவில் தினையின் மதிப்பு உயர்ந்துள்ளது.
- தினைகள் உடல் பருமன், நீரழிவு மற்றும் வாழ்க்கை முறை பிரச்சனைகள் போன்ற உடல் நல சவால்களை சமாளிக்க உதவுகிறது.
- இது குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை அளிக்கும்.
- இது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வறட்சி பகுதிகளில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முக்கியமானதாக இருக்கும்.

## சவால்கள்

- தினைகளின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதனால் தினைகள் சம்பந்தப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் மற்றும் உற்பத்தி-யாளர்கள் குறைவாக உள்ளனர்.
- குறைந்த ஊதியம், உள்ளிட்டு மானியங்கள் மற்றும் விலை சலுகைகள் இல்லாமை, நுகர்வோர் விருப்பத்தேர்வுகளின் மாற்றம், குறைந்த தேவை ஆகியவை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.
- குறைந்த தேவை என்பது வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் அதிக விலையை குறிக்கிறது.
- சரியான சந்தை இணைப்பு இல்லாத காரணத்தினால் தினையின் உட்கொள்ளும் தன்மை குறிப்பிட்ட பகுதிக்குள் வரையறுக்கப்படுகிறது.

## தினைகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்

- உணவு மற்றும் பொது விநியோக துறை அதன் அனைத்து அலுவலகங்களுக்கும் தங்கள் கேண்டின்கள் மற்றும் கூட்டங்களில் தினைகளை அறிமுகப்படுத்த உத்தரவிட்டுள்ளது.
- **தினை தொடக்கக் கண்டுபிடிப்பு சவால் :** என்னுடைய அரசாங்கம் (MY Gov) தளத்தில் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்-துறையானது தினைகளின் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பல்வேறு போட்டிகளை தொடங்கியுள்ளது.
- இந்த முயற்சியின் மூலம் தற்போது உள்ள பிரச்சனைகளுக்கு தொழில் நுட்ப மற்றும் வணிகத் தீர்வுகளை வழங்க இளைஞர்களை ஊக்கு-விக்கிறது.
- **போஷன் மிஷன் அபியான் :** அரசாங்கம் தினைகளை ஊட்டச்சத்து தானியங்களாக அறிவித்து அவற்றை போஷன் மிஷன் அபியான் கீழ் இணைத்துள்ளது.
- **மன் கி பாத் :** விவசாயிகள் மற்றும் நுகர்வோர் இருவருக்கும் தினையின் நன்மைகளை பிரதமர் எடுத்துரைத்தார்.
- **தேசிய ஊட்டச்சத்து தானியங்கள் மாநாடு 4.0 :** இது அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைப்பதாகும். உற்பத்தி யாளர்கள், நுகர்வோர்கள் ஆராய்ச்சியாளர்கள் கல்விய-ாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் வரை அனைத்து பங்குதாரர்களையும் ஒன்றிணைப்பதாகும்.

# IX. சுற்றுச்சூழல்

## அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம், மரபு கழிவு மேலாண்மைக்கான வரைபடத்தை வெளியிட்டுள்ளது

### செய்திகளில்

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் இந்தியாவின் குப்பை இல்லா நகரங்களின் நிகழ்ச்சி நிரலை ஆதரிக்கும் முயற்சியில் மரபு கழிவு மேலாண்மைக்கான வரைபடத்தை வெளியீட்டுள்ளது.

### மரபு கழிவு என்றால் என்ன?

- இந்தியாவில் உள்ள எந்த அதிகாரப் பூர்வ அரசாங்க ஆவணத்திலும் மரபு கழிவு என்ற சொல் வரையறுக்கப்படவில்லை.
- ஆனால் இது பொதுவாக தரிசு நிலத்தில் குப்பைமேட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்ட இடத்தில் பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்டு சேமிக்கப்படும் கழிவுகளை குறிக்கிறது.
- மரபு கழிவு என்ற சொல் ஸ்வட்ச் பாரத் இயக்கம் 2.0 இருந்து பெறப்பட்டது.
- இந்த இயக்கத்தை அடுத்து இந்தியாவில் உள்ள நகரங்கள் மரபு வழி கழிவு பகுதிகளை அகற்ற வேண்டும், நிலத்தை மீட்டெடுக்க வேண்டும் மற்றும் குப்பைக் கொட்டும் இடங்களை அடைவதை தடுக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது.
- ஸ்வட்ச் பாரத் இயக்கம் 2.0யின் செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் ஒரு மில்லியனுக்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட நகரங்கள் மார்ச் 31, 2023க்குள் மரபு கழிவுகளை அகற்றுவதை கட்டாயமாக்கியது.
- ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்கள் மார்ச் 31, 2024க்குள் தங்கள் குப்பைகளை சரி செய்ய வேண்டும்.

### வரைபடம்

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம் 7 புள்ளிகளைக் கொண்ட வரைபடத்தை தயாரித்துள்ளது.
  - நிலையான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்
  - மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளின் அதிகபட்ச பயன்பாட்டை உறுதிச் செய்தல்
  - ஒரு விரிவான கொள்கை மற்றும் நெறிமுறைகளின் அடிப்படையில் மீட்டெடுக்கப்பட்ட நிலத்தை நிலையான முறையில் பயன்படுத்துதல்.
  - மீட்டெடுக்கப்பட்ட நிலங்களின் ஆதாய பயன்பாட்டிற்கான தரநிலைகளை உருவாக்குதல்.
  - மீட்கப்பட்ட பொருட்களின் நிர்வாகத்தை ஊக்கப்படுத்துதல்.
  - நகர்ப்புறத் துறைகளின் கட்டிடத் திறனை மேம்படுத்துதல்.
  - சுகாதார நிலப்பரப்புகளின் நிலையான செயல்பாட்டை உறுதி செய்தல்.

## சிறுத்தை மீண்டும் அறிமுகம்

### பின்னணி

- இந்தியாவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை பரவலாக இருந்தது.
- இந்த விலங்கு வடக்கே ஜெய்ப்பூரில் மற்றும் லக்னோவிலிருந்து தெற்கே மைசூர் வரையிலும் மேற்கில் கத்தியாவாரிலிருந்து கிழக்கில் தியோகர் வரையிலும் காணப்பட்டது.
- இந்தியாவில் அழிந்த சிறுத்தை இனங்கள் 70 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டன.

### இத்திட்டம் பற்றி

- சிறுத்தையை மீண்டும் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் கீழ் நமீபியாவிலிருந்து 8 ஆப்பிரிக்க சிறுத்தைகள், 4-6 வயதுக்குட்பட்ட 5 பெண் சிறுத்தைகளும் மூன்று ஆண் சிறுத்தைகளும் கொண்டுவரப்பட்டன.
- இது மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்காவில விடப்படும்.
- இது ரூபாய் 90 கோடி மதிப்பிலான சிறுத்தை மறு அறிமுகத்திட்டத்தின் கீழ் ஒரு பகுதியாகும்.
- இந்த ஆண்டு 20 ஆப்பிரிக்கா சிறுத்தைகளை இந்தியா பெற இருந்தது. நமீபியாவிலிருந்து 8 மற்றும் தென்னாப்பிரிக்காவிலிருந்து 12.
- சிறுத்தை ஒரு மாமிச உண்ணியாகும்.
- ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்திற்கு இடம்பெயர்வது உலகிலேயே இதுவே முதல் முறையாகும்.

### இந்தியாவில் சிறுத்தை எப்படி அழிந்தன?

- சிறுத்தைகள் 1952ல் இந்திய அரசால் அதிகாரப்பூர்வமாக அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.
- சிறுத்தை பழமையான வரலாறு உள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் உள்ள மண்டசூர் சதுர்பஞ்ச் நாலாவில்




கண்டுபிடிக்கப்பட்ட புதிய கற்கால குகை ஓவியத்தில் மெல்லியப் புள்ளிகள் கொண்ட புனைப் போன்ற வேட்டையாடப்படுகிறது.

- கோரியாவின் சமஸ்தானத்தின் மகாராஜா ராமானுஜ் பிரதாப் சிங்தியோ 1947ல் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கடைசி 3 ஆசிய சிறுத்தைகளை வேட்டையாடி சுட்டுக் கொன்ற போது சிறுத்தை இந்திய நிலப்பரப்பிலிருந்து மறைந்ததாக நம்பப்படுகிறது.
- சிறுத்தையின் அழிவுக்கு அதிக வேட்டையாடுதல் முக்கிய காரண-மாகும்.
- சிறுத்தைகள் அதன் வாழிடங்களை இழந்தன. சிறுத்தைகள் வாழ்விடங்களை இழப்பதற்கு முக்கிய காரணம் இந்திய விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததாகும்.
- 1940களிலிருந்து சிறுத்தை 14 நாடுகளில் அழிந்துவிட்டது.
- அவை ஜோர்டன், ஈராக், இஸ்ரேல், மொராக்கோ, சிரியா, ஓமன், துனிசியா, சவூதி அரேபியா, டிஜிபியூட்டி, கானா. நைஜீரியா, கஜகஸ்தான், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகும்.

### சிறுத்தை ஏன் மீண்டும் கொண்டு வரப்படுகிறது?

- சிறுத்தைகளை மீண்டும் கொண்டு-வருவதன் நோக்கம் இந்தியாவின் வரலாற்று பரிமாணம் சமநிலையை மீட்டெடுப்பது மட்டுமல்லாமல் விலங்குகளின் உலகளாவிய பாதுகாப்பை உருவாக்கும்.
- இது ஒரு முதன்மையினமாக இருப்பதால் சிறுத்தையின் பாதுகாப்பு புல்வெளி காடுகளையும் அதன் உயிர் வாழ்விடத்தையும் புதுப்பிக்கும்.
- புலித்திட்டம் இந்தியாவில் உள்ள 52 புலிகள் காப்பகங்களில் காணப்படும் 250 நீர்நிலைகளை பாதுகாத்து மறு சீரமைக்கப்பட்டுள்ளது.
- சிறுத்தை திட்டமும் புலிதிட்டமும் போன்று தாக்கங்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.
- இடமாற்றத் திட்டம் தென்னாப்-பிரிக்காவில் பாதுகாப்பை வலுப்படுத்த உதவியது.
- தென்னாப்பிரிக்கா சிறுத்தைகளின் எண்ணிக்கை இரண்டு தசாப்தங்-களுக்கு குறைந்து காணப்பட்டது.
- பாதுகாப்பு திட்டமூலம் தென்னாப்-பிரிக்காவில் சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. தற்போது உலகளவில் 7000 சிறுத்தைகளில் 4500 சிறுத்தைகள் தென்னாப்பிரிக்காவை சேர்ந்தவையாகும்.
- சிறுத்தை தென்னாப்பிரிக்காவில் தோன்றி நில இணைப்பு மூலம் உலகம் முழுவதும் பரவியதாக நம்பப்படுகிறது.
- கலக்ஹாரியில் சிறுத்தை வேட்டையாடுதல் காரணமாக சிறுத்தையின் இனம் ஒருகாலத்தில் கடுமையாக அழிக்கப்பட்டது.
- ஆனால் இப்போது ஆரோக்கியமான பெண் சிறுத்தைகள் 5 -6 குட்டி-களை உற்பத்தி செய்வதன் மூலம் தென்னாப்பிரிக்காவின் எண்ணிக்கையில் அதிகரித்துக் கொண்டு இருக்கிறது.

### முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்

- சிறுத்தையை மீட்க இந்தியாவில் 1970 களில் முயற்சி நடந்தது.
- டாக்டர் ரஞ்சித் சிங் இந்திராகாந்தி அரசாங்கத்தின் சார்பாக ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பணியை மேற்கொண்டார்.
- ஆனால் செயல்பாட்டின் போது அவசரநிலை அறிவிக்கப்பட்டு விரைவில் ஈரானில் ஷாவின் ஆட்சி வீழ்ந்தது எனவே இத்திட்டத்தை முடிக்க வழிவகுத்தது.
- மீண்டும் சிறுத்தைகளை இந்தி-யாவிற்கு மாற்றுவதற்கான முயற்சி 2009ல் தொடங்கியது.
- ஆனால் 2020ம் ஆண்டில்தான் இந்தியாவில் உச்சநீதிமன்றம் அனுமதியளித்தது.
- நிபுணர்கள் குழுவின் தலைமையில் மாநில அதிகாரிகளுடன் இணைந்து சிறுத்தைகள் செல்லக்கூடிய இடங்களின் ஆய்வு செய்து இட-மாற்றம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

### குனோ தேசியப் பூங்கா எவ்வாறு இட மாற்றத்திற்காக தேர்ந்-தெடுக்கப்பட்டது?

- ஆசிய சிங்கத்தின் இடப்-பெயர்ச்சிக்காக 2010ம் ஆண்டில் மதிப்பாய்வு செய்யப்பட்ட 6 தளங்கள் 2020ல் மறுமதிப்பீடு செய்யப்பட்டன.
    - முகந்த்ரா மலை புலிகள் பாதுகாப்பகம், ஷெர்கர் வனவிலங்கு சரணலாயம் ராஜஸ்தான்.
    - காந்தி சாக வனவிலங்கு சரணலாயம், குனோ தேசிய

பூங்கா, மாதவ் தேசிய பூங்கா, நவ்ர தேகித் வனவிலங்கு சரணலாயம் ஆகியவை மத்திய பிரதேசத்தில் உள்ளன.

- இந்த ஆறு தளங்கள் 2006ம் ஆண்டு முதல் கண்காணிப்பட்ட வந்தன.
- அவற்றின் குனோ தேசியப் பூங்கா உடனடியாக பெறுவதற்கு தயாராக இருப்பதாக கண்டறியப்பட்டது.
- சிங்கம் மற்றும் சிறுத்தை ஆகிய இரண்டு விலங்குகளும் குஜராத், ராஜஸ்தான் மற்றும் மத்தியபிரதேசம் பரவி உள்ள அரை வறண்ட புல் வெளிகள் மற்றும் காடுகளை பகிர்ந்துக் கொள்கின்றன.
- தளங்களை மேம்படுத்துவதில் பெரிய அளவில் முதலீடு தேவைப்படுகிறது.
- கிராமங்களை இடமாற்றம் செய்வதன் மூலம் மக்களுக்கான அழுத்தங்கள், உள்கட்டமைப்பை குறைத்தல் மற்றும் சிறுத்தைக்கான இரைகளை அதிகப்படுத்துவதற்கு மற்ற விலங்குகளை இடமாற்றம் செய்தல் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படவேண்டும்.
- குனோ தேசியப் பூங்காவில் சிங்கங்களை இடமாற்றம் திட்டத்தின் காரணமாக மத்திய பிரதேச வனப்பகுதி ஏற்கனவே 25 கிராமங்களின் 24 கிராமங்களே இடமாற்றம் செய்து அதை ஒரு தேசிய பூங்காவாக அறிவித்தது.
- இது அதன் வாழ்விடங்களில் குறிப்பிடத்தக்க மீட்சிக்கு வழிவகுத்து மனிதர்களின் தாக்கங்களை குறைத்தது.
- குனோ தேசிய பூங்காவின் விளிம்புகளில் பாக்சா (148 மக்கள் தொகை) கொண்ட ஒரே ஒரு கிராமம் மட்டும் எஞ்சி உள்ளது.
- ஆரோக்கியமான இரைத்தளம் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.
- குனோவில் அமைந்துள்ள உயரம், மலையளவுகள், வெப்பநிலைகள் மற்றும் இதர காலநிலைகள் தென்னாப்பிரிக்கா மற்றும் நமீபியாவில் உள்ளதைப்போல் உள்ளனர்.
- இந்தப் பூங்கா 740 சதுர கிலோமீட்டர் பரப்பளவை கொண்டுள்ளது மற்றும் இது குனோ வனவிலங்கு பிரிவின் ஒரு பகுதியாகும்.

### காட்டு விலங்குகளின் முந்தைய இடமாற்றத்தின் வெற்றிகள் மற்றும் தோல்விகள்

- 1960களில் தென்னாப்பிரிக்காவில் கடைசியாக எஞ்சியிருக்கும் வெள்ளை காண்டமிருகங்கள் தென்னாப்பிரிக்கா முழுவதும் மறு அறிமுகம் செய்யப்பட்டன.
- 2011ம் ஆண்டின் காட்டெருமைகள் கன்ஹாவிலிருந்து பாந்தகருக்கு மாற்றப்பட்டன அங்க அவை உள்ளூரில் அழிந்துவிட்டன.
- புதிய மக்கள் தொகை உருவாக்குவதற்காக காசிரங்காவிலிருந்து காண்டாமிருங்கள் மாநிலத்திற்குள்ளேயே மானஸ்களுக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டன.
- 1987ம் ஆண்டு காண்டாமிருகங்கள் அஸ்ஸாமில் போபிடோராவிலிருந்து உத்திரபிரதேசத்தில் உள்ள துத்பாவுக்கு மாற்றப்பட்டன.
- **புலிகளின் வெற்றிக்கதைகள் :** ராஜஸ்தானில் உள்ள சாரிஸ்கா மற்றும் மத்தியப்பிரதேசத்தில் உள்ள பன்னா ஆகிய இடங்களில் இடமாற்றம் மூலம் இரண்டு புதிய இனங்கள் உருவாக்கப்பட்டன.
- பெரிய பூனைகள் வேட்டையாடுதல் காரணமாக அழிந்து போனது.

### சிறுத்தைகள் எவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டன?

- கடந்த ஒரு மாதமாக நமீபியா மற்றும் தென்னாப்பிரிக்கா சிறுத்தைகள் இரண்டும் சிறிய வேலி முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.
- இதில் விலங்குகள் சிகிச்சைக்காக அல்லது தனிமைப்படுத்துவதற்காக தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ளன.
- நோய்களை கண்டறிவதற்கும் தடுப்-பூசி போடுவதற்கும் சுகாதார பரிசோதனைகள் மேற்கொள்ளப்-பட்டு நிறைவு செய்யப்பட்டன.
- செப்டம்பர் 16 நமீபியாவின் போயிங் 747 என்ற சரக்கு விமானத்தின் மூலம் இந்தியாவுக்கு கொண்டு வரப்படும்.
- சிறுத்தையில் 1500ச.மீட்டர் பரப்பளவில் தனிமைப்படுத்தப்பட்டு ஒரு மாத காலத்திற்கு தனியாக கூண்டில் வைக்கப்படும்.
- அவை புதிய சூற்றுச்சூழலுடன் ஒத்துப் போவதை உறுதிச் செய்வதன் மட்டுமல்லாமல் ஆப்பிரிக்கா கண்டத்திலிருந்து நோய்களை சுமந்து வருகின்றனவ என்று கண்டறியப்படுகிறது.
- 30 நாட்களுக்கு உன்னிப்பாக கண்காணித்தப்பிறகு 6 ச.மீட்டர் பரப்பளவில் வைக்கப்படும்.
- இவை மனிதர்களை தாக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படவில்லை ஆனால் கால்நடைகளை தாக்குவதாக அறியப்படுகிறது. எனவே உள்ளூர் கிராமவாசிகளுடன் தெரிவிக்கப்பட்டு விலங்குகளை கண்காணிக்க சிறுத்தை மித்ராக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

## நெல் வைக்கோல்கள் எரிப்பு

### செய்திகளில்

- டெல்லி அரசு நெல்வயல்களில் உயிர் சிதைப்பான்களை தெளிப்பதை தேர்வு செய்துள்ளது.
- இதன் மூலம் விவசாயக் கழிவுகள் எரிப்பது கட்டுப்படுத்தப்படும் மற்றும்

குளிர்காலத்தில் காற்று மாசுபாட்டைக் குறைக்கும்.

### இவற்றைப்பற்றி

- பஞ்சாப்பில் 500 ஏக்கர் நிலத்தில் உயிர் சிதைப்பான்கள் சோதனை அடிப்படையில் தெளிக்கப்படும்.
- உயிர் சிதைப்பான் என்பது நுண்ணுயிர் கரைசலாகும்.
- இது நெல்வைக்கோல் மற்றும் விவசாய கழிவுகளை 15 முதல் 20 நாட்களில் உரமாக மாற்றும்.
- நெல் வைக்கோல்களை எரிப்பதால் வெளியாகும் அதிகளவு புகை மற்றும் நச்சுவாயுக்கள் உடல் நல பிரச்சனைகளை ஏற்படுத்துகின்றன.
- இது கண் மற்றும் சுவாச பிரச்சனைகளிலிருந்து தீவிர நோய்கள் வரை ஏற்படுத்துகிறது.

### நெல் வைக்கோல்கள் எரிப்பு

- நெல், கோதுமை போன்ற தானியங்களை அறுவடைச் செய்தபின் எஞ்சியிருக்கும் வைக்கோல் மரக்கட்டைகளுக்கு வேண்டும் என்று தீ வைப்பது நெல் வைக்கோல் எரிப்பாகும்.
- 1990கள் வரை இந்த நுட்பம் பரவலாக இருந்தது. அப்போது அரசாங்கங்கள் அதன் பயன்பாட்டை கட்டுப்படுத்தின.
- வட இந்தியாவில் நெல் வைக்கோல் களை எரிப்பது நீண்டகாலமாக காற்று மாசுபாட்டிற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்து வருகிறது. ஆனால் அதை தடுக்கும் முயற்சிகள் ஒவ்வொரு ஆண்டும் தோல்வியடைகின்றன.
- ஒவ்வொரு ஆண்டும் குளிர்கால தொடங்கும் போது டெல்லியில் காற்று மாசுபாடு காற்று தரக் குறியீட்டு எண் உச்சத்தை அடைகிறது.

### நெல் வைக்கோல்களை எரிப்பதால் ஏற்படும் பாதிப்பு?

- வடஇந்தியாவில் குப்பைகளை எரிப்பது காற்று மாசுபாட்டிற்கு முக்கிய காரணமாக உள்ளது.
- காற்று மாசுபாடு மக்களை தொற்று நோய்க்கு உள்ளாக்குகிறது.
- நிலத்தில் உள்ள ஊட்டச்சத்துக்களை அழித்து மண்களை வளமற்றதாக மாற்றுகிறது.
- வைக்கோல்களை எரிப்பதால் உருவாகும் வெப்பம் மண்ணுக்குள் ஊடுருவி ஈரப்பதம் மற்றும் பயனுள்ள நுண்ணுயிரிகளின் இழப்புக்கு வழிவகுக்கிறது.

### மாற்று வழிகள்

- மகிழ்ச்சி விதைப்பான் (Hap-pySeeder) இந்த கருவி மூலம் பயிர்களை வேறோடு புடுங்கி அழிக்கப்பட்ட இடத்தில் விதைகளை விதைக்கும் மேலும் இது வய-லுக்கு தழைக்கூளங்களாக பயன்படுத்தப்படும்.
- மற்றொரு சாத்தியமான முறை உயிரி சிதைப்பானாகும். இது இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்டது.
- இந்த சிதைவு செயல்முறையின் மூலம் 15 முதல் 20 நாட்களில் நெல் வைக்கோல்கள் உரமாக மாறுகிறது.
- விவசாயிகளுக்கு மண்ணிலோயே நெல் வைக்கோல்களை கலப்பதற்கான கருவிகளை வழங்குதல் இதன் மூலம் அவர்கள் அதை எரிக்க வேண்டியதில்லை.
- சில நிறுவனங்கள் நெல் வைக்கோல் களை சேகரிக்க தொடங்கியுள்ளன ஆனால் இந்த முறையில் கூடுதல் நடவடிக்கைகள் தேவை.
- மாற்றுப்பயிர் முறை இது ஆழமான மற்றும் அடிப்படையான தீர்வாகும் நெற்பயிருக்கு பதிலாக மற்ற பயிர்களை பயிருடுதல்.
- அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் நிதியுதவிகள் பழங்கள் மற்றும் காய்கறிகளை நடுவு செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.

### வழிகாட்டுதல்கள்

- சிறு மற்றும் குறு விவசாயிகள் வைக்கோலை மண்ணில் தழைக்க மற்றும் எரிக்காமல் இருப்பதற்காக உள்நிலை உத்திகளை பின்பற்றுவதற்கு ஆதரவு தேவை.
- விவசாயிகளுக்கு நெல் வைக்கோல்களை எரிப்பதனால் அபராதம் விதிப்பது வெற்றிகரமாக அமையாது. எனவே நாம் மாற்று தீர்வுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

## காடுகளுக்கு வெளியே மரங்கள்

### செய்திகளில்

- சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் இந்திய அரசு மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கான அமெரிக்க நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து இந்தியாவில் காடுகளுக்கு வெளியே மரங்கள் முன் முயற்சியை தொடங்குவதாக அறிவித்துள்ளன.

### காடுகளுக்கு வெளியே உள்ள மரங்கள் என்றால் என்ன?

- சர்வதேச காலநிலை மாற்றத்தை தணிப்பு மற்றும் தழுவல் இலக்குகளை ஆதரிக்கும் முயற்சியில் இந்தியாவில் வனநிலங்களுக்கு வெளியே மரங்களை வளர்த்தல்.
- இதன் மூலம் மரங்களின் பரப்பளவை அதிகரித்தல்.
- இந்த திட்டம் விவசாயிகளே ஒன்றிணைக்கும்.
- இதன் மூலம் நிறுவனங்கள் மற்றும்

தனியார் நிறுவனங்கள் மரங்களின் பரப்பளவை அதிகரிக்க முடியும்.

- இதன் மூலம் பாரம்பரிய காடுகளுக்கு வெளியே 28 இலட்சம் ஹெக்டேர் அளவுக்கு மரப்பரப்பை விரைவாக விரிவுப்படுத்தமுடியும்.
- இது புதுமையான நிதியுதவி மாதிரிகளை பயன்படுத்துகிறது.
- மர அடிப்படையிலான நிறுவனங்களை ஊக்குவிக்க இந்தியாவின் தனியார்துறையை பயன்படுத்துகிறது.
- நிலையான சந்தைகளை உருவாக்க உதவுகிறது.
- கிராமப்புற பொருளாதாரங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துகிறது.
- உலக விவசாய வனவியல் ஆராய்ச்சி மையம் மற்றும் சர்வதேச வனவியல் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றுடன் இணைந்து இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.
- இந்த திட்டம் ஆந்திரப்பிரதேசம், அஸ்ஸாம், ஹரியானா, ஒடிசா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.
- இந்தத் திட்டம் உள்ளூர் சமூகங்களுக்கு ஆதரவு அளிக்கும் மற்றும் கார்பனின் தன்மையை பூமியில் குறைக்கும் மற்றும் விவசாயத்தின் காலநிலை மின்தன்மையை வலுப்படுத்தும்.

## ஓசோன் தினம்

- சமீபத்தில் இந்தியா 28வது உலக ஓசோன் தினத்தை அனுசரித்தது.
- ஒவ்வொரு ஆண்டும் மாண்ட்ரீல் நெறிமுறையில் கையொப்பம் இடப்பட்டதை நினைவுக் கூறும் வகையில் சர்வதேச ஓசோன் தினம் செப்டம்பர் 16 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- கருப்பொருள்: மாண்ட்ரீயல் நெறிமுறை @35: பூமியில் உயிர்களை பாதுகாப்பதற்கான உலகளாவிய ஒத்துழைப்பு.

## முக்கிய சிறப்பம்சங்கள்

- மாண்ட்ரீயல் நெறிமுறையின் இந்தியாவின் வெற்றிக்கதையின் 23வது பதிப்பு வெளியிடப்பட்டது.
- இந்திய குளிரூட்டும் செயல் திட்டத்தின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் வெளியிடப்பட்டது.
- ஓசோன் மண்டலம் பாதிப்பு இல்லாத குறைந்த புவி வெப்பமடைதல் குளர்பாதன பொருட்களை ஊக்குவிக்குப்பதற்கான இந்தியாவில் குளிர் சங்கிலித் தொடர்பான ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.
- குளிரூட்டிகளின் ஆற்றல் திறமையான செயல்பாட்டிற்கான நல்ல சேவை நடைமுறைகள் பற்றிய கையேடு.
- "எங்கள் ஓசோன் படலத்தை காப்பாற்றுங்கள்" என்ற தலைப்பில் பள்ளி மாணவர்களுக்கு தேசிய அளவிலான போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டன.
- சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
- இது நிலையான வாழ்க்கை முறை கருத்துடன் ஒத்துப் போகிறது.
- இது கவனத்துடன் வளங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது.
- குறைந்த புவி வெப்பமடைதல் திறன் கொண்ட இராசயனங்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை மேம்படுத்துவதற்காக எட்டு நிறுவனங்கள் உடன் இணைந்து செயல்படுகின்றன.
- இவை மாண்ட்ரீல் நெறிமுறையின் கட்டுப்படுத்தப்படும் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்தலாம்.
- இது அரசாங்கத்தின் இந்தியாவில் தயாரிப்போம் என்ற முயற்சியை ஊக்குவிக்க இது உதவும்.

## இந்திய குளிரூட்டும் செயல் திட்டம் என்றால் என்ன?

- இந்திய குளிரூட்டும் செயல் திட்டம் மார்ச் 2019 சுற்றுச்சூழல் வனங்கள் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இந்திய குளிரூட்டும் செயல் திட்டம் 20வது வருட முன்னோக்கை வழங்குகிறது மற்றும் குளிரூட்டலுக்கு தேவையான செயல்களை கோடிட்டு காட்டுகிறது.
- இந்தத் திட்டம் 2037-2038க்குள் அனைத்து துறைகளிலும் குளிரூட்டும் தேவையை 20% முதல் 25% வரை குறைக்கும்.
- குளிர்பதன தேவைகளை 2037-2038, 25%லிருந்து 30% வரை குறைக்கும்.
- 2037-2038க்குள் குளிரூட்டும் ஆற்றல் தேவைகளை 25% முதல் 40% வரை குறைக்கும்.
- தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்ப திட்ட பயிற்சியின் கீழ் குளிர்ச்சி மற்றும் தொடர்புடைய பகுதிகளோ ஆராய்ச்சி முக்கிய பகுதிகளாக அறிவித்தல்.
- 2022-2023க்குள் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி மற்றும் சான்றளிப்பதன் மூலம் திறன் இந்தியா திட்டத்துடன் இணைத்தல்.

## முக்கியத்துவம்

- இந்திய குளிரூட்டும் செயல் திட்டம் இருந்து வெளிவரும் செயல்களை செயல்படுத்துவது கிகாலி திருத்தத்தின் கீழ் ஹைட்ரோ புளோரோ கார்பன் படிபடிப்படியாக குறைந்து மாற்று வழிகளை ஏற்றுக்கொண்டு

மற்றும் ஆற்றல் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு துணை புரியும்.

- 2070க்குள் நிகர பூஜ்ஜிய உமிழ்வை இந்தியாவின் துணை நடவடிக்கைக்கு இது குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும்.

**மாண்ட்ரீயல் நெறிமுறை என்றால் என்ன?**

- மாண்ட்ரீயல் நெறிமுறை என்பது ஓசோன் சிதைவதை ஏற்படுத்தும் பொருட்களின் உற்பத்தியை நிறுத்துவதற்கான ஒப்பந்தமாகும்.
- இது 16 செப்டம்பர் 1987 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் அனைத்து உறுப்பு நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒப்பந்தமாகும்.
- இது குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டுகளில் 99% ஓசோன் சிதைவு பொருட்களை நீக்குவதை வழிவகுத்தது.
- இந்தியா 1992லிருந்து மாண்ட்ரீயல் நெறிமுறையில் உறுப்பினராக இருக்கிறது.

**மாண்ட்ரீயல் நெறிமுறையில் இந்தியாவின் செயல்பாடு என்ன?**

- மாண்ட்ரீயல் நெறிமுறையின் அட்டவணைக்கு இணங்க ஜனவரி 1, 2010ல் கட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடுகளுக்காக இந்தியா குளோரோபுளோரா கார்பன்கள், கார்பன் டெட்ரா குளோரைடு, ஹாலோன்ஸ், மெத்தில் புரோமைடு மற்றும் மெத்தில் குளோரோபார்ம் ஆகியவற்றை படிபடியாக நீக்கியது.
- தற்போது மாண்ட்ரீயல் நெறிமுறையின் துரிதப்படுத்தப்பட்ட அட்டவணையின் படி ஹைட்ரோ குளோரோ புளோரோ கார்பன்கள் படிப்படியாக அகற்றப்படுகின்றன.
- ஹைட்ரோ குளோரோ புளோரோ கார்பன்களை நீக்குதலின் நிலை 1 - 2012 -2016ல் வெற்றிக்கரமாக செயல்படுத்தப்பட்டது.
- ஹைட்ரோ குளோரோ புளோரோ கார்பன்களை நீக்குதலின் நிலை 2 - 2017 முதல் செயல்படுத்தப்பட்டு 2023ல் நிறைவடையும்.
- ஹைட்ரோ குளோரோ புளோரோ கார்பன்களை நிலை 3 -கடைசியான வாயுவை நீக்கும் முறையாகும். இது 2023 முதல் 2030 வரை செயல்படுத்தப்படும்.
- ஹைட்ரோ குளோரோ புளோரோ கார்பன்களின் நீக்க நிலை ஜனவரி 1, 2025க்குள் முடிக்கப்படும். மேலும் சேவை தொடர்பான நடவடிக்கைகள் 2030 வரை தொடரும்.

**ஓசோன் அடுக்கு என்றால் என்ன?**

- ஓசோன் என்பது $O_3$ ஆக்சிஜனின் சிறப்பு வடிவமாகும்.
- நாம் சுவாசிக்கும் ஆக்சிஜன் மற்றும் பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்கு மிக முக்கியமானது $O_2$ ஆகும்.
- ஓசோனில் 90% இயற்கையாகவே பூமியின் மேற்பரப்பிலிருந்து 10-40கி.மீ வரையுள்ள மேல் வளிமண்டலத்தில் (ஸ்ட்ராடோஸ்பியர்) நிகழ்கிறது.
- இது சூரியனின் தீங்கு விளைவிக்கும் கதிர்களிலிருந்து நம்மை பாதுகாக்கும் வகையில் ஒரு பாதுகாப்பு அடுக்கை உருவாக்குகிறது.
- இந்த பாதுகாப்பு அடுக்கு நல்ல ஓசோன் என்று அழைக்கப்படுகிறது.
- மனிதனால் உருவாக்கப்பட்ட ஓசோன் குறைக்கும் பொருட்கள் என குறிப்பிடப்படும் இராசாயனங்களால் இந்த ஓசோன் அடுக்கு அழிக்கப்படுகிறது.
- குளோரின் மற்றும் புரோமின் அணுக்கள் ஸ்ட்ராடோஸ்பியரில் ஓசோனுடன் தொடர்பு கொள்ளும் போது அவை ஓசோன் மூலக்கூறுகளை அழிக்கிறது.
- ஒரு குளோரின் அணு 1 இலட்சம் ஓசோன் மூலக்கூறுகளை அழிக்கும் தன்மையுடையது.
- இது இயற்கையாக உருவாகும் ஓசோனைவிட மிக விரைவாக ஓசோனை அழிக்கிறது.
- ஓசோன் படலத்தின் சிதைவு தோல் புற்றுநோய் மற்றும் கண்புரை நிகழ்வுகளின் அதிகரிப்புக்கு வழிவகுக்கிறது.

**ஓசோன் படலத்தின் காட்டுதீ எவ்வாறு பாதிக்கிறது?**

- அதிகரித்து வரும் உலக வெப்பநிலை வறண்ட நிலைமைகள் உலகெங்கிலும் காட்டுத்தீ ஏற்படுவதற்கு வழிவகுக்கிறது.
- ஐக்கிய நாடுகளில் சுற்றுச்சூழல் திட்டத்தின்படி காட்டுத்தீ அதிர்வெண் 2050ல் 30% அதிகரிக்கும்
- காட்டுத்தீயானது ஒரு தீய சுழற்சியை தூண்டும்.
- மேலும் ஓசோன் படலத்தின் சிதைவு தென்துருவ சுழலை வலுப்படுத்துகிறது.
- இதன் மூலம் தென்துருவத்தில் குறைந்த அழுத்தம் மற்றும் குளிர்ந்த காற்று நிலவுகிறது.
- ஆஸ்திரேலியாவில் காட்டுத்தீ எண்ணிக்கை அதிகரிக்கிறது.
- ஆஸ்திரேலியா 2019 முதல் 2020வரையில் ஒரு மில்லியன் டன்களுக்கும் அதிகமான புகையை வெளியிட்டது.
- இந்த அதிகமான புகைகள் ஓசோன் அடுக்கு மண்டலத்தை ஓசோன் துளையை விரிவுபடுத்துவதன் மூலம் ஓசோன் படலத்தை பாதிக்கிறது.
- ஆஸ்திரேலியாவின் காட்டுத் தீயின் 33மில்லியன் ஹெக்டேர்கள் மேல்

எரிந்தது, 3 பில்லியன் விலங்குகள் இறந்து இடம்பெயர்ந்தன.

- இது நாட்டின் மிக மோசமான இயற்கை பேரழிவாக மாறியது.

## தொழிற்சாலைகளில் கார்பன் அல்லாத கூட்டணி

### செய்திகளில்

- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரி-சக்தி நிறுவனம் மற்றும் தொழில் துறை தலைவர்கள் இணைந்து தொழிற்சாலைகளில் கார்பன் அல்லாத உலகளாவிய கூட்டணியை தொடங்கியுள்ளனர்.

### உலகளாவிய கார்பன் அல்லாத கூட்டணி என்றால் என்ன?

- இந்த கூட்டணி முக்கிய நோக்கம் 2015-பாரீஸ் உடன்படிக்கையின் படி காலநிலையின் இலக்குகளான நிகர பூஜ்ஜிய அடைதல்.
- தொழில்துறை மதிப்பு சங்கிலி-களில் கார்பன் அல்லாத நிலை இந்தோனேசியாவில் பாலியில் நடைபெற்ற எரிசக்தி மாற்றங்-களுக்கான சர்வதேச புதுப்பிக்கத்-தக்க எரிசக்தி நிறுவனத்தின் முதலீட்டு மன்றத்தின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட பாலி பிரகடனத்தின் போது இது உருவாக்கப்பட்டது.
- இதுதொழிற்சாலைகள்கூட்டணியாக இணைந்து நாடுகளின் நிகர பூஜ்ஜிய இலக்குகளை அடைவதற்கு பங்களித்து ஒத்துழைக்க வேண்டும்.
- இது பொது மற்றும் தனியார் துறைகளில் உள்ள தொழில் துறை பங்குதாரர்களின் உரையாடலை வலுப்படுத்தும் மற்றும் ஒருங்-கிணைக்கும் நடவடிக்கையாகும்.
- உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 25% தொழில் துறையால் உற்பத்தி செய்யப்படுகிறது.
- ஆனால் இத்துறை உலகளவில் 28% பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தையும் வெளியீடுகிறது.
- தொழில் துறை இரண்டாவது பெரிய உமிழ்வை கொண்டுள்ளது.
- மேலும் இக்கூட்டணியானது தொழில் துறைக்கு விரைவான கார்பன் அல்லாத முறைக்கு வழிவகுக்கும்.


## மேகப் போர்கள்

### செய்திகளில்

- சமீபத்தில் ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் மேக தூவுதல் தொழில் நுட்பத்தின் மூலம் மழையைப் பிடிக்க முயற்சி செய்கின்றன.
- இது பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு இடையே சர்ச்சைக்-குரியதாக மாறியுள்ளது.

### மேக விதைப்பு

- மேக விதைப்பு என்பது செயற்கை மழையை உருவாக்குவதற்கான ஒரு வகையான வானிலை மாற்ற தொழில் நுட்பமாகும்.
- வளிமண்டலத்தில் போதுமான அளவு மேகங்கள் இருந்தால் மட்டுமே இது செயல்படும்.
- ட்ரோன்கள் மேகங்களுக்குள் மின்சார அதிர்வு ஏற்படுத்தப்பட்டு ஒன்றாக சேர்ந்து மழையை உண்டாக்கும்.
- மேலும் மற்றொரு முறையில் சில்வர் அயோடைடு, பொட்டாசியம் அயோடைடு அல்லது உலர் பனிக்கட்டிகள் ஆகியவைகள் மேகங்கள் மீது கொட்டப்பட்டு மழைப்பொழிவை ஏற்படுத்துகிறது.
- இராசயன விதைகளை விமானம் மூலமாகவோ தரையில் இருந்து தெளிப்பது மூலமாகவோ வழங்கலாம்.
- மேக விதைப்பு இராசயனங்கள் பறக்கும் விமானங்கள் மூலமாகவோ அல்லது இராக்கெட்டுகளை பயன்படுத்தியோ, அல்லது குப்பிகளை பயன்படுத்தி துப்பாக்கியில் சுடுதல் மூலமாகவோ இராசயனம் வானில் செலுத்தப்படலாம்.



# X. பொருளாதாரம் – பொருளாதாரம் மற்றும் சமூக பிரச்சனைகள்

## 1. பொருளாதாரம்

### மொத்த மருந்து பூங்கா

#### செய்திகளில்

- சமீபத்தில் மருந்து துறை இமாச்சலப்பிரதேசம், குஜராத் மற்றும் ஆந்திரப்பிரேதம் ஆகிய மாநிலங்களில் மொத்த மருந்து பூங்காக்களை மேம்படுத்துவதற்கான திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

#### குறிக்கோள்

- மருந்து பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்கவும் செயலில் உள்ள மருந்துப் பொருட்கள் (API) இறக்குமதி சார்ந்து இருப்பதை குறைக்கவும் மொத்த மருந்து பூங்காக்கள் உருவாக்கப்படுகின்றன.
- தற்போது உள்ள உள்கட்டமைப்பு வசதிகளையும் வலுப்படுத்தவும் இந்திய மொத்த மருந்து துறையை உலகளாவிய முன்னணி நிறுவனமாக மாற்றுதல்.
- நிலையான சோதனை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்நாட்டில் மதிப்பு கூட்டல், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
- பொதுவான கழிவு மேலாண்மை அமைப்பின் புதுமையான முறைகள் மூலம் குறைந்த செலவில் சுற்றுச்சூழலின் தரங்களின் தேவைகளை பூர்த்திச் செய்ய தொழில் துறைக்கு உதவுதல்.
- வளங்களை மேம்படுத்துதல் மற்றும் அளவின் பொருளாதாரம் ஆகியவற்றின் காரணமாக எழும் நன்மைகளை பயன்படுத்திக் கொள்ளுதல்.

### மொத்த மருந்து பூங்கா திட்டம்

- நாட்டில் மூன்று மொத்த பூங்காக்களை உருவாக்குதல்.
- மொத்த மருந்து பூங்காவை உருவாக்க மாநில அரசுக்கு மானியம் அளித்தல்.
- உலகத்தரம் வாய்ந்த பொதுவான உள்கட்டமைப்பு இந்த பூங்காவில் உருவாக்கப்படும்.
- திட்ட செலவில் 70% (மலைப்பகுதிகளில் 90%) அல்லது ரூபாய் 1000கோடி இதில் எது அதிகமோ அது மத்திய அரசு வழங்கும்.
- ஒவ்வொரு பூங்காவின் பரப்பளவு 100 ஏக்கர்.

#### செயல்படுத்துதல்

- மொத்த மருந்து பூங்காவில் பொதுவான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக மாநில அமலாக்க முகமைக்கு ஒரு முறை மானியம் பல்வேறு கட்டங்களில் விடுவிக்கப்படுகிறது.
- மருத்துவத் துறையல் உள்ள திட்ட வழிகாட்டுதல் குழு திட்டக்கூறுகள் மற்றும் முன்மொழியும் தகுதிகள் ஆகியவற்றை பொறுத்து ஒப்புதல் அளிக்கும்.

#### பொதுவான உள்கட்டமைப்பு வசதிகள்

- கரைப்பான் மீட்பு மற்றும் வடிகட்டுதல் ஆலை
- மத்திய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்கள்
- நீராவி மற்றும் குளிரூட்டும் அமைப்புகள்
- அடைகாத்தல் மற்றும் பொதுவான தளவாடங்கள் வசதிகள்
- பொதுவான சோதனைக் கூடம்
- ஒழுங்குமுறை விழிப்புணர்வு வசதி மையம் மற்றும் அவசரகால பதில் மையம்

#### நிதியுதவி

- இது அதிகபட்சமாக ரூபாய் 1000 கோடி வரையிலான நிதியிதியை மருந்துப் பூங்காங்களுக்கு வழங்கும்.
- மலைப்பாங்கான மாநிலங்கள் மற்றும் வடகிழக்கு பிராந்தியங்களின் மொத்த மருந்து பூங்காவிற்கு ரூ.1000 கோடி அல்லது பொதுவான உள்கட்டமைப்பு வசதிக்கான திட்டமைப்பில் 90% மானியமாக வழங்கப்படும்.

### மின்னனு மற்றும் தொழில் நுட்ப அமைச்சகம் 2026க்குள் 300 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னனு உற்பத்தி.

#### செய்திகளில்

- தொற்றுநோயால் கொண்டுவரப்பட்ட எதிர்பாராத சவால்களை கருத்தில் கொண்டு இந்தியா 2026க்குள் 300 பில்லியன் டாலர் மின்னனு உற்பத்தி இலக்கை அடையும் என்று மின்னனு அமைச்சகம் கூறியுள்ளது.

- மின்னணு தேசியக் கொள்கை 2019ன் படி 2025ல் நிர்ணயிக்கப்பட்ட 400 பில்லியன் டாலர் இலக்கைவிட குறைவு.

## இந்தியாவின் மின்னணு உற்பத்தி

- 2015-2016ல் 37.1 பில்லியன் டாலராக இருந்த மின்னணு உற்பத்தி 2020-2021ல் 67.3 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது.
- இன்று இந்தியா ஸ்மார்ட் போன்கள் உட்பட 50 இலட்சம் போன்களை ஏற்றுமதி செய்கிறது.
- எவ்வாறாயினும் இந்தியா இன்னும் மின்னணுப் பொருட்களை உற்பத்தி செய்வதில் வலுவானதாக இல்லை.
- 2020-2021ம் ஆண்டில் இறக்குமதியின் அளவு 2.9இலட்சம் கோடியிலிருந்து 2.8 இலட்சம கோடியாக குறைந்தது.
- இதற்கு முக்கிய காரணம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நுகர்வோர் மின்னணுப் பொருட்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்றவையாகும்.
- தொழில் நுட்ப வன்பொருட்கள் இறக்குமதியில் இந்தியா 68.400 கோடியிலிருந்து 79,000 கோடியாக அதிகரித்துள்ளது.

## தொலைநோக்கு ஆவணம் 2.0

- மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொலைநோக்கு ஆவணம் 2.0. 2026ம் ஆண்டுக்குள் 300 பில்லியன் டாலர் நிலையான மின்னணு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்ற தலைப்பில் மின்னணு துறைக்கான 5 ஆண்டு வரைபடத்தை வெளியிட்டது.
- இந்த வரைபடம் தொலைநோக்கு ஆவணத்தின் இரண்டாவது பகுதியாகும்.
- இதில் முதல் பகுதி இந்தியாவின் மின்னணு ஏற்றுமதியை அதிகரிப்பது மற்றும் உலக மதிப்பு சங்கியிலியில் இந்தியாவின் பங்கை அதிகரிப்பது என்ற தலைப்பில் நவம்பர் 2021 அன்று வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கை இந்தியாவின் தற்போதைய 75 பில்லியன் டாலரிலிருந்து 300 பில்லியன் அமெரிக்க டாலர் மின்னணு உற்பத்தி மையமாக மாற வேண்டும்.
- மின்னணு உற்பத்தி இந்தியாவின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.
- உள்நாட்டு சந்தை அடுத்த 5 ஆண்டுகளில் 65 பில்லியன் அமெரிக்க டாலர்களிலிருந்து 180 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.
- 2026ம் ஆண்டுக்குள் இந்தியா மின்னணு ஏற்றுமதியில் முதல் மூன்று இடங்களில் வரும்.
- டிஜிட்டல் நுகர்வு வளர்ச்சி மற்றும் பல வகையான உலகளாவிய மதிப்பு சங்கிலியின் வளர்ச்சி ஆகிய இரண்டு காரணிகளால் இந்தியாவின் மின்னணு வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட நிலை அடையும் என்று நம்பப்படுகிறது.

## இந்தியாவின் மின்னணு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள்

- **உள்ளீடுகள் மீதான குறைந்த இறக்குமதி வரி:** உள்ளீடுகளின் மீதான அதிக வரியின் காரணமாக இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் விலை அதிகரிக்கிறது.
- குறைந்த வரிகள் மூலம் உலகளாவிய நிறுவனங்களுடன் போட்டியிடச் செய்யும்.
- படிப்படியாக சிறந்த முன்னோக்கி மற்றும் பின்னோக்கிய இணைப்புகளுடன் வேலைகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரண்டு துறைகளும் வளரும்போது அதிகரிக்கும்.
- வியாட்நாம்மில் 5 மில்லியன் தொழிலாளர்கள் நேரடி ஏற்றுமதி யாளர்களுடன் பணிபுரிகின்றனர்.
- 7 மில்லியன் தொழிலாளர்கள் ஏற்றுமதியாளர்களுக்கு பொருள்களை வழங்கும் நிறுவனங்களுக்காக வேலை செய்கிறார்கள்.
- **முறையான நிதிக்கான அணுகலை அதிகரிக்கவும் :** ஒரு மில்லியன் சிறிய உற்பத்தி நிறுவனங்களுக்கு வழக்கமான வட்டி விகிதத்தில் பிணையம் இல்லாமல் நிதியுதவி அளித்தல்.
- இந்தியாவில் 47% குறைவான சிறு நிறுவனங்களுக்குத்தான் முறையான நிதி வசதியுள்ளது.
- **சிறிய மதிப்புள்ள பொருட்களுக்கு ஏற்றுமதி செய்யும் செயல் முறையை எளிதாக்குதல்:** சிறிய மதிப்பு பொருட்களுக்கு ஜி. எஸ்.டி, சுங்கம் போன்ற பிற சம்பந்தப்பட்ட ஏஜென்சிகள் தொடர்பான இணக்கத்தை எளிமைப்படுத்தி ஒருங்கிணைக்க வேண்டும்.
- மாவட்டங்களை ஏற்றுமதி மை யங்களை போன்ற திட்டங்கள்

எளிமைப்படுத்தப்பட்டதன் மூலம் பயனடையும்.

- இந்த எளிமைப்படுத்துதல் சிறிய கைவினைஞர்கள் சிறிய நிறுவனங்களின் ஏற்றுமதிக்கு உதவும்.

**பெரிய நிறுவனங்களுக்கு முக்கிய தாயரிப்புகளை அமைக்க அழைப்பு விடுத்தல்**

- எளிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் சட்டங்கள், புதிய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு குறைந்த கார்ப்பரேட் வரி மற்றும் பிற்போக்கு வரியை ரத்து செய்தல் போன்ற அரசாங்க முன் முயற்சிகள் இந்தியாவில் நிறுவனங்களை அமைக்க வழிவகுக்கும்.
- இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான போட்டி நிறுவனங்கள்.

**புதிய நிறுவனங்களை ஆதரிக்கும் போது இந்தியா மதிப்பு கூட்டலில் கவனம் செலுத்த வேண்டும்**

- இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளில் 90 முதல் 95% கட்டப்பட்ட உயர் வருவாயை அளிப்பதுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- இறக்குமதி செய்யப்பட்ட லித்தியம் அயன் செல்கள் மற்றும் சோலார் பேனர்களை இறக்குமதி செய்யப்பட்ட சூரிய மின்கலங்களிலிருந்து உருவாக்குவது.
- இந்த வகையின் கீழ் வருகிறது.

**துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு வேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**

- உலகளாவிய மதிப்பு சங்கிலியின் பங்கேற்பதற்கு விரைவான நடவடிக்கைகளை அவசியமாகும்.
- எந்த தாமதம் நடந்தலாம் முழு மதிப்பு சங்கிலியையும் சீர்குலைக்கிறது.

## முன்னோக்கிய பாதை

- மொபைல் போன் தயாரிப்பதை தொடர்பான இரட்டை விதி முறைகள் விவகாரத்தில் தொழில் துறையினரின் அச்சங்களை தெரிவித்த அமைச்சகம் தொலைத் தொடர்பு துறை மொபைல் போன் உற்பத்தியில் நுழையப் போவதில்லை என்று அறிவித்தது.
- மொபைல் போன் உற்பத்தியில் ஒழுங்குமுறை மறு சீரமைப்பு அப்படியே இருக்கும் என்று அமைச்சகம் தெளிவுபடுத்தியது.
- அனைத்து அரசாங்க அணுகுமுறையின் அடிப்படையில் 300 பில்லியன் அமெரிக்க டாலரை இலக்கை அடைய 5 ஒப்பந்த மூலோபய சம்பந்தப்பட்ட அறிக்கையை வழங்குகிறது.
- தொலைநோக்கு ஆவணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்புகூட்டுதலைலில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலுவாக பரிந்துரைக்கிறது.
- இந்தியா அதன் தற்போதைய நிலையை சீனா மற்றும் வியாட்நாட் போன்ற நாடுகளுடன் போட்டியிடும் நிலையில் உள்ளது.
- 300 பில்லியன் அமெரிக்க டாலர் மின்னணு உற்பத்திக்கான பாதையில் இந்தியா கொண்டுவருவதற்கு மின்னணு கூறுகள் மீதான போட்டித் தன்மை கொண்ட கட்டண கட்டமைப்பு தேவை மற்றும் அனைத்து ஒழுங்குமுறை பொறுப்பையும் நீக்க வேண்டும்.
- சில துறைகளுக்கான புதிய மற்றும் திருத்தப்பட்ட ஊக்கத்திட்டங்கள் மற்றும் நிலைத்தன்மை எளிதாக வணிகம் செய்வதற்கான சிக்கல்களை தீர்க்க வேண்டிய அவசியம் உள்ளது.

## மின்னணுவியல் தேசியக் கொள்கை

- மின்னணுவியல் தேசியக் கொள்கை 2012க்கு பதிலாக புதிய தேசியக்கொள்கை மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகத்தின் உதவியால் கொண்டுவரப்பட்டது.
- இந்தக் கொள்கையானது மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்திக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மின்னணு அமைப்பு வடிவமைப்பு மற்றும் உற்பத்தி ஏற்றுமதியில் 2025 ஆண்டுக்குள் 400 பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் ஈட்டுவதை இந்தக் கொள்கை இலக்கமாகக் கொண்டுள்ளது.
- 2025 ஆண்டுக்குள் 1 பில்லியன் கைபேசிகளை உற்பத்திச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 190 பில்லியன் அமெரிக்க டாலராகும்.

## பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு போட்டித்தன்மை @100 என்ற வரைபடத்தை வெளியிட்டுள்ளது

### செய்திகளில்

- 4s கொள்கையின் அடிப்படையில் 2047ம் ஆண்டளவில் இந்தியாவை உயர் வருமானம் பெறும் நாடாக மாற்றுவதற்கு சிறந்த வளர்ச்சிக்கான இந்தியா @100 என்ற வரைபடத்தை பிரதமருக்கான ஆலோசனைக் குழு மற்றும் போட்டித்தன்மைக்கான நிறுவனம் வெளியிட்டுள்ளது.

### 4s கோட்பாடுகள்

- பகிரப்பட்ட வாய்ப்பு
- சமூக வாய்ப்பு
- நிலையான வாய்ப்பு
- திடமான வாய்ப்பு

## இந்தியாவின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையின் சவால்கள்

- அதிகரித்து வரும் சமத்துவமின்மை
- குறைந்த தொழிலாளர் பங்கேற்பு
- வளர்ச்சி வேலை உருவாக்கத்துடன் பொருந்தவில்லை
- அதிகரித்து வரும் புவிசார் அரசியல் மற்றும் காலநிலை மாற்ற சிக்கல்கள்

## 4s தீர்வுக்கான பரிந்துரை

- **கட்டமைப்பு மாற்றம் 2.0:** துறைசார்ந்த பிராந்திய சிறப்பு முயற்சிகளை பயன்படுத்தி புதிய வேலைகளை உருவாக்குதல்.
- திட்டங்களை தனியார் மற்றும் பொதுத்துறைகளை பயன்படுத்தி ஒருங்கிணைத்தல்.
- குடிமக்களுக்கான சமூக மற்றும் நிறுவனத்தடைகளை குறைத்தல்.
- சந்தைகளில் போட்டியை வலுப்படுத்துதல்

## பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழு

- இது ஒரு நிரந்தரமற்ற மற்றும் சுதந்திரமான அமைப்பாகும்.
- இது இந்திய அரசாங்கத்திற்கு பொருளாதார ஆலோசனைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டது.
- குறிப்பாக பிரதமருக்கு இது பொருளாதார சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை தெரிகிறது.
- நாடு எதிர் கொள்ளும் முக்கிய பொருளாதார பிரச்சனைகளை நடுநிலைக் கண்ணோட்டத்தில் இந்திய அரசாங்கத்திற்கு முன்னிலைப்படுத்த இக்குழு உதவுகிறது.
- பணவீக்கம் நுண் நிதி மற்றும் தொழில் துறை உற்பத்தி போன்ற பொருளாதார பிரச்சினைகளில் பிரதமருக்கு ஆலோசனை வழங்குகிறது.
- பிரதம மந்திரி ஆலோசனைக் குழு தலைவர் ஒருவரால் வழிநடத்தப்படுகிறது.
- இது புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்களை உறுப்பினர்களாக கொண்டுள்ளது.
- அதிகாரிகள் மற்றும் நிர்வாகிகள் குழுவால் அதன் செயல்பாடு ஆதரிக்கப்படுகிறது.

## செயல்பாடுகள்

- பிரதமரால் குறிப்பிடப்படும் எந்த ஒரு பிரச்சனையையும் பகுப்பாய்வு செய்து பிரதமருக்கு ஆலோசனை வழங்குகிறது.
- பெரியப் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளை எடுத்துரைத்தல் மற்றும் அது பற்றிய கருத்துக்களை பிரதமருக்கு அனுப்பலாம்.
- இது தன்னாட்சி அமைப்பாக இருக்கலாம் அல்லது பிரதமமந்திரி, வேறு எந்த மந்திரியுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.
- பொருளாதாரக் கொள்கையின் தாக்கங்கள் மற்றும் அவற்றின் வளர்ச்சிகள் சிக்கல்கள் குறித்து பிரதமரிடம் அவ்வப்போது அறிக்கையை சமர்ப்பிக்கிறது.
- பிரதமர் விரும்பும் வேறு எந்த பணியிலும் கலந்துக் கொள்ளுதல்.


## நிதியமைப்புகளில் பெரிய தொழில் நுட்ப செறிவு அபாயத்தை ஏற்படுத்துகிறது

### செய்திகளில்

- சமீபத்தில் ரிசர்வ் வங்கி கவர்னர் நிதியமைப்புகளில் பெரிய தொழில் நுட்ப செறிவு அபாயத்தை ஏற்படுத்தும் உட்பட பலப் பிரச்சனைகள் குறித்து கவலை எழுப்பினார்.

### முக்கிய கருத்துக்கள்

- அதிகளவிலான தரவுகள் உருவாக்கப்படுகின்றன.
- இத்தகைய நிறுவனங்கள் தரவுகளை மிகப்பெரிய வாடிக்கையாளர் தளம் மூலம் பெறப்பட்டு மேம்படுத்தப்படுகிறது.
- இத்தகைய முன்னேற்றங்கள் நிதி அமைப்புடன் அவர்களின் ஈடுபாட்டின் நிலை வரவிருக்கும் ஆண்டுகளில் வலுப்பெறுவதால் செறிவு ஆபத்து மற்றும் சாத்தியமான கசிவுகள் பற்றிய கவலைகளை எழுப்புகிறது.
- டிஜிட்டல் கடன் வழங்குவதற்கான கட்டுப்பபடற்ற பல்வேறு அமைப்புகளைப் பற்றியும் அவர் கூறினார்.
- ஜூலை 2022ல் UPI 90 மில்லியனிலிருந்து 200 மில்லியன் அதிகரித்துள்ளது.




SURESH

- இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் (NPCI) மூன்று தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியது.
  - UPI இல் ரூபெ கிரெடிட் கார்டுகள்
  - UPI லைட்
  - பாரத் பில் எல்லை தாண்டி பில் செலுத்துதல்
- ரூபெ கிரெடிட் கார்டுகளை UPI உடன் இணைப்பது ஜுன் மாத நாணயக் கொள்கையில் இணைப்பது.

**இந்தியாவில் நிதி நிலைத்தன்மையை வலுப்படுத்துவதில் பெரிய நிறுவனங்கள் மேற்கொள்ளும் சவால்கள்**

- வங்கிகளில் செயல்பாடு அபாயத்துடன் இருப்பது.
- நம்பிக்கையற்ற விதிகளுக்கான சவால்கள்.
- மிகவும் பெரியது தோல்வியை சந்திக்கும் சவால்கள்
- இணைய பாதுகாப்பு
- தகவல் தனியுரிமை

## சமூக பங்குச் சந்தை

### செய்திகளில்

- சமீபத்தில் செபியானது சமூக பங்குச் சந்தைக்கான கட்டமைப்பை வெளியிட்டது.
- சமூகப் பங்குசந்தை மூலம் சமூக நிறுவனங்கள் அல்லது இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் பட்டியலிட அனுமதிக்கும்.
- இதன் மூலம் சமூக பங்குச் சந்தை மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் நிதி திரட்ட கூடுதல் வழியை அனுமதிக்கும்.




### சமூக பங்குச் சந்தை என்றால் என்ன?

- இது நெறிமுறைப்படுத்தப்பட்ட சில இலாப ஈட்டும் சமூக நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் போன்ற சமூக நிறுவனங்கள், தன்னார்வ மற்றும் பொதுநல அமைப்புகள் போன்றவை நிதி திரட்டும் சமூக நோக்கத்துடன் உள்ளன.
- இது பங்கு சந்தையில் சமூக நிறுவனங்களை பட்டியலிட அனுமதிக்கிறது மற்றும் மாற்று நிதி திரட்டும் கட்டமைப்பை வழங்குகிறது.
- சமூக பாதுகாப்பு சந்தையின் கீழ் திரட்டல்சமூகநிதிகள்பூஜ்ஜியகூப்பன் பூஜ்ஜிய முதன்மைப்பத்திரங்கள் போன்ற பல கருவிகள் மூலம் முன்மொழியப்பட்டது.

### முக்கியமான சமூக பங்கு சந்தை

- சிங்கப்பூர் தாக்க முதலீட்டு சந்தை ஐக்கிய ராஜ்ஜியத்தின் சமூக பங்கு சந்தை.
- தென்னாப்பிரிக்காவின் தென்னாப்பிரிக்கா சமூக முதலீட்டு சந்தையாகும்.

### சமூக பாதுகாப்பு சந்தையின் நன்மைகள்

- இது சமூக நிறுவனங்களை ஒன்றிணைத்து முதலீட்டாளர்களில் குறிப்பிட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- இது சமூக மூலதனத்தின் மூலம் பெரிய அளவிலான திட்டங்களை கொண்டுவர உதவுகிறது மற்றும் கலப்பு நிதிகட்டமைப்புகளை ஊக்குவிக்கிறது.
- இதனால் வழக்கமான மூலதனம் சமூக மூலதனத்துடன் கூட்டுச் சேரும்.
- இது நிறுவனங்களின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பணியை பாதுகாப்பதற்கான ஒரு பொறிமுறையை வழங்குகிறது.
- இது முதலீட்டாளர்களுக்கு சமூக பொருளாதார பிரச்சனைகளை தணிக்க வாய்ப்பு உள்ள உறவுகளை முதலீடுகள் மூலம் வழங்குகிறது.

### பின்னணி

- சமூக பங்குச் சந்தை அமைப்பதற்கான முன்மொழிவு 2019 ம் ஆண்டின் மத்திய அரசின் பட்ஜெட்டின் போது முதலில் வெளியிடப்பட்டது.
- செபியானது 2019ல் சமூகப் பங்கு சந்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை வகுப்பதற்கான ஒரு பணிக்குழுவை அமைத்தது.
- அந்த பணிக்குழுவானது தனது அறிக்கையை 2020ல் சமர்பித்தது.
- இதைத் தொடர்ந்து செபி 2020ல் தொழில் நுட்பக் குழுவை மேலும் ஆலோசனைக்காக உருவாக்கியது.

### சமூக பங்குச் சந்தையின் தேவை என்ன?

- இந்தியாவில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான சமூக நிறுவனங்கள்(லாபமற்ற மற்றும் லாபநோக்கத்துடன்).
- இது பள்ளிகளின் எண்ணிக்கையை-விட இரண்டு மடங்கு அதிகமாகவும் அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கையைவிட அதிகமாகவும் உள்ளனர்.
- இந்தியாவின் 400 இந்தியர்களுக்கு ஒரு சமூக நிறுவனம் என்ற வீதத்தில் அமைந்துள்ளது.
- ஆனால் நிறுவனங்களின் முதலீடு அரசு மானியங்கள் போன்றவை குறைவாக உள்ளனர்.
- மேம்படுத்தப்பட்ட சந்தை அணுகல் சமூகத்துறை மற்றும் முதலீட்டாளர்-களுக்கு இடையே உள்ளடங்கிய ஒழுங்குமுறைகளுடன் கூடிய சந்திப்பு களத்தை எளிதாக்கும் மற்றும் முதலீட்டாளர்களுக்கிடையே

அவர்களின் பார்வையை உறுதிச் செய்யும் வகையில் இருக்கும்.


- இது ஒரே மாதிரியான எண்ணங்கள் கொண்ட பணியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஒரே தளத்தில் இணைக்கும்.
- வெளிப்படுத்தப்பட்ட மற்றும் பொறுப்புணர்வை இத்தகைய சமூக பங்குச் சந்தை உருவாக்கும்.
- சமூக நிறுவனங்களின் செயல்திறனை காண்காணிக்கும் இதன் மூலம் சமூக சம்பந்தப்பட்ட திட்டங்கள் அதிக திறனுடன் செயல்படும்.
- இது அரசாங்கத்தின் சுமையை குறைத்து சில முக்கிய சமூக பகுதிகளில் தனியார்துறை பங்கேற்பை உருவாக்கும்.

## சமூக பங்குச்சந்தைக்கான செபி கட்டமைப்பின் முக்கிய சிறப்பம்சங்கள்

- இலாப நோக்கமற்ற நிறுவனங்கள மற்றும் இலாபத்திற்கான சமூக நிறுவனங்கள் சமூக நோக்கத்தையும் தாக்கத்தையும் முதன்மை நோக்கமாக கொண்டிருக்கும் நிறுவனங்கள் சமூக பங்குச் சந்தையில் பங்குப் பெற தகுதியுடைய நிறுவனங்களாக இருக்கும்.
- சமூக பங்குச் சந்தையில் பட்டியிலிட ஆர்வமுள்ள இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் முதலில் ஒரு தொண்டு நிறுவனமாக பதிவு செய்யப்படவேண்டும்.
- மேலும் பதிவு சான்றுதல் அடுத்த 12 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
- இத்தகைய நிறுவனங்கள் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட இருக்க வேண்டும்.
- சம்மபந்தப்பட்ட மாநிலத்தின் பொது அறக்கட்டளைச் சட்டம், இந்திய அறக்கட்டளைச் சட்டம் 1882ல், சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860, பதிவுசெய்யப்பட்ட அறக்கட்டளை அல்லது நிறுவனச் சட்டம் 2013ல் பிரிவு 8ன் கீழ் ஒரு நிறுவனமாக இணைக்கப்பட வேண்டும்.
- இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் சமூக பங்குச் சந்தையில் பதிவு செய்ய குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் இருக்க வேண்டும்.
- மேலும் அவர்கள் அரசாங்கத்திற்கு சொந்தமானதா அல்லது தனியாருக்கு சொந்தமானதா அவர்கள் அறிவிக்க வேண்டும்.
- இவர்கள் வருமான வரிச் சட்டத்தின் 80 ஜி பதிவு செய்து செல்லுபடியாகும் தன்மையை பெற்றிருக்க வேண்டும்.
- கடந்த நிதியாண்டில் அவர்களின் குறைந்தபட்ச செலவில் 50 இலட்சமாகவும் கடந்த நிதியாண்டில் குறைந்த பட்ச நிதியாக 10 இலட்சமாகவும் இருக்க வேண்டும்.
- இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் பார்வை உத்தி முக்கிய நிர்வாக பணியாளர்களின் நிறுவனங்கள் கடந்த 3 ஆண்டுகளாக நிதிநிலை அறிக்கை பற்றிய தகவல்களைப் பற்றி சேகரிக்க சமூக பங்குச் சந்தை கட்டாயப்படுத்தப்படும்.
- கார்ப்பரேட் தொண்டு நிறுவனங்கள், தொழில் சார் அல்லது வர்த்தக சங்கங்கள், அரசியல் அல்லது மத அமைப்புகள், உள்கட்டமைப்பு மற்றும் வீட்டுவசதி நிறுவனங்கள் (மலிவு விலை வீடுகள் தவிர) சமூக நிறுவமாக அடையாளம் காண தகுதி பெறாது.

## முன்னோக்கிய பாதை

- சமூக பங்குச் சந்தைகளில் லாப நோக்கமற்ற நிறுவனங்கள் கவனமாக திட்டமிடப்பட வேண்டும்.
- அதன் அங்கீகாரம், மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தீவிரமான மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவைப்படுகிறது.
- மற்ற நாடுகளிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.
- குறிப்பாக ஐக்கிய ராஜ்ஜியத்தில் இது நேரிடையாக சமூக நிறுவனங்களை இணைக்கிறது.
- மேலும் கனடாவில் ஆன்லைன் மூலம் சமூக தாக்கங்களுடன் உள்ள நிறுவனங்கள் முதலீடு செய்கின்றன.

# 2. சமூக – பொருளாதார பிரச்சனைகள்

## 5வது இராஷ்ட்ரிய போஷன் மாதம் 2022

### செய்திகளில் :

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது 5வது இராஷ்ட்ரிய போஷன் மாதத்தை செப்டம்பர் 1, 2022 முதல் செப்டம்பர் 30, 2022 வரை கொண்டாடுகிறது.
- 5வது இராஷ்ட்ரிய போஷன் மாதத்தின் நோக்கமானது ஜன் அந்த்தோலனை ஜன் பகிதாரியாக மாற்றுவதன் மூலம் மாண்புமிகு பிரதமரின் முன்னோக்கு பார்வையான சுபோஷித் பாரத்தினை நிறைவேற்றுவதாகும்.
- சுபோஷித் பாரத் முன் முயற்சி மூலம் அரசானது நிறுவன ரீதியான உணவு சேவைகள் மற்றும் தெருவோர உணவு சேவைகள், பள்ளி மற்றும் கல்லூரிகளின் உணவகங்கள் ஆகியவற்றில் உணவு சேவைகள் மூலம் ஊட்டச்சத்து அடிப்படையிலான கருத்தாக்கத்தை உருவாக்க, சோதனை மற்றும் அளவிடுதல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டு உள்ளது.
- இது பொதுவான மக்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் தொற்றாத நோய்களுக்கு சிகிச்சை முறையில் குறிப்பிடுவதாகும்.

### இந்த வருடத்திற்கான நோக்கம் :

- இந்த வருடம், "மகிளா அவுர் ஸ்வஸ்த்யா" மற்றும் "பச்சா அவுர் ஷிக்ஷா" ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்துவதன் மூலம் போஷன் மாதத்தில் கிராம பஞ்சாயத்துகளை போஷன் பஞ்சாயத்துகளாக உருவாக்குவதே நோக்கமாகும்.

### செயல்பாடுகள் :

- கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் இளம்-பெண்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் வகையில் விழிப்புணர்வு இயக்கங்கள், வெளிப்பாட்டு திட்டங்கள், அடையாள இயக்கங்கள், முகாம்கள் மற்றும் கண்காட்சிகள் மூலம் ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வை நாடு முழுவதும் ஒரு மாத காலத்திற்கு நடைபெறச் செய்தல். இந்த விழிப்புணர்வானது ஸ்வச் பாரத் நோக்கத்தை உணரும் வகையில் அமைதல் வேண்டும்.
- பஞ்சாயத்து அளவில் சம்பந்தப்பட்ட மாவட்ட பஞ்சாயத்துராஜ் அதிகாரிகள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அலுவலர்களின் வழி-காட்டுதலின் கீழ் உள்ளாட்சி அலுவலர்களால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- போஷன் பஞ்சாயத்து குழுவானது அங்கான்வாடி ஊழியர்கள், ஆஷா பணியாளர்கள், துணைநிலை செவிலியர் அல்லது மருத்துவச்சி மற்றும் களப்பணியாளர்களுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் அடிப்படையான ஒருங்கிணைக்கப்பட்ட குழந்தைகள் மேம்பாட்டு சேவைகளை பெறச் செய்தல்.
- அங்கன்வாடி சேவைகள் மற்றும் சிறந்த உடல்நல செயல்பாடுகள் விழிப்புணர்வின் மூலம் அடையச் செய்தல்.
- மேலும் பல பயனாளிகளை அங்கன்வாடி சேவைகளின் வரம்பிற்குள் கொண்டுவர வளர்ச்சி அளவீட்டு இயக்கங்கள் நடத்தப்படும். அங்கன்வாடி மையங்கள், ஆஷா பணியாளர்கள், மாவட்ட நிர்வாகிகள் மற்றும் லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் போன்ற தன்னார்வ முகமைகளின் உதவியுடன் ஸ்வஸ்த் பாலக் ஸ்பர்தாவின் கீழ் வளர்ச்சி அளவீட்டு இயக்கங்கள் மாநிலங்களால் நடத்தப்படும். இரத்தசோகை பரிசோதனைக்கான சுகாதார முகாம்கள் குறிப்பாக இளம்பெண்களுக்கு அங்கன்வாடி மையங்களில் ஏற்பாடு செய்யப்படும்.
- **ஊட்டச்சத்து தோட்டங்கள் :** அங்கன்வாடி மையங்களில் அல்லது அதற்கு அருகில் போஷன் வாடிக்கா என அறியக்கூடிய ஊட்டச்சத்து தோட்டங்களை உருவாக்க நிலங்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.
- **மழைநீர் சேகரிப்பு :** அங்கன்வாடி மையங்களில் பெண்களிடையே மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து சிறப்பு கவனம் செலுத்த வலியுறுத்த வேண்டும்.
- **அம்மா கி இரசோய் :** மாநில அளவிலான செயல்பாடுகளின்

கீழ் அம்மா கி இரசோய் அல்லது பராம்பரிய சத்தான சமையல் வகைகள் பாட்டி சமையலறையில் ஏற்பாடு செய்யப்படும்.

- **உள்ளூர்திருவிழாக்களுடன்பாரம்பரிய உணவினை இணைத்தல்:** பழங்குடியின பகுதியில் உள்ள சத்தான தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்காக இந்த மாதம் முழுவதும் நீண்ட முயற்சிகள் மூலம் பாராம்பரிய உணவுகள் உள்ளூர் விழாக்களில் இணைக்கப்படும்.
- **பொம்மை உருவாக்கும் பட்டறை:** தேசிய அளவிலான பொம்மைகள் உருவாக்கும் பட்டறையானது ஏற்படுத்துவதன் மூலம் அங்கன்வாடி மையங்களில் கற்பிக்கப்பட்ட உள்நாட்டு பொம்மைகளின் உற்பத்தியானது ஊக்குவிக்கப்படும்.
- போஷன் அபியான் திட்டமானது மத்திய அரசால் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஊட்டச்சத்து வெளிப்பாட்டினை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதாகும்.
- இராஷ்ட்ரிய போஷன் மாதமானது, ஊட்டச்சத்து மற்றும் நல்ல ஆரோக்கியம் பற்றிய தளத்தில் கவனம் செலுத்த செயல்படுகிறது.
- போஷன் அபியான் நோக்கங்கள், மிஷன் போஷன் 2.0 (சக்ஷம் அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0) ஆனது ஊட்டச்சத்து உள்ளடக்கம், விநியோகம் ஆகியவற்றை வலுப்படுத்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து ஆதரவு திட்டமாக தொடங்கப்பட்டுள்ளது. இதனுடைய வெளிப்பாடானது உடல்நலம் மற்றும் நோய்த்தடுப்பாற்றல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

## உலக சுகாதார ஆணையத்தின் உடல் நலம் மற்றும் இடம்பெயர்தலின் உலகளாவிய சான்றுகளின் ஆய்வு

### செய்திகளில்

- நான்காவது, உலக சுகாதார ஆணையத்தின் உடல் நலம் மற்றும் இடம்பெயர்தலின் உலகளாவிய சான்றுகளின் ஆய்வு சமீபத்தில் வெளியாகி உள்ளது.

### அறிக்கையின் முக்கிய அம்சங்கள்

- **அகதிகள் மற்றும் இடப்பெயர்ந்த மக்களின் நுண்ணுயிர் எதிர்ப்பு தன்மை :**
  - நோய் தொற்றுகள் அதிகரிக்கும் காலத்தில் மோசமான சுகாதார அணுகல் காரணமாக அகதிகள் மற்றும் இடப்பெயர்ந்த மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.
  - இந்த மக்கள் தொகையின் சுகாதார தேவைகளின் பண்புகள் நாடுகளின் திறனை பொருத்தது என்று அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
- **பிரச்சனை**
  - எதிர் நுண்ணுயிரி தாக்குதலால் உலகம் முழுவதிலும் ஒரு வருடத்திற்கு 1.27 மில்லியன் மக்கள் இறக்கின்றனர்.
  - சர்வதேச அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த மக்கள் இந்த நூற்றாண்டு முழுவதிலும் அதிலிருந்து வருகின்ற சூழலில் 2020 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 3.5% அதாவது 281 மில்லியன் நபர்கள் உள்ளனர்.

### இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காரணங்கள்

- **முதன்மை காரணம்**
  - எதிர் நுண்ணுயிரி தாக்குதல் தவிர்க்க முடியாதது என்றாலும் நீடித்த மருந்து பயன்பாடானது உடலை அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாற்றத்தை ஏற்படுத்தும்.
- **புலம் பெயர்ந்தோர் குறிப்பிட்ட காரணங்கள்**
  - அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் தங்கள் சொந்த நாடுகளை விட்டு வெளியேறி, அவர்கள் செல்லும் நாடுகளுக்கு நோய் தொற்றுகள் அதிகரிக்க வழிவகுக்கும். அத்துடன் இடையூறுகள் மற்றும் சுகாதார அணுகலுக்கான தடைகள் என்று இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.
- **முக்கிய தடைகளாக செயல்படும் காரணங்கள்**
  - மருத்துவரை அணுக நீண்ட நேரம் காத்திருத்தல், சுகாதார சேவைகளின் மட்டுப்படுத்தப்பட்ட திறன்.
  - சுகாதாரத்திற்கு அதிக செலவு
  - நுண்ணுயிரி எதிர்ப்புகளுக்கு பொருத்தமற்ற மருந்து
  - மாற்றப்பட்ட பொருள்கள் அல்லது விளக்க தேவைகளின் பற்றாக்குறை
  - உலகெங்கிலும் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்புகளை அணுகுவதற்கு, பயன்படுத்துவதற்கு இவை முக்கிய தடைகள் என இந்த பகுப்பாய்வு வெளிப்படுத்துகிறது.
  - இது பலரை தங்கள் சுகாதார சேவைகளை பூர்த்தி செய்ய பாதுகாப்பற்ற வழிகளை நாட தூண்டுகிறது.
- **சான்றுகள்**
- நான்கு முக்கிய குறிகாட்டிகளின் அடிப்படையில் சான்றுகள் மதிப்பிடப்படுகின்றன.
  - அணுகல்
  - சரியான பயன்பாடு

- அணுகுவதற்கும், பயன்படுத்துவதற்கும் உள்ள தடைகள்
- அணுகல் மற்றும் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான தலையீடுகள்
- எவ்வாறாயினும் முதல் இரண்டின் தரவுகள் பற்றாக்குறையாகவே இருக்கின்றன. அதிக வருமானம் கொண்ட நாடுகளிலிருந்து வருகிறது மற்றும் நடைமுறையில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் இல்லை.

## நுண்ணுயிர் எதிர்ப்பு

- உலக சுகாதார அமைப்பின் படி ஆன்டிமைக்ரோபியல் ரெசிஸ்டன்ஸ் என்பது நுண்ணுயிரிகளின் (பாக்டீரியா, வைரஸ் மற்றும் சில ஒட்டுண்ணிகள் போன்றவை) ஒரு நுண்ணுயிர் எதிர்ப்பிகளை (ஆன்டிபயோடிக், ஆன்டி வைரஸ் மற்றும் ஆன்டிமலேரியங்கள் போன்றவை) அதற்கு எதிராக செயல்படுவதை நிறுத்தும் திறனாகும்.
- இதன் விளைவாக நிலையான சிகிச்சைகள் பயனற்றதாகி, நோய் தொற்றுகள் நீட்டித்து மற்றவர்களுக்கு பரவக் கூடும்.

### இந்தியாவில் நுண்ணுயிர் எதிர்ப்பை ஏற்படுத்தும் காரணங்கள்

- **ஆன்டிபயோடிக் நுகர்வு**
  - நுண்ணுயிர் எதிர்ப்பிகள் பரந்த அளவில் கிடைக்காததால், சுகாதார அமைப்பில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையை மாற்றி அமைப்பதால் நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் பொருத்தமற்ற நுகர்வு அதிகமாக உள்ளது.
- **சமூக காரணி**
  - நிதி சுமையை தவிர்க்க சுய மருந்து போன்ற பொதுமக்களிடையே தவறான ஆன்டிபயாடிக் பயன்பாடு.
  - நோயாளிகள் விரைவான நிவாரணம் குறித்த முன்கூட்டியே யோசனையுடன் வருவதால் மருத்துவர்கள் ஆன்டிபயாடிக் மருந்தினை கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.
  - மருத்துவர்கள் மற்றும் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு இடையேயான உறவானது மருத்துவர்கள் மற்றும் மருந்தாலுநர்கள் மீது புதிய எதிர்ப்பு மருந்துகளை பரிந்துரைக்க அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.
- **உணவு - விலங்குகளில் நுண்ணுயிர் எதிர்ப்புகளின் நுகர்வு**
  - உணவுக்கான விலங்குகள் மற்றும் கோழி வளர்ப்பு ஊக்கிகளாக நுண்ணுயிர் எதிர்ப்புகளை பயன்படுத்துவது ஒரு பொதுவான நடைமுறையாகும் மற்றும் இது உணவு சங்கிலியில் மேம்பாடு அடைகிறது.
- **மோசமான சுகாதாரம்**
  - கழிவு நீரின் பெரும் பகுதி சுத்திகரிக்கப்படாமல் நீர் நிலைகளில் வெளியேற்றப்படுகிறது. ஆன்டிபயாடிக் கழிவுகள், ஆன்டிபயாடிக் எதிர்ப்பு உயிரிகள் அவற்றின் மொத்த மாசுபாட்டிற்கு வழிவகுக்கிறது.

### நுண்ணுயிர் எதிர்ப்பு முன்வைத்துள்ள சவால்கள்

- தொற்று நோய்கள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் கீமோதெரபி மற்றும் முக்கிய அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றின் வெற்றிகரமான சிகிச்சைக்கு ஆன்டிபயாடிக் எதிர்ப்பு அச்சுறுத்தலாக உள்ளது.
- நுண்ணுயிர் எதிர்ப்பின் பிரச்சனையானது சுகாதார பாதுகாப்புக்கு, குறிப்பாக மருந்துகளுக்கான செலவினங்களை அதிகப்படுத்துகிறது.
- உயர்வரிசை மருந்துகள் அல்லது இரண்டாவது வரிசை விலை உயர்ந்த ஆன்டிபயாடிக்கின் பயன்பாடு சிகிச்சைக்கான செலவுகளை அதிகமாக்குகிறது.
- பிறந்த குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் இருவரும் தொற்று நோய்களுக்கு ஆளாகிறார்கள் மற்றும் பாதிக்கப்படுகிறார்கள்.

### இந்தியாவின் முன்னெடுப்பு

- **மருத்துவரின் மருந்துச்சீட்டு**
  - நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் அதிகப்படியான விற்பனையை தடுக்க, மத்திய மருந்து நிலையான கட்டுப்பாட்டு அமைப்பானது (CDSO) 24 முக்கிய எதிர்ப்பு மருந்துகளை மருத்துவரின் மருந்துச்சீட்டு இல்லாமல் விற்பனை செய்வதை தடை செய்கிறது.
- **இந்தியாவின் சிகப்பு கோடுகள் பிரச்சாரம்**
  - நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் அதிகப்படியான விற்பனையைத் தடுக்க, பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்பிகளை சிகப்பு கோட்டுடன் குறிக்க வேண்டும் என்று கோருகிறது.

○ தேசிய சுகாதார கொள்கை 2017 இக்கொள்கையானது ஆன்டிமைக்ரோபியல் எதிர்ப்பை முக்கிய சுகாதார பிரச்சனைகளில் ஒன்றாக குறிப்பிடுகிறது மற்றும் இது தொடர்பான வழிகாட்டுதல்களை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கிறது.

- **ஆன்டிமைக்ரோபியல் எதிர்ப்பின் தேசிய செயல் திட்டம் 2017**

○ மருத்துவம், கல்வி, சுற்றுச்சூழல் மற்றும் கால் நடைகளை உள்ளடக்கிய பல அரசு நிறுவனங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் நுகர்வோர் நடத்துவதையை மாற்றுவதற்கும், தொற்று கட்டுப்பாடு மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பு கண்காணிப்பினை அளவிடுவதற்கு செயல் திட்டம் கையொப்பமிட்ட பணிகளை கொண்டுள்ளது.

- **உணவுப்பொருட்களில் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை கட்டுப்படுத்துதல்**

○ மீன் மற்றும் தேன் போன்ற உணவுப் பொருள்களில் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்பிகளை கட்டுப்படுத்தும் சில வழிகாட்டுதல்களை FSSAI அமைத்துள்ளது.

## முன்னோக்கிய பாதை

- இப்போது வரை, ஆன்டிமைக்ரோபியல் நுண்ணுயிர் அச்சுறுத்தலை எதிர்த்த போராடுவதற்கு இரண்டு முக்கிய சாத்தியமான தீர்வுகள் உள்ளன.
- நுண்ணுயிரிகளின் எதிர்ப்புத் தன்மை தோன்றுவதற்கு முன் புதிய மருந்துகள் கண்டுபிடிப்பு மற்றும் கிடைக்கும் நுண்ணுயிரிகளின் எதிர்ப்பிகளின் வேகமான பயன்பாடு.
- ஒரு புதிய மருந்தை கண்டுபிடிப்பது என்பது விலை உயர்ந்த மற்றும் கணிக்க முடியாத செயல்முறையாகும். ஒரு புதிய ஆன்டிபயாடிக் தயாரிப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஒரு பில்லியன் டாலரை தாண்டி உள்ளது.
- இரண்டாவது தீர்வு சிறந்த சாத்தியமான தீர்வு ஆகும் அதாவது கிடைக்கக்கூடிய நுண்ணுயிர் எதிர்ப்பிகளை கவனமாக பயன்படுத்தி முடிந்த வரை அவற்றின் செயல்திறனை உறுதிபடுத்துதல்.
- தீவிர நோய் தொற்றுகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான திறனை பராமரிப்பதற்கு சமமான அணுகல் மற்றும் புதிய நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் சரியான பயன்பாடு ஆகியவற்றிற்கிடையே சமநிலை தேவைப்படுகிறது.

## ஆரம்பக்கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

- **சூழல்:** ஆரம்பக்கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக்கான அரசு செலவினத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 0.1% மட்டுமே மத்திய அரசின் குழந்தைகளை பாதுகாப்பதற்கான பட்ஜெட் மற்றும் நிர்வாகத்தின் அறிக்கை.

## கண்டுபிடிப்புகள்


- 3 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கான அரசின் செலவினத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வெறும் 0.1% மட்டுமே உள்ளன (அமெரிக்காவில் 0.33% பின்லாந்து 0.71%) இந்தியாவில் கிட்டதட்ட 99 மில்லியன் குழந்தைகள் 3 - 6 வயதுகுட்பட்ட பிரிவினராக உள்ளனர்.
- குழந்தைகளுக்கான ஒதுக்கீட்டில் இமாச்சலப்பிரதேசம் அதிகமாகவும் மேகலாயா குறைவாகவும் உள்ளது.

## ECCE பொருள்

- ஆரம்பக்கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி என்பது இந்திய கண்ணோட்டத்தில் பொதுவாக பிறப்பிலிருந்து 8 வயது வரை குழந்தைகளின் பராமரிப்பு மற்றும் கல்வியாகும் .

## அரசாங்கத்தின் நடவடிக்கைகள்

- தேசிய கல்வி கொள்கை 2020 ஆனது நிலையான வளர்ச்சி இலக்கு 4 இணங்க 2030 ஆம் ஆண்டுக்குள் குழந்தைகளின் ஆரம்ப கால கல்வியை உலகமயமாக்குதலை நோக்கமாகக் கொண்டுள்ளது.




- ஆசிரியர்களுக்கு வழிகாட்டவும் வளர்ச்சியின் அவசியத்தை வலியுறுத்தவும் ECCE க்கான தேசிய பாடத்திட்டம் மற்றும் கல்வியியல் கட்டமைப்பை NCERT உருவாக்கும்.
- **சர்தாக்:** தரமான கல்வியின் மூலம் ம

ாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான முன்னேற்றம் (தேசிய கல்விக் கொள்கை 2020 க்கான அமலாக்கத் திட்டம்)

- சமக்ரா சிக்ஷா அபியான், ஐசிடிஎஸ் மற்றும் தேசிய சுகாதார இயக்கம்.

## தற்கொலையை குற்றமற்றதாக்குதல்

### ஏன் செய்திகளில்

- இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 309 யை ரத்து செய்யும் வேண்டுகோளுக்கான மறுமொழி கூறுதல், இந்த பிரிவானது தற்கொலைக்கு முயற்சி செய்தல் குற்றமாகும் என கூறுகிறது.
- உச்சநீதிமன்றத்தின் நீதிபதி வி. ராமசுப்பிரமணியன் மன மற்றும் உடல் நலச் சட்டம் 2017 ல் ஆனது சில தீர்வுகளை முன்வைக்கிறது மற்றும் ஒரு முழுமையான தீர்வை வழங்குவதாக கூறியுள்ளார்.

### முக்கிய குறிப்புகள்

- தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் 2019 - 21 - ன் சமீபத்திய அறிக்கையின்படி 54 ஆண்டுகளின் 17.56 லட்சத்துக்கும் அதிகமான பெண்கள் உட்பட 4.7 கோடி பேர் தற்கொலை செய்து கொள்வதாக இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.
- இந்தியாவில் தற்கொலைகளின் விகிதம் 1998 முதல் ஒரு ஆபத்தான விகிதாசாரத்தில் அதிகரிப்பதற்காக அதாவது 104,713 நபர்களில் 43,027 பெண்கள் உட்பட தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.
- 1998 ஆம் ஆண்டிலிருந்து தற்கொலை அதிகரிப்பு வீதமானது செங்குத்து விகிதத்தில் அதிகரித்துள்ளது.
- அந்த வருடத்திலிருந்து தற்கொலை செய்து கொள்வதற்கான எண்ணிக்கையானது 6 இலக்குகளை கொண்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு 1,65,033 தற்கொலை சம்பவங்கள் பதிவாகி உள்ளது.
- 2019 ல் 1,39,123 ம், 2020 - ல் 1,53,052 தற்கொலைகள் நடந்து உள்ளன.
- 15 – 19 வயதுகளுக்கிடையே நிகழும் இறப்புகளில் தற்கொலை செய்யும் முறையானது நான்காவது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய தற்கொலை சம்பவங்களில் 77% குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டக்கூடிய நாடுகளில் அரங்கேறுகிறது.
- பூச்சிக் கொல்லி மருந்தை உட்கொள்வது, தூக்கில் தொங்குவது மற்றும் துப்பாக்கிகள் ஆகியவை உலகளவில் தற்கொலை செய்வதற்கான முறைகளில் ஒன்றாகும்.
- 2021 ஆம் ஆண்டில் தற்கொலையால் பாதிக்கப்பட்டவர்களின் தினசரி ஊதியம் பெறுவோர் அதிக அளவில் இருந்துள்ளனர் அதாவது இந்தியாவின் மொத்த தற்கொலை செய்யும் நபர்களில் 42,004 பேர் தினக்கூலிகள் ஆவார். மொத்த விகிதத்தில் 25.6% ஆகும்.
- இந்திய பெண்கள் இடையே தற்கொலை செய்யும் விகிதம் கடந்த 10 ஆண்டுகளில் குறைந்து இருந்தாலும், உலக விகிதத்தை விட 2 மடங்கு அதிகமாக உள்ளது.




### தற்கொலை என்றால் என்ன?

- தற்கொலை என்பது தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று குறிக்கோளுடன் மக்கள் தங்களைத் தாங்களே தீங்கிழைத்துக்கொள்வதும், அதன் விளைவாக அவர்கள் இறந்து போவதும் ஆகும்.
- தற்கொலை முயற்சி என்பது, மக்கள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள வேண்டும் என்று குறிக்கோளுடன் தங்களைத் தாங்களே காயப்படுத்திக் கொள்கிறார்கள், ஆனால் அவர்கள் இறக்கவில்லை.
- தற்கொலை என்பது தீவிரமான பொது உடல்நிலை பிரச்சனையாகும் மற்றும் எஞ்சியிருக்கும் குடும்பங்கள், நண்பர்கள் மற்றும் சமூகங்களுக்கு அளவிட முடியாத சோகத்தினை தருகிறது.
- தற்கொலை என்பது மனச்சோர்வு, பதட்டம் மற்றும் பொருள் பயன்பாட்டு கோளாறுகள் போன்ற மனநல நிலைமைகளுடன் தொடர்புடையது. குறிப்பாக கண்டறியப்படாமல் அல்லது சிகிச்சை அளிக்கப்படாமல் இருந்தால் பாதிப்பை அதிகமாக்குகிறது.

### இந்தியாவில் தற்கொலை தொடர்பான சட்டம்

- **இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 309**
  - 19 ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களால் கொண்டுவரப்பட்ட இந்திய தண்டனைச் சட்டம் ஒருவரை கொள்வது அல்லது தற்கொலை செய்து கொள்ள தூண்டுவது அரசுக்கு எதிரான குற்றமாகவும், மதத்திற்கு எதிராக குற்றமாகவும் கருதப்பட்ட காலத்தின் சிந்தனையை பிரதிபலிக்கிறது.




- இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 309 ஆனது தற்கொலை செய்ய முயற்சித்தல் தண்டனைக்குரிய குற்றமாக கருதப்பட்டு 1 வருட முதல் சிறை தண்டனையும் அல்லது அபராத தொகையும் அல்லது இரண்டுமே விதிக்கப்பட்டுள்ளது.

- **மனநல பாதுகாப்புச் சட்டம் 2017**
    - பிரிவு 115 ஆனது இந்திய தண்டனைச் சட்டத்தின் 309 ன் கீழ் உள்ள அனைத்து கூறுகளும், தற்கொலை முயற்சிக்கும் எந்த நபரும் வேறு விதமாக நிரூபிக்கப்படாவிட்டால் கடுமையான மன அழுத்தம் இருப்பதாக கருதப்படுவார். மேலும் இந்த குறியீட்டின் கீழ் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கபடமாட்டார்.

### தற்கொலை செய்வதை குற்றமாக்குதலில் உள்ள எதிர்மறையான தாக்குதல்கள்

- யுனைடெட் ஃபார் குளோபல் மெண்டல்ஹெல்த் என்ற அமைப்பின் அறிக்கையின் படி சமூகத்தில் தற்கொலை செய்தலானது நான்கு எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது.
    - தரவுகளை அடக்குவதற்கு வழிவகுக்கிறது.
    - தற்கொலை செய்யும் எண்ணத்தை பொது உடல்நல பிரச்சனையாக கருதுதலை குறைக்கிறது.
    - ஒருங்கிணைக்கப்பட்ட முடிவுகளை திணிக்கிறது.
    - மனநல பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மக்களின் இருப்பிடம் சார்ந்த பிரச்சனை தீவிரமடையும்

### தற்கொலையை குற்றமாக்குவது மீதான நீதிமன்ற நிலைப்பாடு

- **1970 - 71:** இந்திய சட்ட ஆணையம், தற்கொலைக்கு தூண்டியவரின் குற்றத்தை தண்டனைச் சட்டத்திலிருந்து நீக்க பரிந்துரைத்தது.
- 1985 ல் டெல்லி உயர்நீதிமன்றம் எதிர் சஞ்சய் குமார் பார்ட்டியா வழக்கில் "மனித சமுதாயத்திற்கு தகுதி அற்றது" என்று தீர்ப்பு அளித்தது.
- 1986 ஆம் ஆண்டில் பம்பாய் உயர்நீதிமன்றம் இந்திய அரசியலமைப்பில் விதி 16 மற்றும் 21 யை மீறுவதாக கூறியது.
- 1994 ஆம் ஆண்டில் 2 நீதிபதிகளைக் கொண்ட உச்சநீதிமன்றத்தின் இருக்கை எதிர் இந்திய அரசு வழக்கில் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 309 ஆனது (தற்கொலைக்கு முயற்சித்தல்) அரசியலமைப்பிற்கு எதிரானது என தீர்ப்பளித்தது.
- 1996 ஆம் ஆண்டில் ஜியான் கவுர் வழக்கில் 5 நீதிபதிகள் கொண்ட அரசியலமைப்பு இருக்கையானது 1994 ஆண்டு தீர்ப்பை நிராகரித்து, வாழ்வதற்கான உரிமையை இறப்பதற்கான உரிமை இல்லை என்று கூறியது மற்றும் பிரிவு 309 னை செல்லுபடி தன்மையை உறுதி செய்கிறது.
- 2011 ல் உச்சநீதிமன்றம் தற்கொலை முயற்சியை குற்றமற்ற தாக்குவதை பரிசீலிக்க பாராளுமன்றத்திற்கு பரிந்துரைத்தது.
- தற்போது கேரள உயர்நீதிமன்றமானது தற்கொலை நடத்தைகளில் ஈடுபடுபவர்களுக்கு கணிசமான தண்டனை மற்றும் அபராதம் விதிப்பது மனித கண்ணியத்தை அவமதிப்பதாக கூறியுள்ளது.
- நீதிபதி கே. ஹரிபால் (ஓய்வு பெற்றதிலிருந்து) தற்கொலை நடத்தை பொதுவாக மனநோய்க்கான அறிகுறி அல்லது மன உளைச்சலின் ஒரு செயலாகும் என்பதை கவனித்துள்ளார். தற்கொலை எண்ணத்தில் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட மற்றும் உளவியல் வாழ்க்கையில் உதவி தேவை. சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்ல.
- உச்சநீதிமன்றத்தின் பொது வழக்கு எதிர் இந்திய அரசு மற்றும் 2018 ல் மற்றொரு வழக்கு ஆகிய இரண்டும் பாராளுமன்றத்தை தற்கொலை எண்ணத்தை குற்றமற்றதாக கருதுவதற்கு பரிந்துரைத்தது.

### தற்கொலை எண்ணத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள்

- தற்கொலை தடுக்கக்கூடியது மற்றும் உயிர்களை காப்பாற்றுவதற்கும், ஆரோக்கியமான மற்றும் வலுவான தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களை உருவாக்குவதற்கு ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.

SURESH

- தற்கொலைதடுப்பிற்கு ஒரு விரிவான பொது சுகாதார அணுகுமுறை தேவை. அதாவது :
  - பொருளாதார ஆதரவு வழங்குதல்.
  - நிலையான திட்டங்களை வகுத்தல்
  - தற்கொலைக்கு எதிரான கவனிப்பை வலுப்படுத்துதல்.
  - காப்பீட்டு திட்டத்தில் மனநல நிலையை உள்ளடக்குதல்
  - கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் வலுவான சேவை வழங்குதல்.
  - பாதுகாப்பான சுற்றுச்சூழலை உருவாக்குதல்.
  - தற்கொலை செய்யும் எண்ணங்களை உடையவர்களிடம் அந்த எண்ணத்தைக் குறைத்தல்
  - அமைப்பு ரீதியான குற்றங்கள் மற்றும் கலாச்சாரம்
  - சமூக ரீதியான திட்டங்கள் அதிகப்படியான குடிப்பழக்கத்தை குறைத்தல்.
  - ஒருங்கிணைப்பினை ஊக்குவித்தல்
  - விதிமுறை திட்டங்கள்
  - சமூக ஈடுபாடு நடவடிக்கைகள்
  - பிரச்சனைகளை சமளிப்பதற்கு மற்றும் சிக்கல்களை தீர்பதற்கான திறன்களை கற்றுக்கொடுத்தல்.
  - சமூக உணர்ச்சி கற்றல் திட்டங்கள்
  - குழந்தை வளர்ப்பு திறன் மற்றும் குடும்ப உறவுமுறை திட்டங்கள்
  - பாதிப்பில் உள்ள நபர்களுக்கு ஆதரவு வழங்குதல்.
  - நெருக்கடி தலையீடு
  - தற்கொலை எண்ணத்தில் உள்ளவர்களுக்கான சிகிச்சை
  - தடுப்பதற்கான முயற்சிகள்

## தற்கொலைக்கு முயற்சிப்பதை குற்றமற்றதாக மாற்றிய நாடுகள்

| நாடுகள் | குற்றமற்றதாக அறிவித்த ஆண்டு | சட்ட அதிகாரத்தைக் குறிப்பிடாமல் சான்றிதழ் |
|---|---|---|
| ஸ்வீட்சர்லாந்து | - | ஆம் |
| ஜெர்மனி | 1751 | ஆம் |
| பிரான்ஸ் | 1791 | ஆம் |
| நார்வே | 1842 | - |
| பின்லாந்து | 1910 | - |
| டென்மார்க் | 1868 | இல்லை |
| சுவீடன் | 1864 | - |
| இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் | 1961 | இல்லை |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | - | இல்லை |
| ஹாங்காங் | 1967 | இல்லை |
| ஆஸ்திரேலியா | - | இல்லை |
| நியூசிலாந்து | 1961 | இல்லை |
| கனடா | 1972 | இல்லை |
| அயர்லாந்து | 1993 | இல்லை |
| ஸ்ரீலங்கா | 1998 | - |

## தற்கொலைக்கு முயற்சிப்பதை குற்றமாக்கிய நாடுகள்

- தற்கொலை முயற்சியை குற்றமாக கருதும் நாடுகள் முக்கியமாக இரண்டு பிராந்தியங்களை சார்ந்தவை.
  - **வட ஆப்பிரிக்கா பிராந்தியம் :** ஆப்பிரிக்கா பிராந்தியத்தில் கென்யா, மலாவி, நைஜீரியா, ருவாண்டா, தான்சானியா, கானா மற்றும் உகன்டா ஆகிய நாடுகளில் மரணத்தை ஏற்படுத்தாத தற்கொலை நடத்தை தற்பொழுது குற்றமாக அறிவித்துள்ளது.
  - எ.கா. ருவாண்டாவில் மரணத்தை ஏற்படுத்தாமல் தற்கொலைக்கு முயற்சிக்கும் நபர்களுக்கு 2 - 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது.
- **தெற்கு ஆசிய பிராந்தியம் :** தெற்கு ஆசிய பிராந்தியத்தில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர், பங்காளதேஷ் ஆகிய நாடுகள் தற்கொலை முயற்சியை தொடர்ந்து குற்றமாக கருதுகின்றனர்.
  - சிங்கப்பூரில் தற்கொலைக்கு முயற்சிக்கும் நபர்க்கு ஒரு ஆண்டு வரை சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது.

### தற்கொலைக்கு முயற்சிப்பதை குற்றமற்ற தாக்கிய நாடுகள்

- தற்கொலை முயற்சியை குற்றமாக கருதுகின்ற நாடுகள் தற்கொலைக்கு தூண்டுதல், தற்கொலை உடன்படிக்கைகள் மற்றும் சில சமயங்களில் வேண்டுமென்று சுய தீங்கு விளைவிப்பதை தொடர்ந்து குற்றமாக்குகின்றன.
- தெற்காசியாவைச் சேர்ந்த இலங்கை, இந்தோனேசியா, மாலத்தீவு மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட சில நாடுகள் தற்கொலை முயற்சியை குற்றமாக கருதுவது இல்லை.

### முன்னோக்கிய பாதை

- உத்தியோக பூர்வ நிலைப்பாட்டில் 'சட்ட' நிலையிலிருந்து 'மருத்துவ' ரீதியான தற்கொலை முயற்சியை அணுகுவதுடன், தற்கொலை முயற்சியை ஈடுபடும் அனைவருக்கும் மனநல பாதுகாப்பான அணுகலை வழங்குவதே கொள்கை கண்ணோட்டத்தில் முக்கிய சவாலாக உள்ளது.
- தற்கொலை முயற்சியில் இருக்கும் நோயாளிகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் மனநல ஆலோசனைக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.
- இச்சூழலில், நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஆரம்ப மனநல பாதுகாப்பு சேவைகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்வது மிகவும் அவசியமானது.
- தற்கொலைக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொது சுகாதார நடைமுறையை மேலும் அதிகரிப்பது தேவையாகும் அதிகரிக்கப்பட்ட விழிப்புணர்வு பிரச்சாரம், பொதுவாக பயன்படுத்தப்படும் தற்கொலை முறையான (பூச்சிக்கொல்லி, பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள்) மற்றும் ஆல்கஹால் போன்ற எளிதாகும் காரணிகளை கட்டுப்படுத்துவதற்கான கட்டுப்பாடுகள்.
- சமூக நலன், கல்வி மற்றும் பிற தொடர்புடைய துறைகளுடன் மனநலத்தை ஒருங்கிணைக்கும் பயனுள்ள கட்டமைப்பை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது.
- முடிவில் இந்தியாவில் தற்கொலை முயற்சியை குற்றமற்றதாக அறிவிக்கக் கூடிய என்பது வலியுறுத்தக்கூடியது ஆனால் நீண்டகாலமாக தாமதமாக செயல் படுகிறது.
- குற்றமற்றதாக்குதல் என்பது தற்கொலை முயற்சிக்குபின் ஏற்படும் அதிர்ச்சி மற்றும் சாத்தியமான செயல்களைக் குறைக்கும்.
- எவ்வாறாயினும், மனநல காப்பீட்டை மேம்படுத்துவதும் தற்கொலைக்கு முயன்ற அனைவருக்கும் அத்திவாசிய மனநல சேவைகளை வழங்குவதற்கான கட்டமைப்பை வழங்குவதும் அவசியம்.

## XI. அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### நாசாவின் ஆர்டிமிஸ் I திட்டம்

### செய்திகளில்

- அப்பலோவிற்கு பின் 50 ஆண்டுகளுக்கு பிறகு நாசா நிலவிற்கான ராக்கெட் சோதனை செய்தது.
- 322 அடி உடைய ராக்கெட்டானது கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது.

### சூழல்

- நாசா நிலவிற்கான ராக்கெட்டை முதன்முறையாக செலுத்துவதற்கு தயார்படுத்தியுள்ளது.
- விண்வெளி ஏவுதல் அமைப்பிலிருந்து பிரிந்த பிறகு காப்ஸ்யூல் சூரிய வரிசைகளில் நிலைப்படுத்தப்படுகிறது மற்றும் பூமியல் சுற்றுப்பாதையில் இருந்து புறப்படும் பல நாள் பயணத்திற்கு பிறகு நிலவுக்கு சென்றடையும்.
- சந்திரனின் சுற்றுப்பாதையை சுற்றி சந்திரனின் மேற்பரப்பிலிருந்து 60 மைல்களுக்கு அருகில் ஓரியனை நிலைநிறுத்த நாசா திட்டமிட்டுள்ளது.
- பல்வேறு கட்டங்களை கடந்து 42 நாட்கள் 1.3 மில்லியன் மைல்கள் ஆர்மிடிஸ் I பயணம் செய்கிறது.
- ஓரியன் திருப்புதலுக்கு சந்திரனின் ஈர்ப்பு விசையை பயன்படுத்துகிறது. பூமியின் சுற்றுப்பாதையில் மீண்டும் ஒரு பாதையை அமைக்கிறது.
- ஓரியன் பசுபிக் பெருங்கடலில் தெரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கலிப்போர்னியா, சாண்டியாகோ கடற்கரையில் நாசாவின் குழு மற்றும் பாதுகாப்பு நபர்கள் கொண்ட குழுவானது காப்ஸ்யூல் மீட்டெடுக்கும்.

## நாசாவின் ஆர்டிமிஸ் திட்டம்

- ஆர்டிமிஸ் என்பது முடுக்கம், மறு இணைப்பு எதிரொளிப்பு மற்றும் சூரியன் மற்றும் சந்திரனின் தொடர்புகளின் மின் இயக்கவியல்.
- சந்திரனுக்கான நாசாவின் அடுத்த திட்டமாகும்.
- ஆர்டிமிஸ் திட்டத்தின் மூலம், நாசா 2024 ஆம் ஆண்டுக்குள் சந்திரனின் முதல் பெண்ணையும் அடுத்த ஆண் நபரையும் தரை இறக்கும்.

**இது மூன்று தொடர்ச்சியான பணிகளைக் கொண்டுள்ளது.**

- ஆர்டிமிஸ் 1, சந்திரனின் சுற்றியும் அதற்கு அப்பாலும் செயல்படுத்தும் நபர் இன்றி பயணிக்கக்கூடிய சோதனை விமானம்.
- ஆர்டிமிஸ் 2, சந்திரனுக்கு அப்பால் மனிதர்களை இந்த விமானம் இதுவரை சென்றிராத தூரத்திற்கு அழைத்துச் செல்லும்.
- ஆர்டிமிஸ் 3, சந்திரனின் மேற்பரப்பில் அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக சந்திரனின் முதல் பெண் விண்வெளி வீரரை தரை இறக்கும் பணியாகும்.
  - 1972 ஆம் ஆண்டு அப்போலோ 17 க்கு பிறகு ஆர்டிமிஸ் 3 அமெரிக்கா விண்வெளி மையத்தால் முதல் குழுவினை சந்திரனின் தரை இறக்கும்.
  - சூரியனின் கதிர் வீச்சு சந்திரனின் பாறை மிக்க தகுதியை தாக்கும் பொழுது அதை பாதுகாக்க எந்த காந்தப்புலமும் இல்லை என்பதை இது அளவிடும்.

### விண்வெளி ஏவுதள அமைப்பு ராக்கெட்

- நாசாவின் விண்வெளி ஏவுதள அமைப்பானது அல்லது விண்வெளி ஏவுதள அமைப்பானது ஒரு சூப்பர் கெவி லிஃபிட் ஏவுகணை அமைப்பாகும். இது புவியின் சுற்றுப்பாதைக்கு அப்பால் மனித ஆய்விற்கான அடித்தளத்தை அமைப்பதாகும்.
- இதற்கு முன்னோடி இல்லாத ஆற்றல் மற்றும் திறன்களுடன் விண்வெளி ஏவுதள அமைப்பு மட்டுமே ஓரியன், விண்வெளி வீரர்கள் மற்றும் சரக்குகளை சந்திரனுக்கு நேரடியாக ஒரு பயணத்தில் அனுப்பக்கூடிய ஒரே ராக்கெட்டாகும்.
- அதிக நிலைக்கொண்ட சரக்குகள் அதிக திறனுடைய மற்றும் ஆற்றல் விண்வெளி ஏவுதள அமைப்பானது உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ராக்கெட்டாகும்.
- இந்த விண்வெளி ஏவுதள ராக்கெட் அமைப்பானது இணைக்கக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சந்திரன், செவ்வாய், சனி, வியாழன், போன்ற கோள்களுக்கான ரோபோட்டிக் அறிவியல்திட்டங்களை செயல்படுத்த இந்த திட்டம் சாத்தியமாக்குகிறது.
- இந்த விண்வெளி ஏவுதள அமைப்பானது நிலவிற்கு 1000 மடங்கு முன்னதாகவே சரக்குகளையும் ஓரியன்களையும் செலுத்துகிறது.

### ஆர்டிமிஸ் 1 இயக்கம் திட்டத்தின் நோக்கம்

- பணியின் முதன்மையான செயல் பாட்டு விலக்கு பாதுகாப்பான குழுவின் நுழைவு, இறங்குதல், வெடித்தல் மற்றும் மீட்பு ஆகியவற்றை உறுதி செய்வதாகும்.
- ஆர்டிமிஸ் 1 என்பது சந்திரனைச் சுற்றி ஒரு நீடித்த நீண்டகால இருப்புக்கான அடித்தளத்தை அமைக்கும் ஒரு விண்வெளி வீரர் இல்லாத விமான சோதனையாகும்.
- எதிர்கால ஏவுக்களங்களில் விண்வெளி வீரர்கள் எந்தவிதமான அனுபவத்தை பெறுவார்கள் என்பதை பற்றிய உணர்வை பெற இது உதவும்.
- ஆர்டிமிஸ் 1 விண்வெளி ஆய்வு மற்றும் செவ்வாய் கிரகத்தில் பயணிக்க தயாராகும் நாசாவின் நீண்டகால இலக்குகளில் ஒரு முக்கியமான படியாகும்.

## சந்திரக்கான இந்தியப் பயணங்கள்

| சந்திராயன் 1 | சந்திராயன் 2 | சந்திராயன் 3 | சந்திர துருவ ஆய்வு திட்டம் (LUPEX) |
|---|---|---|---|
| பிஎஸ்எல்வி சி – 11 ன் மாற்றியமைக்கப்பட்ட வடிவமானது 22 அக்டோபர் 2008 ல் ஏவப்பட்டது. | நிலவின் தோற்றம் மற்றும் பரிணாமம் வளர்ச்சியை நன்கு புரிந்து கொள்வதற்காக நிலப்பரப்பு ஆராய்ச்சி மற்றும் கனிம வியல் ஆய்வுகளுக்காக இந்த பணி நடத்தப்பட்டது. | நிலவின் மூன்றாவது ஆய்வுக்கான திட்டம் | இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம் இணைந்து கூட்ட ரோபோட்டிக் நிலவு திட்டமானது LUPEX ஆகும். |

| | | | |
|---|---|---|---|
| **சாதனைகள்** சந்திரனின் உள்ள மண்ணில் நீருக்கான மூலக்கூறுகள் இருப்பதை கண்டறிந்தது | GSLV MK III - M1 னால் ஜூலை 22, 2019 அன்று ஏவப்பட்டது. | மெதுவாக சந்திரனின் தறை இறங்குவதில் இந்த ஏவுகனையின் நோக்கமாகும். | 2024 ஆம் ஆண்டுக்குள் நிலவின் தென் துருவ பகுதியை ஆராய்வதற்காக சந்திரனில் ரோவர் மற்றும் லண்டரை அனுப்பும் நோக்கம் கொண்டது. |
| இது நிலவின் கனிமவியல் பற்றிய உயர்திறன் அலைக்கற்கை தரவை வழங்கியுள்ளது. சந்திரனின் மனிதர்கள் தங்கக் கூடிய இடமாக கருதக்கூடிய சந்திரனின் மேற்பரப்பில் ஒரு பெரிய குகை இருப்பதை கண்டறிந்துள்ளது. | சந்திரனில் மேற்பரப்பில் நீர் மற்றும் அதனுடைய தடயங்கள் இருப்பதை கண்டறிவதை நோக்கமாக கொண்டது. | சந்திராயன் 2 திட்டத்தின் உறுப்புகளை இந்த திட்டம் பயன்படுத்தி உள்ளது. | இந்திய விண்வெளி ஆய்வு மையமானது லேண்டரை வழங்குகிறது ஜப்பான் விண்வெளி ஆய்வு மையமானது H3 செலுத்தும் வாகனத்தையும் மற்றும் ரோவரை வழங்க பொறுப்பாக உள்ளது. |

## தொற்றாத நோய்கள்

### செய்திகளில்

- உலக சுகாதார நிறுவனம் தொற்றாத நோய்கள் பற்றிய ‘கண்ணுக்கு தெரியாத எண்கள் தொற்றாத நோய்களில் உண்மையான அளவு’ என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலக சுகாதார நிறுவனம் ஒரு தளத்தை தொடங்கியுள்ளது, இது முதல்முறையாக 194 நாடுகளுக்கு தொற்றாத நோய்கள் தொடர்பான அனைத்து உலக சுகாதார நிறுவனத்தின் தரவுகளையும் ஒன்றாக கொண்டு சேர்க்கிறது.
- இந்திய பொது சுகாதார அறக்கட்டளையின் தலைவர், தொற்றாத நோய்களை பொது சுகாதார அவசர நிலை என்று விவரித்துள்ளார்.

### அறிக்கையின் கண்டுபிடிப்புகள்

- 2019 ல் இந்தியாவில் 66% இறப்புகளுக்கு தொற்று அல்லாத நோய்கள் வழிவகுத்துள்ளன.
- மேலும் 30 மற்றும் 70 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 22 % பேர் இறப்பிற்கு காரணமாக உள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியாவில் 60.40 லட்சத்திற்கும் அதிகமானோர் தொற்றாத நோய்களால் இறந்து உள்ளனர்.
- ஒவ்வொரு 2 வினாடிக்கும் 70 வயதுக்குட்பட்டவர்களில் ஒரு நபர் தொற்றாத நோய்களால் இறக்கிறார். 86% இறப்பானது குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் ஈட்டக்கூடிய நாடுகளில் பதிவாகியுள்ளது.
- தொற்றாத நோய் இறப்புகள் இதயநோய் (25 லட்சத்திற்கும் மேலான இறப்பு) நாள்ப்பட்ட சுவாச நோய் (11 லட்சத்திற்கும் அதிக–மான இறப்புகள்) நீரிழிவு நோய் (3.5 லட்சத்திற்கும் அதிகமான இறப்புகள்) நாள்ப்பட்ட நுரையீரல் தொடர்பான நோய் மற்றும் புற்றுநோய் ஆகிய–வற்றால் ஏற்படுகிறது.
- புகையிலை பயன்பாடு ஆரோக்கிய–மற்ற உணவு பழக்கம், தீங்கு விளைவிக்கும் மதுபானம், உடல் செயலற்ற தன்மை மற்றும் காற்று மாசுபாடு ஆகியவற்றால் ஏற்படும் 95% அதிகமான உலகளாவிய இறப்புகளில் வகை 2 நீரிழிவு நோய் ஏற்படுகிறது.
- புற்றுநோய் ஆனது ஆறில் ஒருவருக்கு மரணத்தை ஏற்படுத்து–கிறது. ஆண்டுக்கு 9.3 மில்லியன் மக்கள் மற்றும் 44% புற்றுநோய் இறப்புகள் ஆரோக்கியத்திற்கு ஏற்படும் அபாயங்களை நீக்குவதன் மூலம் தடுக்கப்பட்டிருக்கலாம் அல்லது தாமதப்படுத்தபட்டிருக்கலாம்.
- கோவிட் - 19 ஆனது தொற்றாத நோய்களுக்கும், தொற்றும் நோய்களுக்கும் தொடர்பினை ஏற்படுத்தியது. பெருந்தொற்று தொடக்கக் காலத்தில் 75% நாடுகள் தொற்றாத நோய்களுக்கான அடிப்படை சேவைகளை வழங்குவதில் இடையூறு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளன.

### வகை 2 நீரிழிவு நோய் பற்றி

- நீரிழிவு நோயானது தொற்றாத நோய்களில் மிகவும் முக்கிய–மானதாகும்.
- வகை 2 நீரிழிவு நோய் என்பது ஒரு நாள்ப்பட்ட நிலையாகும். வகை 2 நீரிழிவு நோயுடன் உடலில் இரத்த சர்க்கரை (குளுக்கோஸ்) செயலாக்கும் இடத்தில் பாதிக்கிறது. இதனால் உடல் போதுமான இன்சூலினை உற்பத்தி செய்யாது அல்லது இன்சூலினை எதிர்க்கிறது.
- இது உயர் இரத்த சர்க்கரை, இன்சூலின் எதிர்ப்பு மற்றும்

SURESH

இன்சுலின் குறைபாடு ஆகிய-வற்றால் வகைப்படுத்தப்படுகிறது.

- வகை 2 நீரிழிவு நோயானது முதன்மையாக உடல் பருமன், உடற்பயிற்சின்மை, ஆல்கஹால் மற்றும்புகையிலை ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறை ஆகியவற்றின் விளைவாக ஏற்படுகிறது.
- அதிகமான தாகம் எடுத்தல், அடிக்கடி சிறுநீர் கழித்தல், பசியின்மை, சோர்வு மற்றும் மங்கலான பார்வை இதன் அறிகுறிகள் ஆகும்.
- சிகிச்சையில் உணவு முறை, உடற்பயிற்சி, மருந்துகள் மற்றும் இன்சுலின் சிகிச்சை ஆகியவை அடங்கும்.

## தேஜஸ் 2.0

### செய்திகளில்

- தேஜஸ் போர் விமானத்தின் வெற்றியை கொண்டாடுவதற்கு இந்திய அரசாங்கம் உள்நாட்டு ஜெட் விமானத்தின் மிகவும் திறமையான மற்றும் சக்தி வாய்ந்த வளர்ச்சியை நிரூபித்துள்ளது.
- பிரதமர் தலைமையிலான பாதுகாப்புக்கான அமைச்சரவைக் குழு (சிசிஎஸ்) தேஜஸ் மார்க் 2 வை முன்மாதிரிகள், விமான சோதனை மற்றும் சான்றிதழ்களுடன் உருவாக்குவதற்கான திட்டத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

### பாதுகாப்பிற்கான அமைச்சரவை குழு பற்றி

- குறிப்பிடத்தக்க நியமனங்கள், தேசிய பாதுகாப்பு பிரச்சனைகள், இந்தியாவின் எல்லை செலவுகள் தொடர்பான முக்கிய முடிவுகள் இந்தியாவில் பாதுகாப்பான அமைச்-சரவை குழுவால் எடுக்கப்படுகிறது.
- பிரதமர் இந்தக் குழுவிற்கு தலைமை தாங்குவார். இது பின்வரக்கூடிய உறுப்பினர்களை உள்ளடக்கும்.
    - வெளியுறவுத்துறை அமைச்சர்
    - உள்துறை அமைச்சர்
    - நிதி அமைச்சர்
    - பாதுகாப்பு அமைச்சர்

### செயல்பாடுகள்

- பாதுகாப்பு தொடர்பான அனைத்து சிக்கல்களையும் சமாளிக்கிறது.
- சட்டம் ஒழுங்கு மற்றும் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான பிரச்சனை-களை கையாள்கிறது.
- உள் அல்லது வெளிப்புற பாதுகாப்பு தாக்கங்களை கொண்ட வெளிநாட்டு விவகாரங்கள்தொடர்பானகொள்கை விஷயங்களை கையாள்வது.
- சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் பரிசீலிக்க ரூ. 1000 கோடி பாதுகாப்பு துறைக்கும் மற்றும் பாதுகாப்பு துறையின் ஆய்வின் அமைப்புக்கும் ஒதுக்கப்படுகிறது.
- அணுக்கரு ஆற்றல் தொடர்பான விஷயங்கள்.

### ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் கழகத்தில்ஏவுகனையைதாக்கக்கூடிய தேஜஸ் பற்றி

- தேஜஸ் ஆனது ஏவுகனையை தாக்கக்கூடியது.
- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் கழகத்தின் தேஜஸ் ஆனது ஒரு இஞ்சின், கழிமுகத் எதிர் இறக்கைகள், தாக்கக்கூடிய அமைப்பு ஆகியவை ஏரோநாட்டிகஸ் மேம்பாட்டு முகமையுடன் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் கழகம் இணைந்து இந்தியாவின் விமானத் துறை மற்றும் கடற்படை உருவாக்கப்பட்டது.

### வரலாற்று பின்புலம்

- இலகுரக அடிப்படையிலான விமானத் திட்டமானது 1980 ல் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவின் பழமையான மிக் – 21 மாற்றியுள்ளது.
- இது பின்னர் பொது கடற்படை நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப்பட்டது.
- 2003 ல் இலகுரக போர் விமானம் அதிகார பூர்வமாக தேஜஸ் என பெயரிடப்பட்டது.
- இது இந்தியாவில் முதன்முதலாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட போர் விமானம் ஆகும் மற்றும் பிப்ரவரி 2019 ல் முழுமையாக ஆயுதம் எய்ந்திய போர் விமானமாக விமானப்படையில் சேர்க்கப்படுவதற்கு இறுதி செயல் பாட்டு ஒப்புதலை பெற்றது.
- இது ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் கழகத்தால் உருவாக்கப்பட்ட இரண்டாவது சூப்பர்சோனிக் போர் விமானம் ஆகும் (முதலாவது HF24 மாரூத்)

### விவரக் குறிப்புகள்

- தேஜஸ் அதிகபட்சமாக 4000 கிலோ சுமக்கும் திறன் கொண்டது. இது ஒரு ஒற்றை பைலட் இயந்திர விமானமாகும். இது அதிகபட்சமாக 13,300 கிலோ எடையுடையது. இது நான்காவது தலைமுறை போர் விமானமாகும். இது காற்றில் இருந்து காற்றில் எரிபொருளை நிரப்பும் திறன் கொண்டது.
- இது அதிகபட்சமாக 1.8 மக் (mach) வேகம் உடையது.
- மக் என்பது விமானத்தின் வேகத்தை காற்றில் ஒலியின் வேகத்துடன் ஒப்பிடப்படுகிறது.

Suresh

- இது 850 கிலோ மீட்டர் பொது வரம்பையும் 500 கிலோ மீட்டர் போர் வரம்பையும் கொண்டுள்ளது.

## இரவு வான் சரணாலயம்

### செய்திகளில்

- சமீபத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது அடுத்த 3 மாதத்திற்குள் லடாக்கில் கான்லேயில் இந்தியாவின் முதல் இரவு வான சரணாலயத்தை அமைப்பதாக அறிவித்துள்ளது.
- சான்தாங் வனவிலங்கு சரணாலயத்தின் ஒரு பகுதியாக இது அமைய உள்ளது.

### ஹன்லே

- இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 4500 மீட்டர் உயரத்தில் உள்ளது மற்றும் இது தொலைநோக்கிகளை தாங்கியுள்ளது.
- இது வானியல் ஆய்வுகளுக்கு உலகில் மிகவும் உகந்த தளங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.
- ஹிமாலயன் சந்திரா தொலை-நோக்கி, உயர் ஆற்றல் காமா-கதிர் தொலைநோக்கி முக்கிய வளிமண்டல செர்ன்கோவ் பரிசோதனை தொலைநோக்கி மற்றும் (Growth) இந்தியா ஆகியவை ஹன்லே ஆய்வகத்தில் அமைந்துள்ள முக்கிய தொலை நோக்கியாகும்.

### இரவு வான காப்பகம்

- நிலம் அல்லது பிராந்தியத்தின் ஒரு பகுதி குறைந்தபட்ச சேர்க்கை ஒளி குறுக்கீட்டை கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கான கொள்கைகளைக் கொண்டது.
- சர்வதேச இரவு வான அமைப்பு என்பது அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாகும்.
- இது இரவு வான இடங்கள், பூங்காக்கள், அருங்காட்சியங்கள் மற்றும் காப்பகங்கள் ஆகியவற்றின் கூறுகளை பொருத்து சேவை செய்கிறது.
- இது போன்ற பல காப்பகங்கள் உலகம் முழுவதும் இருந்த போதி லும் இது வரை இந்தியாவில் எதுவும் இது போன்ற காப்பகங்கள் இல்லை.
- **முக்கியத்துவம்:** இந்தகாப்பகம் இந்தியாவில் வானவியல் சுற்றுலாவை அதிகரிக்கும் மற்றும் ஆப்டிக்கல், அகச்சிவப்பு மற்றும் காமா கதிர் தொலைநோக்கிகளுக்கான உலகின் மிக உயர்ந்த தளங்களில் ஒன்றாக இருக்கும்.

### உங்களுக்கு தெரியுமா?

- இந்திய வானியல் ஆய்வுமையத்தின் உயரமான நிலையமானது, மேற்கு இமயமலையின் வடக்கே கடல் மட்டத்திலிருந்து 4500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.
- சான்தாங்கின் ஹன்லே பள்ளத்தாக்கில் உள்ள நிலம்குள் சமவெளியில் உள்ள சரஸ்வதி மலையின் உச்சியில் அமைந்-துள்ளது. இது ஒரு வறண்ட குளிர்ந்த பாலை வனமாகும் இது அரிதான மக்கள் தொகையை கொண்டது. மற்றும் ஹன்லே மடலாயத்தை அதன் அருகில் கொண்டுள்ளது.
- மேகமற்ற வானம் குறைந்த வளிமண்டல நீர்நீராவி ஆப்டிக்கல், அகச்சிவப்பு துணை மில்லி மீட்டர் மற்றும் மில்லி மீட்டர் அலை நீளங்களுக்கான உலகின் சிறந்த தளங்களில் ஒன்றாகும்.

## இந்தியாவின் குறைக்கடத்தி மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான திட்டத்திற்கு மாறுதலுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

### செய்திகளில்

- தற்போதுள்ள, குறைக்கடத்தி மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி சுற்றுச்சூழலுக்கான மேம்பாட்டின் திட்டத்தில் பல்வேறு மாற்றங்களை வழங்குவதற்கு இந்திய அரசானது ஒப்புதல் அளித்துள்ளது.

### இந்தியாவில் குறைக்கடத்தி மற்றும் டிஸ்ப்ளே உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பை மேம்படுத்துவதற்கான திட்டம் என்ன?

### நோக்கம்

- சிலிக்கான் குறைக்கடத்தி ஃபேப்ஸ், ஃபேப்ரிகேஷன் நிலையங்கள், டிஸ்ப்ளே ஃபேப்ஸ், ஒருங்கிணைந்த குறைக்கடத்தி, குறைக்கடத்தி உற்பத்தி, குறைக்கடத்தி டிசைன் போன்றவற்றில் ஈடுப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு கவர்ச்சிகரமான ஊக்கமளிக்கும் ஆதரவை வழங்குதல்.

### திட்டத்தின் கூறுகள்

### குறைக்கடத்தி ஃபேப்ஸ் மற்றும் டிஸ்ப்ளே ஃபேப்ஸ்

- இதன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு திட்ட செலவில் 50% வரை நிதி உதவியை அரசு வழங்கும்.
- நாட்டில் குறைந்தபட்சம் 2 கிரீன்ஃபில்ட் குறைக்கடத்திஃபேப்கள் மற்றும் 2 டிஸ்ப்ளே ஃபேப்களை அமைப்பதற்கு தேவையான உள் கட்டமைப்புடன் கூடிய உயர் தொழில் நுட்ப தொகுப்புகளை நிறுவ மாநில

அரசுகளுடன் மத்திய அரசாங்க-மானது இணைந்து பணியாற்றும்.

### குறைக்கடத்தி ஆய்வகம்

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் குறைக்கடத்தி ஆய்வகங்கள் நவீனமயமாக்குவதற்கும், வணிக-மயமாக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- பிரவுன்ஃபீல்ட் ஃபேப் வசதியை நவீனமயமாக்க ஒரு வணிக ஃபேப் ஒரு வணிக பங்குதாரர் உடன் குறைக்கடத்தி ஆய்வகத்தின் கூட்டு முயற்சிக்கான சாத்தியத்தை மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் ஆராய்கிறது.

### கூட்டு குறைக்கடத்தி அலகுகள் மற்றும் ATMP வசதிகள்

- இதன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அலகுகளுக்கு, மூலதன செலவில் 30% வரையிலான நிதி உதவியை அரசானது வழங்கும்.
- இந்த இடத்தில் 15 க்கும் மேற்பட்ட அலகுகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### குறைக்கடத்தி வடிவமைப்பு நிறுவனங்கள் அல்லது வடிவமைப்பு இணைக்கப்பட்ட ஊக்கத்திட்டம்

- இதன் கீழ், 5 ஆண்டுகளுக்கு நிகர விற்பனையில் 6% - 4% வரையிலான தயாரிப்புகளின் வடிவமைப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகையை 50% வரையிலான செலவினம் மற்றும் தயாரிப்பு வரிசைப்படுத்துதல் இணைக்கப்பட்ட ஊக்கத்-தொகையை அரசாங்கம் நீட்டிக்கும்.

### இந்தியாவில் குறைக்கடத்தி திட்டம்

- குறைக்கடத்தி மற்றும் டிஸ்ப்ளே துறையில் உலகளாவிய நிபுணர்களால் இந்த திட்டமானது வழிநடத்தப்படும்.
- குறைக்கடத்தி மற்றும் டிஸ்ப்ளே சுற்றுச்சூழலுக்கான சுமூகமான செயல்பாடு மற்றும் திறமையான செயல்பாட்டிற்கான நோடால் ஏஜென்சியாக இந்த அமைப்பு செயல்படும்.

### தொடக்கத் திட்டத்திற்கான நடவடிக்கைகள்

- இதன் கீழ் அரசு 85,000 உயர் திறன் பொறியாளர்களை கொண்ட திறமையான குழுவை உருவாக்கும்.
- இது இந்தியாவை குறைக்கடத்-தி மையமாக மாற்ற உதவும்.
- குறைக்கடத்தி வடிவமைப்பாளர்-களுக்கு தொடக்க நிறுவனங்களை தொடங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்படும்.

### இந்த திட்டத்தின் முக்கியத்துவம் என்ன?

- இந்த திட்டத்தின் ஒப்புதலுடன் மின்னணு பாகங்கள் மற்றும் முடிக்கப்பட்ட பொருட்கள் உட்பட விநியோக சங்கிலியின் ஒவ்வொரு பகுதிக்கும் ஊக்கத்தொகைகளை இந்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தியாவின் டிஜிட்டல் இறைய-ாண்மையை உறுதி செய்வதற்காக இந்தத் திட்டம் சரியான மற்றும் உள்நாட்டுதிறன்களைஉருவாக்கும்.
- இது நாட்டின் மக்கள் தொகை பிரிவினையை பயன்படுத்துவதற்கு மிகவும் திறமையான வேலை-வாய்ப்புகளை உருவாக்கும்.

### திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட முக்கிய மாற்றங்கள் என்ன?

### குறைக்கடத்தி ஆய்வகங்கள்

- இந்தியாவில் குறைக்கடத்தி உற்ப-த்தியை உயர்த்துவதை நோக்க-மாகக் கொண்டு அமைப்பதற்கான திட்டச் செலவில் 50% ஒரு மாதி-ரியான நிதி ஆதரவை அரசாங்கம் வழங்கும்.
- 50% ஊக்கத்தொகையானது தொழில்நுட்ப முனைகள் முழுவதும் குறைக்கடத்தி புனையமைப்பு மற்றும் கூட்டுக் குறைக்கடத்திகள், உற்பத்திமற்றும்தொடர்புடையவசதி-களுக்கு பொருந்தும்.

### டிஸ்ப்ளே ஆய்வகங்கள்

- டிஸ்ப்ளே ஆய்வகங்கள் அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் 50% நிதியுதவி வழங்கப்படும்.

## இந்தியாவில் சோவா வைரஸ்

### செய்திகளில்

- இந்திய கணினி அவசர நிலை பதிலளிப்பு குழு சோவா வைரஸ் - ஒரு நாவல் தொலைபேசி வங்கிச்சேவைக்கான 'ட்ரோஜன்' வைரஸ் குறித்து ஆலோசனை வழங்குகிறது இது தற்போது இந்திய வாடிக்கையாளர்களை குறிவைக்கிறது.

### சோவா என்றால் என்ன?

- சோவா என்பது ஒரு புதிய இணைய வங்கிச் சேவை ட்ரோஜன் வைரஸாகும்.
- ட்ரோஜன் என்பது ஒரு கோப்பு, நிரல் அல்லது குறியீட்டு துண்டு. இது சட்டப்பூர்வமானதாகவும், பாதுகாப்பாகவும் தோன்றினாலும் உண்மையில் இது தீம்பொருளாகும்.
- தீம்பொருள் என்பது தகவல் அல்லது அமைப்புகளுக்கு அங்கீகரிக்கப்படாத அணுகல்களை பெறுவதற்கு இடையூறு விளைவிக்க வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட மென்பொருள் ஆகும்.

### எப்படி சோவா வைரஸ் பைணர்களை குறிவைக்கிறது

- சோவா தீம்பொருள் கோப்பானது ஆன்ட்ராய்டு பயன்பாட்டில் தன்னை மறைத்துக் கொள்கிறது. குரோம், அமேசான், என்எப்டி போன்ற சில பிரபலமான சட்டப்பூர்வ

பயன்பாடுகளின் லோகோவை நிறுவி பயனர்களை ஏமாற்றும்.

- போலியான ஆன்ட்ராய்டு செயலிகள் தொலைபேசியில் நிறுவப்பட்டதும், இலக்கிடப்பட்ட செயலிகளில் பட்டியல்களை பெறுவதற்காக சாதனத்தில் நிறுவப்பட்டுள்ள அனைத்து செயலிகளின் பட்டியலையும் கட்டுப்படுத்த உத்தரவினை அனுப்புகிறது.

### எந்த வகையான தகவல்களை சோவா சேகரிக்கும்

- சோவா ஆனது விசை அழுத்தங்களை சேகரிக்கலாம், குக்கீகளை திருடலாம், பல்முனை அங்கீகார நுழைவுகள், எடுக்கப்பட்ட ஸ்க்ரீன்சார்ட்டுகள் மற்றும் நெப்லம் (Neblam) இருந்து வீடியோவை பதிவு செய்யலாம் மற்றும் ஆன்ட்ராய்டு அணுகல் சேவையை பயன்படுத்தி தொடுதிரையில் டிக், ஸ்வைப் போன்ற சைகைகளை செய்யலாம்.
- ஆன்ட்ராய்டு தொலைபேசியில் உள்ள எல்லா தரவையும் என்கீரிப்ட் செய்து அதை மீட்கும் திறனையும் கொண்டுள்ளது.

### இந்த செயலியை தொலைபேசியிலிருந்து நீக்க முடியுமா?

- சோவா ஆனது பல்வேறு பாதிக்கப்பட்ட செயல்களிலிருந்து தன்னை பாதுகாத்து கொள்கிறது. எடுத்துக்காட்டாக பயனர் அமைப்புகளிலிருந்து தீம்பொருளை நீக்க முயற்சித்தால் அல்லது உருவத்தினை அழுத்தினால்.
- சோவா இந்தச் செயல்களை இடைமறைத்து முகப்புத்திரைக்கு திருப்புவதன் மூலம் அவற்றை தடுக்கும் மற்றும் செயலி பாதுகாப்பட்டதை உறுதி படுத்தும்.

## ஐன்ஸ்டீன் வளையம்

### செய்திகளில்


- ஜேம்ஸ் வெர்ப் விண்வெளி தொலைநோக்கியானது கிட்டத்தட்ட சரியான ஐன்ஸ்டீன் வளையத்தினை படம் பிடித்துள்ளது.

### ஐன்ஸ்டீன் வளையம் என்றால் என்ன?

- ஒரு விண்மீன் அல்லது நட்சத்திரத்திலிருந்து வரும் ஒளியானது பூமியின் சுற்றுவட்டப் பாதையில் ஒரு பெரிய பொருளை கடந்து செல்லும் போது ஐன்ஸ்டீன் வளையம் உருவாக்கப்படுகிறது.
- ஈர்ப்பு விசையின் விளைவுகள் காரணமாக ஒளி திசைதிருப்பப்பட்டு இது வெவ்வேறு இடங்களில் இருந்து வருவதுபோல் தோன்றுகிறது.
- ஒளிமூலம், லென்சு மற்றும் பார்வையாளர் அனைத்தும் சரியான அமைப்பிலிருந்தால் ஒளி ஒரு வளையமாக தோன்றும்.
- ஐன்ஸ்டீன் வளையத்தின் முதல் உதாரணமானது 1988 ல் கண்டுபிடிக்கப்பட்டது.

### எங்கே ஜேம்ஸ் தொலைநோக்கியானது ஐன்ஸ்டீன் வளையத்தை கண்டுபிடித்தது?

- ஜேம்ஸ் வெர்ப் தொலைநோக்கியானது தொலைதூர விண்மீன் திறளில் SPT-SJO41839-4751.8 ஒளிலிருந்து உருவான ஐன்ஸ்டீன் வளையத்தை உருவாக்கியது.
- பூமியில் இருந்து சுமார் 12 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது இது பிரபஞ்சத்தின் பழமையான விண்மீன் திறள்களில் ஒன்றாகும்.

# XII. இதரவை

## 1. குறியீடு

| வரிசை எண் | குறியீட்டின் பெயர் | யாரால் வெளியிடப்பட்டது | உள்ளடக்கம் |
|---|---|---|---|
| 1. | உலகளாவிய கிரிப்டோ ஏற்பு குறியீடு – 2022 | செயின்னலஸிஸ் | 1. தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக வியட்னா கிரிப்டோகரன்சி தத்தெடுப்பில் முதல் இடத்தில் உள்ளது.<br>2. கடந்த ஆண்டை விட இரண்டு இடங்கள் மேலாகவும், நான்காவது இடத்தில் உள்ளது.<br>3. இந்த அறிக்கையில் முதல் 20 இடத்தைப் பிடித்த நாடுகளில் 10 நாடுகள் குறைந்த, நடுத்தர வருமானம் உடைய நாடுகள் ஆகும்.<br>4. 30% சதவீதம் தவிர கிரிப்டோகரன்சி துறைக்கான சரியான ஒழுங்குமுறை கட்டமைப்பை இந்தியா அரசாங்கம் இன்னும் வகுக்கவில்லை. கிரிப்டோகரன்சியானது இந்தியாவில் இந்த ஆண்டு ஜுலை 1 முதல் நடைமுறைக்கு வந்தது. |
| 2 | மனிதவள மேம்பாட்டு குறியீடு – 2021-22 | ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டம் | • மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் இந்தியாவானது 2020 ஆண்டில் 130வது இடத்திலும் 2021ம் ஆண்டில் 132வது இடத்திலும் உள்ளது.<br>• தற்போது இந்தியா 0.633 புள்ளிகள் (2020ல் 0.645) பெற்று மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் நடுத்தர இடத்தில் உள்ளது.<br>• பல்பரிமாண வறுமை குறியீட்டில் இந்தியா 0.123 புள்ளிகளைப் பெற்றுள்ளது.<br>• கடந்த பத்து வருடங்களில் பல்பரிமாண வறுமையில் இருந்து 271 மில்லியன் நபர்களை உயர்த்தியுள்ளது என இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.<br>• இந்தியாவின் அண்டை நாடுகளை ஒப்பிடும்பொழுது இலங்கை 73, சீனா 79, வங்காளதேசம் 129, பூடான் 127 என முன்னிலையில் உள்ளன. ஆனால் பாகிஸ்தான் 161, நேபாளம் 143 மற்றும் மியான்மர் 149வது இடத்தைப் பெற்று பின்தங்கியுள்ளன.<br>• கிட்டத்தட்ட 90% நாடுகள் மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் 2020லிருந்து 2021ல் குறைந்துள்ளதாக இந்த அறிக்கை கூறுகிறது.<br>• ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டம் 5 ஒருங்கிணைந்த குறியீடுகளை உள்ளடக்கி ஒவ்வொரு வருடமும் மனிதவள மேம்பாட்டு குறியீட்டினை வெளியிடுகிறது.<br>1. மனிதவள மேம்பாட்டு குறியீடு<br>2. சமத்துவமின்மை சரிசெய்யப்பட்ட மனிதவளர்ச்சி குறியீடு<br>3. பாலின மேம்பாட்டு குறியீடு<br>4. பாலின சமத்துவமின்மை குறியீடு<br>5. பல்பரிமாண வறுமை குறியீடு<br>• மனிதவள மேம்பாட்டு குறியீட்டானது மூன்று அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகிறது.<br>• 1. நீண்ட மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை<br>• 2. கல்வி<br>• 3. வாழ்க்கைத்தரம் |

## 2. அறிக்கை

| தலைப்பு | யாரால் வெளியிடப்பட்டது | உள்ளடக்கம் |
|---|---|---|
| இந்திய பாகுபாடு அறிக்கை - 2022 | ஆக்ஸ்ஃபாம் இந்தியா | • பெண்களின் தொழில் பங்கேற்பு விகிதம் குறைவு.<br>○ இந்தியாவில் பெண்கள் 2004-2005ல் 42.7%லிருந்து 2021ல் 25.1% மாக குறைந்துள்ளது.<br>• ஆண்கள் - பெண்கள் ஊதிய இடைவெளி<br>○ 2019-20ல் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆண்களில் 60%வினர் வழக்கமான ஊதியம் அல்லது சுயதொழில் செய்யும் வேலைகளை கொண்டிருந்தனர். பெண்களைப் பொறுத்தவரை இந்த விகிதமானது 19%மாக இருந்தது.<br>• வேலையில் பாகுபாடு<br>○ சாதாரண பெண் உழைப்பாளர்கள் ஆண்களைவிட ரூ.3,000 குறைவாக பெறுகின்றனர்.<br>• தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் பாகுபாடு அதிகரிப்பு<br>○ சுயதொழில் செய்யும் எஸ்.சி/எஸ்.டிகள் மற்ற பிரிவினரைவிட ரூ,5000 குறைவாக பெறுகின்றனர். இந்த பாகுபாட்டு இடைவெளியானது 41% ஆகும். |
| உலகளாவிய நவீன அடிமைத்தனம் மதிப்பீடுகள் அறிக்கை | சர்வதேச தொழிலாளர் அமைப்பு | • 2021ல் 50 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தில் வாழ்கின்றனர்.(28 மில்லியன் கட்டாய உழைப்பு 22 மில்லியன் கட்டாய திருமணம்)<br>• உலகளவில் ஒவ்வொரு 1000 நபர்களுக்கு 6.4 நபர்கள் நவீன அடிமைத்தனத்தில் இருப்பதாக அறிக்கை குறிப்பிடுகிறது.<br>• நவீன அடிமைத்தனத்தில் பாதிக்கப்பட்ட 4 நபர்களில் ஒருவர் குழந்தையாகும்.<br>• 28 மில்லியன் கட்டாயத் தொழிலாளர்<br>• 17.3 மில்லியன்<br>• வீட்டுவேலை, கட்டுமானம், விவசாயம்<br>• 6.3 மில்லியன்<br>• வணிக ரீதியாக பாலியல் சுரண்டல்<br>• 3.9 மில்லியன்<br>• மாநில அதிகாரிகளால் திணிக்கப்பட்ட கட்டாய உழைப்பு<br>• எந்தச்சட்டத்திலும் நவீன அடிமைத்தனமானது குறிப்பிடவில்லை.<br>• நவீன அடிமைத்தனமானது கட்டாய உழைப்பு, கடன் கொத்தடிமை, கட்டாய திருமணம் மற்றும் மனிதக்கடத்தல் போன்ற சுரண்டல் செயல்களை உள்ளடக்கியது. |

| | | |
|---|---|---|
| இந்தியாவில் குற்றம் | தேசிய குற்றப்பதிவு ஆணையம் | • 2020 உடன் ஒப்பிடும்போது 2021ல் பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கையானது 6% குறைந்துள்ளது.<br>• ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு குற்ற விகிதம் 2020ல் 487.8லிருந்து 2021ல் 445.9 ஆக குறைந்துள்ளது.<br>• பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 2021ல் இந்தியாவில் 15% அதிகரித்துள்ளது. மேலும் இந்தியாவில் மிகப்பெரிய பெருநகரங்களில் டெல்லி பாதுகாப்பற்ற நகரமாகும்.<br>• இராஜஸ்தானில் அதிக பாலியல் பலாத்கார வழக்குகள் பதிவாகியுள்ளன. மேலும் மகாராஷ்டிரா மாநிலமானது தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கையில் முதல் இடத்தில் உள்ளது.<br>• போக்குவரத்து விபத்துகளில் 1.73 இலட்சம் பேர் இறந்து உள்ளனர். உத்திரபிரதேச மாநிலமானது போக்குவரத்து விபத்துகளில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகளை (24,711) பதிவாகியுள்ளது.<br>• ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா முறையே 100 மற்றும் 77 வகுப்புவாத வழக்குகள் கடந்த ஆண்டு பதிவு செய்துள்ளது. |
| நிலையான மேம்பாட்டு இலக்கில் உள்ள முன்னேற்றம் | ஐக்கிய நாடுகளின் பெண்கள் | • பாலின சமத்துவம்<br>• தற்போதைய முன்னேற்ற விகிதத்தில் முழு பாலின சமத்துவத்தை அடைய 300 ஆண்டுகளாகும்.<br>• நிலையான வளர்ச்சிக்கான இலக்கு - 5<br>• நிலையான வளர்ச்சிக்கான இலக்கானது பாலின சமத்துவத்தை அடைவதாகும். தற்போதைய முன்னேற்றத்தின் அடிப்படையில் 2030க்குள் பூர்த்தி செய்யப்படாது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.<br>• 2021ம் ஆண்டில் 38% பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மிதமான அல்லது தீவிர பாதுகாப்பின்மையை அடைந்துள்ளனர். ஆண்களை தலைமையாகக் கொண்ட 20% குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.<br>• 2022க்குள் 383 மில்லியன் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் மிக வறுமையால் பாதிக்கப்படுவர். பெண்களை ஒப்பிடும் பொழுது 368 மில்லியன் ஆண்கள் மற்றும் ஆண் குழந்தைகள் வறுமையால் பாதிக்கப்படுவர்.<br>• தேசிய பாராளுமன்றத்தில் சமமான பிரதிநிதித்துவத்தை பெண்கள் பெறுவதற்கு குறைந்தபட்சம் 40 வருடங்கள் ஆகும் என கணிக்கப்படுகிறது.<br>• 2030க்குள் குழந்தைத் திருமணத்தை ஒழிக்க கடந்த 10 ஆண்டுகளில் முன்னேற்றத்தை விட 17 மடங்கு வேகமாக முன்னேற வேண்டும்.<br>• 1.2 பில்லியனுக்கு அதிகமான இனப்பெருக்க வயதிலுள்ள பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் (15-49) பாதுகாப்பான கருக்கலைப்புக்கான அணுகலில் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளனர். |

| | | |
|---|---|---|
| இந்தியாவின் வெளியுறவுத் துறையின் 28வது பதிப்பு 2021-22 | நிதி அமைச்ச-கத்தின் பொருளாதார விவகாரங்கள் துறையின் வெளியுறவுத்துறை நிர்வாக பிரிவு | • நாடுகளில் கிடைமட்டமான கண்ணோட்டத்தில் இந்தியாவின் வெளியுறவுத் துறையானது உலகளாவிய தரவரிசையில் 23வது இடத்தைப் பெற்று நடுத்தரத்தில் உள்ளது.<br>• வெவ்வேறு கடன் பாதிப்பு குறியீடுகளில் இந்தியாவின் ஸ்திரத்தன்மை யானது, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளைக் காட்டிலும் சிறப்பாகவும், குழு மற்றும் தனியாகச் செயல்படக்கூடிய அமைப்புகளிடமிருந்து சிறப்பாகவும் உள்ளது.<br>• 2021ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 21.2% வெளியுறவுத்துறையானது 2022 மார்ச் இறுதிக்குள் 19.9 சதவீதம ாக குறைந்துள்ளது.<br>• வெளிநாட்டு நாணயக் கையிருப்பு ஒரு வருடத்திற்கு 100.0 %மாக இருந்தது. 2022 மார்ச் இறுதிக்குள் 97.8%மாக குறைந்துள்ளது. |

## 3. குழு

| தலைப்பு | யாருடைய தலைமையில் | உள்ளடக்கம் |
|---|---|---|
| தற்போதைய சமையல் எரிவாயு விலை சூத்திரம் | ஆற்றல் துறையின் நிபுணர் கிரிட் பரித் தலைமையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமை ச்சகத்தால் இந்த குழுவானது அமைக்கப்பட்டது. | • இது பணவீக்கத்தைக் குறைப்பது மற்றும் தூய்மையான எரிபொருளின் பயன்பாட்டை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.<br>• இறுதி நுகர்வோருக்கு நியாயமான விலையை பரிந்துரை செய்ய இக்குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.<br>• எரிவாயு அடிப்படையிலான பொருளாதாரத்தை உறுதி செய்வதற்கான இந்தியாவின் நீண்டகால சந்தை சார்ந்த, வெளிப்படையான மற்றும் நம்பக்கூடிய விலை நிர்ணய முறையை பரிந்துரை செய்தது. |

## 4. ஒரு நிமிடச் செய்திகள்

### அக்னிபாத் திட்டத்திற்கு கூர்க்காக்களை நியமிக்கக் கூடாது - நேபாளம்

- நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வுபெறும் கூர்க்கா பணிய-ாளர்களின் எதிர்காலம் குறித்த கவலைகளை எழுப்பிய நேபாளம், இந்திய ராணுவத்தில் ஆட்சேர்ப்பை நிறுத்துமாறு இந்தியாவை வலியுறுத்தியுள்ளது.
- 1947 ல் நேபாளம், இந்தியா மற்றும் பிரிட்டன் கையெழுத்திட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ் இந்திய இராணுவத்தால் குடியுரிமை பெற்ற கூர்க்காக்கள் பணிய-மர்த்தப்படுகின்றனர்.
- எனினும், நேபாளமானது, அக்னிபாத் திட்டம் 1947 முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு இணங்கவில்லை என்று கூறியுள்ளது.
- நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அக்னிபாத் திட்டத்தின் கீழ், 25% வீரர்கள் (அக்னிவீரர்கள்) மட்டுமே தக்க வைக்கப்படுவார்கள் அல்லது குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு மீண்டும் பட்டியலிடப்-படுவார்கள்.

### சமையல் எண்ணெயின் அளவு அறிவிப்பு மற்றும் லேபிளிங்

- சமையல் எண்ணெய் உற்பத்தி யாளர்கள் / பேக் செய்பவர்கள் / இறக்குமதியாளர்களுக்கு சமையல் எண்ணெய் போன்றவற்றின் நிகர அளவை அறிவிக்குமாறும், வெப்பநிலை இல்லாத அளவிலும், எடையில் அதேஅளவை அறிவித்து ஆறு மாதங்களுக்குள் அதற்கேற்ப லேபிளிங்கைத் திருத்துமாறு மத்திய அரசு அறிவித்துள்ளது.
- சமையல் எண்ணெய் வெவ்வேறு வெப்பநிலையில் வித்தியாசமாக

இருப்பதால், வாங்கும் நேரத்தில் நுகர்வோர் சரியான அளவைப் பெறுவதை உறுதி செய்தல்.

- சட்ட அளவியல் (தொகுக்கப்பட்ட பொருட்கள்) விதிகள், 2011 இன் கீழ், அனைத்து முன் தொகுக்கப்பட்ட பொருட்களின் மீதான மற்ற அறிவிப்புகளைத் தவிர்த்து, நிலையான எடை அலகுகளின் நிகர அளவு இடைவெளிகளை அறிவிப்பது கட்டாயமாகும்.

### ஒரு நாடு ஒரு உரம்

- ரசாயனங்கள் மற்றும் உர அமைச்சகம், பிரதான் மந்திரி பாரதிய ஜானுர் வரக் பரியோஜனா (பிஎம்பிஜேபி) என்ற பெயரில் உர மானியத் திட்டத்தின் கீழ் உரங்கள் மற்றும் லோகோவை அறிமுகப்படுத்துவதன் மூலம் செயல்படுத்த முடிவு செய்துள்ளது.
- இம் முன்முயற்சியின் ஒரு பகுதியாக, PMBJP ன் கீழ் உற்பத்தி செய்யும் நிறுவனங்களைப் பொருட்படுத்தாமல் "பாரத்" என்ற ஒரே பிராண்டின் கீழ் உரங்கள் விற்கப்படும்.
- ஒரு பிராண்ட் பெயர் கீழ்க்கண்டவற்றிக்கு உதவும்,
  - உரங்களின் குறுக்கு வெட்டு நிறுத்தம், இயக்கம் ஆகியவற்றின் காரணமாக சரக்கு கட்டணம் குறைப்பு.
  - போக்குவரத்து நேரம் குறைவு
  - தொழில்துறை நோக்கங்களுக்காக யூரியாவை மாற்றுவதை நிறுத்துதல்.

### ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2022

- ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் 2022 ன் இறுதி போட்டியில் பிரதமர் உரையாற்றினார்.
- 2017 ல் தொடங்கப்பட்டது, ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் என்பது நாடு தழுவிய முயற்சியாகும் (கல்வி அமைச்சகத்தால்). நமது அன்றாட வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் சில அழுத்தமான பிரச்சனைகளைத் தீர்க்க மாணவர்களுக்கு ஒரு தளத்தை வழங்குகிறது.
- இது மாணவர்களுக்கு வெளியே உள்ள யோசனைகளை வழங்குவதற்கான ஒரு தளத்தை வழங்குகிறது. இதனால் தயாரிப்பு கண்டுபிடிப்பு, கலாச்சாரம் போன்றவற்றில் உள்ள சிக்கலைத் தீர்க்கும் மனநிலையை உருவாக்குகிறது.
- இது முறையே ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் ஜீனியர் மற்றும் சீனியர் கீழ் பள்ளி (6வது - 12வது)மற்றும் கல்லூரி செல்லும் மாணவர்களுக்காக திறக்கப்பட்டுள்ளது.

### இந்திய கால்பந்து அமைப்பின் மீதான தடையை ஃபிஃபா நீக்கியது

- தேவையற்ற மூன்றாம் தரப்பு செல்வாக்கு காரணமாக இந்த மாத தொடக்கத்தில் அகில இந்திய கால்பந்து சம்மேளத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை FIFA நீக்கியுள்ளது.
- FIFA, ஒரு லாப நோக்கமற்ற அமைப்பாகும், கால்பந்து, ஃபட்சல் மற்றும் கடற்கரை கால்பந்து ஆகியவற்றின் சர்வதேச நிர்வாகக் குழுவாகும்.

### நெற்பயிரை தாக்கக் கூடிய வைரஸ் (Southern rice black - streated swarf virus)

- முதன் முறையாக பஞ்சாப்பில் இந்த வைரஸ் தாக்குதல் பதிவாகியுள்ளது.
- இது ஒரு வைரஸ் நோயாகும். இது நெல்லில் குள்ளத் தன்மை மற்றும் புற்களை பாதிக்கும்.
- இந்நோய் தாக்குதலுக்கு தெற்கு சீனாவின் பெயர் இடப்பட்டுள்ளது. ஏனென்றால்முதன் முதலாக 2001ல் தெற்கு சீனாவில் இந்த நோய் பதிவாகியுள்ளது.
- வெள்ளை நிற முதுகுடைய வெட்டுகிளியின் சிறிய மற்றும் இளம் இனத்தால் பரவுகிறது
- இந்த வைரஸின் நீண்ட தூர பரவலுக்கு, இந்த வகை வெட்டுக்கிளியும், சூறாவளி மற்றும் வலுவான மாற்றக் காற்றாலும் பரவுகிறது.
- இந்த வைரஸ் தாக்குதலுக்கு சரியான எதிர் மருந்துகள் இல்லை ஆனால் கட்டுப்படுத்த முடியும்.

### மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951ன் பிரிவு 9A

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951ன் பிரிவு 9A ன் கீழ் ஜார்கண்ட் முதல்வரை எம்எல்ஏ வாக தகுதி நீக்கம் செய்ய தேர்தல் ஆணையம் பரிந்துரைத்ததாக கூறப்படுகிறது.
- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951ன் பிரிவு 9A வின் கீழ், சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொருட்களை வாங்குவதற்கு அரசாங்கத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளும் எந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்குதடைசெய்கிறது.

### பாரத் பில் செலுத்தும் முறை

- இந்திய தேசிய கொடுப்பனவு கழகம், பாரத் பில் செலுத்தும் முறையில் செயல்படுத்தப்பட்ட பண பரிவர்த்தனைகளுக்கு கட்டணம் வசூலிப்பதை நிறுத்துமாறு செயலிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.
- பாரத் பில் செலுத்தும் முறையானது, இந்தியா முழுவதும் நிச்சயமான, நம்பகத்தன்மை மற்றும் பரிவர்த்தனைகளின் பாதுகாப்புடன் அனைத்து தொடர்ச்சியான கட்டணங்களையும் செலுத்துவதற்கான ஒரே தளமாக இந்திய ரிசர்வ் வங்கியால் கருதப்பட்டது.

- முதலில் 2016 ல் தொடங்கப்பட்டு, மற்றும் 2017 ல் பயன்பாட்டிற்கு வந்தது.
- இது இந்தியாவின், தேசிய கொடுப்பணவு கழகத்தால் இயக்கப்படுகிறது. பணம் செலுத்துதல மற்றும் செட்டில்மெ ன்ட் சிஸ்டம்ஸ் சட்டம் 2007 ன் கீழ் சில்லறை கொடுப்பனவுகள் மற்றும் செட்டில்மென்ட் சிஸ்டத்தை இயக்குவதற்கான ஒரு குடை அமைப்பாகும்.

## டுகோங் / கடற் பசு

- டுகோங் சீனாவில் அழிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- டுகோங் சைரினியா வரிசையில் உயிர் வாழும் உயிரினங்களில் ஒன்றாகும் மற்றும் கடலில் பாலூட்டிகளில் சைவ உணவை உண்ணக்கூடிய ஒரே உயிரினம் டுகோங் ஆகும்.
- இவை இந்திய மற்றும் மேற்கு பசுபிக் பெருங்கடல்களின் ஆழமற்ற கடலோர பகுதியில் கடல் புற்களை உண்ணுகின்றன.
- இந்த உயிரினங்கள் பண்டைய தேவதைகள் கதைகளில் கூறப்பட்டுள்ளது.
- பரவல் : இந்தியாவில் மன்னார் வளைகுடா, பாக் நீர் சந்தி, கட்ச் வளைகுடா மற்றும் அந்தமான் ம ற்றும் நிக்கோபர் தீவுகள் உட்பட 37 வெப்பமண்டலப் பகுதிகளில் பரவி காணப்படுகிறது.

## முக்கிய அச்சுறுத்தல்

- தொழிற்சாலை மாசு, கடற்கரைப் பகுதி மேம்பாடு, மேற்பார்வை செய்யப்படாத மீன் பிடித்தல்.
- இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) நிலை பாதிப்புக்குள்ளாகும் நிலை.

## முழு நீதிமன்ற கூட்டம்

- இந்திய தலைமை நீதிபதி முழு நீதிமன்ற கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார்.
- முழு நீதிமன்றக் கூட்டம் என்பது நீதிமன்றத்தின் அனைத்து நீதிபதி களும் கலந்துக் கொள்ளும் கூட்டம் என்று பொருள்படும்.
- இதை கையாள்வதற்கான எழுத்துப்பூர்வ விதிகள் இல்லை.
- நடைமுறையின் படி, நீதித்-துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதி க்க தலைமை நீதிபதியால் முழு நீதிமன்றக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் சட்ட அமைப்பைச் சூழ்ந்துள்ள பிரச்சனைகளைக் கையாள்வதற்கும் நீதிமன்றத்தின் நிர்வாக நடைமுறைகளில் ஏதேனும் திருத்தங்களைச் செய்வதற்கும் பொதுவான தீர்வுகளைப் பெற இத்தகைய கூட்டம் பயன்படுத்தப்படுகிறது.

## மோசடி பதிவு:

- ஆன்லைன் மோசடிகளில் ஈடுபடுபவர்களை தடுப்புப்பட்டியலில் சேர்ப்பதற்கும், டிஜிட்டல் முறையில் மோசடி செய்யப்பட்ட தொகையை பதுக்கி வைப்பதற்கு வங்கி முறையைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கும், மோசடி பதிவேட்டை அமைப்பதில் ரிசர்வ் வங்கி செயல் பட்டு வருகிறது.
- மோசடி பதிவேடு பொறி-முறையானது, ஆன்லைன் மோசடி-களைச் செய்வதற்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படும் IP முகவரிகள், மின்னஞ்சல் ஐடிகள் மற்றும் தொலைபேசி எண்களைக் கண்டறிந்து சேகரித்து அவற்றைத் தடைப்பட்டியலில் சேர்க்கும்.
- கட்டண முறை பங்கேற்பாளர்கள் நிகழ் நேர மோசடி கண்காணிப்புக்கு இந்த பதிவேட்டில் அணுகல் வழங்கப்படும்.
- தவறாக சம்பாதித்த பணத்தை சேமிக்க குற்றவாளிகள் பல வங்கிகளில் கணக்குகளை திறக்க முடியாது என்பதை இது உறுதி செய்யும்.

## UGC - இ - சமாதான் தளம்

- தற்போது இருக்கும் பல்வேறு இணையதளங்கள் மற்றும் ஹெல்ப்லைன்கள ஒன்றிணைத்து குறைகளை சமர்ப்பிப்பதற்கான ஒற்றை சாளரத்தை பல்கலைக்கழக மானியக் குழு விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளது.
- புகார்களை விரைவாகத் தீர்ப்பது மற்றும் அவற்றுக்கு பதில-ளிப்பதில் தாமதமாக இருக்கும் நிறுவனங்களைக் கண்காணிப்பது நோக்கம்.
- இத்தளமானது, 24 X 7செயல் படும் மேலும் இத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு குறிப்பிட்ட காலக்கெடுவும் வகுக்கப்பட்டுள்ளது.

## தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம் (NPPA)

- இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துத் துறையின் கீழ் இணைக்கப்பட்ட ஆணையமான NPPA வின் வெள்ளி விழா கொண்டாட்டம் சமீபத்தில் நடைபெற்றது.
- NPPA ஆனது 1997 ம் ஆண்டு மருந்துகளின் விலை நிர்ணயம் செய்வதற்கான ஒரு சுயாதீன கட்டுப்பாட்டாளராக உருவாக்கப்பட்டது.
- மருந்துகள் கிடைப்பதை கண்காணித்தல், பற்றாக்குறையை

கண்டறிந்து, தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மொத்த மருந்துகள் மற்றும் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றின் தரவைப் பராமரித்தல்.

**இவ்விழாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட முயற்சி**

- ஒருங்கிணைந்த மருந்து தரவு அடிப்படை மேலாண்மை அமைப்பு 2.0 வானது DPCO 2013 ன் கீழ் கட்டாயப்படுத்தப்பட்ட பல்வேறு படிவங்களை சமர்ப்பிப்பதற்கான ஒற்றை சாளரத்தை வழங்குகிறது.
- Pharma Sahi Daam 2.0 செயலியானது, புகார்களைத் தொடங்குவதற்கான வசதி போன்ற மேம்படுத்தப்பட்ட அம்சங்களுடன் ஏற்படுத்தப்பட்டது.

**இந்தியாவில் பாம்புக்கடி**

- சமீபத்திய ஆய்வின்படி, விஷப் பாம்புகளால் உலகளவில் ஏற்படும் இறப்புகளில் கிட்டத்தட்ட பாதி இந்தியாவில் தான் நடக்கிறது.
- பாம்புக்கடி ஒரு புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய் மற்றும் வளரும் மற்றும் வெப்பமண்டல நோய் மற்றும் வெப்பமண்டல நாடுகளில் மொத்த பாம்புக்கடியில் சுமார் 95% ஆகும்.
- இந்தியாவில் 300 க்கும் மேற்பட்ட வகையானது பாம்புகள் உள்ளன. அவற்றில் 60 விஷம் அல்லது லேசான விஷம் கொண்டவை.
- சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் பாம்புக்கடியைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் ஒரு பிரத்யேக தேசிய திட்டத்தை தொடங்க உள்ளது.
- முன்னதாக, FCMR இந்தியாவில் பாம்பு கடி குறித்த ஆராய்ச்சிக்காக ஒரு தேசிய பணிக்குழுவை அமைத்தது.

**பராக் PHRAKH**

- அனைத்து மாநில தேர்வுகளிலும் சீரான தன்மையை உறுதி செய்வதற்காக PHRAKH ஒரு புதிய கட்டுப்பாட்டளராக தொடங்கப்பட்டது.
- PHRAKH தேசிய மதிப்பீட்டு மையம், கல்வி அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இது NCETRT யின் ஒரு அங்கமாக செயல்படும், மேலும் தேசிய சாதனை கணக்கெடுப்பு மற்றும் மாநில சாதனை ஆய்வுகள் போன்ற கற்றல் விளைவு சோதனைகளை அவ்வப்போது நடத்தும்.

**தடயவியல் ஆய்வு கட்டாயம்**

- 6 ஆண்டுகளுக்கும் மேலான தண்டனைக்குரிய குற்றங்களில் தடயவியல் ஆதாரங்களை சேகரிப்பதை கட்டாயமாக்கிய நாட்டிலேயே முதல் காவல் படை என்ற பெருமையை டெல்லி காவல் துறையினர் பெற்றுள்ளனர்.
- தடவியல் சான்றுகள் என்பது சட்ட நடவடிக்கைகளுக்குள் அறிவியலின் பயன்பாடு ஆகும்.
- நீதிமன்ற நடவடிக்கைகளுள் முக்கிய தரவுகளின் பகுப்பாய்வு சாத்தியமான அல்லது சந்தேகத்திற்குரிய நபர்களை குற்றம் அல்லது குற்றமற்றவர் என்பதை நிறுவ உதவும்.
- இதன் கீழ், ஒரு தடயவியல் நடமாடும் வண்டி நீதிமன்றத்திற்கு பொறுப்பான ஒரு சுயாதீனமான அமைப்பாக இருக்கும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அறிவியல் மற்றும் தடவியல் உதவியை அந்த இடத்திலேயே வழங்குவதற்கு ஒதுக்கப்படும்.

**விலங்குகளிடத்தில் பிறப்பு கட்டுப்பாடு விதிகள் 2022**

- தெரு நாய்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த புதிய விதிமுறைகளை மத்திய அரசு முன்மொழிந்துள்ளது.
- இந்த விதிமுறையானது, 2001 ல் முன்மொழியப்பட்ட விதிகளைத் திருத்துகின்றன மற்றும் விலங்குகளின் நலன் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கான பொறுப்புகளை வரையறுக்கிறது.
- 2030 க்குள், ரேபிஸ் ஒழிப்புக்கான தேசிய செயல் திட்டத்தின் கீழ் உறுதி மொழியை நிறைவேற்ற விதிகள் உதவும்.

**ஜி 33**

- ஜி 33 அல்லது விவசாயப் பொருட்களின் சிறப்பு கூட்டிணைவு வளரும் நாடுகளுக்கு விவசாயத்தில் மட்டுப்படுத்தப்பட்ட சந்தை திறப்பை மேற்கொள்வதற்கு நெகிழ்வுத்தன்மையை வலியுறுத்துகிறது.
- இந்த அமைப்பின் கீழ், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் பிளவுப்பட்ட இருதரப்பு உறவுகளை மீறி உலக வர்த்தக அமைப்பில் இணைந்து பணியாற்றி வருகின்றன.
- உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் பிரச்சனைகளில் வளரும் நாடுகளுக்கான சிறப்பு விதிகளை உலக வர்த்தக அமைப்பு (WTO) முன்மொழிந்திருந்தால் அவர்களின் விவசாயச் சந்தைகளுக்கான அணுகலைத் தொடர்ந்து கட்டுப்படுத்த அனுமதிப்பது போன்றது.

**ராஷ்ட்ரிய போஷன் மாதம் 2022**

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் 2022 ம் ஆண்டு செப்டம்பர் 1 ம் தேதி முதல் 30ம் தேதி வரை 5 வது இராஷ்ட்ரிய போஷன் மாதம் 2022 யை கொண்டாடுகிறது.
- ஊட்டச்சத்து விழிப்பணர்வுக்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் ராஷ்ட்ரிய போஷன் மாதம் என்று கொண்டாடப்படுகிறது.

SURESH'

- இந்த ஆண்டு கருவுற்றிருக்கும் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பெண்கள் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராட உதவும் நல்ல ஊட்டச்சத்து பழக்கங்கள் மற்றும் நேர்மறையான நடத்தைகளை வளர்ப்பதில் முக்கிய கவனம் செலுத்துவதன் மூலம் போஷன் மாதத்தை கிராம பஞ்சாயத்துகள் மூலம் போஷன் பஞ்சாயத்துகளாகத் தூண்டுவது நோக்கமாகும்.
- முறையான, உணர்திறன் மிக்க மற்றும் அடையாள இயக்கிகள் போன்றவற்றின் மூலம் ஊட்டச்சத்து பற்றிய விழிப்புணர்வை கிராம மட்டத்திற்கு எடுத்துச் செல்லுதல்.

## பொட்டாசியம் ஐயோடைடு மாத்திரைகள்

- உக்ரைன் ஜபோரிஜியா மின் உற்பத்தி நிலையத்தில் அணுசக்தி பேரழிவு ஏற்படும் என்ற அச்சத்தின் மத்தியில், ஐரோப்பிய ஒன்றியம் உற்பத்தி நிலையத்துக்கு அருகில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு கதிர் வீச்சு எதிர்ப்பு மாத்திரைகளை வழங்க முடிவு செய்துள்ளது.
- பொட்டாசியம் ஐயோடைடு மாத்திரைகள் அல்லது கதிர்வீச்சு எதிர்ப்பு மாத்திரைகள், கதிர்வீச்சு வெளிப்பாட்டின் போது சில பாதுகாப்பை வழங்குவதாக அறியப்படுகிறது.
- அவை கதிரியக்க அல்லாத அயோடினை கொண்டிருக்கின்றன. மேலும் தைராய்டு சுரப்பியில் கதிரியக்க அயோடின் உறிஞ்சுதலைத் தடுக்கவும், அதைத் தொடர்ந்து செறிவு பெறச் செய்ய உதவும்.
- பொட்டாசியம் ஐயோடைடு மாத்திரையானது, தைராய்டு கட்டி ஏற்படாமல் தடுக்கிறது. இந்த மாத்திரையில் உள்ள கதிரியக்க மற்ற ஐயோடின் தைராய்டினை முழுவதுமாக உறிஞ்சுகிறது.

## குற்ற பன்முக மையம் (Crime Multi Agency Centre)

- பல மாநிலங்கள் / ஒன்றிய பிரதேசங்கள் இணைய தளமான Cri - Mac ல் ஒரு தகவலையும் பதிவிடவில்லை.
- Cri - Mac தளம் 2020 ல் உள்நாட்டு விவகார அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது. குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களை 24 X 7 நேரமும் பல்வேறு சட்ட அமலாக்க நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளவும், அவர்கள் மத்தியில் தடையற்ற தகவல் ஓட்டத்தை உறுதி செய்யவும் ஏற்படுத்தப்பட்டது.
- தேசிய குற்றப்பதிவுப் ஆணையத்தால் (NCRB) நடத்தப்படும் செயலி நாடு முழுவதும் குற்றச் சம்பவங்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதற்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ஜிக்யாசா (Jigyasa) (தமிழில் - ஆர்வம்)

- ஜிக்யாசா 2.0 திட்டத்தின் கீழ், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தால், ஏற்பாடு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிபொருள் திட்டத்திற்கான ஆர்வத்தினை ஏற்பாடு செய்தது.
- ஜிக்யாசா என்பது ஒரு மாணவர் - விஞ்ஞானி இணைப்பு திட்டம், அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சில் (CSIR), கேந்திரிய வித்யாலயா சங்கதன்களுடன் இணைந்து வகுப்பறை கற்றலை ஆராய்ச்சி ஆய்வக அடிப்படையிலான கற்றலுக்கு விரிவுபடுத்துகிறது.
- இது ஆய்வக வருகை, பிரபலமான விரிவுரைத் தொடர், கோடை விடுமுறை நிகழ்ச்சிகள் போன்றவற்றை செயல்படுத்துகிறது.
- ஜிக்யாசா 2.0 நிரல் ஜிக்யாசாவின் மேம்படுத்தப்பட்ட பதிப்பாகும். இதன் கீழ் மெய் நிகர் அறிவியல் ஆய்வகம் திறக்கப்படுகிறது.

## செர்வ வாக் (CERVAVAC)

- கருப்பைவாய் புற்றுநோயைத் தடுப்பதற்காக, இந்தியாவில் உள்நாட்டிலேயே முதன் முறையாக உருவாக்கப்பட்ட குவாட்ரைவலன்ட் மனித பாப்பிலோமா வைரஸ் வல்லைன் (செர்வா வாக்) அறிவியல் பூர்வமான நிறைவை எட்டியுள்ளது.
- பயோடெக்னாலஜி தொழிலக ஆராய்ச்சி கவுன்சில் (BIRAC) மற்றும் பில்கேட்ஸ் மற்றும் மெலின்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவற்றின் ஆதரவுடன் இந்தியாவின் சீரம் நிறுவனமானது உருவாக்கியுள்ளது.
- கர்ப்பப்பை வாய் புற்று நோய் என்பது கருப்பை வாயின் உயிரணுக்களில் ஏற்படும் புற்றுநோய் ஆகும்.
